
இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி

தமிழ்மாநில 12-வது மாநாடு

மாநிலக்குழு வேலை அறிக்கை

எம். ஆர். வி. நினைவரங்கம்
27, சுந்தரய்யா நகர்,
சேலம்.



நமது அஞ்சலி



நமது அஞ்சலி

இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி

தமிழ் மாநில 12-வது மாநாடு

[1985 நவம்பர் 26, 27, 28, 29 தேதிகள்]

எம்.ஆர்.வி.நினைவரங்கம்

பி. சுந்தரய்யா நகர்,

சேலம்

★

மாநிலக்குழு சமர்ப்பித்திடும் வேலை அறிக்கை

இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி
12வது மாநில மாநாடு
சேலம்.
1985 நவம்பர் 26-29
மாநிலக் குழுவின் வேலை அறிக்கை

தோழர்களே,

1. இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் தமிழ் மாநில 12வது மாநாட்டிற்கு வருகை தந்திருக்கும் பிரதிநிதிகளாகிய உங்கள் அனைவரையும் மாநிலக்குழு புரட்சி வாழ்த்துக்களுடன் வரவேற்கிறது.

2. நமது கட்சியின் 12வது காங்கிரசில் விவாதித்து இறுதியாக்குவதற்கான சர்வ தேசிய, தேசிய நிலைமைகளைப் பற்றிய மத்திய கமிட்டியின் நகல் அரசியல் தீர்மானம் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது. நீங்கள் அனைவரும் அதனைப் படித்திருப்பீர்கள். ஆகவே அவைகளைப் பற்றி இங்கு மீண்டும் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறோம்.

3. மேலும் நமது மாநில மாநாட்டில் நாம் விவாதித்து தீர்மானிக்க வேண்டிய விஷயம், நமது மாநிலத்தின் அரசியல் நிலைமை, கடந்த நான்காண்டு காலத்தில் கட்சியும் கட்சியின் தலைமையிலான வெகுஜன வர்க்க ஸ்தாபனங்களும் நடத்தியுள்ள இயக்கங்கள், பின்பற்றிய தந்திரோபாயங்கள், அரசியல்—சித்தாந்த ஸ்தாபன துறைகளில் நாம் ஆற்றியுள்ள பணிகள் ஆகியவையே. விஜயவாடா கட்சிக் காங்கிரஸ் தீர்மானத்தின் அடிப்படையிலும் நமதுகடந்த மாநில மாநாட்டுத்தீர்மானத்தின் அடிப்படையிலும் நாம் எவ்வாறு நமது கடமைகளை நிறைவேற்றியுள்

ளோம்; இதில் நமக்கு ஏற்பட்ட பலாபலன் என்ன? படிப்பினை கள் என்ன என்பதே இம் மாநாட்டின் பரிசீலனைக்குரிய முக்கிய மான விஷயம்.

4. விஜயவாடா கட்சிக் காங்கிரஸ் தீர்மானம், கட்சியின் செயல்பாடுகள் இந்த காலத்தில் எதனை இலட்சியமாகக் கொண் டிருக்க வேண்டுமென்பதை இவ்வாறு வரையறுத்துக் கூறியது.

''கட்சியானது இன்றுள்ள சூழ்நிலையில் யதேச்சாதிகாரச் சவாலே பிரதான எதிரி என்றுணர்ந்து போராடிக் கொண்டிருக் கும் நேரத்திலேயே, தன்னுடைய புரட்சி இலட்சியத்தை மறக்க வில்லை. சோஷலிசத்திற்கு வழியை திறக்கும்படியான மக்கள் ஜன நாயகப் புரட்சியை உருவாக்குவதற்கு கட்சி திடமாக உறுதி பூண் டுள்ளது.

''கட்சியானது, தற்பொழுது நடக்கும் போராட்டத்தில் வர்க்கக் கூட்டுக்கும், வர்க்க சக்திகளின் சேர்மானத்தில் மாற்றத் திற்கும் தயாரிப்புகள் செய்து கொண்டிருக்கிறது. அந்த இலட்சி யத்தை அடைவதற்கு கட்சிக்கு அது உதவி செய்யும்.

''இடது ஜனநாயக முன்னணியை கட்டுவதற்குப் போரா டுவதன் மூலமும், அனைத்து முதலாளித்துவக் கட்சிகளின் திட்டங் களுக்கு எதிராக அதனுடைய திட்டத்தை பிரபலப்படுத்துவதன் மூலமும், பரந்தளவில் மக்களைத் திரட்டுவதன் மூலமும், எல்லாவற் றிற்கும் மேலாக வெகுஜனப் போராட்டங்களுக்கு தலைமை தாங்கு வதன் மூலமும் மக்கள் ஜனநாயக முன்னணியைக் கட்டுவதில் பிர தான பங்கெடுக்க வேண்டிய அந்த வர்க்கங்களை களத்திற்கு கட்சி கொண்டு வருகிறது.

கட்சியினுடைய உடனடி போர்த் தந்திர வழியின் முக்கி யத்துவம் இதுவே'' (பக்கம் 91,92).

5. கடலூரில் நடைபெற்ற நமது 11-வது மாநில மாநாடு நிறைவேற்றிய அரசியல் தீர்மானத்தில் தமிழக நிலைமைகளை பரி சீலனை செய்து நாம் இவ்வாறு கூறியிருந்தோம்:

''மாநில அரசுக்கு அதிக அதிகாரம் வேண்டும், அதிக நிதி ஆதாரங்கள் வேண்டும் என்ற ஜனநாயக கோரிக்கைகள் நாடுமுழு

வதும் வலுத்து வரும் இந்நாளில், இந்த இரண்டு கோரிக்கைகளும் தங்களுடைய உயிர்மூச்சு என்று கூறி வந்த அதிமுக,திமுக தலைவர்கள் மத்திய ஆட்சியின் மாநில உரிமைகளைப் பறிக்கும் முயற்சிகளைக் கண்டிப்பதற்குக்கூட வகையற்று நிற்கின்றனர்.

''அண்மையில் நடைபெற்ற திருப்பத்தூர் சட்டமன்ற இடைத் தேர்தலில் அதிமுக தலைமை வலியச் சென்று இந்திரா காங்கிரசை ஆதரித்தது.

''திமுக தலைமை தனக்கும் இந்திரா காங்கிரசுக்கும் இடையில் ஏற்கெனவே உள்ள கூட்டணி நீடிக்கிறது என்று கூறி இந்திரா காங்கிரசை ஆதரிப்பதாக அறிவித்துள்ளது.

''இந்திரா காங்கிரசுடன் கூட்டு சேர்ந்து நிற்பதற்கு இந்த இரண்டு கட்சிகளின் தலைவர்களும் ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு அதற்கான அரசியல் தந்திரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

''பரஸ்பர பகையின் காரணமாக இந்த இரு கழகங்களின் தலைமைகள் பின்பற்றுகிற தவறான கொள்கையை பயன்படுத்தி தமிழகத்தில் தங்களைப் பலப்படுத்திக் கொள்ள இந்திராகாங்கிரஸ் முயற்சிக்கிறது. அத்துடன் தமிழகத்தில குறைவான செல்வாக்கு பெற்றுள்ள இந்திரா காங்கிரஸ் கட்சி மாநில ஆட்சியை பிடிப்போம் என்று பேசும் அளவிற்கு அதற்கு துணிச்சல் ஏற்பட்டுள்ளது.

இந்திரா காங்கிரசை ஆதரிக்கும் இந்தக் கொள்கையை எதிர்த்து அதிமுக, திமுக அணிகளிலும், ஊழியர்கள் மத்தியிலும் அதிருப்தியும், சலசலப்பும் ஏற்பட்டுள்ளது.

இந்த நேரத்திலாவது தமிழகத்து மக்கள் நலன் கருதியும், இந்திய ஜனநாயகத்தின் நலன் கருதியும், யதேச்சாதிகார சக்திகளை அரசியல் ரீதியாக தனிமைப்படுத்தவும் இந்த இரு கட்சிகளும் காங்கிரஸ் கட்சியின் பிடியிலிருந்து விடுபட வேண்டுமென்று கோருகிறோம்.

''யதேச்சாதிகாரத்திற்கெதிராகவும், ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும், மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளுக்காக நடைபெற்று வரும் போராட்டங்களைப் பலப்படுத்தவும், இந்திய

வின் மீது ஏற்படுகிற அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிர்ப் பந்தத்தை முறியடிக்கவும், அமெரிக்காவின் யுத்த முயற்சிகளை எதிர்க்கவும், உலக சமாதானத்தைப் பாதுகாக்கவும், இடதுசாரி ஜனநாயக சக்திகளின் ஒற்றுமையை உருவாக்கவும் ஒன்றுபட தமிழகத்து ஜனநாயக சக்திகள் அனைத்தையும் அறைகூவி அழைக் கிறோம்.''

தமிழகத்து அரசியல் நிலைமையில் அன்று முன்னுக்கு வந் திருந்த முக்கியமான அம்சங்களையும், நமது உடனடியான இலட் சியங்களையும் பற்றி கடலூர் தீர்மானத்தில் இவ்வாறு கூறினோம். அதற்குப் பின்னால் ஏற்பட்டுள்ள மாறுதல்களை இந்த அறிக்கை யில் நாம் பரிசீலனை செய்கிறோம்.

தமிழக அரசியல் நிலை

6. மத்திய, மாநில அரசுகள் பின்பற்றி வரும் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளின் காரணமாக தமிழக மக்களின் வாழ்க்கைத் தரம் மேலும் மோசமாகியுள்ளது. வேலையின்மையும், விலையேற்றமும், வறுமையும் தொடர்ந்து அதிகரித்து வருகின் றன. இந்தியாவில் ஒட்டுமொத்தமாக வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்வோர், கிராமங்களில் 50.82 சதவிகிதமாகவும், நகரங் களில் 38.19 சதவிகிதமாகவும் உள்ளனர் ஆனால் தமிழ் மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்வோர் கிராமங்களில் 55.68 சத விகிதமாகவும், நகரங்களில் 44.79 சதவிகிதமாகவும் உள்ளனர். இந்தியாவின் சராசரியைக் காட்டிலும் அதிகமானோர் தமிழகத் தில் வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்கின்றனர்.

7. ஆட்குறைப்பும், ஆலை மூடல்களும் தொடருகின்றன ஆலைகள் மூடப்பட்டுள்ளதனால் மட்டும், 11,352 தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கை 9—2—85 இதழில் எழுதியுள்ளது. அரசுத் துறையில் புதிய நிய மனங்கள் அனேகமாக இல்லை. மத்திய, மாநில அரசுகள் பல் வேறு துறைகளில் புதிய நியமனங்களுக்கு தடை விதித்துள்ளன.

தமிழக மின்துறை 1974 முதல் காலி இடங்களை நிரப்பா மல் வைத்திருந்து, இப்போது அந்த மொத்தப் பதவிகளில் 4-ல் ஒரு பகுதியை குறைக்கும் திட்டத்தை அமுல்படுத்துகிறது. அரசுத்

துறையிலும், தனியார் துறையிலும் வேலை வாய்ப்பு வேகமாகக் குறைந்து வருகிறது.

8. கிராமப்புறத்து மக்கள் நிலப்பிரபுத்துவச் சுரண்டலின் காரணமாக கடுமையான வறுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர், மேலும் தமிழகத்தின் பல மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலையும், விவசாயிகளை பெரிதும் பாதித்துள்ளது. உபரி நில வினியோகம், குறைந்தபட்ச கூலிச் சட்டத்தை அமுல்படுத்துவது, விளை பொருட்களுக்கு கட்டுப்படியாகும் விலை, கடன் நிவாரணம் போன்ற பிரச்சனைகளில் மாநில அரசு பின்பற்றும் கொள்கைகள் கிராமப்புறத்து மக்களை கடுமையாக பாதிக்கின்றன. (அறிக்கையின் விவசாய அரங்கப் பகுதியில் விபரங்கள் தரப்பட்டுள்ளன)

9 இந்தியாவின் மற்ற பகுதிகளைக் காட்டிலும் அதிகமான அளவில் தமிழகத்தில் விலைவாசி உயர்ந்து வருகிறது. டெல்லி, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களைக் காட்டிலும் சென்னையில்தான் பணவீக்கம் அதிகம் -10.5 சதவிகிதம். ரூபாயின் மதிப்பு 16 காசாக குறைந்தது; விலைவாசிப புள்ளி 1984 டிசம்பரில் தமிழகத்தின் சில பகுதிகளில் (1960ல் 100 என்ற அடிப்படையில்) 664 வரை உயர்ந்தது. விலைகளைக் கட்டுப்படுத்தவோ, நியாய விலையில் அத்தியாவசியப் பண்டங்களை வினியோகிக்கவோ மாநில அரசு உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை. அறிவிக்கப்பட்ட உணவு வினியோகம் கூட சீராக நடைபெறவில்லை.

10. மக்களின் வாழ்க்கை இவ்வாறு நலிந்துள்ள காலத்தில், இந்தியாவின் இதர பகுதிகளைப் போலவே தமிழகத்திலும் ஏகபோக முதலாளிகளின் கொள்ளை லாபமும், அவர்களின் செல்வக் குவியலும் பெரும் அளவில் அதிகரித்துள்ளது. தமிழகத்திலுள்ள 24 பெரு முதலாளி குடும்பங்களின் சொத்து 1982-83ல் ரூ. 14[?]1 கோடியாக இருந்தது. 1983-84 ல் அதாவது ஒரே ஆண்டில் அது 1625 கோடியாக உயர்ந்தது அதில் சில கம்பெனிகளின் விபரம் வருமாறு:

அசோக் லேலண்டின் சொத்து மதிப்பு 262 கோடியிலிருந்து 272 கோடியாக உயர்ந்தது. ஏற்கெனவே குறிப்பிட்ட அந்த ஒரு ஆண்டு காலத்தில மட்டும் இவர்களது லாபம் 29 கோடி. சதர்ன் பெட்ரோ கெமிக்கல் (ஸ்பிக்) சொத்து மதிப்பு 205 கோடி. லாபம்

51 கோடி. மதுரா கோட்ஸ் சொத்து மதிப்பு 84 கோடியிலிருந்து 102 கோடியாக உயர்ந்தது. லாபம் 19 கோடி. 1960ல் 20 கோடியாகஇருந்த டி வி.எஸ். குடும்பத்தின் சொத்து 1982ல் 282.80 கோடியாக உயர்ந்தது. இவ்வாறு தமிழகத்திலுள்ள பெருமுதலாளித்துவ கம்பெனிகளின் லாபமும், சொத்து மதிப்பும் இக்காலத்தில் பெரும் அளவில் அதிகரித்துள்ளன. மத்திய. மாநில அரசுகளின் கொள்கைகள் இதற்குச் சாதகமாக உள்ளன. மாநில அரசின் தொழிலாளர் கொள்கையும், போலீஸ் கொள்கையும் முதலாளிகளுக்கே சாதகமாக உள்ளன.

11. ஆட்சியாளர்களின் இத்தகைய கொள்கைகளினுல் பாதிக்கப்படுகிற பல்வேறு பகுதி மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கான போராட்டங்களும், ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்களும் தமிழகத்தில் இக்காலத்தில் விரிவான அளவில் நடைபெற்றுள்ளன.

12. இக்காலத்தில் அதிமுக அரசு தொடர்ந்து மத்திய அரசின் கொள்கைகளுக்கு இசைவாக நின்றது. 1982 ஜனவரி 19ம் தேதி பொது வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் முறையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு; வேலை நிறுத்தத் தடைச் சட்டத்தைக் கொண்டு வருதல்; வேலை நிறுத்தங்களை மாதக் கணக்கில் நீடிக்க வைத்து எவ்வித சமரச முயற்சியும மேற்கொள்ளாமல் இழுத்தடித்து சிரழிப்பது போன்ற வழிகளில் உழைப்பாளிகளின் மீது தாக்குதலை தொடுத்தது.

13. விவசாயப் பொருட்களுக்கு கட்டுபடியானவிலை என்பது பற்றி தமிழக அமைச்சர்கள் வாய் ஜாலப் பேச்சுடன் நின்றனர். ஆனுல், கூட்டுறவுக் கடன் நிலுவைக்கான ஜப்தி, கெடுபிடிகள் தொடர்ந்து நடைபெற்றன. நுழைவு வரி உட்பட மிகக் கடுமையான வரிகளை மக்கள் தலையில் விதித்தது. பால்விலை, பஸ் கட்டணம், மின் கட்டணம் ஆகியவற்றினை உயர்த்தியது. கடுமையான வறட்சியும், மிகுதியான மழையும் இருந்த காலத்தில் உணவு வினியோகம் பெரும் பாதிப்புக்கு உள்ளானது. குடும்ப கார்டுக்கு மாதம் 3கிலோ, 5கிலோ என்ற அளவுடன் அரிசி விநியோகம் நின்றது. மத்திய அரசிடம் போதுமான அரிசியை கேட்கக்கூட தமிழக அரசு அஞ்சியது. இது சம்பந்தமாக. மிகக் கடுமையான நிலை எழுந்த போது எம்ஜிஆர்

ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்து விட்டு,பின்னர் மத்திய அரசுக்கும் உணவுக் கஷ்டம் என்று நியாயம் கற்பிக்க முற்பட்டார். போராடிப் பெற்ற குத்தகை பாதுகாப்பினை தகர்க்க தொடர்ந்து முயறசித்தது. விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச கூலிச் சட்டத்தை பெயரளவிற்கு அறிவித்து விட்டு அமல் நடத்த மறுத்தது. கூலி உயர்வு கேட்ட விவசாயத் தொழிலாளர்களைத் தாக்கியது. நிலச் சீர்திருத்தம் என்பதும், உழுபவனுக்கு நிலம் என்பதும் நடைமுறை சாத்தியமற்றது என்று எம்ஜிஆர் கூறினார்.

14. தனியார் துறையிலுள்ள பஸ்களை அரசு மேற்கொள்ளும் முயற்சிகளைக் கைவிட்டது. மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி, பாலிடெக்னிக்குகள் போன்றவற்றை தனியார் நடத்த அனுமதி வழங்கியது. மாணவர்களை சேர்ப்பதற்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களை கொள்ளையடிக்க அனுமதித்தது. பொதுத் துறையிலிருக்கும் மின் உற்பத்தியில் தனியாரும் பங்கு பெறும் கொள்கையினை வகுத்தது. மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளை திறக்க எத்தகைய முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

15. இப்படிப்பட்ட தமிழக அரசின் மக்கள்விரோத, தொழிலாளர் விரோத கொள்கைகளை எதிர்த்து மக்களின் இயக்கங்கள் எழுந்தன. இத்தகைய இயக்கங்களின் மீது கடும் அடக்குமுறையினை அரசு தொடுத்தது. லாக்கப் மரணங்கள்,விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்படும் மக்கள், காவல் நிலையங்களில் தாக்குதல்களுக்குள்ளான கொடுமைகள் தொடர்ந்து நடைபெற்றன.

16. சாதி, மத உணர்வுகளுக்கு ஊக்கமளிக்கும் முறையிலேயே தமிழக அரசு இக்காலத்தில் செயல்பட்டுள்ளது. அமைச்சர்கள் நியமனம் சாதிவாரியாகவே செய்யப்பட்டது. சாதி மாநாடுகளில் அந்தந்த சாதி அமைச்சர்கள் பங்கு கொண்டு வருகின்றனர். அறநிலையத்துறை மூலம் ஆன்மீகப் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இவைகளின் மூலம் சாதி, மத உணர்வுகளை தங்களது அரசியலுக்கு சாதகமாக பயன்படுத்த முயற்சிக்கின்றனர். மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி நிறுவனம், தெய்வீகப் பேரவை போன்ற அரசியல்—ஆன்மீக அமைப்புகள் மாநிலம் முழுவதும் பரவ முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் இவற்றின் நடவடிக்-

கைகளில் பங்கு கொண்டு ஊக்கமளித்து வருகின்றனர். இதனால் இந்து முன்னணியும், ஆர்.எஸ்.எஸ். சும் மேலும் ஊக்கமடைந்துள்ளன இந்தப் பின்னணியில் இஸ்லாமிய மத நடவடிக்கைகளும், கிறிஸ்துவ மத நடவடிக்கைகளும் தீவிரமடைந்துள்ளன.

17 தமிழகத்தில் இக்காலத்தில் மண்டைக்காடு, புளியங்குடி, இடைப்பாடி, புத்தாநத்தம், திருச்சி, இளையாங்குடி முதலிய பல்வேறு இடங்களில் சாதி, மத கலவரங்கள் நடைபெற்றுள்ளன. இவைகளைத் தூண்டி விடுவதில் ஆர்.எஸ் எஸ், இந்து முன்னணி, ஜமாயத் இஸ்லாமி போன்ற அமைப்புகளும் சில சாதிச் சங்கங்களும் முக்கிய பங்கு வகித்துள்ளன. நக்சலைட்டுகளும் வர்க்கப் போராட்டம் என்ற பெயரால் இக்கலவரங்களை தீவிரப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர் இத்தகைய கலவரங்கள் தோன்றிய இடங்களில் நமது கட்சி அணிகள் மட்டுமே கட்டுப்பாடாக நின்று சலவரங்களை கட்டுப்படுத்தி வகுப்பு ஒற்றுமையை பாதுகாக்கும் பணிகளில் ஈடுபட்டனர். இதர இடதுசாரி ஜனநாயக சக்திகளையும் இதற்கு ஆதரவாக அணி திரட்ட முயற்சித்துள்ளோம்.

18 லஞ்சமும், ஊழலும் என்றுமில்லாத அளவில் அதிகரித்துள்ளன. சாராய மொத்த உற்பத்தியிலிருந்து, சில்லரை வியாபாரம் வரை ஆளும் கட்சியினர் லஞ்சம் பெற பயன்படுத்துகின்றனர் இப்போது கல்வித் துறையிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. மருத்துவக் கல்லூரி, இன்ஜினீயரிங் கல்லூரிகளை தனியார் துறையில் அனுமதித்திருப்பது, பஸ் போக்குவரத்தில் தனியாருக்கு சலுகை, தண்ணிறைவுத் திட்டம், ஊரக வளர்ச்சித் திட்டம், மத்திய அரசு வழங்கும் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் முதலிய அனைத்திலும் லஞ்ச ஊழல் தலைவிரித்தாடுகிறது. ஆளும் கட்சியினருக்கும் அதிகாரிகளுக்கும் லஞ்சம் கொடுக்காமல் ஒரு காரியமும் நடக்காது என்பது இன்று ஏற்பட்டுள்ள நிலையாகும்.

19. இத்தகைய தவறான கொள்கைகளினால் மக்களிடம் ஏற்படும் சரிவை, சரிகட்டும் முயற்சியிலும் தமிழக அரசு முனைப்பாக இருந்தது. சத்துணவுத் திட்டம், பள்ளிக் குழந்தைகள் சீருடைத் திட்டம், வயோதிகர்களுக்கு உதவித் தொகை, உணவும்-துணியும் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு முயற்சிகளின் மூலம் மக்களின் ஆதரவை தக்க வைத்துக்கொள்ள முயற்சித்தது இந்த அடிப்

படையில் எம்.ஜி.ஆர். அவர்களின் நேர்மையையும் ஆளும் கட்சி உபயோகித்துக் கொண்டது.

20. அதிமுக, திமுக ஆகிய இரு கட்சிகளும் தமிழகத்தில் 65 சதவிகித வாக்குகளைப் பெறும் செல்வாக்கினைப் பெற்றுள்ளன. இந்த இரு கட்சிகளும் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு மத்திய அரசையும், இந்திரா காங்கிரஸ் கட்சியையும் ஆதரித்து நின்றனர். இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் உறவை பாதுகாத்துக் கொள்ள திமுகவும், உறவைப் புதுப்பித்துக்கொள்ள அதிமுகவும் போட்டியிட்டன. குடியரசுத் தலைவர் தேர்தலில் அதிமுகவும், திமுகவும் இந்திரா காங்கிரஸ் வேட்பாளருக்கு ஓட்டளித்தன. ஜனநாயக பாதுகாப்பணியினர் எதிர்க்கட்சி வேட்பாளருக்கு ஓட்டளித்தனர்.

அரசியல் இயக்கம்

21. இந்திரா காங்கிரஸ்—திமுக கூட்டு அரசு புதுவையில் ஆட்சியிலிருந்தது 1982 ஜனவரி 19 ம் தேதி நாடு தழுவிய தொழிலாளர்கள் பொது வேலைநிறுத்தம் நடைபெற்றபோது தமிழ் நாட்டில் அதிமுக அரசும், புதுவையில் இந்திரா காங்கிரஸ்—திமுக அரசும் கடும் அடக்குமுறைகளை ஏவின. தஞ்சையில் மூன்று விவசாயத் தொழிலாளர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன. நூற்றுக் கணக்கானோர் அடக்குமுறைக்கு உள்ளானார்கள் இத்தகைய கொடும் அடக்குமுறையினை எதிர்த்துப் போராடினோம்.

22. கடலூர் அரசியல் தீர்மானத்தின் அடிப்படையில் 1982 ஏப்ரலில் தமிழகம் தழுவிய மக்கள் கோரிக்கை பயண இயக்கத்தை கட்சியின் சார்பாக மேற்கொண்டோம். பெருவாரியான மக்களிடம் நமது அரசியல் நிலையினை எடுத்துச் சென்றோம். நமது அணிகள் உற்சாகத்துடன் பங்கேற்றனர். திருச்செந்தூர் நோக்கி கருணாநிதி மேற்கொண்ட நடைபயணத்திற்கு மாறாக நமது கோரிக்கை பயணம் அமைந்தது. ஜனநாயக பாதுகாப்பு அணியில் பங்கு கொண்ட கட்சிகளிடம் நல்ல பிரதிபலிப்பினை இந்த இயக்கம் ஏற்படுத்தியது. அனைவரும் சேர்ந்து இப்படிப்பட்ட இயக்கத்தினை மேற்கொள்ளலாம் என கருத்துக்களைக் கூறினார்கள். அதிமுக, திமுக ஆகிய இரு கட்சி அணிகளிடமும் இந்த பயணத்தின் தாக்கம் இருந்தது. நமது பயணத்திற்குப்பின் இருகட்சிகளும்

தங்கள் நிலையினை விளக்க பெரும் பொதுக் கூட்டங்களை நடத்த வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளானார்கள்.

23. பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் சட்டத்தை அதிமுக அரசு கொண்டு வந்தது. இது வந்த உடனேயே இதற்கெதிரான விரிவான இயக்கத்தை உருவாக்க நாம் தவறி விட்டோம். ஆனால் சட்ட மன்றத்தில் இதை எதிர்த்து கடுமையாக போராடினோம். பீகார் மாநிலத்தில் காங்கிரஸ் அரசு கொண்டு வந்த சட்டத்திற்கெதிராக அங்கு பெரும் எதிர்ப்பு இயக்கம் உருவாகியது. அதன் விளைவாக அந்த சட்டம் வாபஸ் பெறப்பட்டது. இதற்குப் பிறகு தான் தமிழகத்தில் ஓரளவு எதிர்ப்பு வலுத்தது. அதற்குப் பிறகு தான் அதிமுக அரசு கொண்டு வந்த சட்டத்தை அமுல் படுத்தாமல் நிறுத்தி வைத்தது.

ஜனநாயக பாதுகாப்பு அணி

24. சி.பி.எம், சி.பி.ஐ, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ், அகில இந்திய பார்வர்ட்பிளாக், காமராஜ் காங்கிரஸ், விவசாயத் தொழிலாளர் கட்சி, மக்கள் கட்சி, ஜனநாயக சோசலிஸ்ட் கட்சி, முற்போக்கு முஸ்லீம்லீக், காங்கிரஸ்(எஸ்) ஆகிய கட்சிகளைக் கொண்ட ஜனநாயக பாதுகாப்பு அணி செயலாற்றி வந்தது. பெரியகுளம் தேர்தலுக்குப்பின் திரு நாராயணசாமிநாயுடு இந்த அணிக்கு வந்தார். பெரியகுளம் தேர்தலையொட்டி பிரிந்து சென்ற குமரி அனந்தன், திருச்செந்தூர் இடைத் தேர்தலையொட்டி மீண்டும் இந்த அணிக்கு வந்தார்.

25. ஜனநாயக பாதுகாப்பு அணியையும் இணைத்துக் கொண்டு அதிமுக அரசின் தவறான கொள்கையினை எதிர்த்து சட்டப்பேரவையிலும் போராடினோம். மத்திய அரசின் மக்கள் விரோதக் கொள்கையினை ஆதரித்து நின்ற திமுகவையும் விமர்சித்தோம்.

26. 1983ல் கடும் வறட்சி, மிகுதியான வெள்ளச் சேதம் இத்தகைய தாக்குதலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பிரச்னைகளுக்காகவும், குடும்ப கார்டுகளுக்கு 20 கிலோ அரிசி கோரியும், அடக்குமுறைக் கொடுமைகளை எதிர்த்தும் ஜனநாயக பாதுகாப்பு அணியின் சார்பாக பல்வேறு இயக்கங்களை நடத்தினோம். உண்ணாவிரதம், தர்ணா, ஆர்ப்பாட்டங்கள், பிரச்சாரம், பொதுக்கூட்டங்கள் என பல வடிவங்களில் நடைபெற்றது.

27. 1983 மே 11ம் தேதி ஜனநாயக பாதுகாப்பணியின் சார்பாக மக்கள் கோரிக்கைகளை முன்வைத்து மறியல் போராட்டம் நடைபெற்றது. மறியலில் பங்கு கொண்டவர் எண்ணிக்கை 29516. அதில் நாம் சுமார் 15 ஆயிரம். சிபிஐ சுமார் 9000. நாயுடு, நெடுமாறன், குலசேகரன் போன்றவர்களின் கட்சிகள் அனைத்தும் சேர்ந்ததுதான் மீதமுள்ள எண்ணிக்கை. தோழர் எம்.ஆர்.வி. அவர்களின் உடல்நலக்குறைவு காரணமாக 4-5-83ம் தேதி நடைபெற வேண்டிய மறியல் 11-5-85ம் தேதிக்கு மாற்றப்பட்டது. இருப்பினும் சக்தியாக மறியல் போர் நடைபெற்றது.

28. நுழைவுவரி எதிர்ப்பு இயக்கம் நடைபெற்றுவந்த காலத்தில் மதுரையில் காமராஜ் காங்கிரஸ் அலுவலகத்தில் தோழர் ஏ.என். கைது செய்யப்பட்டார். நெடுமாறனும் அவரது கட்சிக்காரர்கள் சிலரும் கைது செய்யப்பட்டனர். கலகம் செய்ததாக இவர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்கு இப்போதும் தொடருகிறது.

29. அதிமுகவும், திமுகவும் மத்திய அரசின் யதேச்சாதிகாரத்திற்கு துணை போகும் நிலையில், ஜனநாயக பாதுகாப்பணியின் நடவடிக்கைகளும், அது மேற்கொண்ட இயக்கங்களும் தமிழ் நாட்டு அரசியலில் முக்கிய அம்சமாக முன்வந்தது. இத்தகைய வளர்ச்சிப் போக்குகளை எல்லாம் பார்த்த திமுக, மக்கள் கோரிக்கைகளுக்கான கூட்டு இயக்கங்களில் தானும் பங்கு கொள்ள முன்வந்தது. ஜனநாயக பாதுகாப்பணியுடன் சேர்ந்து கூட்டு இயக்கங்களில் பங்கெடுப்பது தனக்கு ஆதாயமாக இருக்கும் என்று திமுக தலைமை எண்ணியது. நமது கட்சி நடத்தி வந்த அரசியல் இயக்கங்கள், ஜனநாயக பாதுகாப்பு அணியின் மறியல் போராட்டம் போன்றவை திமுகவில் அசைவை ஏற்படுத்தியது. கூட்டு இயக்கங்களில் கலந்து கொள்ள முன் வந்தனர். இதனை பற்றி மாநிலக் குழு பரிசீலித்தது.

14 கட்சிகள் கூட்டு இயக்கம்

திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கூட்டு இயக்கம் நடத்தும்போதே, ஏற்கெனவே உருவாகியுள்ள ஜனநாயக பாதுகாப்பணியையும் நீடிப்பது அவசியமானது என்று நமது அரசியல்

தலைமைக் குழு சுட்டிக் காட்டியது. ஜனநாயக பாதுகாப்பணியை நீடித்து செயல்பட வைக்க நாம் முயற்சித்தோம். 14 கட்சி கூட்டங்களுக்குப் போவதற்கு முன்பு, ஜனநாயக பாதுகாப்பணியின் கூட்டங்களை நடத்தினோம். இருப்பினும் தொடர்ந்து இந்த அணி நீடிக்க முடியவில்லை. திருச்செந்தூர் தேர்தலுக்குப் பின்னரும் உறுதியாக நிற்க முடியாமல் காந்தி காமராஜ் காங்கிரஸ் ஊசலாடியது; 1984 எம் எல் சி தேர்தலின்போது எம் ஜி ஆர் உடன் ஐக்கியமாகியது. இதற்கு முன்னரே ஆண்டித்தேவர் பார்வர்ட் பிளாக், எம் ஜி ஆருடன் சென்றது. திரு. நெடுமாறன் 'இலங்கைப் புலி'களுடன் 1982ம் ஆண்டிலிருந்தே தொடர்பு கொண்டு, அமெரிக்கா போய்வந்தார். அதே பாதையில் திமுகவுடன் நெருங்கினர். சிபிஐயும், திரு. நாயுடு அவர்களும் தேர்தலை நோக்கமாகக் கொண்டு திமுகவுடன் நெருங்கிய உறவுகொண்டனர். இத்தகைய சூழ்நிலையில் ஜனநாயக பாதுகாப்பணி நீடிக்கமுடியவில்லை.

31. அதிமுக மக்கள் விரோத, ஜனநாயக விரோதக் கொள்கைகளை அமுல்நடத்துகிறது. முதலாளித்துவ சுரண்டலை எதிர்த்து போராட்டம் நடத்தும் தொழிலாளி வர்க்கத்தின் மீது கொடும் தாக்குதலை தொடுக்கிறது. தொழிலாளர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் ஆகியோரின் ஸ்தாபனங்களின் உறுதிப்பாட்டினை சீரழிக்க முயற்சிக்கிறது, மத்திய அரசின் தவறான கொள்கைகளை தமிழகத்தில் அமுல்நடத்த முனைகிறது. அதிமுக அரசின் இதத்தைய் தாக்குதலை முறியடிக்க விரிவான மக்கள் பகுதியினை திரட்டிட வேண்டும் என்ற நிலையினை மாநிலக்குழு மேற்கொண்டது.

32. திமுகவின் கடந்தகால பலவீனங்களை மாநிலச்குழு பரிசீலனை செய்தது. திமுக யதேச்சாதிகார எதிர்ப்பில் உறுதியான நிலையினை மேற்கொள்ளவில்லை. மத்திய அரசின் பொருளாதார கொள்கையினை உறுதிபட எதிர்ப்பதில்லை. அதிமுகஅரசினை எதிர்ப்பதைத்தான் பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கிறது. லஞ்ச ஊழல், காவல்துறையின் அத்துமீறல், அடக்குமுறை போன்ற பிரச்னைகளில் தான் கவனம் செலுத்துகிறது, இந்தி போன்ற இன்னும் இதர பிரச்சனைகளை எழுப்பி இனவெறியினை கிளப்புகிறது. மிகக் கொடுமையான பிராமண துவேஷத்தைக் கிளப்பி வரும் திகவிற்கு ஆதரவளிக்கிறது என்பதை போன்ற விஷயங்களை மாநிலக் குழு விவாதித்தது.

அதே சமயம் மாநில அரசுகளுக்கு அதிக நிதி, அதிகாரம் என்ற கோஷத்தை முன்வைத்த தென் மாநில முதலமைச்சர்கள் (1983ம் ஆண்டு) மாநாட்டின் முடிவுகளை ஏற்பதையும், பாதிக்கப் படும் மக்களின் பிரச்சனைகளில் இயக்கங்கள் நடத்த முன் வருவ தையும், அதிமுக அரசின் லஞ்ச—ஊழல், அடக்கு முறைகள், உணவுக் கொள்கை போன்றவைகளை எதிர்க்க முன்வருவதையும், தொழிலாளர் அரங்கத்தில் ஒன்றுபட்ட இயக்கத்தை நடத்த திமுக பேரவையையும் சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசி யத்தையும் மாநிலக் குழு கவனத்தில் கொண்டது.

33. இத்தகைய பரிசீலனைக்குப் பின் கீழ்க்காணும் முடிவினை மேற்கொண்டது. திமுகவின் அரசியல் ரீதியான பலவீனங்களை எதிர்த்துப் போராடும் நடவடிக்கைகள் தொடரவும் வேண்டும். அதே சமயம் மத்திய, மாநில அரசுகளின் ஜனநாயக விரோத மக்கள் விரோத, தொழிலாளர் விரோத கொள்கையினை எதிர்க்க திமுகவுடன் சேர்ந்து கூட்டு இயக்கங்களை நடத்திடவும் வேண் டும் என்று மாநிலக்குழு தீர்மானித்தது.

34. 14 கட்சிகளின் முதல் கூட்டம் 31.5.83ல் நடைபெற் றது. குடும்ப கார்டுகளுக்கு 20 கிலோ அரிசியும், வறட்சி நிவார ணம, நுழைவு வரி எதிர்ப்பு, பத்திரிகை கட்டுப்பாடுச் சட்டத்தை திரும்பப் பெறுதல், அதிமுகவின் அராஜகத் தாக்குதலுக்கு கண் டனம் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து 1983 ஜூன் 20—25 வரை வட்ட அளவில் பொதுக் கூட்டம்—பிரச்சாரம் செய்தல், 26-6-83ம் தேதி மாவட்ட தலைநகர்களில் பேரணியை நடத்துவது என முடிவாகியது. இந்த இயக்கம் சக்தியாக நடைபெற்றது.

35. அனைத்து எதிர்க் கட்சிகளின் அமைப்பு என்று தான் 14 கட்சிகளின் அமைப்புக்கு பெயரிடுவது என்று முடிவு செய்யப்பட் டது. குழுவிற்கு கன்வீனர் தேர்ந்தெடுக்க வேண்டியதில்லையென்பது மாநிலக் குழுவின் முடிவு. அதே போன்றே கன்வீனர் தேர்ந்தெடுக் கப்படவில்லை நடவடிக்கைகளை கவனிப்பதற்காக ஒருங்கிணைப்புக் குழு ஒன்றினை மட்டுமே தேர்வு செய்தோம். மக்கள் கோரிக்கை களுக்கான கூட்டு இயக்கம்தான் என்பதை நாம் தொடர்ந்து தெளிவுபடுத்தி வந்தோம்.

36. 1983 ஜூலையில் இலங்கைத் தமிழர் பிரச்சனை முன்வந்தவுடன், திமுக அந்த இயக்கத்தை இனவெறியினை கிளப்பும் முழக்கத்துடன் நடத்தியது 1983 அக்டோபர் மாத அளவில் இந்த இயக்கம் பின்னடைந்தது. அதன்பின் திரு கருணாநிதி அவர்கள் கூட்டு இயக்கத்திற்கான தனது விருப்பத்தினை தெரிவித்தார். மக்களின் கோரிக்கைகளை முன்கொண்டு செல்ல வேண்டும் என்பதை கவனத்தில் கொண்டு, மீண்டும் கூட்டு இயக்கங்கள் நடத்த ஏற்றுக் கொண்டோம்.

37. 1983 நவம்பர், டிசம்பர் மாதங்களில் விரிவான பிரச்சார இயக்கம் நடைபெற்றது. 1983 டிசம்பர் 15ம் தேதி 14 கட்சிகளின் சார்பாக மறியல் போராட்டம் நடைபெற்றது இந்த மறியலில் தமிழகம் முழுவதும் 72833 பேர் கைதானார்கள். இதில் நமது கட்சியின் எண்ணிக்கை 22953. மத்திய, மாநில அரசுகளின் கொள்கைகளை எதிர்த்து நடைபெற்ற பெரும் இயக்கமாக இந்த மறியல் அமைந்தது.

38. தமிழகத்தில் நடைபெற்ற கூட்டு இயக்கங்களின் அனுபவத்தில் திமுக, அகில இந்தியாவில் உருவான 17எதிர்க்கட்சிகளின் (டெல்லி, ஸ்ரீநகர், கல்கத்தா) மாநாடுகளில் பங்கேற்றது. அந்த மாநாடுகளின் முடிவுகளை தமிழகத்தில் நிறைவேற்ற ஓரளவு ஒத்துழைப்பைக் கொடுத்தது. 13-2-84ந் தேதி கல்கத்தா மாநாட்டின் முடிவுகளை விளக்கும் பிரச்சார இயக்கம் நடைபெற்றது. கோவையில் கல்கத்தா மாநாட்டின் முடிவுகளை விளக்கிடும் மாநாடு நடைபெற்றது.

39. சென்னையில் அதிமுக ரௌடிகளால் பஸ் ஊழியர்கள் தாக்கப்பட்டனர். சிம்சனில் வேலைநிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பி அண்டு சி மில் மூடிக்கிடந்தது. இத்தகைய பிரச்சனைகளின் மீது 14-2-84ம் தேதி பொது வேலைநிறுத்தம் நடத்துவதென தொழிற்சங்க அமைப்புகள் முடிவுசெய்தன. 14 கட்சிகள் இதை ஆதரித்து நின்றன. தமிழக அரசு பின்வாங்கியது. சென்னையில் தனது பஸ் போக்குவரத்தை நிறுத்தியது. வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது.

40. 25-8-84ல் மத்திய, மாநில அரசுகளுக்கெதிராக மக்கள் பிரச்சனைகளை முன்வைத்து மறியல் போராட்டம் நடத்த 14 கட்சி

அணி முடிவு செய்து தயாரிப்பு செய்து வந்த நேரத்தில் ஆந்திர மாநில அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டது. இதனைத்தொடர்ந்து இப் போராட்டம் இதற்கெதிராகவும் நடத்தப்பட்டது, என்.டி.ஆர். அரசை மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டுமென்ற கோரிக்கை யும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. தமிழக அரசும் அன்று பஸ் போக்குவரத்தை நிறுத்திவிட்டது. பந்த் வெற்றிகரமாக நடை பெற்றது.

இலங்கை தமிழர் பிரச்னை

41. 1983 ஜூலையில் இலங்கைத் தமிழர் பிரச்சனை தமிழகத் தில் பெரும் புயலாக வீசியது. அந்த சமயம் இலங்கைத் தமிழர் களும், இந்திய வம்சாவளித் தமிழர்களும் படுகொலைகளுக்கும், பெரும் பாதிப்புக்கும் உள்ளானார்கள். தமிழ்நாட்டில் சகோதர வாஞ்சையுடன் இப்பிரச்சனையில் மக்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டினார்கள். மக்களிடம் எழுந்த இந்த உணர்வுகளை இனவெறி யாக மாற்ற திமுக, திக, காமராஜ் காங்கிரஸ் போன்ற கட்சிகள் பெரு முயற்சி செய்தன. ராணுவத் தீர்வுதான் இந்தப் பிரச்ச னையை தீர்த்து வைக்கும் ஒரே வழி; இந்திய அரசே ராணுவத்தை அனுப்பு; தனி ஈழம் அமைய ஆதரவு கொடு என்பதுதான் அவர் கள் முன்வைத்த முழக்கங்கள்.

42 அதிமுகவும், திமுக விற்கு சளைத்ததல்ல என்றவகையில் நடந்து கொண்டது. அதன் அமைச்சர்கள் பலர் இனவெறியை கிளப்பினார்கள். அதிமுக அணிகளிடமும் இத்தகைய உணர்வே மேலோங்கி இருந்தது. அதே நேரத்தில் மத்திய அரசுடன் ஒத்து நிற்கும் காரணத்தால் அதிமுகஅரசு சமாதான பேச்சுகளின் மூலம் அரசியல் தீர்வுகாண வேண்டும் என்ற நிலையினை எடுத்தது.அனைத் துக் கட்சி கூட்டத்தை கூட்டியது.நாம் அதில் பங்குகொண்டோம். நமது நிலையினை எடுத்து வைத்தோம். அனைத்துக் கட்சிகளின் சார் பாக இலங்கைப் பிரச்சினைகளை விளக்கிடும் பொதுக் கூட்டங்கள் நடத்த முடிவு செய்தனர். நாம் அதில் பங்கு கொண்டோம். அதிமுக, இந்திரா காங்கிரஸ், சிபிஐ, சிபிஎம், ஜனதா போன்ற கட்சிகள் இதில் பங்குகொண்டன.

43. பிரதமர் இந்திரா காந்தியை சந்திக்க தமிழகத்திலுள்ள கட்சிகளின் சார்பாக ஓர் குழுவினை அனுப்புவது என்று முடிவு

செய்யப்பட்டது. அதிமுக, திமுக, ஜனதா லீக், பார்வர்ட் பிளாக் காமராஜ் காங்கிரஸ், கா கா தே கா, சிபிஐ, சிபிஎம் என அனே வரும் பங்கு கொண்டனர். நம் சார்பில் இச்குழுவில் தோழர் என். வரதராஜன் பங்கு கொண்டார். திருமதி காந்தியிடம் கொடுப்பதற்கு தமிழக அரசு தயாரித்த மகஜரில் கீழ்க்கண்ட விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன:

1971 பங்களாதேஷ் விடுதலைப் போராட்ட காலத்தில் இந்திய அரசு மேற்கொண்ட நிலைமையே இப்போது இலங்கை விஷயத்திலும் மேற்கொள்ள வேண்டும்.

ஐ. நா. சபை தலையிட அழைக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. மகஜரில் நாம் கையெழுத்திட மறுத்தோம்.

44. அரசியல் தலைமைக் குழுவின் வழிகாட்டுதலுடன் இலங்கைத் தமிழர் பிரச்சனையில் நமது நிலையினை மாநிலக்குழு தீர்மானித்தது: ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ்பேசும் பிரதேசங்களுக்கு விரிவான மாநில சுயாட்சி வழங்கிட வேண்டும். இப்பிரச்சனையில் அரசியல் தீர்வு காண வேண்டும்.

இலங்கையிலுள்ள இடதுசாரி ஜனநாயக சக்திகள்தான் இப் பிரச்சனைக்கு தீர்வுகாண வேண்டும். உலகிலுள்ள ஜனநாயக சக்திகள் இப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வுகாண ஆதரவளிக்க வேண்டும்.

இந்திய அரசு, அணிசேரா நாடுகளிலுள்ள தனது செல்வாக்கினை உபயோகப்படுத்தியும், மனித உரிமைக்குழு போன்ற வைகளில் பிரச்சனைகளை எழுப்பியும், ஜெயவர்த்தனா அரசின் இனப் படுகொலைக்கு முடிவு காண வேண்டும் என்ற வகையில் நமது பிரச்சாரத்தை எடுத்துச் சென்றோம். அரசியல் தலைமைக் குழுவின் ஆலோசனைப்படி இந்த அடிப்படையில் நம் சார்பில் ஒரு மகஜரை பிரதமர் இந்திரா காந்தியிடம் தோழர் பி. ஆர். அளித்தார்.

இந்திய ராணுவத்தை அனுப்புவது, ஐ நா. சபைக்கு கொண்டு போவது போன்ற கோஷங்கள் ஆபத்தான எதிர்விளைவுகளைத்தான் உண்டுபண்ணும் என்பதைத் தெளிவுபடுத்தினோம். இந்த தீர்மானத்தை தமிழ மக்களிடம் கொண்டு செல்லும்போது எப்படிப்பட்ட அணுகுமுறையினை கடைப்பிடிக்க வேண்டும் என்பதை தோழர் பிடி ஆர் பின்வருமாறு சுட்டிக்காட்டினார்:

''நமது தீர்மானம் மக்களுக்கு முழு திருப்தியை அளித்து விடாது. இருப்பினும், நாம் அரசியல் தீர்வு காண வேண்டும் என்று தான் நிலை எடுக்க முடியும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தினுல் ஏற்படும் ஆபததைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. அதே சமயம் தமிழ் மக்களிடம் எழும் உணர்வுகளை கவனத்தில் எடுத்துக் கொண்டு நமது நிலையினை தெளிவாகக் கொண்டு போக வேண்டியது அவசியமானது. இந்தப் பிரச்சனையில் தமிழகத்தில் எழும் இனவெறியில் நமது கட்சியின் தலை அமிழ்ந்து போய்விடக் கூடாது. அதே நேரத்தில் இனவெறியை எதிர்க்கிறோம் என்ற பெயரில் மக்களிடமிருந்து நாம தனிமைப்படவும் கூடாது. ஜெயவர்த்தனு அரசின் கொடுங்கோன்மையை வன்மையாக கண்டித்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்து கொண்டே நமது கொள்கை நிலையை கொண்டு செல்ல வேண்டும்'' என தோழர் பி டி ஆர் குறிப்பிட்டார்.

45. மேலே கண்ட அரசியல் நிலையில் நின்று செயலாற்றினேம். நமது சுயேட்சையான நிலையினை நமது சக்திக்கு ஏற்ப கொண்டு போனேம். திமுக, நெடுமாறன், வீரமணி போன்றவர்களின் நிலை இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு தீர்வாகாது என தெளிவாக முன்வைத்தோம். இந்தப் பிரச்சனையில் நம்முடன் ஒத்த கருத்துக் கொண்டுள்ள கட்சிகள் கூட மக்களிடம் பேசும் போது குழம்பி நின்றன. சிபிஐயும் இந்த ரகத்தில்தான்சேர்ந்தது. தென் ஆப்பிரிக்காவுடனுன உறவுகளை இந்திய அரசு முறித்துக் கொண்டுள்ளது போல இலங்கை அரசுடனும் ராஜீய உறவுகளை முறித்துக் கொள்ள வேண்டுமென்றகருத்துக் கொண்ட தீர்மானத்திற்கு அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நாம் ஒப்புதல் அளித்தது தவறென்று மாநிலக்குழு முடிவு செய்தது.

46. பொதுத் தேர்தல் முடிந்தவுடன் இலங்கைப் பிரச்சனையில் திமுக முனைப்பு காட்டியது. இந்திய அரசு ராணுவத்தை அனுப்பாவிட்டால இந்தியாவில் இருந்து தமிழகம் பிரிந்து செல்வதை யாரும் தடுத்திட இயலாது என்று திரு.கருணுநிதி பேசினுர். மாநிலக்குழுவின் சார்பாக இதனைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டோம். பொதுக்கூட்டங்களிலும் கருணுநிதியின் பிரிவினைப் பேச்சினை விமர்சனம் செய்தோம். இதற்குப்பின் திரு. கருணுநிதி

நம்மை கடுமையாக சாடினர். இருப்பினும் தனது பிரிவினை பேச்சை அப்போது படிப்படியாக குறைத்துக் கொள்ளவேண்டிய தாயிற்று.

47. இலங்கைப் பிரச்னையை ஒட்டி கடந்த ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் ராமேஸ்வரத்தில் மீனவர்கள் தாக்கப்பட்டார்கள். நான்கு மீனவர்கள் உயிர் இழந்தனர். ஆயிரக்கணக்கான மீனவர் கள் மீன்பிடி தொழிலின்றி தவித்தனர். இந்தப் பிரச்னையை ஒட்டித்தான் கச்சத் தீவிற்கு படகு ஊர்வலத்துடன் செல்வேன் என எம். கல்யாணசுந்தரம் அறிக்கை விட்டார். திமுக, திக, காமராஜ் காங்கிரஸ் தனியாக இயக்கத்தை நடத்தின. நமதுகட்சி யின் சார்பாக கண்டன அறிக்கையினை வெளியிட்டோம். உயிரி ழந்தவர்களின் மூன்று குடும்பங்களுக்கும் ரூபாய் 3,000 நிதி உதவி அளித்தோம். இது தொடர்பாக தமிழக அரசு 1985 ஏப்ரலில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியது. திமுக உட்பட அனை வரும் பங்கு கொண்டனர். திமுகவினர் தங்கள் நிலையை வலி யுறுத்திவிட்டு போய்விட்டனர். நாம் முக்கியமாக பங்கேற்று பிரதமரிடம் சமர்ப்பிக்கும் அறிக்கையினை முறையாக தயாரிக்க உதவி செய்தோம். பிரதமரை சந்தித்த தமிழக தூதுக் குழுவில் தோழர் என். சங்கரய்யா பங்கேற்றார்.

48. ஈழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த சிலரை சமீபத்தில் மத்திய அரசு நாடு கடத்தியது. திமுக, திக, காமராஜ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் சேர்ந்து தமிழ்ஈழ ஆதரவு இயக்கம் என்றஅமைப் பினை அமைத்துள்ளன. இதன் சார்பாக ரயில் நிறுத்தப் போராட் டம் நடத்தப்பட்டது. நமது கட்சியும் நாடு கடத்லானது, பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற உதவி செய்யாது என்று அறிக்கை விடுத்தது.

49. 1985 செப்டம்பர் 13, 14 தேதிகளில் தமிழக அரசு அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டியது. நாம் கலந்து கொண்டோம். டெசோ அமைப்பைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளவில்லை. திம்புபேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக் கும்போதே போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இலங்கை அரசு தமி ழர்கள்-மீது தாக்குதலை தொடுத்ததற்கு நமது எதிர்ப்பினை காட்டு வதற்கு உண்ணாவிரத இயக்கத்தை நடத்திட வேண்டுமென்று தமி ழக அரசு ஓர் ஆலோசனையை முன்வைத்தது. நமது கட்சியின்

சார்பில் 'பந்த்' நடத்த வேண்டுமென பலமாக திரும்பத் திரும்ப வற்புறுத்தப்பட்டது. நமது நிலையை சிபிஐ-யும், ஜனதாவும் ஆதரித்தன. பின்னர் பந்த்தும் உண்ணுவிரதமும் சேர்ந்து நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

50. போர் நிறுத்த ஒப்பந்த மீறலை தடுத்து நிறுத்த வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண வேண்டும் என்பன போன்ற கருத்துக்கள்தான் தமிழக அரசின் சார்பாக முன்வைக்கப்பட்டது. தமிழ் பேசும் பிரதேசங்களுக்கு வழங்கிடும் சுயாட்சி அதிகாரம் எவ்வகையில் இருக்க வேண்டுமென்பதுதான் சர்ச்சையில் இருக்கும் பிரச்னை என்றும் அரசின் சார்பாக தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்திலும் நமது நிலையை தெளிவுபடுத்தினோம். 24-9-85-ம் தேதி நடந்த இயக்கத்திலும் பங்கு கொண்டோம். இந்த இயக்கம் ஒரு வகையில் டெசோ இயக்கத்திற்கு மாற்றாகத்தான் இருந்தது. இலங்கைப் பிரச்னையை ஒட்டி ஏராளமான கட்டுரைகளை தீக்கதிரில் வெளியிட்டுள்ளோம். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தீர்மானங்களையும், அறிக்கைகளையும், தகவல்களையும் தீக்கதிரில் பிரசுரித்துள்ளோம். பிரசுரங்கள் கொண்டு வந்துள்ளோம். இன உணர்வை வெகு சுலபத்தில் தட்டிவிடக் கூடிய ஒரு பிரச்சனையில் நமது சரியான அரசியல் நிலையை எடுத்துச் சென்றுள்ளோம். இப்பிரச்னையில் பலவித இடர்ப்பாடுகளுக்கு இடையில் எதிர்காலத்திலும் தொடர்ந்து நாம் செயலாற்றிட வேண்டும்.

51. திமுக தொடர்ந்து பிரிவினை வாதக் கருத்துக்களையும் இனவெறியையும் தன்னுடைய அரசியலுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகிறது. இன்று நாட்டில் உள்ள சூழ்நிலையின் காரணமாக, பிரிவினைக் கோரிக்கையை பகிரங்கமாக முன் வைக்கவில்லை. ஆனுல் இலங்கையில் தனி ஈழக் கோரிக்கையை வலியுறுத்தும் போக்கில் இங்கேயும் பிரிவினை உணர்வை தி.மு.க வும் அதன் டெசோ கூட்டாளிகளும் தூண்டி விடுகின்றனர். இலங்கையில் தனி ஈழம் அமைக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்கா விட்டால், தமிழ்நாடு இந்தியாவுடன் இருக்க வேண்டுமா என்ற கேள்வி எழும் என்று கருணுநிதி தொடர்ந்து பேசி வருகிருர்.

சேலத்தில் நடைபெற்ற டெசோ மாநாட்டில் அவர் இவ்வாறு பேசியுள்ளார்:

"நாமெல்லாம் தமிழர்களாக இருப்பதுதான், தமிழர் களாக இருப்பது மாத்திரமல்ல, நாமெல்லாம் தமிழர்களாக இருந்து இந்தியர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பது தான் என்று யாராவது காரணம் சொல்லுவீர்களேயானல், எங்களை இந்தியர்கள் என்ற பட்டியலிலிருந்து விலக்கிவிடுங்கள். நாங்கள் தமிழர்களாகவே இருக்கிறோம் என்று சொல்ல எவ்வளவு நேரமா கும்?" முரசொலி (10-10-85)

பிரிவினை உணர்வைத் தூண்டும் இத்தகைய கருத்துக்களை திமுக தலைவர்களும் அவர்களுடன் இணைந்துள்ள டெசோ கூட் டாளிகளும் பேசி வருகின்றனர். நாட்டின் ஒருமைப்பாட்டையும் மக்களின் ஒற்றுமையையும் சீர்குலைக்க ஏகாதிபத்தியவாதிகளும் பிற்போக்கு சக்திகளும் முயற்சி செய்து வரும் இக்காலத்தில், இத் தகைய கருத்துக்களுக்கெதிராக உறுதியாகப் போராட வேண்டும்.

52. டெசோ அமைப்பு— இது தனி ஈழ கோரிக்கையை ஆத ரிப்பவர்களின் கூட்டமைப்பு. திமுக, திக, நெடுமாறன் கட்சி, அய்யணன் அம்பலம் பார்வர்ட் பிளாக், ஆகியவை இணைந்துள் ளன; மதுரை ஆதீனம் போன்றவர்களும் பங்கு கொள்ளுகின்ற னர். தனி ஈழத்திற்கு ஆதரவாக இயக்கம் நடத்துவதுடன் இங்கு இனவெறியையும் பிரிவினை உணர்வையும் தூண்டிவிடும் காரியத் தையும் இது செய்து வருகிறது. இங்கும் புலிகள் இயக்கம் உருவா கும் என்று பேசத் தொடங்கியுள்ளனர். தனி ஈழத்தை அமைக்கும் போராட்டத்தை இவர்களே நடத்தப் போவதாக அறிவித்து உள்ளனர். கருணாநிதி, திண்டுக்கல் டெசோ கூட்டத்தில் இவ் வாறு பேசியுள்ளார்:

"ஈழத் தமிழர்களை பலி கொடுக்கும் டில்லியின் அலட்சி யப் போக்கு நீடித்தால், ஈழ விடுதலை இயக்கப் போராட்டத்தை டெசோ ஏற்று நடத்தும்" (முரசொலி 7-10-85)

டெசோ அமைப்பும் அதன் நோக்கமும் செயல்பாடும் தமிழகத்தில் மக்களை பிளவுபடுத்தி மோதல்களை உருவாக்கும் அபா யம் உண்டு. டெசோவின் பேரால் மாவட்ட வாரியாக பேரணி கள் நடத்தி பெருங்கூட்டத்தை திரட்டுகின்றனர். இக் கூட்டங்

களில் ஒற்றுமை உணர்வுக்கெதிரான கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. இதுபற்றி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தேர்தல்கள்

53. 1982 செப்டம்பரில் நடைபெற்ற பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் கட்சியின் சார்பாக போட்டியிட்டோம். இத்தேர்தலில் காந்தி காமராஜ் தேசிய காங்கிரசும், பார்வர்ட் பிளாக்கும், அதிமுக தனித்துப் போட்டியிடுவதால், ஜனநாயகப் பாதுகாப்பணி அதை ஆதரிக்கலாம் என்றனர். நாம் கீழ்க்காணும் நிலையினை மேற்கொண்டோம்

அ) அதிமுக தனியாக போட்டியிட்டாலும், இந்திரா காங்கிரஸ் எதிர்ப்பு என்ற பெயரில் அதை ஆதரிக்கக் கூடாது. அதிமுக அரசின் மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்தும் இயக்கத்தினை நடத்திட வேண்டும்.

ஆ) ஜனநாயகப் பாதுகாப்பு அணியிலுள்ள கட்சிகளில் நம்மைத் தவிர வேறு எந்தக் கட்சியும் இத் தேர்தலில் போட்டியிட்டால், மத்திய மாநில அரசுகளின் தவருன கொள்கையினை எதிர்த்து முழுமையான அரசியல் பிரச்சாரத்தை எடுத்துச் செல்ல இயலாது எனவே, நமது கட்சியின் சார்பாக போட்டியிட வேண்டும்.

இத் தேர்தலில் ஓரளவு இந்த அரசியல் பணியினை நிறைவேற்றினேம். நாயுடு கட்சியினர் தனியாக போட்டியிட்டனர். கா கா தே காவும், பார்வர்டு பிளாக்கும், அதிமுகவை ஆதரித்து வேலை செய்தன. சிபிஐ நம்மை ஆதரித்தது. நெடுமாறன் பிரச்சார உதவிகளைச் செய்தார். ஜனநாயக பாதுகாப்பணியிலுள்ள இதர கட்சிகளுக்கு இத் தொகுதியில் எந்தவிதமான பிடிமானமும் இல்லை.

54. கா கா தே கா விலிருந்து முத்துராமலிங்கம் என்ற எம் எல் ஏ அதிமுக விற்கு கட்சி மாறினர். இதனுல் குமரி அனந்தனுக்கும், அதிமுக விற்கும் முரண்பாடு ஏற்பட்டது. இந்த முரண்பாட்டிலும் சமரசம் காணத்தான் குமரி அனந்தன் முயற்சி செய்தார். திருச்செந்தூர் தொகுதியிலுள்ள தனது கட்சி அணிகளின் நிர்ப்பந்தத்தின் காரணமாக அச் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் தனது கட்சி வேட்பாளரை நிறுத்த முன் வந்தார். ஜன

நாயகப் பாதுகாப்பு அணியினர் ஆதரித்து வேலை செய்தனர். இந்த முயற்சியிலும் நாம் முன்கையெடுத்தோம். இத் தேர்தலில் சுமார் 1500 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக தோற்றது. கா.கா. தே.கா. வேட்பாளர் 4828 வாக்குகளும், ஜனதா வேட்பாளர் ஜெபமணி (தனது செல்வாக்கின் காரணமாகவும்) 3326 வாக்குகளும் பெற்றனர். இந்தத் தேர்தலில் நமது சக்திக்கேற்ற அளவு வேலைகளைச் செய்தோம். நமது சொந்தச் செலவில் தேர்தல் பணிகளைச் செய்தோம். நமது அரசியல் நிலையை எடுத்துச் சென்றோம்.

55. 1984 மார்ச் மாதத்தில் சென்னை நகர பட்டதாரிகள் தொகுதியில் தோழர் டபிள்யு. ஆர். வரதராஜன் போட்டியிட்டார். டாக்டர் ஹண்டே 12261 வாக்குகளும், திமுக கணேசன் 10699 வாக்குகளும், டபிள்யு. ஆர். வரதராஜன் 7508 வாக்குகளும் பெற்றனர். முதல் முறையாக இத்தேர்தலில் நாம் போட்டியிட்டோம். அதிமுக, திமுக பலத்திற்கிடையில் நாம் கணிசமான வாக்குகளை பெற முடிந்தது. நமது பிரச்சாரம் நடுத்தர மக்கள் மத்தியில் சென்றது. நடுத்தர மக்கள் மத்தியில் நமது செல்வாக்கு ஓரளவு வளர்ந்து வருவதை இந்த வாக்குப் பதிவு எடுத்துக் காட்டியது.

56. தோழர் பி.ஆர். ராஜ்பசபைக்கு போட்டியிட்டார். ஜனதா கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களின் துரோகத்தால் நாம் வெற்றி வாய்ப்பை இழந்தோம். தோழர் ஏ.என். தமிழ் நாடு சட்ட மேலவைக்கு போட்டியிட்டார். சிபிஐ, காமராஜ் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களின் துரோகத்தால் தோல்வி ஏற்பட்டது.

57. அண்ணாநகர், மாயவரம், தஞ்சை, உப்பிலியாபுரம் ஆகிய தொகுதிகளுக்கு 1984 மே மாதம் இடைத் தேர்தல் நடைபெற்றது. நமது ஆதரவினை திமுக கோரியது. பலத்த விவாதத்திற்குப் பின், திரு கருணாநிதி இலங்கை பிரச்னையை தேர்தலில் கிளப்பினால் தேர்தலில் ஒன்றாக இருந்து பணியாற்ற முடியாதென்பதையும், எதிர்க்கட்சி என்ற முறையில் வாக்களியுங்கள் என்று மக்களிடம் தனியாக தெரிவிப்போம் என்பதையும் நாம் அழுத்தமாக சொன்ன பின்னர் தான், திமுக சரியான நிலைக்கு வந்தது.

திமுகவின் வலுவும், எதிர்க்கட்சிகளின் ஒன்றுபட்ட முயற்சியும் சேர்ந்து இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றியை கொடுத்தது. மத்திய, மாநில அரசுகளின் கொள்கைகளையும், அவர்களது அதிகார தர்பாரையும் எதிர்க்கும் மக்களின் மன உணர்வை தேர்தல் முடிவுகள் பிரதிபலித்தன.

58, 1984 அக்டோபர் முதல் வாரத்தில் எம்ஜிஆர் மிகவும் மோசமான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதே மாதம் கடைசியில் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டார். இந்தப்படுகொலையினால் எழுந்த மக்களின் அரசியல் கவலையினை மத்தியக்குழு தேர்தல் விமர்சனத்தில் சுட்டிக்காட்டியுள்ளது. தேசத்தின் ஒற்றுமைக்கும், தேசப்பாதுகாப்பிற்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதென்ற உணர்வு மக்களிடம் எழுந்தது. இத்துடன் தமிழ் நாட்டில் எம்ஜிஆர் நோயினால் ஏற்பட்ட அனுதாபமும் இணைந்து நின்றது. பொதுத் தேர்தலில் இதனை நாம் சந்திக்க வேண்டியது ஏற்பட்டது.

59. பொதுத்தேர்தலில் திமுகவுடன் தொகுதி உடன்பாடு செய்துகொண்டோம். கடுமையான பேச்சுவார்த்தைக்குப் பின்னர், 17 சட்டமன்றத் தொகுதிகள், 3 நாடாளுமன்றத்தொகுதிகள் என முடிவாகியது. நமக்கு அதிக தொகுதியைக் கொடுக்க திமுக தயங்கியது. தேர்தலில் வெற்றி பெற்று, தான் அரசு அமைத்தால் நமது எதிர்ப்பினை சமாளிக்க வேண்டிவரும் என்ற திமுகவின் எண்ணப் போக்கும், நமக்கு அதிக தொகுதிகள் கொடுக்கக்கூடாதென்று சிபிஐயின் நெருக்குதலும் இருந்தன என்பதைப் பார்த்தோம். தேர்தல் போராட்டத்தில் 5 சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றி பெற்றோம். இத்தேர்தல் இயக்கம்பற்றி மாநிலக்குழு பரிசீலனை செய்தது. கட்சியின் அரசியல் தலைமைக் குழுவின் வழிகாட்டுதலின் அடிப்படையில் விரிவான விமர்சனத்தை மாநிலக்குழு செய்தது. அதனை கட்சி அணிகளுக்கும் அறிவித்துள்ளோம். அந்த விமர்சன அறிக்கையின் சில பகுதிகளை கீழே கொடுத்துள்ளோம்:

60 அ) மாநிலக்குழு, வேட்பாளர்கள் பட்டியலை இறுதிப்படுத்தும் முன்னர் மாவட்டக் குழுக்களின் ஆலோசனைகளைப் பெற்றிருக்க வேண்டும். தொகுதிகளை முடிவு செய்த குறுகிய காலத்தில்

வேட்பாளர் பட்டியலை தீர்மானிக்கவேண்டியிருந்ததினால், இதைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

ஆ) தேர்தலில் நமது பிரச்சாரத்தை முழுமையாகக் கொண்டு செல்லவில்லை. திமுகவுடன் சேர்ந்துள்ள பல்வேறு கட்சிகளில் நாமும் ஒரு கட்சியாக இருந்து நமக்கு கிடைக்கும் குறுகிய நேரத்தில் பேச வேண்டியிருந்தது. நமது சுயேட்சையான பிரச்சாரத்திற்கும் திட்டமிடவில்லை.

இ) தேச ஒற்றுமை, தேசப் பாதுகாப்பு பற்றிய மக்களின் அச்சமும், அரசியல் உணர்வும் ஆளும்கட்சிக்கு ஆதரவாகமாறின இதற்குத் தக்கவாறு இந்திரா படுகொலையையும், எம்ஜிஆர் உடல் நிலையையும் உபயோகப்படுத்திக் கொண்டனர்.

ஈ) இ காங்கிரஸ் கட்சியைப் பற்றியோ, மத்திய அரசின் கொள்கைகளைப் பற்றியோ திரு. கருணாநிதி விமர்சிக்கவில்லை. தேசிய பிரச்னைகளை அவர் அதிகமாக தொடவில்லை. மாநில அரசைத் தாக்குவது, வெறும் எம்ஜிஆர் எதிர்ப்பைப் பேசுவது என்ற பிரச்சாரத்தைத்தான் திமுக செய்தது.

உ) திமுகவுடன் தொகுதி உடன்பாடு செய்து கொண்டோம். ஆனால் நிரந்தரமான ஐக்கிய முன்னணி அமைத்திருப்பது போல் செயல்பட்டோம்

ஊ) கூட்டு இயக்கங்களை நடத்தும் போதே, நமது சுயேட்சையான சர்வ தேசிய, தேசியக் கொள்கைகளை முழுமையாக மக்களிடம் கொண்டு செல்லவேண்டும். கூட்டு இயக்கத்தில் பங்கு கொள்ளும் கட்சிகளின் கொள்கை ரீதியான பலவீனங்களையும் நாம் மக்களிடம் விமர்சிக்க வேண்டும். வலுவான முறையில் கூட்டு இயக்கங்கள் நடைபெறவும், மக்களிடையே அரசியல் பலாபலத்தை மாற்றிடவும் இத்தகைய வழிகளைத்தான் கட்சி கையாள வேண்டும்.

எ) சட்டமன்றத் தொகுதிகளில்தான் திமுக அதிக கவனம் செலுத்தியது. நாடாளுமன்றத் தொகுதிகளைப் பற்றி மிகுந்த அக்கறை காட்டவில்லை.

ஏ) நமது கட்சியின் வலுவுடன் நமக்கு ஆதரவளித்த கட்சிகளின்—திமுகவின் வலுவும் சேர்ந்ததுதான் நமது 5 சட்டமன்றத் தொகுதிகளின் வெற்றி.

ஐ) தேர்தலில் நம்முடன் இணைந்து வேலைகளைச்செய்ய சிபிஐ பொதுவாக முன்வரவில்லை.

ஒ) இத்தேர்தலில் தஞ்சை மாவட்ட நிலைமையைக் கணக்கில் கொண்டு கடைசி நேரத்தில் நாம் தி.க. வின் ஆதரவைக் கேட்டோம். அவர்களும் ஆதரித்தார்கள். அவ்வாறு கேட்டிருக்கக் கூடாது என்று மாநிலக் குழு தேர்தல் பரிசீலனையின் போது முடிவு செய்தது.

61. திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் அதிமுக உறவை இந்திரா காங்கிரஸ் விரும்பியது. அப்போதிருந்தே இ. காங்கிரஸ்—திமுக அரசியல் உறவில் சரிவு ஏற்படத் துவங்கிற்று. 1983 மார்ச்சில் பெங்களூரில் நடைபெற்ற தென் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் எம்ஜிஆர், டி. ராமச்சந்திரன் (புதுவை) என்டிஆர், ஹெக்டே ஆகிய நான்கு முதலமைச்சர்கள் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் புதுவை முதலமைச்சர் கலந்து கொண்டதின் காரணமாக திமுக, இந்திரா காங்கிரஸ் முரண்பாடு முற்றியது.

புதுவைத் தேர்தல்

62. புதுவையில், இந்திரா காங்கிரஸ்—திமுக கூட்டு அரசிலிருந்து இந்திரா காங்கிரஸ் விலகிக் கொண்டது பின்னர் திமுக, ஜனதா, மார்க்சிஸ்ட் ஆகிய கட்சிகளுக்கு சட்டசபையில் மெஜாரிட்டி இருந்தும், திமுக அரசு அமைக்க மத்திய அரசு விடவில்லை. ஏற்கெனவே திமுக—இந்திரா காங்கிரஸ் அரசின் தவறான கொள்கையினை எதிர்த்து தொடர்ந்து இயக்கங்களை நாம் நடத்தி வந்திருந்தோம். இருப்பினும் எதிர்க்கட்சி ஆட்சி அமைப்பதை அனுமதியாத மத்திய அரசின் ஜனநாயக விரோதப் போக்கினை கண்டித்தோம்.

திமுக அரசு அமைக்க நமது ஆதரவினை தந்தோம். 1983ல் கலைக்கப்பட்ட சட்டசபைக்கு 1985 பிப்ரவரியில் தான் தேர்தலை நடத்தினார்கள். இந்தத் தேர்தலில் எதிர்க்கட்சிகளுடன் முறையான தொகுதி உடன்பாட்டினை செய்திட வேண்டுமென திமுகவை வற்புறுத்தினோம். நமது ஆலோசனையை திமுக ஏற்கவில்லை. ஜனதாவுடன் உடன்பாடு காண மறுத்தது. நமதுகட்சிக்கு நெடுங்காடு தொகுதி மட்டும் (காரைக்கால் பகுதியில்) கொடுக்

கப்பட்டது, சிபிஐயுடன் தொகுதி உடன்பாட்டை திமுக செய்து கொண்டது.

63. பொதுத் தேர்தலில் இருந்த நிலையிலிருந்து வாக்காளர்களிடம் மாற்றம் ஏற்பட்டிருந்தது. அனைத்து எதிர்க்கட்சிகளையும் இணைத்து தேர்தல் இயக்கத்தை நடத்தி, வாக்காளர்களுக்கு நம்பிக்கை அளித்திருந்தால், புதுவையில் இ.காங்கிரஸ் — அதிமுக அணிக்கு சமமாக ஈடு கொடுத்திருக்க இயலும். இந்திரா காங்கிரஸ் தனியாக அரசு அமைத்திருக்க முடியாது. கீழ்க்காணும் வாக்குப் பதிவு விபரங்கள் இதனை தெளிவாக்குகின்றன.

1984 டிசம்பர் நாடாளுமன்றத் தேர்தல் வாக்குப் பதிவு

பதிவான மொத்த வாக்குகள்	2,58,493
இ.காங்—அதிமுக அணி பெற்றது	1,49,801
எதிர்க்கட்சிகள் கூட்டுக்கு கிடைத்தது	91,427

1985 மார்ச் சட்டசபைத் தேர்தல் வாக்குப்பதிவு

பதிவான மொத்த வாக்குகள்	2,84,326
இ காங்கிரஸ், அதிமுக அணி பெற்றது	1,35,827
திமுக—சிபிஐ—சிபிஎம் அணிக்கு கிடைத்தது	1,08,185
ஜனதாவிற்கு கிடைத்த வாக்குகள்	24,523

64. திமுகவின் இத்தகைய அணுகுமுறையினை நாம் விமர்சித்தோம். புதுவையில் நமது கட்சியின் பலத்தையும் கவனத்தில் கொண்டு, நெடுங்காடு தொகுதியை ஏற்று போட்டியிட்டோம். புதுவைப் பகுதியில் ஏதாவது ஒரு தொகுதி நமக்கு கிடைத்திருந்தாலும், அரசியல் பிரச்சாரத்தை அங்கே எடுத்துச் செல்ல உதவியாக இருந்திருக்கும். இது சாத்தியமில்லை என்று வந்தவுடன், நமது தோழர்கள் சிலர் தேர்தல் வேலைகளில் முனைப்புடன் செயல்படுவதில் ஆரம்பத்தில் தயக்கம் காட்டினர். மாநில மையத்தின் வற்புறுத்தலுக்குப் பின்னர், தேர்தல் பணிகளில் ஈடுபட்டனர். தேர்தல் பரிசீலனையில் இந்த பலவீனங்களை விமர்சித்தோம் நெடுங்காடு தொகுதியில் தஞ்சை மாவட்டக் குழுவின் உதவியுடன் தேர்தல் இயக்கத்தை நடத்தினோம்.

ஜாதி - மத மோதல்கள்

6⁵. தமிழ்நாட்டில் குமரி மாவட்டத்தில் இந்து முன்னணி வலுவாக செயல்பட்டு வருகிறது. இந்து முன்னணியின் சார்பாக ஓர் சட்டமன்ற உறுப்பினர் இந்த மாவட்டத்தில்தான் வெற்றி பெற்றுள்ளார். இந்து மதவெறி இயக்கத்தை எதிர்த்து குமரி மாவட்டத்தில் நமது கட்சி போராடி வருகிறது.

1984 மே 9ம் நாள் பாபு, செல்லையன் என்ற இரு இளந் தோழர்கள் ஆர்.எஸ் எஸ். குண்டர்களால் படுகொலை செய்யப் பட்டனர். பலர் பலத்த காயங்களுடன் தப்பினர். தமிழ்நாட்டில் பரவலாக ஆர்எஸ்எஸ் இயக்கம் செயல்பட்டு வருகிறது. மண் டைக் காட்டில் ஆரம்பித்த தகராறு முதல் சமீபத்தில்நடைபெற்ற கொல்லங்கோடு மதக்கலவரம் வரை, நீடித்த மோதல்கள் நடந்து கொண்டுள்ளன.

66. சமீபத்தில் காட்டுமன்னார்குடிப் பகுதியில் நடைபெற் றது போன்ற தாழ்த்தப்பட்டவர்கள், சாதி இந்துக்களுக்கிடையி லான மோதல்களும் பரவலாக ஆங்காங்கே நடைபெறுகின்றன. எந்த நேரத்திலும் மோதல்கள் நிகழலாமென்ற அளவுக்கு நிலைமை சில பகுதிகளில் இருக்கிறது. வர்க்க முரண்பாடுகளை வகுப்பு மோதல்களாக்குகின்றனர். வர்க்க அமைப்புகளையே சீர்குலைக்க முனைகிறார்கள். நமது கட்சி அமைப்புகளும், வர்க்க வெகுஜன அமைப்புகளும் மிகுந்த விழிப்புணர்வுடன் இருந்து வகுப்பு ஒற்று மையினை பாதுகாக்க வேண்டும். ஏற்கெனவே, குமரி, தென் ஆற் காடு மாவட்டக் குழுக்கள், சம்பவங்கள் நிகழ்ந்த போது உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டன. 1984 ஜூலை மாதம் 22ம் தேதி யினை வகுப்பு ஒற்றுமை நாள் என மாநிலக் குழுவின் சார்பாக அறிவித்து பிரச்சார இயக்கத்தினை நடத்தினோம். இது போன்ற இயக்கங்கள், கருத்தரங்குகள், ஒற்றுமை மாநாடுகள் என பல் வேறு வகைகளில் மக்களைத் திரட்டிட வேண்டும். நம்முடன் வரத் தகுந்த பிற ஜனநாயக சக்திகளையும் சேர்த்துக் கொள்ள வேண் டும். நமது தலைமையிலுள்ள வர்க்க வெகுஜன அமைப்புகளும் இந்தப் பிரச்சனையில் கவனம் செலுத்தவும், செயலாற்றவும் வைக்க வேண்டும்.

சட்டமன்ற அரங்கம்

67. இக்காலத்தில் மக்கள் இயக்கங்களையும் பிரச்சனைகளையும் எடுத்துக் கூறவும் மத்திய மாநில அரசுகளின் கொள்கைகளை அம்பலப்படுத்தவும் சட்டமன்றத்தை பெரும் அளவு பயன்படுத்தியுள்ளோம். போலீஸ் அடக்குமுறைகளையும் லஞ்ச ஊழல்களையும் சட்டமன்ற மேடையில் கண்டித்துள்ளோம். மாநில சுயாட்சியை வற்புறுத்தும் தீர்மானம் நம் சார்பில் முன்வைக்கப்பட்டது. பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் சட்டத்தினை எதிர்த்து குரல் எழுப்பினோம். அரசு பின்வாங்கும் நிலை ஏற்பட்டது. தொழிலாளர் உரிமையைப் பறிக்கும் கறுப்புச் சட்டத்திற்கெதிராக கடுமையாகப் போராடினோம். காவேரி நீர் பிரச்சனை, கரூர் மில் தொழிலாளர் பிரச்னை, பி அண்ட் சி மில் தொழிலாளர் பிரச்னை, போக்குவரத்து, மின் தொழிலாளர்கள், பஞ்சாலைத் தொழிலாளர், கைத்தறி நெசவாளர், குமரி தோட்டத் தொழிலாளர் பிரச்னைகள் போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்காக சட்டமன்றத்தில் போராடினோம். தமிழகத்தில் நடைபெற்ற வகுப்புக் கலவரங்களுக்குப் பின்னால் செயல்பட்ட வகுப்புவாத சக்திகளை சட்டமன்றத்தில் அம்பலப்படுத்தினோம். அரசின் தவறான போக்குகளையும் கையாலாகாத்தனத்தையும் எடுத்துக் கூறினோம்.

போலீஸ் அடக்குமுறைகளை உறுதியாக அம்பலப்படுத்தி, கண்டிக்கும் சக்தியாக சட்டமன்றத்தில் நாம் செயல்பட்டுள்ளோம். காவல் நிலையங்களில் நடைபெற்ற சித்திரவதைகளையும் படுகொலைகளையும் அம்பலப்படுத்தினோம். சேலம் கிச்சிலிப்பாளையம் காவல் நிலையத்தில் அரிஜனப் பெண் கற்பழித்து கொலை செய்யப்பட்டது பற்றி நீதி விசாரணை நடத்த நிர்ப்பந்தித்தோம். வரதட்சணைப் பிரச்சனையில் பெண்கள் படுகொலை செய்யப்பட்டது பற்றி பல சம்பவங்களை எடுத்துக்கூறி விசாரணை நடத்த வற்புறுத்தினோம்.

இலங்கைப் பிரச்சனையில், அரசு சார்பில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்திற்கு பொருத்தமான திருத்தங்களைக் கொடுத்து நமது கருத்துக்களை முன்வைத்தோம். பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் விரிவான சக்திகள் ஒன்றுபட உதவினோம்.

இத்தகைய பல்வேறு பிரச்சினைகளில், சட்டமன்றத்தில் நாம் பேச முன்னுரிமையும் அதிக வாய்ப்பும் பெற பொருத்தமான நேரங்களில் நம் சார்பில் நம்பிக்கையில்லாத தீர்மானமும், கண்டனத் தீர்மானமும் கொண்டு போனோம். இவ்வாறு மக்கள் பிரச்னைகளை எடுத்துக் கூறவும் நம் கருத்துக்களை மக்களிடம் கொண்டு போகவும் சட்டமன்றத்தை இக்காலத்தில் பயன்படுத்தியுள்ளோம். இதேபோல் மேலவையிலும் ஒரே உறுப்பினராக தோழர் ஏ. என். இருந்தபோதிலும், அங்கும் இந்தப் போராட்டத்தினை திட்டமிட்டு நடத்தியுள்ளோம். 1984 டிசம்பர் தேர்தலில் நமது எண்ணிக்கை குறைந்து விட்டது. பல முக்கிய தோழர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இதன் காரணமாக, நமது சட்டமன்ற நடவடிக்கைகள் ஏற்கனவே இருந்த அளவில் இப்போது இல்லை. இருப்பினும் நமது சக்திக்கேற்ப சட்டமன்றத்தில் மக்கள் பிரச்சனைகளை முன்வைத்துப் போராடி வருகிறோம். நமது சட்டமன்றக் குழுவிற்கு தோழர் சங்கரய்யா மாநில செயற்குழு சார்பில் உதவி செய்து வருகிறார்.

68. சட்டசபைக் கட்சி அலுவலகம் சீல் வைக்கப்பட்டதை எதிர்த்து கடுமையான எதிர்ப்பை சட்டசபைக்கு உள்ளேயும் வெளியேயும் எடுத்துச் சென்றோம். இப்போது மீண்டும் பழைய புது சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் சட்டசபைக்கட்சி அலுவலகத்திற்கு அறை எண் 47 கொடுக்கப்பட்டுள்ளது. இப் பிரச்சனையில் சட்டமன்றக் குழுவிலும், சட்டமன்றத்திலும் உரிய காலத்தில் கவனம் செலுத்தாத பலவீனமும் ஏற்பட்டுள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அரசியல் பிரச்சார இயக்கம்

69. மாமேதை மார்க்ஸ் நினைவு நூற்றாண்டு விழாவை மத்திய கமிட்டி முடிவுக்கேற்ப தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடினோம். தீக்கதிர் சிறப்புமலர் வெளியிட்டோம். அனைத்துக் கட்சியினரும் பங்கு கொண்ட விரிவான கூட்டங்களை நடத்தினோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாத காலம் முழுவதும் தொடர்ந்து ஹால் கூட்டங்களை நடத்தினோம். நமது கட்சி அணிகளுக்கும் ஆதரவாளர்களுக்கும் மார்க்சிய ஞானத்தை போதிக்கும் இயக்கமாக இது நடைபெற்றது. பொதுமக்களும்

மார்க்சையும், மார்க்சிசத்தின் சிறப்பையும் புரிந்து கொள்ள இந்த இயக்கம் உதவியது. ஆனால் சில மாவட்டங்கள் இதன் முக்கியத்துவத்தை முழுமையாக உணர்நது இந்த இயக்கத்தை நடத்தவில்லை.

70. டிமிட்ரோவ் நூற்றாண்டுவிழா-மாநிலம் முழுவதும் நமது கட்சியின் சார்பாக நடத்தப்பட்டது. பாசிச எதிர்ப்புப் போரில் டிமிட்ரோவின் பங்கினையும், டிமிட்ரோவ் போதித்த ஐக்கிய முன்னணி தந்திரோபாயங்களையும் நமது கட்சி அணிகளுக்கு போதிக்க இந்த இயக்கம் பெரிதும் பயன்பட்டது.

71. பாசிசத்தை வெற்றி கொண்டதன் 40வது ஆண்டு விழாவினையும் சிறப்பாக நடத்தியுள்ளோம். சென்னையிலும், கோவையிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் சோவியத் பிரதிநிதிகளும், நமது கட்சியின் பொதுச் செயலாளரும் பங்கு கொண்டனர். மாவட்டங்களிலும் இந் நிகழ்ச்சி விரிவான அளவில் நடத்தப்பட்டது. சில மாவட்டங்கள் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து சிறப்பான ஏற்பாடுகள் செய்யாத குறையும் உண்டு. சில இடங்களில் பொதுக்கூட்டங்களாகவும் நடைபெற்றுள்ளன. இதுவும் சிறப்பாக இருந்தது.

72. சமாதான இயக்கத்தை நடத்துவதற்கு பலமுறை அறை கூவல் விடுத்துள்ளோம். ஆனால் இதில் காட்டியுள்ள அக்கறையும் எடுத்துள்ள முயற்சிகளும் மிகக் குறைவு. ஏகாதிபத்திய யுத்த அச்சுறுத்தலின் அபாயத்தை மக்களுக்கு உணர்த்தும் கடமையை மிகச் சிறிய அளவிற்கே நாம் நிறைவேற்றியுள்ளோம். சமாதான இயக்கத்தில் நாம் திட்டமிட்டு மக்களை திரட்டுவதில்லை. கிரனடா மீது அமெரிக்க ஆக்கிரமிப்பு எதிர்ப்பு, ஐரோப்பாவில் பெர்ஷிங் மற்றும் குரூயிஸ் ஏவுகணைகளை அமைப்பதற்கு எதிர்ப்பு போன்ற இயக்கங்களை நடத்தியுள்ளோம். ஆனால் பல பகுதிகளில் நமது சக்திக்கேற்ப கூட இந்த இயக்கங்கள் நடைபெறவில்லை. சென்னையில் கடந்தமூன்றாண்டுகளில் ஆறுமுறை அமெரிக்க துணை தூதராலயத்திற்கு முன்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளோம். சமீபத்தில் டுனிசியாவிலுள்ள பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமையகத்தின் மீது இஸ்ரேல் குண்டுகளைப் பொழி

-ந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியம் இதை ஆதரித்து நின்றது. இந்த கொடுஞ்செயலுக்கு உலகத்தின் சமாதான சக்திகள் கடும் கண்டனத்தை வெளியிட்டன. இந்த இயக்கத்தில் நமது கட்சி அமைப்புகளின் பிரதிபலிப்பு போதுமானதாக இருக்கவில்லை. நாம் சிரமப்பட்டு முயற்சிகளை மேற்கொண்டால் சமாதான இயக்கத்தை விரிவான பகுதி மக்களிடம் கொண்டு செல்ல முடியும். தேசிய-சர்வதேசிய கடமைகளில் தலைசிறந்த, ஆகப்பெரியபணியாக சமாதான இயக்கத்தை ஏற்று நடத்திட வேண்டும்.

அரசியல் மாநாடு

73. *1984* ஆகஸ்ட் *19, 20* தேதிகளில் கட்சியின் தமிழக அரசியல் மாநாடு மதுரையில் நடைபெற்றது. நமது கட்சியின் வரலாற்றில் முதன்முதலாவதாக இப்படிப்பட்ட மாநாட்டினை இப்போதுதான் நடத்தியுள்ளோம்: நமது கட்சித் தோழர்கள் பேரெழுச்சியுடன் இதில் கலந்து கொண்டார்கள். சிறந்த பேரணி நடைபெற்றது. நமது அரசியல், தத்துவார்த்த நிலையை மக்களுக்கு விளக்கவும், நமது பலத்தை எடுத்துக் காட்டவும் இம்மாநாடு உதவியது. இந்த மாநாட்டினையொட்டி மாநிலம் முழுவதும் நமது சுயேட்சையான அரசியல் பிரச்சாரத்தைக் கொண்டு போயுள்ளோம்.

74. மத்திய—மாநில அரசுகளின் தவறான கொள்கையினை எதிர்த்து தொடர்ந்து நாம் இயக்கங்களை நடத்தியுள்ளோம். மக்களை திரட்டியுள்ளோம். திமுகவுடன் சேர்ந்து கூட்டாக நடத்திய இயக்கங்களிலும் பெருவாரியான மக்களை திரட்டியுள்ளோம். அதே சமயம் திமுகவின் இனவெறி பிரச்சாரத்தையும், இயக்கத்தையும் எதிர்த்து நிற்க நாம் தயங்கவில்லை.

75. தமிழகத்தில் இடதுசாரி கட்சிகள் வலுவாக இல்லை. நமது பலம் ஓரளவானதுதான் இந்நிலையிலும், மத்திய—மாநில அரசுகளின் ஜனநாயக விரோத, மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்து மக்களை திரட்டும் அரசியல் கடமையினை நிறைவேற்றியுள்ளோம். திமுக போன்ற முதலாளித்துவ கட்சிகளையும் இந்த கூட்டு இயக்கத்தில் கொண்டு வந்துள்ளோம். கூட்டு இயக்கங்களில் படிப்பினைகளையும் பெற்றுள்ளோம்.

இடதுசாரி ஜனநாயக அணி அமைக்க வேண்டியதன் அவசியமும் அதன திட்டமும் நமது பிரச்சாரத்தில் போதுமான அளவுக்கு இடம் பெறுவதில்லை. கடந்த மாநில மாநாட்டிற்குப் பின் நடைபெற்ற பிரச்சாரப் பயணத்தின் போது இடதுசாரி ஜனநாயக அணியின் திட்டத்தினை ஒரு பிரசுரமாக வெளியிட்டு விற்பனை செய்தோம். இதைத் தவிர இத்திட்டத்தை மக்களுக்கு விளக்க நாம் திட்டமிட்ட முயற்சி ஏதும் செய்யவில்லை. இதை ஒரு மிகப் பெரிய குறைபாடாக மாநிலக் குழு கருதுகிறது. நமது பிரச்சாரம், பொதுவாக அவ்வப்போது முன்னுக்கு வரும் பிரச்சனைகளுடன் நின்று விடுகிறது. நமது அடிப்படையான லட்சியங்களான சோசலிசம், மக்கள் ஜனநாயகப் புரட்சி, கட்சித் திட்டம், இடதுசாரி ஜனநாயக அணி, அதற்கான திட்டம் இவைகளை போதுமான அளவில் மக்களிடம் கொண்டு போகாத குறை நீடிக்கிறது. இக்குறைபாடுகளைக் களைய உணர்வு பூர்வமாக முயற்சி செய்ய வேண்டும். இந்த படிப்பினைகளையும், அனுபவங்களையும், விமர்சனங்களையும் மையமாகக் கொண்டு எதிர்கால அரசியல் கடமையினை நிறைவேற்றிட வேண்டும்.

அரசியல் கட்சிகள்

76. அதிமுக: தமிழ் நாட்டில் முதல் அரசியல் சக்தியாக அதிமுக இருக்கிறது. பின் தங்கிய மக்கள், அமைப்புகளில் திரட்டப்படாத உழைப்பாளிகள், நகரப்புறங்களிலும், குறிப்பிடத்தக்க அளவு நடுத்தர மக்கள் என பல்வேறு பகுதியினரிடம் எம் ஜி ஆர் செல்வாக்கு நீடிக்கிறது. அவர் நோய்வாய்ப்பட்டதினால் ஏற்பட்ட அனுதாபமும் சேர்ந்துள்ளது. மாவட்ட, வட்டப் பிரிவினைகள், கைத்தறியாளர்களுக்கு உதவி நிதி, சத்துணவு, பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை போன்ற சமூக நலன்களை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளும் அதிமுக அரசுக்கு ஆதரவைக் கொடுக்கின்றன. ஜாதி மத உணர்வுகளுக்குத் தீனி போடுவது, ஆஸ்திகர்களுக்கு இசைவாக நடந்து கொள்வது போன்ற முறைகளின் மூலமும் ஆதரவைத் தக்க வைத்துக் கொண்டு இருக்கிறது. நகரத்திலுள்ள அரசியல் அறிந்த நடுத்தர வர்க்கத்தின் ஒரு பகுதியினர்தான் லஞ்ச ஊழல் பற்றி அறிந்துள்ளனர், அதிருப்தி கொண்டுள்ளனர்.

எம்ஜிஆர் நோய்வாய்பட்ட காலத்தில் அதிமுகவில் எழுந்த உட்கட்சி சண்டைகளும், கோஷ்டி மோதல்களும் நீடிக்கின்றன. அமைச்சர் காளிமுத்து சம்பந்தப்பட்ட ராபின்மெயின் ஊழல் விசாரணை இந்த மோதலை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. கட்சியில் எம்ஜிஆர் பிடிமானத்தில் தளர்வு ஏற்பட்டுள்ளது. ஆனால் அவரது பிடிமானம் தகர்ந்துவிடவில்லை என்பதையும் பார்க்க முடிகிறது. ஆர்.எம்.வீரப்பன் இலாகா மாற்றமும், ஜெயலலிதா மீண்டும் கொள்கைப் பரப்புச் செயலாளர் ஆனதும் எம்ஜிஆர் பிடிமானத்தையே காட்டுகிறது. ஊழலும்-லஞ்சமும் புரையோடி நிற்கின்றது. தனியார் துறைக்கு பாதுகாவலர்களாக நிற்கின்றனர். அதிகார துஷ்பிரயோகமும், மக்கள் இயக்கத்தை அடக்கும் கொடுமைகளும் அதிகமாகின்றன. மத்திய அரசுக்கு அடிபணிந்து போகும் போக்குகள் கூடுதலாகியுள்ளன். சமீபத்தில் மதுரை காமராஜர் பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனத்தில் இதை தெளிவாகக் காண முடிந்தது.

77. திமுக: இந்த மாநிலத்தில் இரண்டாவது அரசியல் சக்தியாக செல்வாக்கு பெற்றுள்ளது. மத்திய—மாநில அரசுகளின் தவறான கொள்கைகளினால் அதிருப்தியடையும் மக்களையும், இலங்கை, இந்தி போன்ற பிரச்னைகளையும் பயன்படுத்தி தங்களது அரசியலுக்கு ஆதரவாக மக்களைத் திரட்டிக்கொள்ள முயற்சிக்கிறது. தொழிற்சங்க அரங்கத்திலும் தன்னை வலுப்படுத்திக் கொள்ள முனைந்துள்ளது. தொழிலாளி வர்க்கப் பிரச்னைகளில் உறுதியாக குரல் கொடுப்பதில்லை. சமீப காலத்தில் சிற்சில சமயங்களில் மத்திய அரசை விமர்சிக்கிறது. பெரும்பாலும் அ.தி.மு.க. அரசை எதிர்த்துத்தான் பலத்தகுரல் எழுப்புகிறது. திமுக இளைஞர் அணியை அக்கட்சியின் ஒரு பிரிவாகத் திரட்டியுள்ளனர். இக்கட்சிக்குள்ளும் தலைமை மட்டத்தில் அதிகமில்லாவிட்டாலும், கீழே கோஷ்டிப் பூசல்கள் உண்டு. எதிர்க்கட்சி என்ற முறையில் இதனை சமாளித்து வருகின்றனர்.

78. இ. காங்கிரஸ்: மாநிலத்தில் மூன்றாவது அரசியல் கட்சியாக செயல்படுகிறது. 1984 பொதுத் தேர்தலில் கிடைத்த சீட்டுகளையும், செல்வாக்கையும் உபயோகப்படுத்தி தன்னை வலுப்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றது; தெம்புடன் செயலாற்றுகிறது.

அதிமுகவின் பலவீனங்களை மேலும் மேலும் உபயோகப்படுத்தி தனது செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள முயற்சிக்கின்றது. உள்ளாட்சி மன்றத் தேர்தலில் பாதித்தொகுதிகளை அதிமுகவிடம் கேட்டுள்ளது. இப்பிரச்னையில் இப்போது இ. காங்.—அதிமுக மோதல்கள் முன்னுக்கு வந்துள்ளன.

பல பிரச்சனைகளில் இத்தகைய மோதல்கள் ஏற்பட்டாலும் இ.காங்கிரஸ் இப்போதைக்கு உறவை முறித்துக் கொள்ளாது. தனித்துப் போட்டியிட்டு வெற்றிபெறும் வாய்ப்பு மிகக் குறைவு என்பது அவர்களுக்குத் தெரியும். இக்கட்சி தமிழகத்தில் தன்னை பலப்படுத்திக் கொள்ள திராவிட இயக்கக் கட்சிகளின் பலவீனங்களைப் பயன்படுத்திக் கொள்ளுகிறது. அத்துடன் மத்திய அதிகாரத்தை பயன்படுத்தியும் பல முயற்சிகளை செய்கிறது. சுய வேலை வாய்ப்பு, சிறு தொழில் கடன் ஆகியவற்றினைப் பெற்றுத் தருவதில் மத்திய அரசின் மேளாக்களை உபயோகப்படுத்திக் கொள்கிறது. இந்தக் கட்சிக்குள் கோஷ்டிச் சண்டைகள் மிகக் கடுமையாக நடைபெற்று வருகின்றன. கடந்த இரண்டாண்டு காலமாக மாநில காங்கிரஸ் கமிட்டியே கூட்டவில்லையென சமீபத்தில் எம்.பி. சுப்பிரமணியம் அறிக்கை வெளியிட்டதும், மரகதம் அம்மையார் அமைச்சர் பொறுப்பிலிருந்து இறக்கப்பட்டதும் போன்ற சம்பவங்கள் இந்த கோஷ்டிச் சண்டைகளின் வெளிப்பாடுதான். மத்திய அரசின் மக்களைத் தாக்கும் பொருளாதாரக் கொள்கைகள், ஜனநாயகத்திற்கு விரோதமான நடவடிக்கைகள், இந்தி மொழி திணிப்பு நடவடிக்கைகள் போன்றவை இக் கட்சிக்கு எதிரான உணர்வை மக்களிடம் உருவாக்குகின்றன. நீண்ட காலமாக காங்கிரஸ் பிடியிலிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் பகுதியினரிடம் ஓரளவு செல்வாக்கு அக்கட்சிக்கு இன்னும் நீடிக்கிறது.

79. அதிமுக, திமுக கட்சிகள் குறுகிய அரசியல் ஆதாயத்திற்காக சந்தர்ப்பவாத முறையில், இ.காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்து அதற்கு ஆதரவாக பிரச்சாரம் செய்து அது பலம் பெற உதவிய தன் விளைவாக, தமிழகத்தில் மத்திய ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சிக்கெதிரான உணர்வை மழுங்கச் செய்தனர். தமிழகத்தில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சியில் இப்போது காங்கிரஸ் இறங்கியுள்ளது. அதிமுகவில் ஏற்பட்டுள்ள கோஷ்டி மோதல்கள் இதற்குச் சாதகமாக அமைந்துள்ளன. அமைச்சர்

காளிமுத்து சம்பந்தப்பட்டுள்ள லஞ்ச ஊழல்கள் பற்றிய விசாரணையை மத்திய உளவு இலாகா மேற்கொண்டுள்ளதையும் இதற்குச் சாதகமாக பயன்படுத்த முயற்சிக்கின்றனர். தமிழக மக்களால் 18 ஆண்டுகளுக்கு முன் நிராகரிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சி மீண்டும் அதிகாரத்தைக் கைபபற்ற சாகசங்கள் செய்து வருகிறது.

80. இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி: நமது கட்சி நான்காவது சக்தியாக இருக்கிறது. வரிசை எண்ணிக்கையில் நான்காவது இடத்தை நிறைவு செய்யலாம். ஆனால் முதலாளித்துவக் கட்சிகளுக்கு வெகு தூரத்திலுள்ள நான்காவது கட்சியாகவே இருக்கின்றோம். கட்சி ஸ்தாபன அறிக்கையில் நமது பலம்—பலவீனங்களை சுட்டிக் காட்டியுள்ளோம்.

81. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி:- கட்சி ஸ்தாபன பலத்தில் உறுதியற்ற நிலை சிபிஐயில் உருவாகி வருகின்றது. வெகுஜன, வர்க்க அரங்கங்களில் நமக்கு அடுத்த வலுவுள்ள கட்சியாகவே இருக்கிறது. கூட்டு இயக்கங்களில் தங்கள் பகுதி மக்களை சக்தியாக திரட்டுவதில் அக்கறை காட்டுவதில்லை. ஆனால் தங்களது சுயேட்சையான இயக்கங்களுக்கு தங்களது சக்தி முழுவதையும் திரட்ட முயற்சிக்கின்றனர். சிபிஐ தலைமையில் கல்யாணசுந்தரம், பாண்டியன் போன்றோர் டாங்கேயிசத்தில் நின்று உறுதியாக செயல்படுகின்றனர். இவர்கள் இருவரும் அக்கட்சியின் பேச்சாளர்கள், தலைவர்கள் என்ற வகையில் தங்களது செல்வாக்கை இதற்கு உபயோகப்படுத்துகின்றனர். சிபிஐயின் மத்திய தலைமையின் அரசியல் நிலைக்கு எதிரான கருத்துக்களைக் கொண்ட புத்தகத்தினை வெளியிட்டு இவர்கள் விற்பனை செய்தார்கள். இதைத் தொடர்ந்து ஜனசக்தியில் பாண்டியனை எழுதவிடுவதில்லை. இலங்கைத் தமிழர் பிரச்னைபற்றி பாண்டியன் பெயரில் வெளிவந்த புத்தகம் திரு வீரமணி பேசும் தோரணையில் அமைந்துள்ளது கடந்த மூன்றாண்டுகளில். சிபிஐ உரிய வகையில் நம்முடன் உறவு வைத்துக் கொள்ளவில்லை. சில சமயங்களில் ஓரளவிற்கு வருவார்கள்; சில சமயங்களில் பெயரளவிற்கு வருவார்கள். மதுரை, சேலம் இன்னும் இதர பகுதிகளில் அக்கட்சிக்குள் கடுமையான உட்கட்சி மோதல்கள் நடைபெற்ற விபரங்கள் வெளிவந்துள்ளன. புதிய பகுதிகளில் விஸ்தரித்துள்

ளார்கள் என்று சொல்ல இயலவில்லை. ஏற்கெனவே இருக்கும் அமைப்புகளிலும் தொள தொளப்பான நிலை உருவாகியுள்ளது.

82. **ஜனதா கட்சி:** அமைப்புரீதியாக வலுவுள்ளதாகயில்லை. சோ, இஸ்மாயில், நெல்லை ஜெபமணி கோஷ்டிகளின் தகராறு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. அரசியல் இயக்கங்களிலும் தொடர்ந்து செயல்பாடுகள் இல்லை. ஏற்கெனவே இருந்த ஸ்தாபன காங்கிரஸ் அமைப்பின் ஒரு பகுதியினர்தான் அதன் அடித்தளம். ஓரளவு அரசியல் செல்வாக்குண்டு. சில தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டு 10 ஆயிரம் ஓட்டுகள் வரை பெற்றிருக்கிறார்கள். புதுவையில் தனித்து நின்று இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளனர். தமிழ் நாட்டில் சிபிஎம், சிபிஐ வரிசையில் ஜனதா கட்சியினை மதிப்பீடு செய்யலாம். இலங்கைப் பிரச்சனையில் சந்தர்ப்பவாத நிலையினையும், மத்திய அரசு எதிர்ப்பு நிலையினையும் பெரும்பாலும் எடுக்கிறது. கோவைப் பகுதியில் தொழிற்சங்க அரங்கில் செங்காளியப்பன் மூலம் சிறிது செல்வாக்கினை வைத்துள்ளது. கூட்டு இயக்கங்களில் கலந்து கொள்வதில் இரா. செழியனும், கலிவரதனும் இசைவாக இருக்கிறார்கள். இக்கட்சியும் விஸ்தரிப்பை பெற்றுள்ளது என்று சொல்ல முடியாது. குமரி மாவட்டத்தில் ஒரு பகுதியினர் பிரிந்து இந்திரா காங்கிரசில் சேர்ந்துள்ளனர்.

83. **திராவிடர் கழகம்:** பார்ப்பண துவேஷத்தை மையமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மண்டல் கமிஷன் பிரச்சனையில் மோதலை உருவாக்கும் முழக்கங்களை எழுப்புகிறது. இன வெறியை கிளப்புவதில் முதலிடம் வகிக்கின்றது, பெரியாரின் நீண்டகால ஆதரவாளர்களை மையமாகக் கொண்டு இயங்கினாலும், இளைஞர்களையும் ஓரளவு திரட்டி வைத்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் திராவிட விவசாயத் தொழிலாளர் அமைப்பினையும் செயல்படுத்தி வருகிறது. முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ சுரண்டலைப் பற்றிப் பேசுவதில்லை. பார்ப்பண துவேஷத்தை தூண்டுகிறது. பார்ப்பண சாதியில் பிறந்தவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் பிற்போக்காளர்கள் என்ற கொள்கையை கொண்டுள்ளது. அராஜக ரீதியான கடவுள் மறுப்புக் கொள்கையை பட்டுத் திரையாக உபயோகித்துக் கொள்கிறது. மார்க்சிஸ்ட்

கட்சியை எதிர்ப்பதில் குறியாக இருக்கிறது. ஆங்காங்கு ஆதரவாளர்களைப் பெற்றுள்ளது.

84. யூனியன்முஸ்லீம் லீக்: மத ரீதியான பின்னணியுடன் அரசியல் கட்சியாக செயல்படுகிறது முஸ்லீம் மக்களிடம் அதிமுக விற்கு கணிசமான செல்வாக்கு உண்டு. அடுத்து தி.மு.க.விற்கு உண்டு. முஸ்லீம் மக்களிடம் மூன்றாவது சக்தியாகத்தான் லீக் விளங்குகிறது திமுகவுடன் தொடர்ந்து அரசியல் உறவுகளை வைத்துக்கொண்டுள்ளது. திமுகவும்,லீக்கை தன்னுடன் உறவாக வைத்துக் கொள்ள அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறது. சமத்துவ சகோதரத்துவ சங்கம் என்ற தனி அமைப்பை உருவாக்கியதற்காக சாகுல்ஹமீது என்ற ஒரே சட்டமன்ற உறுப்பினரை கட்சியிலிருந்து நீக்கியது. ஷரியத் சட்டத்திற்கு ஆதரவான இயக்கங்களையும் நடத்திக் கொண்டுள்ளது. இலங்கைப் பிரச்சனையில் தி.மு.க. நிலையிலிருந்து வேறுபடுகிறது. அதே சமயம் திமுகவை எதிர்த்து இயக்கங்களுக்கு வருவதில்லை.

85. அகில இந்திய பார்வர்டு பிளாக்: தமிழ் நாட்டில் குறிப்பிட்ட சாதியினை மையமாகக் கொண்டு இயங்கி வருகிறது. அதன் மத்திய தலைமைக்கும் கொள்கைக்கும் கட்டுப்பட்டு நடப்பதில்லை. அதிமுகதயவில் ஏதாவது லாபம் பெறும் சுயநலசக்தியாக அதன் தலைமை இருக்கிறது. இந்திரா காங்கிரஸ்—அதிமுக அணியில் சேர்ந்திருப்பதிலும் அதற்கு தயக்கம் ஏதும் ஏற்படவில்லை. மதுரை, ராமநாதபுரம் போன்ற மாவட்டங்களிலுள்ள அதன் செல்வாக்கு சுருங்கி வருகிறது. அய்யணன் அம்பலம், கந்தசாமி, திருமறவன் என்று அதற்குள் பல பிரிவுகள் பிரிந்து தனிக்கட்சிகளை நடத்தி வருகின்றனர்.

86. அம்பேத்கார் இயக்கமும், குடியரசுக் கட்சிகள், இளையபெருமாளின் மனித உரிமைக் கழகம்போன்றவை தாழ்த்தப்பட்ட மக்களிடம் ஓரளவு ஆதரவைப் பெற்றுள்ளன. இம்மக்களை சாதிய ரீதியில் இந்த இயக்கங்கள் திரட்டி வைத்துக் கொள்கின்றன.

87. எஸ் டி எஸ் அவர்களின் நமது கழகம் பொதுத்தேர்தலுக்குப் பின் பின்னடைந்துள்ளது. இலங்கைப் பிரச்சனையில் இன

வெறியை கிளப்பிக் கொண்டு இருக்கிறது. ஆர். எஸ். எஸ். நடவடிக்கைகளும் இந்து மத வகுப்புவாத நடவடிக்கைகளும் மாநிலம் முழுவதும் திவிரப் படுத்தப்பட்டுள்ளன. சில பகுதிகளில், குறிப்பாக குமரி மாவட்டத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் ஆர் எஸ் எஸ் ஈடுபடத் தொடங்கியுள்ளது.

உழவர்-உழைப்பாளர் கட்சி: நாயுடு மறைந்த பின் மேலும் சுருங்கி நிற்கிறது. குமரி அனந்தன், நெடுமாறன் கட்சிகள் சில ஆதரவாளர்களுடன் நிற்கின்றன. தங்கராஜ் திராவிடர் கழகம், முற்போக்கு முஸ்லீம் லீக், தமிழ் நாடு முஸ்லீம் லீக், கிருத்துவ ஜனநாயகக் கட்சி, முற்போக்கு கிருந்துவ ஜனநாயக கட்சி, மேனகா கட்சி, மக்கள் கட்சி, காங்கிரஸ் (எஸ்), காங்கிரஸ் (ஜே), போன்ற இருபதுக்கு மேற்பட்ட போர்டு கட்சிகள் தமிழகத்தில் இருக்கின்றன. விவசாயத் தொழிலாளர்கள் கட்சி ஒரு பகுதி கட்டிடத் தொழிலாளர்களை அடித்தளமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

88. பாரதீயஜனதா கட்சி ஆர்.எஸ்.எஸ்.வுடனும், இந்து முன்னணியுடனும் ஐக்கியமாகியுள்ளது. இந்த அமைப்புகள் இந்து மத வெறியைக் கிளப்பி, வகுப்புக் கலவரத்தை உருவாக்குவதை குறியாகக் கொண்டு செயல்படுகின்றன. அத்துடன் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு ஏகாதிபத்திய ஆதரவு கொள்கையுடன் இந்த அமைப்புகள் செயல்படுகின்றன. இவைகள் பற்றி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மக்களின் வகுப்பு ஒற்றுமையை பாதுகாப்பதில் நாம் கவனமாக இருக்கவேண்டும்.

89. மக்கள் உரிமைக் கழகம், எஸ்.யூ.சி.ஐ, நக்சலைட், கிறிஸ்துவ இடதுசாரி அமைப்புகள், அதிதீவிர கோஷங்களுடன் செயல்படுகின்றன. கலைக்குழுக்களின் மூலம் பிரச்சாரத்தை மேற்கொள்கின்றன. பல பத்திரிக்கைகளை வெளியிடுகின்றனர். புரட்சியைப் பற்றி திரித்தும், குழப்பியும் எழுதுவதில் குறியாக இருக்கின்றனர். கிறிஸ்துவ அமைப்புகள் ஏராளமான பணத்தை செலவு செய்கின்றன. ஊழியர்களை ஊதியம் கொடுத்து அமர்த்தியுள்ளன.

பின்தங்கியிருக்கும் மக்கள் பகுதியில் சில நிவாரண வேலைகளை மேற்கொள்கின்றன. தொழிற் சங்கம் அமைக்கவும் முயலுகின்றன.. மதுரை மாநகராட்சி துப்புரவுத் தொழிலாளர் சங்

கத்தை மதுரை இறையியல் கல்லூரி கிறிஸ்தவ அமைப்பு உருவாக்கி இயக்கி வருகிறது. எஸ் யூ சி.ஐ, மாணவர்கள் அமைப்பையும் உருவாக்கி வருகிறது. இவர்கள் அனைவரும் நமது கட்சியை எதிர்ப்பதை குறியாகக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய இட துசாரி சீர்குலைவு சக்திகளை குறைத்து மதிப்பிடக் கூடாது. நமது இயக்கத்திற்கு வருவோரை தடுப்பது, இருப்போரை குழப்புவது இவர்களது குறிக்கோள். நாம் மிக கவனத்துடன் அரசியல், தத்துவார்த்தத் துறையில் இவர்களை சந்திக்க வேண்டும்; முறியடிக்க வேண்டும். நக்சலைட் குழுக்களில் பல இப்போது கிறிஸ்தவ மிஷினரிகளுடன் தொடர்பு கொண்டு செயலபடுகின்றன. இந்த கோஷ்டிகள் அனைத்தும் அன்னிய நிதி உதவியுடனும் தொடர்புடனும செயல்படுகின்றன. நாடு தழுவிய வர்க்க அமைப்புகளும் இடதுசாரி சக்திகளும் பலப்படாமல் தடுத்து சீர்குலைக்க, இந்த சீர்குலைவு கோஷ்டிகளை ஏகாதிபத்தியவாதிகளும், பிற்போக்குவாதிகளும் திட்டமிட்டு பயன்படுத்துகின்றனர். இவர்களது நடவடிக்கைகள் இடதுசாரி ஜனநாயக சக்திகளின் ஒற்றுமைக்கும் மக்கள் ஜனநாயக புரடசி இயக்கத்திற்கும் எதிராக உள்ளன. இவைகளை முறியடிப்பது நமது புரட்சிகர இயக்கம் முன்னேறுவதற்கு இன்றியமையாதது.

90. இக்காலத்தில் மக்களின் பொருளாதாரப் பிரச்சனைகளிலும் அரசியல் பிரச்சனைகளிலும் பல்வேறு சக்திகளை ஒன்றிணைத்து நாம் பல போராட்டங்களை நடத்தியுள்ளோம். நமது சரியான அரசியல் அணுகுமுறை இதனை சாத்தியமாக்கியது. மத்திய, மாநில அரசுகளின் மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்து உறுதியாகப் போராடினோம். நாம் தனியாக நடத்திய இயக்கங்கள் மட்டுமின்றி, முதல் கட்டத்தில் பத்து கட்சிகளைக் கொண்ட ஜனநாயகப் பாதுகாப்பணியுடனும், அடுத்து திமுக உள்ளிட்ட 14கட்சிகளுடனும் ஒன்றுபட்டு பல போராட்டங்கள் நடத்தியுள்ளோம். முப்பதாயிரத்திற்கும் அதிகமான தொண்டர்கள் ஏககாலத்தில் மறியல் செய்து சிறை செல்லும அளவிற்கு நமது இயக்கத்தின் வீச்சு அதிகரித்துள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கெதிரான ஜெயவர்த்தனே அரசின் கொடிய அடக்குமுறைகளை எதிர்த்து குரல் எழுப்பினோம். இதற்கெதிரான இயக்கத்தில் அனைவருடனும் ஒன்றுபட்

டோம். அதே நேரத்தில் இப்பிரச்சனைக்குத் தீர்வுகாண ''தனிநாடு அமைக்க வேண்டும்; இராணுவத்தை அனுப்ப வேண்டும்; ஐ நா. வுக்குச் செல்லவேண்டு''மென்பது போன்ற யோசனைகளை நாம் ஏற்கவில்லை. 1983 ஆகஸ்டில் அனைத்துக் கட்சிகளின் சார்பாக பிரதமர் இந்திராவுக்கு அளித்த மகஜர் நமக்கு உடன்பாடாக இருக்கவில்லை. சி பி ஐ உட்பட அனைத்துக் கட்சியினரும் கையெத் திட்ட அந்த மகஜரில் நாம் கையெழுத்திடவில்லை. நமது மாறுபட்ட கருத்தினை அன்று தெரிவித்தோம். ஆனால் அன்று நாம் எடுத்த நிலையை இன்று தமிழகத்தில் உள்ள பெரும்பாலான கட்சிகள் ஏற்கின்றன. இவ்வாண்டு பிரதமர் ராஜீவ் காந்தியிடம் அளிக்கப்பட்ட அனைத்துக் கட்சி மகஜர் பெரும்பாலும் நமது கருத்தை ஒத்து இருந்தது. திமுகவும் அதனுடன் சேர்ந்த ஒரு சிலர் மட்டுமே இன்று இப்பிரச்னையில் நம்முடன் மாறுபட்டுள்ளனர்.

திமுகவுடன் இப்பிரச்னையில் நாம் மாறுபட்டாலும் இதர பல பிரச்னைகளில் ஒன்றுபட்டு பல இயக்கங்களை நடத்துவதுஎன்ற சரியான நிலையினை பின்பற்றியுள்ளோம். தேர்தலில் இலங்கைப் பிரச்னையை முன் வைப்பதில்லை என்ற அடிப்படையில் தேர்தல் உடன்பாடும் செய்துகொண்டோம். இவ்வாறு பல பிரச்னைகளில் உடன்பட்ட நேரத்திலேயே திமுக முன்வைக்கும் தவறான பலகருத் துக்களுக்கெதிராக—இனவெறி கருத்திற்கெதிராக இடைவிடாமல் போராடியுள்ளோம். தமிழகத்தில் இத்தகைய சித்தாந்தப் போரா ட்டத்தை நமது கட்சி மட்டுமே நடத்தி வருகிறது. இத்தகைய போராட்டத்தை நடத்தாமல் நாம் தமிழகத்தில் தொழிலாளி ர்க்க அரசியலை முன்னுக்குக் கொண்டுபோக முடியாது.

இதேகாலத்தில் மக்களின் ஒற்றுமையையும், இடதுசாரி ஜனநாயக இயக்கங்களையும் சீர்குலைக்கும் ஜாதி, மத, வகுப்புவாத சக்திகளுக்செதிராகவும் நாம் உறுதியுடன் போராடியுள்ளோம். ஏகாதிபத்திய நாடுகளுடன் தொடர்பு கொண்டு அவர்களிடம் பண உதவி பெற்று செயல்படும் சீர்குலைவு சக்திகளை அம்பலப்படுத் தும் போராட்டத்தினையும் நாம் நடத்தியுள்ளோம். இன்னும் வலுவான முறையில் இப்போராட்டத்தை தொடர வேண்டும். மார்க்சிய சித்தாந்தத்தையும், நமது கட்சி திட்டத்தையும்—நமது கட்சி முன்வைத்துள்ள மாற்றுக் கொள்கைகள் முழுவதையும் விரிவான அளவில் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும்.

நமது சக்தி முழுவதையும் பயன்படுத்தினுல் தமிழகத்தில் ஒரு வலு வான இயக்கத்தை விரைவில் கட்டி வளர்க்க முடியும்.

91. கடந்த நான்காண்டு காலத்தில் தமிழகத்தில் நமது இயக்கம் பேலும் முன்னேறயுள்ளது. நமது கட்சியின் அரசியல் செல்வாக்கு அதிகரித்துள்ளது. கட்சியின் ஸ்தாபன பலமும் அதிகரித்துள்ளது. நாம் தனித்தும், இதர கட்சிகளுடன் கூட்டாகவும், தொடர்ச்சியாகவும் பல இயக்கங்களையும், கிளர்ச்சிகளையும் நடத்தியுள்ளோம். நமது தலைமையிலுள்ள வெகுஜன அமைப்புகளும் இடைவிடாமல் மக்கள் பிரச்சனைகளுக்கான பல் வேறு இயக்கங்களை நடத்தி வருகின்றன. நமது இயக்கம் புதிய பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. முதலாளித்துவ- நிலப்பிரபுத்துவ கருத்துக்களுக்கெதிரான நமது சித்தாந்தப் போராட்டத்தை முன்னைக்காட்டிலும் விரிவாக நடத்தியுள்ளோம். நமது பத்திரிக்கை, பிரசுரங்கள் விற்பனை அதிகரித்துள்ளது. கட்சி முழு நேர ஊழியர்கள் அதிகரித்துள்ளனர். பல்வேறு பிரச்சனைகளில் நாம் பின்பற்றி வரும் கொள்கை ரீதியான நிலை நமது கட்சியின் மதிப்பையும், அரசியல் செல்வாக்கையும் உயர்த்தியுள்ளது. இருப்பினும், தமிழக அரசியலில் ஒரு தீர்மானமான சக்தியாக நாம் இன்னும் வளரவில்லை என்பதை கருத்தில் கொண்டு. நாம் செயல்பட வேண்டும்.

தொழிற்சங்க அரங்கம்

92. கடலூர் மாநாட்டிற்குப் பின மேலும் தீவிரமடைந்த முதலாளித்துவ நெருக்கடியின் பளுவை தொழிலாளிகளின் தலையில் சுமத்துவதற்காக மத்திய, மாநில அரசுகளும், முதலாளிகளும தொழிலாளி வர்க்கத்தின் மீது முன்னெப்போதும் காணுத அளவு தாக்குதல்களை தொடுத்தனர். ஆலைமூடல, ஆட்குறைப்பு, லே-ஆப், வேலைப்பளு உயர்வு, கதவடைப்புகள், உற்பத்தி நிறுத்தம், ஊதியத்தையும், போனசையும் உற்பத்தியுடன் இணைத்தல், பஞ்சப்படி வெட்டு அல்லது முடக்கம், கடுமையான பழிவாங்குதல், வேலை நிறுத்தங்களை தடை செய்தல், வேலை நிறுத்த உடைப்பு, துப்பாக்கிச் சூடு உள்ளிட்ட கொடும் அடக்குமுறை வடிவங்களில் இந்த தாக்குதல்கள் அமைந்தன.

93. இந்தப் பின்னணியில்தான், கடந்த மூன்றரை ஆண்டுகளில் சிஐடியு சங்கங்களும், மாநிலக் குழுவும் செயல்பட வேண்டி

வந்தது. இந்த கடுமையான தாக்குதல்களை முறியடிக்க கடும் போராட்டங்களை உருவாக்கி தலைமை தாங்குவது, முன்கை எடுத்து சுயேட்சையாக இயக்கங்களை நடத்தி சீர்திருத்தவாதத் தலைமைகளுக்கு நிர்ப்பந்தம் கொடுக்கச் செய்து கூட்டு நடவடிக்கைகளை உருவாக்குவது, ஆதரவு இயக்கங்களை நடத்துவது இவற்றின் மூலம் சிஐடியுவின் செல்வாக்கையும் பலத்தையும் வளர்ப்பது ஆகிய நோக்கங்களுடன் ஏராளமான வேலைகள் இந்த மூன்றரை ஆண்டுகளில் நடந்துள்ளன.

பொதுவேலை நிறுத்தங்கள்

94. கடலூர் மாநாடு முடிந்த உடனே 19—1—82ம் தேதிய அனைத்திந்திய பொது வேலை நிறுத்தத்தை தமிழகத்தில் வெற்றி பெறச் செய்யும் தயாரிப்பில் கட்சி முழுதும் இறங்கியது. தொழிலாளிகள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளிகளின் கோரிக்கைகளையும், ஜனநாயக உரிமை பிரச்சனைகளையும் இணைத்து முதல் முதலாக நடத்தப்பட்ட பொதுவேலை நிறுத்தம், மத்திய—மாநில அரசுகளின் எதிர்ப்பு, ஐஎன்டியுசி, எச்எம்எஸ், திமுக, அதிமுக, டிஎன்டியுசி போன்ற மற்ற அனைத்து சங்கங்களின் எதிர்ப்பு, வேலை நிறுத்தத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன் 5000 ஊழியர்கள் கைது, தஞ்சை மாவட்டத்தில் திருமெய்ஞானத்திலும், மன்னார்குடிக்கருகிலும் துப்பாக்கிச் சூட்டில் மூவர் கொல்லப்படுதல் இவ்வளவையும் மீறி பொதுவேலை நிறுத்தம் பரவலாகவும், கோவை உள்ளிட்டு பல நகரங்களில் பந்த்தும், புதுச்சேரியில் பொதுவேலை நிறுத்தமும், பந்த்தும் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. சிஐடியுவும், ஏஐடியுசியும், சம்பந்தப்பட்ட, விச, வி.தொ.ச அமைப்புகளும் கூட்டாக நடத்திய போராட்டம் இது. இதில் நமது கட்சியும் சிஐடியுவும் தீவிரமாக செயல்பட்டன. இப்பொது வேலைநிறுத்தத்தில், திருச்சி பாய்லர் ஆலைத் தொழிலாளிகள் முழுமையாக பங்கு கொண்டனர். குண்டாந்தடிக்கும், கண்ணீர் புகைக்கும், மூன்று பொய்க் கேஸ்களுக்கும் உள்ளாயினர். ஐந்து பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

மேலே குறிப்பிட்ட துப்பாக்கிச்சூட்டையும், அடக்குமுறையையும் கண்டித்து 22-1-82ந் தேதி மாநிலம் தழுவிய 'கண்டன நாள்' அனுஷ்டிக்கப்பட்டது.

3-11-82 ம்தேதியில் போனசுக்காக சிஐடியுவும், தொமுசவும் கணக்காயர் சங்கமும் சேர்ந்து மின்சாரத்துறையில் ஒரு மணிநேர பொதுவேலை நிறுத்தம் நடத்தின. பஞ்சாலை போனஸ் பிரச்னையை 10-பி சரத்துப்படி கோர்ட்டிற்கு விட்டதை ஆட்சேபித்து அனைத்துப் பஞ்சாலை சங்கங்களும் கூட்டாக 11—11—82ம் தேதியில் மாநிலம் தழுவிய வெற்றிகரமான ஒருநாள் பொதுவேலைநிறுத்தம் நடத்தின. ஒசூரில் வளர்ந்துவரும் சிஐடியு இயக்கத்தை ஒடுக்க தோழர் சக்திவேல் கொலை செய்யப்பட்டார். இதைஎதிர்த்து ஓசூர் தொழில் கேந்திரத்தில் 3—7—83ம் தேதியில் ஒருநாள் பொதுவேலைநிறுத்தம் நடத்தப்பட்டது

ஃ 11-8-85ம் தேதியில் தோல் பதனிடும் தொழிலில் ஊதிய உயர்வு கேட்டு சிஐடியு, ஏஐடியுசி ஆதிமூலம் சங்கம் ஆகியவை சேர்ந்து வெற்றிகரமான மாநிலம் தழுவிய பொது வேலைநிறுத்தம் நடத்தப்பட்டது.

ஃ 1983ம் ஆண்டில் பஞ்சாலை போனஸ் விஷயத்தில் சீர்திருத்தத் தலைமைகள் துரோக ஒப்பந்தம் செய்த பொழுது. அந்த துரோகத்திற்கு தொழிலாளிகளின் எதிர்ப்பைக்காட்ட 1-11-83 தேதியில் சிஐடியு ஏஐடியுசி மட்டும் சேர்ந்து கோவை மாவட்டத்தில் ஒருநாள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் நடத்தின. அதில் 25,000 தொழிலாளிகள் கலந்து கொண்டனர்,

ஃ சிம்சன், பி அண்ட் சி, கிருஷ்ணராவ் பாடி பில்டிங் போன்ற வேலை நிறுத்தம், கதவடைப்பு பிரச்னைகளில் மாநில அரசு தலையிடாததை கண்டித்து 14.2 84ம் தேதியன்று சென்னை நகரத்தில் வெற்றிகரமான ஒன்றுபட்ட பொது வேலை நிறுத்தம் நடந்தது.

ஃ தமிழக அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கையை எதிர்த்து சிஐடியு, ஏஐடியுசி, தொமுச. 12.9.84ம் தேதியன்று வெற்றிகரமாக மாநிலம் தழுவிய பொது வேலை நிறுத்தம் நடத்தின.

ஃ 28.3 83 ம் தேதியன்று சிஐடியு, ஏஐடியுசி, தொமுச, ஐஎன்டியுசி, எச் எம் எஸ், ஆசிரியா ஸ்தாபனங்கள், மாநில அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தமிழக அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கையை எதிர்த்து மாநிலம் தழுவிய முறையில் திரட்

டப்பட்ட பிரமாண்டமான பேரணியை நடத்தி கோட்டையை நோக்கிச் சென்றனர்.

95. இந்த பிரம்மாண்டமான கூட்டுப் போராட்டங்களை உருவாக்குவதிலும், பேரணிகளை திரட்டுவதிலும், ஒற்றுமை ஏற்படுத்துவதிலும், சீர்திருத்தவாத தலைமைகளை இவற்றை ஏற்கச்செய்வதிலும் சிஐடியுவிற்கு மிகப் பெரும் பங்கு இருந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அனைத்திந்திய துறைமுகத் தொழிலாளிகளின் 26 நாள் போராட்டத்தில் சென்னையிலும், தூத்துக்குடியிலும் நமது பாத்திரம் குறிப்பிடத் தக்கது.

96. இதுமட்டுமின்றி சிஐடியு முன்கை எடுத்து கூட்டாகவும் தனியாகவும் நடத்திய வீரஞ்செறிந்த ஸ்தலப் போராட்டங்கள் ஏராளமானவையாகும். கரூர் மில் போராட்டம், நெல்லிகுப்பம் போராட்டம், திருப்பூர் பனியன் போராட்டம், கன்னியாகுமரி ரப்பர் தோட்டத் தொழிலாளிகளின் பஞ்சப்படி, போனசுக்காக நடத்தப்பட்ட இரண்டு வேலை நிறுத்தங்கள், ஊட்டி போட்டோ பிலிம் தொழிலாளிகளின் வேலை நிறுத்தம், ஓசூர் லேலண்டு தொழிலாளிகளின் வீரமிக்கப் போராட்டங்கள், நெய்வேலி போனஸ் ஸ்டிரைக், கைத்தறி நெசவாளர்களின் வேலை நிறுத்தங்கள், தூத்துக்குடி நகரம் பந்த் நடத்தி ஆதரித்த 10,000 உப்புத் தொழிலாளிகளின் வேலை நிறுத்தம், வெற்றிகரமாக முடிந்துள்ள சோலிங்கர் மில் தொழிலாளிகளின் வீரமிக்க போராட்டம் தொடர்ந்து நடந்துவரும் புதுவை ரோடியர் மில் போராட்டம் ஆகியவை சிஐடியு முன்கை எடுத்து கூட்டாகவோ தனியாகவோ நடத்திய ஸ்தலப் போராட்டங்களில் சில முக்கிய போராட்டங்களாகும்.

97. **ஆதரவு இயக்கங்கள் :** 19.1.82 வேலை நிறுத்தத்தின் பொழுது துப்பாக்கிச் சூட்டிற்காளான விவசாயத் தொழிலாளிகளின் குடும்பத்தினருக்கு சிஐடியு ரூ 40,000 வசூல் செய்து வழங்கியதும், ஓசூர் தியாகி சக்திவேல் குடும்பத்திற்கு நிதிவசூல் நடத்தி வழங்கியதும், பம்பாய் பஞ்சாலை வேலை நிறுத்தம், சணல் ஆலைத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம், நெல்லிக்குப்பம் வேலை நிறுத்தம், ஓசூர் லேலண்டு வேலை நிறுத்தம், கான்பூர் ஜேகே சிந்தடிக்ஸ், மோதி நகர் போராட்டங்கள், பிரிட்டிஷ் நிலக்கரிச் சுரங்கத்

தொழிலாளிகளின் வேலை நிறுத்தம், பங்களாதேஷ் வெள்ள நிவாரணம், போன்றவற்றில் உதவி நிதி வசூல் மூலமாகவும் ஆதரவு தீர்மானங்கள் வாயிலாகவும் ஆதரவு இயக்கங்கள் நடத்தபபட்டன.

98 **அனைத்திந்திய மாநாடுகளும், இயக்கங்களும் :** இந்த மூன்றரை ஆண்டுகளில் பல அனைத்திந்திய இயக்கங்களிலும் பங்கு கொண்டோம். பொதுத்துறை நிறுவனத் தொழிற்சங்கங்களின் ஹைதராபாத், பெங்களூர அனைத்திந்திய மாநாடுகள், அனைத்திந்திய பஞ்சாலை மாநாடு, அனைத்திந்திய சர்க்கரை ஆலை தொழிற்சங்க மாநாடு, தேசிய இயக்கக் குழுவின் டில்லியில் நடந்த இரண்டாவது மாநாடு, அகில இந்திய நீர்வழி போக்குவரத்து மாநாடு (தூத்துக்குடி) தேசிய இயக்கக்குழு நடத்திய டில்லி கன்வென்ஷன், உழைக்கும் பெண்களின் அனைத்திந்திய கன்வென்ஷன் போன்றவற்றில் கலந்து கொண்டோம், அனைத்திந்திய பொதுத்துறை நிறுவன தொழிலாளிகளின் கோரிக்கை தினம், 1984 செப்டம்பர் 12ந் தேசிய இயக்கக்குழுவின் தொழிற்சாலை மூடல்கள் எதிர்ப்பு தினம், எஸ்மா சட்டத்தை நீடித்ததை எதிர்த்து 31 ஏப்ரலில் கொடுத்த அறைகூவல், இது போன்ற மற்றும் பல அனைத்திந்திய அறைகூவல்களையும் அமுல்படுத்தியுள்ளோம.

99. இந்த மூன்றரை ஆண்டுகளில் தமிழ் மாநில சிஐடியுவின் கோவை மாநாடும், போக்குவரத்து பெடரேஷனின் கோவை மாநாடும், கூட்டுறவு ஊழியர்களின் மாநில மாநாடும், ரயில்வே சங்கத்தின் இரண்டு மாநாடுகளும், கைத்தறி நெசவாளர்களின் மாநில மாநாடும், எஞ்சினியரிங் தொழிலாளிகளின் விசேஷ மாநாடும், சிமிண்டு தொழிலாளிகளின் (தொமுச, ஏஐடியுசி, சிஐடியு, ஆந்திர, கர்நாடக எச் எம் எஸ்) கரூர் மாநாடும், உழைக்கும் பெண்களின் மாநில மாநாடும் (கோவை) தொழில் வாரியான ஏராளமான மாநில பிரதிநிதிகள் கூட்டங்களும் நடத்தப்பட்டன. காண்ட்ராக்ட் தொழிலாளிகளின் சென்னை மாநாடும் சிறப்பாக நடந்தது.

100. **சமாதான இயக்கம் :** குறிப்பிடத்தக்கவை, ஆறு கட்சிகளின் டெல்லி மாநாட்டிற்கு தமிழகத்திலிருந்து பிரதிநிதிகள் அனுப்பி வைக்கப்பட்டதும், 1984 செப்டம்பர் முதல் தேதியும், குறிப்பாக 1985 செப்டமபர் முதல் தேதியும், உலக சமாதான தினமாக நடத்தப்பட்டதுமாகும்.

இந்த மூன்றரைஆண்டுகாலத்தில் சிஐடியு மேற்கொண்ட சில முக்கியமான நடவடிக்கைகள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப்பின்னணியில் நமது வேலைகளை பரிசீலிப்போம்:

101. முன்னேற்றம்: இந்த ரிப்போர்ட்டில், நமது செயல் பாடுகளில் கடந்த காலத்தில் வெளிப்பட்ட சிலபல பலவீனங்களை யும், குறைபாடுகளையும் சுட்டிக்காட்டவிருந்தாலும், நம் தோழர் கள் பங்கெடுத்து செயல்பட்டு, வழிகாட்டி வரும் சிஐடியு—வின் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை நாம் பார்க்கத் தவறக்கூடாது.

102. தமிழகத் தொழிலாளிகளின் மத்தியில் சிஐடியு கூட்டு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளும் முன் முயற்சிகளுக்கும், சுயேச்சையான இயக்கத்திற்கும் அதிகமான பலன் கிடைக்கும் விதத்தில் அதன் செல்வாக்கு அதிகரித்துள்ளது. இதன் காரணமாகத் தான் நம்மை தனிமைப்படுத்துவதற்கு சீர்திருத்தவாதத் தலைமை கள் தனியாகவும், கூட்டாகவும் எடுத்த முயற்சிகள் தோல்வியுற் றன. சமீபத்திய 2 லட்சம் பஞ்சாலைத் தொழிலாளிகளின் மாநில ரீதியான பொது வேலைநிறுத்தம் நமது முன்முயற்சிக்கும் அதற்குக் கிடைக்கும் பலனுக்குமான சமீபத்திய உதாரணமாகும்.எச்எம்எஸ் டிஎன்டியுசி, ஐஎன்டியுசி, அதிமுக சங்கங்களை பிரித்து, அதற்கு ''ஜனநாயக முன்னணி'' என்ற ஸ்தாபன வடிவம் கொடுத்து, முத லாளிகளுக்கு சாதகமான கோரிக்கைப் பட்டியலையும் அனுப்பச் செய்து வேலைநிறுத்தத்தை இல்லாமலே செய்யலாம் என்ற முதலாளி களின் முயற்சியை முறியடித்தோம்.அனைத்துசங்கஒற்றுமையைஏற் படுத்துவதற்கும் ஒருமனதான கோரிக்கைகளை உருவாக்குவதற்கும் வேலை நிறுத்தத்தை வெடிக்கச் செய்வதற்கும், சிஐடியு ஆரம்பத் தில் சுயேச்சையாக நடத்திய மாநிலம் தழுவிய பிரச்சாரப்பயண மும் ஏஐடியுசி தொ.மு.ச பேரவை ஆகியவற்றுடன் ஏற்படுத்திய இணைப்பும் தீர்மானமான பங்கு வகித்தன. இது நம் முன்முயற்சி யால் ஏற்பட்ட செல்வாக்கின் சமீபத்திய சான்று என்பதையாரும் மறுக்க முடியாது.

103. சிஐடியு-வின் பொதுச் செல்வாக்கு வளர்ந்துள்ளதற்கு சென்னையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிப்போக்கு நல்ல உதாரண மாகும். இந்தக்காலத்தில் குசேலரின் செல்வாக்கு கணிசமாக பல

வீனப்படுத்தப்பட்டது. அவரையும் மற்ற சீர்திருத்தவாதத் தலைமைகளையும் சங்கத் தேர்தல்களில் தோற்கடித்து சென்னை அசோக் லேலண்டிலும் பின்னி எஞ்ஜினீயரிங்கிலும் எம் ஆர் எப்பிலும் மூன்றும் முறையாகவும், விம்கோ, ஐடிசி அக்ரோ (என்பீல்டு) ஆகியவற்றில் இரண்டாம் முறையாகவும் சிஐடியு தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன், மெட்டல் பாக்ஸ், யூனியன் கார்பைட் போன்ற சங்கங்களில் நாம் தொடர்ந்து வெற்றி பெற்றிருக்கிறோம். மெக்னீல் மேகர், ஹிந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், பெஸ்ட் அண்ட் குரோம்டன்போன்ற இணைக்கப்பட்ட சங்கங்களிலும், சீர்திருத்தவாதத் தலைமையின் போட்டிக்கெதிராக தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறோம். இந்தத் தோல்வியை தாங்கமாட்டாமல், குசேலர் ஓசூர் லேலண்டில் முதலாளியின் காப்பாளராக பகிங்கரமாக செயல்பட்டு வருகிறார். பேரவை சில சிறுபான்மை சங்கங்களை அமைத்து வருகிறது. இதேபோல் ராணிப் பேட்டை பிஎச்இஎல் சங்கத்திலும் நம்மை தேர்ந்தெடுத்துள்ளனர். சோலிங்கர் பஞ்சாலை தொழிலாளர் சங்கம் நம்மிடம் வந்துள்ளது.

104. கடந்த மூன்றரை ஆண்டுகளில், நமக்கு சங்க அங்கத்தினர் குறைவாக உள்ள பல இடங்களில் கூட பெருவாரியான வாக்குகள் பெற்று, பல கமிட்டிகளின் தேர்தலில் நாம் வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

105. சிஐடியு இந்த காலத்தில் புதிய இடங்களுக்கும் பரவியுள்ளது இந்திய நாட்டுப் பெரும் முதலாளிகளின் புதிய தொழில் தளமான ஓசூர் தொழில் கேந்திரத்தில் உள்ள மொத்தம் 7000 தொழிலாளிகளில் சுமார் 4000 பேர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு நீடித்த போராட்டங்களை நடத்தியுள்ளோம். பழிவாங்குதல், கொலை, போலீஸ் அடக்குமுறைகள் போன்ற சோதனைகளை சந்திக்கும்சக்தியுள்ள ஒரே அமைப்பாக ஓசூரில் வளர்ந்துள்ளோம். சேலம் எஃகாலையில் ஐ என் டி யு சி மெஜாரிட்டியை இழக்கச் செய்து சிஐடியு சங்கம் மெஜாரிட்டி சங்கமாக அமைந்துள்ளதும், திண்டுக்கல்லில் இரண்டு மில்களில் டிஎன்டியுசி சங்கம் சிஐடியுவிற்கு வந்துள்ளதும், மோகனூர் சர்க்கரைஆலை சங்கம் ஏஐடியுசி இணைப்பை ரத்து செய்து முழுமையாக சிஐடியுவிற்கு வந்ததும் சிஐடியு புது இடங்களுக்கு விரிவடைந்ததை காட்டுகிறது.

106. வங்கி ஊழியர்களின் சம்மேளனம், மாநில அரசு ஊழியர்களின் புது அமைப்பு, ஆசிரியர்களின் புது அமைப்பு, சத்துணவு மைய ஊழியர்களின் புதிய மாநில அமைப்பு போன்றவற்றிலும் சிஐடியு கொள்கைக்கு ஆதரவு பரவியுள்ளது.

107. இதே காலத்தில்தான் கைத்தறி, போக்குவரத்துத்துறைகளில் மாநில ரீதியான சம்மேளனங்கள் உருவாயின. குடிநீர் வாரியம், கூட்டுறவுத்துறை தோல் பதனிடும் துறைகளில் ஒருங்கிணைப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. அத்துடன் மாநில அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் செயல்படும சங்கங்களின் மாநில ரீதியான ஒருங்கிணைப்புக்கான ஆரம்ப நடவடிக்கையாக வெற்றிகரமான ஒரு நாள் மாநாடு நடத்தப்பட்டது,

108. மாநில சிஐடியுவின், தொழிலாளிகளைத் திரட்டும் சக்தியின் வளர்ச்சியை கோவையில் நடத்தப்பட்ட மாநில மாநாட்டின் பொழுதும், சமீபத்தில் நடந்த ரயில்வே மாநாட்டின் பொழுதும் பார்த்தோம்.

109. மாநிலத்தில் விவசாயி இயக்கத்தைக் கட்டுவதற்காகத் தொழிற்சங்க இயக்கம் உதவி செய்யும் முறையில் 1984ம் ஆண்டு ரூ 40000 வசூலசெய்துகொடுத்ததும், ஒவ்வோராண்டும் கொடுக்க இருப்பதும், இத்துறையில் சிஐடியுவின் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

110. மற்ற தொழிற்சங்க மையங்களுடன் நம்முடைய தொடர்புகள் பலவீனமாக உள்ளதை கடலூர் மாநாடு சுட்டிக்காட்டியது. அதற்குப்பின் உணர்வுபூர்வமான முயற்சிகள் எடுத்ததன் விளைவாக, சிஐடியு மாநில மையத்திற்கும் மற்ற மையங்களுக்கும் இடையில் உள்ள தொடர்புகளை நெருக்கமாக்குவதில் முன்னேறியுள்ளோம்.

111. சிஐடியு செய்தியின் விற்பனை கடலூர் மாநாட்டின் பொழுது 8000மாக இருந்தது. தற்பொழுது 13500க்கும் மேல் சென்றுள்ளது. போக்குவரத்துத் தொழிலாளி விற்பனை, சுமார் 7000-மாக இருந்தது, இன்று 16000ஆக உயர்ந்துள்ளது. அதே போல் 'மின்கதிர்' 'தொழிலரசு' போன்ற பத்திரிகைகளும் தொடர்ந்து நடந்து வருகின்றன.

112. உழைக்கும் பெண்கள் மத்தியில் செயல்படுவது முற்றிலும் இல்லாதிருந்த நிலைமை மாறி ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளது போல் 1983—ல் வெற்றிகரமான ஒரு மாநில மாநாடும், சென்னை, கோவை, திருச்சி, மதுரை போன்ற மாவட்டங்களில் உழைக்கும் பெண்களின் ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதும், ஸ்தாபனரீதியாக இல்லாத தொழில்களில் சுரண்டப்படும் உழைக்கும் பெண்களின் மாநில மாநாட்டை 29.10.85 தேதியில் திருப்பூரில் நடத்தியிருப்பதும் இத்துறையில் சிஐடியுவிற்கு ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

113. எல்லாவற்றிற்கும் மேலாக சிஐடியு உருவானதிலிருந்து மாநிலக் குழுவிற்கு சொந்தமான அலுவலக கட்டிடமின்றி செயல்பட்ட நிலைமையை மாற்றி ஒன்றரை மாதத்திற்குள் நாலரை லட்சம் ரூபாய் வசூல் செய்ததும், மற்றும் தலைநகரின் மத்தியில் ஒரு சொந்த கட்டிடம் வாங்க முடிந்ததும், அதிலிருந்து சிஐடியு மையம் செயல்பட்டு வருவதும், இந்த இயக்கத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் செல்வாக்கையும் காட்டுகின்றது.

114. தொழிற்சங்க ஒற்றுமையும் கூட்டு நடவடிக்கையும்
கடந்த மாநாட்டிற்குப் பின் நான்காண்டுகளில் நமது முதலாளித்துவப் பொருளாதாரத்தில் நெருக்கடி மேலும் முற்றியதைக் கண்டோம். திருமதி காந்தி கொலை செய்யப்பட்ட பின், திரு ராஜீவ் காந்தியை பிரதமராகக் கொண்டு புதிய மைய அரசு அமைந்த பின், அரசின் பொருளாதாரக் கொள்கையில் ஒரு திருப்பத்தையும் கண்டுள்ளோம். இந்த நான்காண்டுகளில் மாநில அரசின் தொழிலாளர் விரோதப் போக்கு மேலும் கண்மூடித்தனமானதாகவும், அப்பட்டமான முதலாளி ஆதரவானதாகவும், தீவிர வடிவம் கொண்டது. இந்தப் பின்னணியில், நாம் மட்டும் நடத்திய போராட்டங்கள் பற்றியும், கூட்டுப் போராட்டங்கள் பற்றியும் நமக்கு ஒருகணிப்பு அவசியம்.

115. கூட்டு நடவடிக்கைகள் : இந்தக் காலத்தில் நடந்த கூட்டு நடவடிக்கைகளை பரிசீலித்தால் ஒரு போக்கை பார்க்கலாம்.

ஃ 19-1-82 பொது வேலை நிறுத்தத்தில் சிஐடியு—வையும் ஏஐடியுசி—யையும் மற்ற அனைத்துச் சங்கங்களும் எதிர்த்தன.

ஃ ஆனால் 1983 ஆரம்பத்தில் போக்குவரத்துத் துறையிலும் மாநிலப் பேரணியிலும் "ஐஎன்டியுசி, எச்எம்எஸ், தொமுச, சிஐடியு, ஏஐடியுசி, உள்ளிட்டு அனைத்து சங்க ஒற்றுமை ஏற்பட்டது.

ஃ ஆனால் 1983 பஞ்சாலை போனஸ் விஷயத்தில் இந்த ஒற்றுமை உடைகிறது.

ஃ மீண்டும்1984ம் ஆண்டு பிப்ரவரி 14ந்தேதி சென்னையிலும் 12-9-84 தேதியில் மாநிலம் முழுவதும் ஒன்றுபட்ட ஒரு நாள் கண்டன வேலைநிறுத்தம் நடைபெற்றது.

ஃ 1985-ல் இரண்டரை லட்சம பஞ்சாலைத் தொழிலாளிகளின் ஒன்றுபட்ட பொது வேலைநிறுத்தம் நடைபெற்றது.

ஃ தற்போதுள்ள நிலைமை என்னவென்றால் தொமுச, ஏஐடியுசி போன்ற அமைப்புகள் பஞ்சாலையிலும் மின்சாரத்திலும் போராட்டப் பாதையிலிருந்து சற்று விலகித்தான் நிற்கின்றன.

116. எனவே: நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் ஒற்றுமையில் உடைப்பு ஏற்பட்டால், அது நிரந்தரமல்ல. முதலாளிகளின்—அரசுகளின் தாக்குதல்கள் கடுமையாக இருப்பதினாலும், தொழிலாளிகள் மத்தியில் ஒற்றுமை உணர்வு மேலும் வளர்ந்திருப்பதினாலும், ஒற்றுமை உடைந்தாலும் தொழிலாளிகள் மீண்டும் மீண்டும் கூட்டு நடவடிக்கைப் பாதையில் உந்தித்தள்ளப்படுகிறார்கள். இதை நாம் உணர்ந்து; தொழிலாளிகளின் ஒற்றுமை உணர்வை பயன்படுத்தி, சீர்திருத்த வாதிகளின் சமரசப்பாதையை தக்கதருணத்தில் அம்பலப்படுத்தி, ஒன்றுபட்ட போராட்டத்திற்கு அறைகூவல் விட்டு சிஐடியு சங்கங்களின் சுயேச்சையான செயல்பாட்டினையும் தீவிரப்படுத்தினால் கூட்டு நடவடிக்கையை மீண்டும் மீண்டும் உருவாக்குவது இந்தக் காலத்தில்சாத்தியமானதேயாகும்.

117. போதிய அளவு தொழிலாளிகளின் போராட்ட ஆர்வத்தைத் திரட்டினால் சீர்திருத்தவாதத் தலைமைகளின் துரோகத்தைக் கண்டித்து சிஐடியு, ஏஐடியுசி,தொ மு ச போன்ற ஸ்தாபனங்களை ஒன்று சேர்த்து, கூட்டு அடையாள வேலை நிறுத்தம் நடத்த முடியும் என்பதையும் காட்டுகிறது.

118. பஞ்சாலைப் பொது வேலை நிறுத்தம் : இவற்றை எல்லாம் குறிப்பிடும் பொழுது, சமீபத்தில் நடந்து முடிந்த பஞ்சாலைப் பொது வேலை நிறுத்தத்தின் சில பிரதான படிப்பினைகளை இங்கு பரிசீலிப்பது பொருத்தமாயிருக்கும். சிஐடியு சுயேச்சையாக நடத்திய பிரச்சாரப் பயணத்தின் நிர்ப்பந்தம் காரணமாகவும், பேரவை ஏஐடியுசி சங்கங்களை இணைத்து சிஐடியு மற்ற சங்கத் தலைமைகளை வற்புறுத்தியதனுலும் கூட்டுப் பொது வேலை நிறுத்தம் நடந்தது. ஆனுல், இறுதியில் அரசும், பெருமுதலாளிகள் சங்கமும் விரும்பிய திசையில், வேலை நிறுத்தத்தை சிஐடியுவைத் தவிர கூட்டுக் குழுவின் மெஜாரிட்டியினுல் வாபஸ் பெற முடிந்தது. கூட்டுக் குழுவில் மெஜாரிட்டியினர் எடுத்த நிலைக்கு ஒவ்வொரு கூட்டத்திலும் சிஐடியு பிரதிநிதிகள் எதிர்ப்பை தெரிவித்திருந்தாலும், வாபஸ் பெறும் பொழுது சிஐடியுவும் சம்மதித்துத் தான் வாபஸ் பெறப்பட்டது என்ற குழப்பப் பிரச்சாரத்தை சீர்திருத்தவாதிகளால் தற்காலிகமாகவாவது தொழிலாளிகள் மத்தியில் செய்ய முடிந்தது.

119. பல்வேறு மாவட்டங்களிலிருந்து சிஐடியு மையத்திற்கு வந்த ரிப்போர்ட்டுகளில் அடங்கியிருந்த கருத்துக்களையும் அத்துடன் மதுரையில் நடத்தப்பட்ட சிஐடியுவின் மாநில பஞ்சாலைப் பிரதிநிதிகளின் கூட்டத்தில் வந்துள்ள கருத்துக்களையும், பாண்டிச்சேரியில் சமீபத்தில் கூடிய சிஐடியு நிர்வாகக்குழுவின் கருத்துக்களையும் கணக்கிலெடுத்தால் கீழ்க்காணும் முக்கிய விஷயங்கள் முன் நிற்கின்றன:

1. பஞ்சாலையில் பழைய ஒப்பந்தம் முடிவதற்கு முன்னதாகவே, சிஐடியு மையம் முன்கை எடுத்து, மாநில பஞ்சாலைப் பிரதிநிதிகளை கூட்டிவைத்து, கோரிக்கைகளை உருவாக்கியதோடல்லாமல், ''ஜனநாயக முன்னணி''யின் கோரிக்கைப் பட்டியலை அம்பலப்படுத்தி, கூட்டு நடவடிக்கையின் அவசியத்தையும் வலியுறுத்தி மாநிலம் தழுவிய ஜீப் யாத்திரையும் நடத்தியதினுல், இவ்வாறு தொடர்ந்து எடுத்த முயற்சியின் காரணமாக, சிஐடியு எதிர்ப்பு ''ஜனநாயக முன்னணி''யை உடைக்க முடிந்தது; பொது கோரிக்கைகளை உருவாக்க முடிந்தது. வேலைநிறுத்த நோட்டீஸ் கொடுக்க நிர்ப்பந்திக்க முடிந்தது. வேலை நிறுத்தத்தை துவக்கவும் நிர்ப்பந்திக்க முடிந்தது.

2. வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பொழுது, எந்த கட்டத்தில் சீர்திருத்தத் தலைமைகள் கோர்ட்டிற்கு விட்ட பிரச்னைகள் பற்றி தெளிவு கேட்க வேண்டும் என்று முடிவு எடுத்தார்களோ, அப்போதே நமது பிரதிநிதிகள் இந்த நிலை கட்டாய மத்தியஸ்தத்தை ஏற்பதாகுமென்றும் அது தொழிலாளிகளுக்கு பெரும் தீங்கு விளைவிக்கும் என்றும் கூறி முத்தரப்பு பேச்சு மூலம் தீர்வு காணுவதற்கு நிர்ப்பந்தம் கொடுக்க வேலை நிறுத்தத்தை தீவிரப்படுத்த திட்டமிட வேண்டுமெனக் கோரி, பகிரங்கமாக பத்திரிக்கை வாயிலாக நமது நிலையை அறிவித்திருக்க வேண்டும். இது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளிகளை உஷார்ப்படுத்தியிருக்கும்.

3. கமிட்டிக்குள்ளும் கன்சிலேஷியனிலும் என்ன நடந்தது என்று சிஐடியு மையத்திற்கு அவ்வப்பொழுது தகவல் கொடுத்திருக்க வேண்டும்.

4. கமிட்டிக்குள் யார் யார் எந்த நிலையினை எடுக்கிறார்கள் என்ற விவரங்களை அவ்வப்பொழுது மாநிலம் பூராவும் ஊழியர்களுக்கு தகவலாக அனுப்பி, அவர்களை தொழிலாளிகள் மத்தியில் பிரச்சாரம் செய்யவைத்திருக்க வேண்டும்.

5. 23-7-85ம் தேதி இரவு வேலைநிறுத்த வாபஸ் விவரத்தை ர. சுப்பிரமணியம் பத்திரிகை நிருபர்களுக்கு அறிவித்த அதே நேரத்தில், நமது பிரதிநிதிகள் இந்த முடிவில் நமக்கு ஒருமைப்பாடு இல்லை என்றும் சிஐடியு தனது நிலையை மறுநாள் முடிவு செய்யும் என்றும் அறிவிக்காமலிருந்தது பெருந்தவறாகும்.

நமது டியு சப்கமிட்டி வேலை நிறுத்தத்திற்கு சற்று முன்னர் கூடி விவாதத்திருந்தால், இந்தப்பெரும் குறைபாடுகளை தவிர்த்து நமது சுயேச்சையான இயக்கத்திற்கு திட்டம் போட்டிருக்க முடியும். ஆனால் டியு சப்கமிட்டி கூடத்தவறிவிட்டது.

6. இந்த விஷயங்களில் நாம் தவறி இருந்தாலும், வேலை நிறுத்தம் நடக்கும் நேரத்தில் அரசாங்கத்தையும் முதலாளிகளையும் குறிவைத்து சிஐடியு சார்பாக விடப்பட்ட அறிக்கைகளும் அந்த அறிக்கைகளை துண்டுப்பிரசுரமாக மாநிலம் பூராவும் விநியோகம் செய்ததும், அதனடிப்படையில் நமது மாவட்ட ஸ்தல ஊழியர்கள் தொழிலாளிகள் மத்தியில் பேசி வந்ததும், வேலைநிறுத்தம்

முடிந்த பின் சுப்பிரமணியத்திற்கு தோழர் கே. ஆர். எழுதிய கடிதத்தை பிரசுரித்ததும் நிர்வாகிகள் கூட்டத்தீர்மானம் வெளியிடப்பட்டதும் ஸ்டிரைக் காலத்தில் கட்சிசார்பாக சிலபல இடங்களில் நாம போட்ட கூட்டங்களில் கொடுத்த விளக்கங்களும், ஒரு சில இடத்தில் கூட்டு மேடையிலேயே நமது தோழர்கள் சிஐடியு நிலையை விளக்கியதும், சிஐடியுவின் அந்தஸ்தை இயன்ற அளவிற்கு பாதுகாத்தது. இதன் விளைவாகத்தான் திண்டுக்கல்லிலும், காமராஜ் மாவட்டத்திலும் எட்டயாபுரத்திலும், திருச்சி மாவட்டத்திலும் கோவை மாவட்டத்தில் பல மில்களிலும் நமது சங்கத்திற்கு சிறுபகுதி புதிய தொழிலாளிகள் சந்தா கொடுத்துள்ளனர்; சில சங்கங்களும் நம்மிடம் வந்துள்ளன.

நடத்தப்பட்ட கூட்டு நடவடிக்கைகளின் பயன்பற்றி மார்க்சீய மதிப்பீடு:

120. இந்த மதிப்பீடு செய்வதற்கு நமது கட்சியின் அளவு கோல் என்ன என்பது பற்றி 'தொழிற் சங்க அரங்கில் நமது கடமைகள்'' என்ற மத்தியக் கமிட்டி தீர்மானத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:

''தொழிற்சங்க ஒற்றுமைக்கான போராட்டம், வர்க்கப் போராட்டத்தையும் வர்க்க உணர்வையும் கூர்மைப்படுத்துவதற்கான ஒரு கருவியாகும். மேலும் மேலும் ஏராளமான தொழிலாளிகளை வர்க்கப் போராட்ட நிலைக்கும், வர்க்க சமரசப் பாதையை நிராகரிக்கும் நிலைக்கும் கொண்டு செல்லும் கருவிதான் அது. புரட்சிகரமான தொழிற்சங்கக் கொள்கைக்காக நிற்கும் சக்திகளுக்கும், இன்றைய சமுதாய அமைப்பின் வரம்பிற்குள் கட்டுப்படும் இயக்கமாக தொச இயக்கம் இருக்க வேண்டுமென்ற கொள்கைக்காக நிற்கும் சக்திகளுக்கும் இடையில் நிலவும் பலாபலனை மாற்றும் கருவியாகும், தொழிற்சங்க ஒற்றுமைக்கான போராட்டம்''

121. இந்த அளவு கோலை வைத்துப்பார்த்தால், கடந்தநான்கு ஆண்டுகளில் நாம் முன்கை எடுத்து நடத்திய ஏராளமான மாநில, மாவட்ட, ஸ்தல கூட்டுப் போராட்டங்களுக்குப்பின்,

தொழிலாளிகள் வர்க்க உணர்வு பெறுவதில் கணிசமான முன்னேற்றம் உண்டா? என்று பார்த்தால் இல்லை என்றே கூறலாம்.

ஃ சர்வதேச உணர்வின்மை நீடிக்கிறது.

ஃ உலக சமாதான, யுத்த எதிர்ப்பு உணர்வை தமிழகத் தொழிலாளிகள் மத்தியில் ஏற்படுத்த தவறியுள்ளோம்.

ஃ சமீபத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களில் தமிழகத்தில் தொழிலாளிகள், (சிஐடியு தொழிலாளிகளில் ஒரு பகுதி உள்பட) இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் அதன் தோழமைக்கட்சிக்கும் வாக்களித்ததிலிருந்து, நாட்டுஒற்றுமையை பாதுகாக்க மத்திய ஆளும் வர்க்கக் கட்சியினால்தான் முடியுமென தமிழகத் தொழிலாளிகள் தவருகக் கருதினர்கள் என்பது தெரிகிறது.

ஃ கடந்த நான்காண்டுகளில் நடத்திய பல சகோதர ஆதரவு இயக்கங்களை பரிசீலித்தால், ஆதரவு நிதிவசூலும், கொடுத்த தொழிலாளிகளின் எண்ணிக்கையும், மிகவும் குறைச்சலாகவே இருந்து வந்துள்ளது. ஒசூர் லேலண்டு தொழிலாளிகளின் வீரப் போராட்டத்திற்கு 300 சங்கங்களில் வெறும் 31 சங்கங்களே நிவாரணநிதி அனுப்பின. நமது சங்கங்கள் 5, 10, 20 ரூபாய் அனுப்ப முடியாமல் இல்லை. நமது சொந்த வர்க்கத்தின் போராடும்பகுதிக்கு ஆதரவு காட்டும் உணர்வையே நாம் ஊட்டத்தவறியுள்ளோம். வெறும் தொழிற்சாலை உணர்விலேயே இன்னமும் நாம் தொழிலாளிகளை வைத்துள்ளோம் என்று அர்த்தம்.

இதற்கு பிரதான காரணங்கள் என்ன?

122. இன்று நமது தொழிற்சங்கங்கள் ஆட்குறைப்பு, லேஆப் கதவடைப்பு, பஞ்சப்படி, ஊதிய உயர்வு போன்றவற்றிற்காகத்தான் போராடுகின்றனவே தவிர கூட்டுப் போராட்டங்கள் நடைபெறுகிற பொழுது, மூலகாரணமான அரசாங்கக் கொள்கைகளை அம்பலப்படுத்தி சுயேச்சையான தனிமேடையில் இயக்கமோ, கூட்டுமேடையில், அல்லது கூட்டுப் போராட்டங்களின் பொழுது தொழிலாளிகளின் மத்தியில்ஏற்படும்தோழமையைப்பயன்படுத்தி அவர்களுடன் விவாதமோ நடத்துவதில்லை. இன்று ஐடிஐ படித்த தொழிலாளிகளும் அதிகமாக இருக்கும் பொழுது, இதற்கு நல்ல வாய்ப்புண்டு.

2. பல்வேறு பகுதி மக்களுடைய வாழ்க்கைத்தரம், இன்று பட்ஜெட் கொள்கை, விலைவாசிக்கொள்கை, பற்றாக்குறை பட்ஜெட் கொள்கை, ஏற்றுமதி—இறக்குமதிக் கொள்கை, வரிக் கொள்கைஆகியவற்றால் நிர்ணயிக்கப்படுகிறது. இதுதொழிலாளிகளை மட்டுமல்ல, நாட்டை மட்டுமல்ல, நாட்டின் பொருளாதார சுயாதிபத்தியத்தையே அரசியல் சுதந்திரத்தையே பாதிக்கும் பிரச்சனையாகும். இவற்றைப்பற்றி நாம் தொழிற்சங்கமேடையில் பேசுவதில்லை.

3. நாம் நடத்திய ஏராளமான போராட்டங்களை அவ்வப்பொழுது பரிசீலனை செய்து, அதன் படிப்பினைகளை மாநிலம் முழுவதுமுள்ள தொழிலாளிகளின் பொது உணர்வாக்குவதன் மூலம் அவர்களுடைய உணர்வை உயர்த்துவதில்லை. உதாரணமாக,

ஃ இன்றைய கடுமையான தாக்குதல்களை சந்திக்க, தொ. ச. போராட்டங்களை முதலாளி—தொழிலாளி வரம்பிலிருந்து முதலாளி—பொதுமக்களுக்கிடையேயான போராட்டமாக மாற்றுவது அவசியம். அதற்கு கரூர் போராட்டம் தந்த வெற்றி நல்ல உதாரணம். இதுவரை அது பரிசீலிக்கப்படவில்லை.

ஃ இன்றைய கண்மூடித்தனமான ஆட்குறைப்பை எதிர்த்து ஆட்குறைப்பு செய்யப்பட்ட தொழிலாளிகளையும் உள்ளே வேலை செய்யும் தொழிலாளிகளையும் வியாபாரிகளையும் இணைத்து போராட்டம் நடத்துவதற்கு நெல்லிக்குப்பம் போராட்டம் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. அதுவும் பரிசீலனை செய்யப்படவில்லை.

ஃ மூடிய மில்லை தேசியமயமாக்க வேண்டுமென்ற கோரிக்கையைபிராந்திய மக்கள் அனைவரின் உடனடி பொது கோரிக்கையாகமாற்றி அதை அரசே ஏற்று நடத்த வேண்டுமெனக்கோரி, வியாபாரிகள் உள்பட அனைத்து பொதுமக்களும் பங்குகொள்ளும் முழுபந்த், மறியல், சட்டசபை முன் மறியல் போன்ற வடிவங்களைக் கொண்டு அரசாங்கத்தையே எதிர்த்து நடத்தும் போராட்டத்திற்கு புதுவை ரோடியர் மில் போராட்டம் நல்ல எடுத்துக்காட்டு.

ஃ வேலை நிறுத்த காலத்தில் சீர்திருத்தவாத தலைமையின் சமரசப் போக்கை முறியடிப்பதற்கும், போராடும் தொழிலாளிகளை திரட்டுவதற்கும், சிறு தொழிலில் போராடி பஞ்சப்படி பெறுவ

தற்கும் திருப்பூர் பனியன் தொழிலாளர்களின் வீரமிக்க போராட்டம் ஒரு எடுத்துக்காட்டு. அது இன்னும் பரிசீலனை செய்யப்படவில்லை இப்படி ஒவ்வொரு போராட்டத்திலும் முக்கிய படிப்பினைகள் உண்டு.

தொழிலாளிகளின் வர்க்க உணர்வினை உயர்த்துவதற்கு, போராட்ட பரிசீலனையும் அது மாநிலம் பூராவும் தொழிலாளிகள் மத்தியில் கொண்டு செல்லப்படுவதும் ஒரு முக்கிய கருவியாகும். இதை நாம் செய்வதில்லை.

4. தொழிலாளிகள் மத்தியில் கட்சியின் சுயேச்சையான இயக்கத்தை கட்சி அங்கத்தினர்கள் நேரடியாக கொண்டு செல்லாமல் இருப்பது, கட்சியின் அரசியலை தாங்கிவரும் கட்சிப் பிரசுரங்களையும், பத்திரிகைகளையும் தொழிலாளர்கள் மத்தியில் கொண்டு செல்லாமல் இருப்பது, தமிழகத்தில் தொழிலாளிகள் மத்தியில் தீக்கதிர் 1000த்திற்கு மேல் போகாமலிருப்பது, கட்சியின் திட்டம், கொள்கைகள் பற்றி அன்றாட பிரச்சாரம் தொழிலாளிகள் மத்தியில் செய்யாமல் இருப்பது, தொழிற்சங்க மட்டத்தில் ஏற்பாடு செய்ய முடிகிற வகுப்புகளைக்கூட விசேஷமாக நடத்தாமலிருப்பது, போராட்ட காலத்திலும் மற்ற நேரங்களிலும் தொழிற்சாலைகளில் கட்சி அங்கத்தினர்களை திட்டமிட்டு அதிகமாக சேர்க்கும் வேலை நடக்காமலிருப்பது, பெருவாரியான இடங்களில் தொழிற்சாலை கட்சிக்கிளைகள் ஆலை பிரச்னைகளுக்காக அல்லது அங்கத்தினர்களை புதுப்பிக்க அல்லது வசூலுக்காக மட்டுமே கூடுவது, தொழிற்சாலைகளில் பலம் வாய்ந்த கட்சியை கட்டுவதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை சம்பந்தப்பட்ட கட்சிக் கமிட்டிகளோ, பிராக்ஷன்களோ உணராமலிருப்பது, இவையெல்லாம் தொழிலாளிகளின் வர்க்க அரசியல் உணர்வு மட்டத்தை உயர்த்த முடியாமலிருப்பதற்கு காரணங்களாக உள்ளன.

5) இன்று தமிழகத்தில் தொழிலாளிகளின் சேர்மானம்கணிசமாக மாறியுள்ளது. சேரக்கூடிய புதியதொழிலாளிகள் சுற்றுப்புற கிராமங்களிலிருந்தும், குடிசைப் பகுதிகளிலிருந்தும் வருவதனால் அவர்களில் பெரும்பாலானோர் சேருகிறபொழுதே, திமுக,அல்லது அதிமுக அரசியலுடன் அல்லது சாதி உணர்வுடன் சேருகிறார்கள். இவ்விரு கட்சிகளும் சர்வதேசிய, தேசியப்பார்வையற்ற கட்சிகள்,

தொழிலாளி வர்க்க புரட்சி, அதில் தொழிலாளி வர்க்க தலைமை போன்றவற்றில் நம்பிக்கை கொள்ளாத கட்சிகள்: முதலாளித்துவப் பாதையில் நம்பிக்கை கொண்ட கட்சிகள்; புரட்சியே தேவையில்லை என்ற கருத்துடைய கட்சிகள். திமுக, திக, போன்று இனவெறி தழுவிய பிரச்சாரத்தினை அடிக்கடி செய்யக்கூடிய கட்சிகள். இந்தக் கருத்துக்கள் பரவிய கிராமப் பகுதிகளிலிருந்தும், குடிசைப் பகுதிகளிலிருந்தும் வரும் ஏராளமான தொழிலாளிகளின் மத்தியில் பலாபலத்தை மாற்றுவதற்கோ உணர்வு மட்டத்தை உயர்த்துவதற்கோ பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான கூட்டு நடவடிக்கைகளை அவசியம் உருவாக்குவதுடன், அந்த போராட்டத்தின் பொழுதும் பிறகும் தொடர்ந்து மேலே குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றவும் வேண்டும்.

கூட்டு இயக்கத்தில் செக்டேரியன் திரிபுகள்

123. சிஐடியு மின்சாரத் தொழிலாளர் இயக்கத்தில், சமீபத்தில் ஊதிய உயர்வு கிளர்ச்சி சம்பந்தமாக, ஒரு கட்டம் வரை, சரியான அணுகு முறையை மேற்கொண்டு கூட்டு இயக்கம் நடத்தினர். ஆனால் ஏஐடியுசி அமைப்பு ஒரு நாள் வேலை நிறுத்த அறைகூவல் விட்டதும், அதேநேரத்தில் நாமும் அறைகூவலை கொடுக்க மறுத்து செக்டேரியன் போக்கில் போக இருந்தது. மையம் தலையிட்டு அதை சரி செய்யவே அது பலனையும் தந்தது

இதே நிலை நெய்வேலியிலும் இருக்கிறது. நம்மை நிர்வாகம் ஒதுக்கி வைத்துள்ள நிலைமையில், மற்ற சங்கங்களின் தொழிலாளிகளையும் இந்த அநியாயத்தை எதிர்த்து திரட்டுவதற்கேற்ற முறையில் அந்த சங்கங்கள் தலைமைகளை விமர்சனம் செய்வதற்குப் பதிலாக மேலும் விரோதம் வளர்க்கும் வகையில் விமர்சனம் செய்வது என்ற போக்கு உள்ளது.

124. கூட்டு இயக்கமும் நமது அங்கத்தினர்கள் எண்ணிக்கையும் : இது குறித்து 11வது கட்சி காங்கிரசின் அரசியல ஸ்தாபன அறிக்கை குறிப்பிடுவதாவது

''தொழிலாளர்களின் போராட்டங்கள் வளர்ந்த பின்னும், நாட்டின் பொருளாதார நிலைமை மோசமாகி வரும் நிலையில, பல இடங்களில் நமது அங்கத்தினர் எண்ணிக்கை அதிகப்

படுவதில்லை. சிஐடியுஸ்தாபனங்கள் அவற்றின் ஆரம்ப காலவீச்சை இழந்துள்ளன. இதற்குமேல் முன்னேற வேண்டுமானால், திட்டம் போட்டு செயல்பட்டாலன்றி, சிஐடியு ஸ்தாபனங்களின் செயல் பாட்டினைக் கூர்ந்து கவனித்தாலன்றி சாத்தியமில்லை''

125. தமிழ்நாட்டில் இத்தனை போராட்டங்கள் நடத்திய பின்னரும், அங்கத்தினர் எண்ணிக்கையில் தேக்கம்தான் காணப்படுகிறது. மாநில அங்கத்தினர் எண்ணிக்கை இன்னமும் 1லட்சத்துமுப்பதினாயிரத்தில்தான் தேங்கி நிற்கிறது. பஞ்சாலையில் நமதுமுக்கியமான தளம் கோவையில் தொழிலாளர் சங்கம். 1984ல் அதன் அங்கத்தினர் எண்ணிக்கை 5246 ஆகும். உறுப்பினர் எண்ணிக்கையில் அந்த மாவட்டத்தில் மற்ற சங்கங்களைவிட நாம் கடைசி இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளோம். அதே நிலைமைதான் மதுரை பஞ்சாலையிலும் நிலவுகிறது. மின்சாரத்தில் கடந்த நான்காண்டுகளாக 9000த்திலிருந்து 11000த்திற்குள் கூடும், குறையும். தற்பொழுது எண்ணிக்கை 10000 தான். அதேபோல் போக்குவரத்திலும் தேக்கம்தான்

இதற்கு பிரதான காரணங்கள் என்ன?

126. 1. தொழிற்சங்க இயக்கத்தின் அன்றாட நடவடிக்கைகள் பலவீனமாக உள்ளன. தொழிற்சங்கத்திற்கும் தொழிலாளிகளுக்கும் இடையிலான அன்றாட தொடர்பு குறைந்துள்ளது. கேட் கூட்டங்கள் அடிக்கடி போடுவதில்லை. கூட்டக்களில் பேசுவதிலும் அ ர சி ய ல், சமாதான இயக்கம் போன்றவற்றின் உள்ளடக்கம் இல்லை தோழர்கள், அன்றாட வழக்கமான வேலைகளையே செய்து வருகிறார்கள். டிபார்ட்மெண்டுகளில் எழும் பிரச்சனைகளின் மீது கூட்டு டிபார்டமெண்டு போராட்டங்களை நடத்துவதில்லை. ஊழியர் கூட்டங்களை அடிக்கடி நடத்துவதில்லை.

2. அங்கத்தினர்களை சேர்ப்பதற்கு சாதாரண தொழிலாளிகளை ஈடுபடுத்துவதில்லை. சில தலைவர்கள் மட்டும் கேட்டில் நின்று வசூல் செய்யும் பழக்கம் தொடர்கிறது. பல தொழிற்சாலைகளில் போனஸ் வசூலில் ஒருபகுதியை சந்தாவாக கணக்கெழுதுவதும் உண்டு.

3. இது பற்றி ஸ்தூலமான திட்டம் போட்டு அங்கத்தினர் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு உதவும் வகையில்,

கடலூர் மாநாட்டிற்கு முன்னரே சிஐடியு மாநிலக்குழுவில் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அதாவது, ஒவ்வொரு சங்கமும் முந்திய ஐந்தாண்டு அங்கத்தினர் பட்டியல் பரிசீலனையை மட்டும் அஜண்டாவில் வைத்து சங்க நிர்வாகக்குழு கூடவேண்டும். ஏற்றமா, இறக்கமா, தேக்கமா என்று பார்த்து அதற்கான காரணங்களை விவாதித்து, அடுத்து ஒரு குறிக்கோள் வைத்து சந்தா சேர்க்கும் திட்டம் வகுத்து, சிஐடியு மாநிலக்குழுவிற்கு அனுப்பினால் சிஐடியு மாநில மையம் அதில் முன்னேற்றம் காண உதவுவது என்ற முடிவு எடுக்கப்பட்டது. பல மாநிலக்குழு கூட்டங்களில் அது பற்றி வற்புறுத்தியும், கட்சியின் மாநிலக்குழு அங்கத்தினர்களே அதில் அக்கறை காட்டுவதில்லை. மாவட்டக் கட்சிக் கமிட்டிகள் இதில் தலையிடாமல், வெறும் வெகுஜனஸ்தாபன மட்டத்தில் மட்டும் முடியக்கூடிய விஷயமாக தெரியவில்லை. தொழிற்சங்க ஊழியர்களின் அரசியல் வேலைகள் பற்றிய ஒரு பரிசீலனையை புது மாநிலக்குழுவும் மாவட்டக்குழுக்களும் மேற்கொள்ள வேண்டும்.

127. தமிழகத்தில் சிஐடியுவின் ஒரு ஆகப்பெரும் பலவீனம், தொடர்ந்து நீடிக்கும் பலவீனம். அதைக்களைவதை இனியும் தாமதப்படுத்தலாகாது என்ற பலவீனம், கூட்டுப் போராட்டங்களின் பிரதான வர்க்க லட்சியங்களை நிறைவேற்றத் தவறும் பலவீனமாகும். இந்தபலவீனத்தைக் களையும்போராட்டத்திற்குகூர்மையான ஆயுதமாக ‘தொழிற்சங்க அரங்கில் நமது கடமைகள்’ என்ற மத்தியக் கமிட்டித் தீர்மானம் அமைந்துள்ளது. அதை விவாதித்து, தமிழகத்திற்கு பொருந்தும் வகையில் ஸ்தூலப்படுத்தி அணிகள் பூராவுக்கும் ரிப்போர்ட் செய்ய நமது மாநிலக்குழு தவறியுள்ளது. கட்சியின் அஸ்திவாரமான வர்க்க இயக்கம் பற்றிய ஒரு முக்கியமான தஸ்தாவேஜை ஸ்தூலப்படுத்தி தவறியது ஒரு பிரதான பலவீனமாகும். திட்டம் போட்டு நாம் வர்க்க உணர்வு உண்டாக்குவதில் சுணக்கம் காட்டும் பொழுது தொழிலாளிகளின் மத்தியில் செயல்படும் தீவிர ஊழியர்களை அதிதீவிரவாத சக்திகளும், கிறிஸ்துவ இடதுசாரி சக்திகளும், தங்களுடைய அதிதீவிரவாத பிரசுரங்களை வினியோகம் செய்து குழப்ப முயற்சிக்கிறார்கள். பொன்மலை ரயில்வே ஒர்க்ஷாப், பி.எச்.இ. எல்., திருச்சி, ராணிப்பேட்டை, சென்னை, போன்ற இடங்களில் இந்த விஷப் பிரச்சாரம் நடைபெறுகிறது. சென்னை ஹட்கோ (இந்தியா) தொழிற்சங்கத்தில் குசேலரைத் தோற்கடித்து கோவை

ஈஸ்டர்ன் வென்றது இந்த ஊடுருவலைக் காட்டுகிறது. கோவை லெட்சுமி மிஷின் ஒர்க்ஸ் யூனியனில் நக்சலைட்டுகள் வலுப்பெற்று அதிதீவிரப் போக்கில் சென்று அது கதவடைப்பில்இருப்பது குறிப் பிடத்தக்கது.

128.கேந்திரத் தொழில்கள் : கடந்த மாநாட்டிற்குப்பின் ரயில்வே அரங்கில் இயக்கத்தை வளர்க்க முன்பைவிட சற்று கவனம் செலுத்துகிறோம். அதனால் அங்கீகாரமில்லாத சங்கமாக டிஆர்இயு செயல்பட்டாலும் 5000ஆக இருந்த அங்கத்தினர் எண் ணிக்கை 7000த்தை தாண்டியுள்ளது. அதன் பலனாக, சமீபத்தில் நடந்த டி.ஆர்.இயு மாநாட்டில் கணிசமான ரயில்வே தொழிலா ளிகள் இரண்டு நாட்களும் பங்கு கொண்டனர். அதற்கு முன் நடந்த ஈரோடு மாநாட்டு வசூல் ரூ 28000 தான். ஆனால் இந்த மாநாட்டிற்கு மையத்திற்கு மட்டும் வந்த வசூல் 65000 ரூபாய் ஆகும். மொத்தம் ரயில்வே முழுவதிலும் மாநாடு சம்பநதமாக ஒரு லட்சத்திற்கு மேல் வசூலாகி இருக்கும் அத்துடன் ரயில்வே பிராக்ஷன், டியுசப்கமிட்டி, மாநில செயற்குழு ஆகியவை விசேஷ மாகவிவாதித்து பொன்மலை-திருச்சி,மதுரை,விழுப்புரம்,சென்னை, ஈரோடு இந்த கேந்திரங்களில் சங்கக் கிளைகளை தீவிரமாக செயல் படச் செய்யவும் கட்சி வேலைகளை கவனிக்கவும், சம்பந்தப்பட்ட ஐந்து மாவட்டக் கமிட்டிகள் முழுநேர ஊழியர்களை ஏற்பாடு செய்யவேண்டுமெனவும், சங்கப் பொதுக் காரியதரிசி தோழர் ராமதாஸ் தனது வேலையை ராஜினமா செய்து விட்டு முழுநேர ஊழியராக வரவேண்டுமெனவும் டிஆர்யு விற்கு வழி காட்டுவதற்காக ஆர்யு, கேஜஎன் உள்ளிட்டு 6 தோழர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து அது மாதம் ஒருமுறை பொன்மலையி லும், சென்னையிலும் மாறிமாறி கூட வேண்டுமெனவும் முடி வெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். அதன்படி தோழர் ராமதாஸ் வேலையை ராஜினமா செய்துவிட்டு முழுநேர ஊழிய ராக வந்துவிட்டார். திருச்சி மாவட்டக் கமிட்டியும், மதுரை மாவட்டக்கமிட்டியும் முழுநேர ஊழியர்களை ஏற்பாடு செய்து செயல்பட ஆரம்பித்து விட்டன.

மின்சாரத்திலும், போக்குவரத்திலும் சில விசேஷமுயற்சி கள் நடைபெறுகின்றன. ஆனால் தேக்கத்தில்தான் நிற்கிறது.

129. பொதுத்துறை தொழிற்சாலைகள்: ராணிப்பேட்டை பெல்லில் நம் தலைமையை தேர்ந்தெடுத்திருப்பது ஒரு முக்கிய வளர்ச்சிப்போக்காகும். திருச்சி பெல் நிறுவனத்தில் கடலூர் மாநாட்டின் பொழுது ஆயிரத்திற்கு மேற்பட்டு இருந்த அங்கத்தினர் எண்ணிக்கை தற்பொழுது 2400 ஆக உயர்ந்துள்ளது. ஆனால் இங்கு சூப்பர்வைசரி ஸ்டாப், வாட்ச் அண்டு வார்டு, குமாஸ்தாக்கள், உள்ளிட்டு 17,000தொழிலாளிகள் உள்ளனர் என்பதை மறந்துவிடலாகாது புதிய தொழிலாளிகளில் கணிசமானவர்கள் திமுக அரசியல் கொண்டவர்களாதலால், பேரவை சங்க பலம் சற்று கூடியுள்ளதை உதாசீனப்படுத்தலாகாது. மற்ற டெலிபிரிண்டர்ஸ் போன்றவைகளில் தேக்கம்தான். நெய்வேலியில் நாம் பலவீனமடைந்துள்ளோம். அந்த நிலைமையை மாற்ற, கடும் முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். சென்னை துறைமுகத்தில் ஆரம்பித்த சங்கம் இன்று மிகவும் பலவீனமாக இருக்கிறது. ஒரு வெற்றிகரமான அனைத்திந்திய ஸ்டிரைக் நடந்தும் கூட நமது சங்கத்தை பலப்படுத்துவதற்கு அதை பயன்படுத்தவில்லை என்பதோடு அல்லாமல், இருந்த பலத்தையும் இழந்துள்ளோம்.

இந்த விஷயத்தில் நாம் பிரதானமாக கவனிக்கவேண்டியவை:

130. 1. நமது புரட்சி இயக்கத்திற்கு இந்தத் தொழில்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அனுபவம் வாய்ந்த செல்வாக்குப் பெற்ற கேடர்களின் வேலைகளை மாற்றி அமைத்து, அவர்களை இந்தத்துறையில் பிரதானமாக செயல்படுத்துவதற்கு தைரியமாக முடிவெடுப்பதற்கு மாவட்டக்குழுக்கள் முன்வருவதில்லை.

2 இந்த அரங்கில் மாவட்டக் குழுக்கள் முழுநேர ஊழியர்களை ஒதுக்கினாலும், இந்த கேந்திரத் தொழில்களில் வேலைபார்க்கும் அனுபவம் மிக்க, செல்வாக்குமிக்க தோழர்கள் வேலையை ராஜினாமா செய்து, முழுநேர ஊழியர்களாக கட்சியின் வழிகாட்டுதலில் செயல்பட முன்வருகிற பொழுதுதான் இந்தத் துறையில் நமது குறிக்கோளை திருப்திகரமாக அமுல்படுத்த முடியும்.

சீர்திருத்தவாதத் தலைமையில் உள்ள சங்கங்களில் நமது வேலை

131. தமிழகத்தில் பல பெரும் தொழிற்சாலைகள், ரயில்வே, துறைமுகம், மின்சாரம் போன்ற கேந்திரத் தொழில்களில் சீர் திருத்தவாதத் தலைமையில் தொழிற் சங்கங்கள் செயல்படுகின்றன.

பஞ்சாலையில் 2 லட்சம் தொழிலாளிகளில் சிஐடியுவில் 12000 தான். மின்சாரத்தில் 88000 தொழிலாளிகளில், சிஐடியுவில் 10000 தான். அதேபோல் ரயில்வேயிலும் செயல்பட்டு சிஐடியு கொள்கைக்காதரவாக தொழிலாளிகளின் மனோபாவத்தை உருவாக்குவது என்பது, தொழிற்சங்க ஒற்றுமைக்கான போராட்டத்தின் ஒரு பகுதியாகும். அந்த வேலையை நமது மாநிலத்தில் நாம் உதாசீனப்படுத்துகிறோம். தமிழகத்தில் சீர்திருத்தவாத சங்கங்களில் செயல்பட்டு, நமது குரூப் அந்தத் தொழிலாளிகள் மீது உள் செல்வாக்கு பெறாமல் ஒற்றுமைப் போராட்டத்தில் நாம் விரும்பும் பயன் ஏற்படாது.

132. இதில், சென்னையில் விசேஷமான சூழ்நிலை இருந்தாலும், அந்த ஒரு சங்க அமைப்பில் நமது தோழர்கள் செயல்பட்டு வெற்றிகண்ட அனுபவத்தை நாம் கணக்கிலெடுக்க வேண்டும். நமது தோழர்கள் விடாமல் அந்த சங்கங்களுக்குள் செயல்பட்டதன் விளைவாகத்தான் அந்த வெற்றிகள் கிடைத்தன. பல குழுக்களுடன் சேர்ந்து ஆரம்பத்தில் சில சங்கங்களில் வெற்றிபெற்றாலும், பிறகு அந்த வெற்றியைப் பயன்படுத்தி, நமது சொந்த பலத்தை பெருக்குவதும், நமது நிலையை ஸ்திரப்படுத்துவதும் நாம் மேலும் மேலும் உபயோகப்படுத்த வேண்டிய தந்திரமாகும். இதனால் புயலென கிளம்பிய குசேலர், அவருக்குப் பின்னால் கிளம்பிய பென் வால்டர், ஏஐடியுசி, ஜனதா தலைமை, பேரவை ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளதை நாம் பார்க்க வேண்டும்.

133. ஸ்தாபன ரீதியாக இல்லாத தொழில்கள் :- இத்துறையில் பணிபுரியும் தொழிலாளிகளையும் திரட்டுவது அவசியம். கட்சி இதை வெறும் மனிதாபிமான அடிப்படையில் பார்க்கவில்லை. புரட்சிக்கு இந்தப் பகுதியின் முக்கியத்துவத்தை அடிப்

படையாகக் கொண்டு தான் வலியுறுத்தி வருகிறது. மத்தியக் குழுவின் தீர்மானம் இதை பொருத்தமாக தெளிவுபடுத்தியது.

இந்தத் தொழில்களில் இந்தத் தொழிலாளிகளின் எண்ணிக்கையும் பலமும் பெருமளவில் உயர்ந்துள்ளது. இதில் பெரும்பாலானவர்கள் குடிசை வாழ்வோர்; எந்த உரிமையும் அற்றவர்கள். அத்துடன் தொழிலாளிகளின் நல்ல தீவிரமான போர்க்குணம் படைத்த பகுதியாக உள்ளது. தொழிற் சங்கங்கள் இப்பகுதியினரை பெரும்பாலும் உதாசீனப்படுத்துவதனுல், அவர்களுடைய போர்க்குணங்களை பிற்போக்காளர்களும் சமூக விரோதிகளும் துஷ்பிரயோகப்படுத்துகின்றனர். அவர்களை நாம் முறையாக திரட்டுவோமேயானுல், அவர்கள் வெகுஜனப் போராட்டங்களை விடாப்பிடியாக தீவிரமாக ஆதரிக்கக்கூடிய ஒரு பகுதியாக அமைவர்.''

134. நமது மாநிலத்தில் இப்படிப்பட்டவர்கள் கைத்தறி, விசைத்தறி, தோல், பீடி, கட்டிடத் தொழில், கல்லுடைக்கும் தொழில், காண்டிராக்ட் தொழில், கார்மெண்ட் தொழில், பனியன் தொழில், ஸ்பின்னிங் தொழில், ஸ்தாபன ரீதியான தொழில்களில் உள்ள காண்ட்ராக்ட் ஆகியவற்றிலும் பதிலி அப்ரண்டீஸ் போன்ற தொழிலாளிகளாகவும் பெருமளவில் இருக்கிருர்கள். பெரும் தொழில்களில் ஆட்குறைப்பு செய்து காண்ட்ராக்ட் முறையை புகுத்துவது அதிகரித்திருப்பதினுல், இவர்களின் எண்ணிக்கை அளவற்று கூடியுள்ளது.

135. காண்ட்ராக்ட் தொழிலாளிகளை திரட்டுவதற்கான வாய்ப்புக்களைத்தான் சென்னை சிஐடியு மாவட்டக்கமிட்டி கூட்டிய மாநாடும், நெய்வேலியும் எடுத்துக்காட்டுகின்றன; ட்ராட்ஸ்கீயவாதிகள் தலைமையிலும், சாதீய தலைமையிலும் திரண்ட கட்டிடத் தொழிலாளர்களும் எடுத்துக்காட்டாக இருக்கின்றனர்.

136. நாம், கைத்தறியில் தான் ஓரளவு மாநில ரீதியாக திரட்டி, ஸ்தாபன வடிவம் கொடுத்துள்ளோம். நாம் ஆண்டாண்டுகளாக செயல்பட்டுவரும் பீடித் தொழிலில் கூட அதன் மிகப் பெரும் தளமாகிய திருநெல்வேலி மாவட்டத்தில் நாம் சரிவர திரட்டவில்லை. தோல் பதனிடும் தொழிலில் முன்னேற்றம் இல்லை. மற்றபடி ஸ்தாபன ரீதியாக இல்லாத தொழில்கள் சம்பந்தப்

பட்ட தொழிலாளிகள் விஷயத்தில் அங்குமிங்குமாக சில ஸ்தல போராட்டங்களை நடத்தி இருக்கிறோமே தவிர, கட்சி வழிகாட்டு தல்படி அந்த வேலையில் இறங்கவில்லை. அவர்களைத் திரட்டுவதில் உள்ள கஷ்டங்களையும் கடுமையான தாக்குதல்களையும் நினைத்து உதாசீனப்படுத்துகிறோமே தவிர, அவர்களைத் திரட்டினால், புரட்சிகரமான இயக்கத்திற்கு ஏற்படும் எழுச்சியைப் பற்றியும், பலத்தைப் பற்றியும் நாம் உணர்ந்து திட்டம் போட்டு செயல்படுவதில்லை. வேலையில்லாதவர்களை திரட்டும் பணியிலும் தொழிற்சங்கங்கள் முற்றிலும் ஈடுபடாமலிருக்கும் அபாயகரமான போக்கும் தொடருகிறது.

137. **உழைக்கும் பெண்கள் இயக்கம்:** இத்துறையில் கடலூர் மாநாட்டின்பொழுது இருந்த நிலைமையிலிருந்து ஏற்பட்டுள்ள சிறிது முன்னேற்றம் பற்றி ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளோம். சமீபத்தில் தபால் தந்தி மூன்றாம் பிரிவு ஸ்தாபனம், தங்கள் இயக்கத்தின் உழைக்கும் பெண்களின் மாநாடுகளை நடத்தினார்கள். சத்துணவு மைய ஊழியர்களின் மாநாட்டை அது சம்பந்தப்பட்டவர்கள் கோவையில் கூட்டி ஏராளமான உழைக்கும் பெண்களைத் திரட்டியது ஒரு நல்ல வளர்ச்சிப் போக்காகும்.

ஃ இன்னும் பல மாவட்டங்களில் ஒருங்கிணைப்புக் குழுக்களை சிஐடியு அமைக்கவில்லை.

ஃ அமைக்கப்பட்ட மாவட்டக்குழுக்களை சிஐடியு மாவட்ட அமைப்புகள் செயல்படுத்துவதில்லை.

ஃ உழைக்கும் பெண்களை தொழிற்சங்க வேலைகளில் ஈடுபடுத்துவதிலும் தொ.ச. நிர்வாகத்தில் ஈடுபடுத்துவதிலும், முன்னேற்றமில்லை இதற்கு பிரதான காரணம் சிஐடியுவில் செயல்படும் நமது கட்சித் தோழர்கள், இந்த வேலை சிஐடியுவின் நேரடியான பொறுப்பு என்பதை இன்னும் உணரவில்லை. மாநில ஒருங்கிணைப்புக் குழுதான் இதைச்செய்ய வேண்டியவர்கள் என்ற உணர்வும், அவர்கள் ஏதாவது உதவி கேட்டால் சில நோட்டீஸ் அடித்துக் கொடுப்பதுதான் சிஐடியு சங்கத்தின் வேலை என்ற உணர்வும்தான் இன்னும் நீடிக்கின்றது. இன்னும் நீடிக்கிற நிலப்பிரபுத்துவ மனோபாவமும் பிரதான காரணமாகும். இது அபாயகரமானது. நாம் நேரடியாக தலையிட்டு திரட்டாமலிருப்பதினால் நக்சலைட்டுகளும்

ஏகாதிபத்தியக் கருவிகளான கிறிஸ்தவ மிஷினரிகளும் உழைக்கும் பெண்களை திரட்டுவதை தமிழகத்தில் நாம் கண்கூடாக பார்க்கிறோம்.

138. **விவசாய அரங்கில்:** தொழிலாளி விவசாயி ஒற்றுமையும் அதற்கு தொழிலாளி வர்க்கத் தலைமையும் மக்கள் ஜனநாயகப் புரட்சிக்கு எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்து தான், கிராமப்புற விவசாயிகள் மத்தியில் தொழிற்சங்கங்கள் ஆதரவு நடவடிக்கைகளை திரட்டுவதையும், விவசாயத் தொழிலாளர்களை யந்திரத்தொழிலாளிகள் திரட்டுவதன் அவசியத்தையும், அவர்களின் போராட்டங்களை ஆதரிக்கும் அவசியத்தையும் தொழிற்சங்கங்களுக்கு கட்சி உணர்த்தியது. இத்துறையில் செயல்படவும் பணித்தது. அந்தத்துறையில் முன்னேற்றம் இல்லாவிட்டாலும், தொழிலாளிகள் மத்தியில் அந்த அவசியத்தை பற்றிய உணர்வைத் தூண்டுவதற்கும், செயல்படும் விவசாய இயக்கத்தை விரிவாக்குவதற்கும் தொழிலாளிகளின் பங்கு என்ற முறையில் தான், சிஐடியு அங்கத்தினர்கள் அனைவரும் தலா ஒரு ரூபாய் ஆண்டுதோறும் நன்கொடை அளிக்கவேண்டும் என்று கோவை மாநாடு முடிவு எடுத்தது. இதன்படி 1984-ம் ஆண்டிற்கு ரூ 40000 விவசாய சங்கத்தலைமையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதை சிஐடியுவின் அனைத்திந்திய நிர்வாகக்குழு சீரிய முயற்சி என பாராட்டியுள்ளது.

139. இது நம்முடைய குறைபாட்டை மறைத்துவிட அனுமதிக்சலாகாது ரூ. 40,000 என்றால், நம்முடைய அங்கத்தினர் எண்ணிக்கையில் சுமார் 25 சதம்தான் இதை கொடுத்துள்ளனர் என்பது தெளிவு. அத்துடன் இந்த ரூ. 40000மும் பெரும்பாலான தொழிலாளிகளிடம் பிரச்சாரம் செய்து வசூல் செய்ததல்ல. பல சங்கங்கள் தங்கள் நிதியிலிருந்து கொடுத்துள்ளன. 1985ம் ஆண்டின் இந்த வசூலை ஜூலை மாதத்திற்குள் முடிப்பது என்று முடிவு எடுத்தும், இதுவரை ரூ. 25000 தான் வந்துள்ளது. நமது சங்கங்களின் தலைமைகள் திட்டம் போட்டு வசூல் செய்தால், ஒரு ரூபாய் வசூல் செய்வது பெரிய விஷயமல்ல.

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல், வர்க்க உணர்வை உயர்த்துவதற்கு இந்த சுலபமான பயனுள்ள கருவியை பயன்படுத்

தாமல், வர்க்க உணர்வு உயராததற்கு காரணமென்ன என்று தேடுவதில் பொருளில்லை.

140, பிரிவினை, வகுப்புவாத, ஜாதிய சக்திகளுக்கெதிரான போராட்டம்: இந்த சக்திகள், ஏகாதிபத்திய உதவியுடன் எப்படி நாட்டு ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும், மக்களின் ஜனநாயக ஒற்றுமையையும், தொழிலாளி வர்க்க ஒற்றுமையையும் உலுக்கி விடுகின்றன என்பதையும் அந்த சக்திகளைத் தனிமைப்படுத்துவதில் தொழிலாளி வர்க்கத்திற்கு இருந்துவரும் பிரதான கடமையையும் ·ற்றி கட்சி வலியுறுத்தி வருகிறது.

141. தமிழகத்தில் பஞ்சாப், அசாம் போன்ற பிரச்சனைகளை ஒட்டி கட்சி மேடைகள் மூலம் இந்தசக்திகளை ஓரளவு அம்பலப்படுத்தியுள்ளோம். ஆனல் சிஐடியு மேடைகளிலிருந்து தொழிலாளிகளுக்கு இந்த அபாயத்தை உணர்த்துவதில் எடுத்த முயற்சிகள்மிகக் குறைவேயாகும். ஆனல் இந்திரா கொலைக்குப்பின், கோவையில் சிஐடியு முன்முயற்சியில் சீக்கியர்கள் பாதுகாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். ஏகாதிபத்தியத்தை அம்பலப்படுத்துவதில் மிகவும் பலவீனம் உள்ளது. தமிழகத்தில் தொழிலாளி வர்க்க ஒற்றுமையை அச்சுறுத்தும் போக்குகளை நாம் அலட்சியப்படுத்தலாகாது. தமிழகத்தில் அதிமுக, திமுக, இ. காங்கிரஸ், குறிப்பாக ஆளும் கட்சி ஜாதிய ஸ்தாபனங்களை ஊக்குவிப்பதன் மூலம் ஜாதிப் பிரிவினை உணர்வை வளர்க்கிறது. தமிழகத்தில் உள்ள மத்திய—மாநில பொதுத்துறை, தனியார்துறை நிறுவனங்களில் ஸ்கில்டு வேலைகள் உள்பட்ட 80 சதம் வேலைகளை மாநிலத்தவர்களுக்கே கொடுக்க வேண்டும் என்று சமீபத்தில் தமிழக அரசுக் குறிப்பு ஒன்று வெளியிடப்பட்டுள்ளதானது மண்ணின் மைந்தர்கள் என்ற நச்சுக் கருத்தையே வளர்க்க உதவும்; மற்ற மாநிலங்களிலுள்ள தமிழக மக்களையும் பாதிக்கும்.

142. அரிசனங்கள் பொது தொழிற்சங்கங்களிலிருந்து பிரிந்து அரிசன தொழிற்சங்கங்களை உருவாக்க வேண்டுமென்றும் அல்லது அவற்றில் சேர வேண்டுமெனவும், பெல் போன்ற இடங்களில் ஐஎன்டியுசி யில் சேர வேண்டுமெனவும் காங்கிரஸ் கட்சி ஊக்குவிக்குகிறது.

143. இலங்கைப் பிரச்சனையிலும் மொழிப் பிரச்சனையிலும் திமுக, திக போன்ற கட்சிகள் இனவெறியையும் பிரிவினை மனோ பாவத்தையும், வடக்கு தெற்கு காழ்ப்புணர்ச்சியையும் திட்டமிட்டு வளர்ப்பதில் தீவிரமாக செயல்படுகின்றன. ரிசர்வேஷன் பிரச்சனையையும் அதிமுக, திமுக, திக போன்றவை பிளவு மனோ பாவத்தை வளர்க்கும் ஆயுதமாக போட்டா போட்டியுடன் பயன் படுத்துகின்றன.

144. ஆர் எஸ் எஸ் போன்ற ஸ்தாபனங்கள் கிறிஸ்தவ முஸ்லீம் மத எதிர்ப்பை தூண்டிவிடுகின்றன. மோதல்களையும் உண்டாக்கு கின்றன. அதே போல் முஸ்லீம் அடிப்படை வாதிகளும் செயல்படு கிறார்கள். இன்று ராஜீவ் காந்தி அரசின் கொள்கைத் திருப்பத்தி னால் மக்கள் மத்தியில் எழும் போராட்ட உணர்வை பின்னுக்கு தள்ளுவதற்கும், திசை திருப்புவதற்கும் தொழிலாளி வர்க்க ஒற்று மையை உடைப்பதற்கும் சாதகமான நிலைமைகளை இந்த பிரச் சார இயக்கங்கள் உருவாக்குகின்றன.

145 இலங்கைப் பிரச்சனையிலும், நாட்டுப் பிரிவினை பிரச் சாரத்தை எதிர்த்தும் தொழிலாளிகளை பாதிக்காத அளவு தொழிற் சங்கங்கள் இதுவரை செயல்பட்டு வந்துள்ளன. ஆனால் மற்ற பிரச்னைகள் பற்றி தொழிலாளி வர்க்கத்துக்கு நாம் போதி ப்பதில்லை; நமது வர்க்க நிலைக்காதரவாக அவர்களை திரட்டுவ தில்லை. இந்த நிலைமை நீடித்தால் எதிர்காலத்தில் திடீரென சிக்க லான மிகநெருக்கடியான நிலைமையை நாம் சந்திக்க நேரிடும்.

146. **நாட்டு ஒற்றுமை உணர்வை திரட்டுவதில் சிஐடியுவின் பாத்திரம் :-** நாட்டை பிரதேச உணர்வு அடிப்படையில் துண்டாட ஏகாதிபத்தியம் முயற்சிக்கிறது. நாட்டு ஒற்றுமைஉணர்வை சிதறாமல்பாதுகாக்க தொழிலாளிகளின் அனைத்திந்திய அமைப்புக ளுக்குநல்லவாய்ப்புஉண்டு. அதில்என்சிசி(தேசியபோராட்டக்குழு) ஒரு அனைத்திந்திய கூட்டமைப்பு என்ற முறையில், வாய்ப்புடைய அமைப்பாகும். அதேபோல் எல்ஐசி, வங்கி, மாநில அரசு ஊழி யர்கள், மைய அரசு ஊழியர்கள், ரயில்வே தொழிலாளிகள் மற்ற தொழிலாளிகளின் அனைத்திந்திய சம்மேளனங்கள் நமது வர்க்கத் தின் மத்தியில் அனைத்திந்திய உணர்வை வலுப்படுத்தவும், நாட்

டின் ஒற்றுமையை காக்க மக்களைத் திரட்ட தொழிலாளி வர்க்கத்துக்கு பயிற்சி அளிக்கவும் பயனுள்ள அமைப்புகளாகும்.

147. ஆனால் என்சிசியின் அமைப்பை தமிழகத்தில உருவாக்க தமிழகத்தில் உள்ள எச்.எம்.எஸ், பி.எம்.எஸ், டி.என்.டி.யு.சி, திமுக போன்ற ஸ்தாபனங்கள் ஒத்துழைக்க மறுக்கின்றன. மீதமுள்ள ஏ.ஐ.டி.யு.சி இதில் அவ்வளவு உற்சாகம் காட்டுவதில்லை. ஆகவே, என்சிசியின் அனைத்திந்திய அறைகூவல் வருகிற பொழுது அவற்றை அமுல்படுத்த ஏஐடியுசியுடன் தொடர்ந்து முயற்சிப்பதுடன் இயலாத சந்தர்ப்பங்களில் அந்த அறைகூவலை அமுல்படுத்த நமது முழு பலத்தையும் மற்ற தொழிலாளிகளையும் நாம் நேரடியாக திரட்டுவது அவசியம். அதே போன்று அனைத்திந்திய சம்மேளனங்களின் கிளர்ச்சிகளையும், போராட்டங்களையும் ஆதரிக்க தமிழக மக்களைத் திரட்ட தொழிலாளி வர்க்கத்தை செயல்படுத்த வேண்டும். நாட்டைத் துண்டாடும் ஏகாதிபத்திய முயற்சிகளை முறியடித்து நாட்டு ஒற்றுமையைப் பாதுகாக்க இந்த செயல்பாடுகளுக்கு முக்கியமான பாத்திரமுண்டு.

148. வேலையில்லா திண்டாட்டம் :- வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே வருகிறது. அவர்களுக்கு நிவாரணம் பெறுவதற்கோ, வேலைக்கு தடையாக இருக்கும அரசாங்கக் கொள்கைகளை அம்பலப்படுத்தவோ தொழிற் சங்கங்கள் தலையிடாத நிலையில் அவர்களுடைய ஆத்திரத்தை அரசும் முதலாளிகளும் தொழிலாளிகளுக்கெதிராக திருப்புகிறார்கள். மண்ணின் மைந்தர் என்ற கோஷத்தை கிளப்பிவிடுகிறார்கள்.

ஆகவே வேலையில்லாதவர்களுக்கு அரசு நிவாரணம் வழங்கவும், வேலை கிடைப்பதை அரசியல் சட்டத்தில் ஒரு அடிப்படை உரிமை ஆக்கவும், அரசாங்கத்தின் போலித் திட்டங்களையும் வாக்குறுதிகளையும் அம்பலப்படுத்தவும் இயக்கம் நடத்துவதை தொழிற்சங்கங்கள் முக்கிய கடமையாக மேற்கொள்ளவேண்டும்.

149. சமாதான இயக்கம்: இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதல்தேதி, பெருவாரியான இடங்களில் ஏ.ஐ.டி.யு.சி கலந்து கொள்ளவில்லையானாலும், நமது மாநிலத்தில் ஓரளவு நல்ல முறையில் இந்த இயக்கம் நடத்தப்பட்டுள்ளது. ஆனால் அது ஒரு விசேஷ இயக்கம். சமாதான இயக்கத்தை அன்றாட சர்வதேசப்

பணியாக இன்று நமது மாநிலத்தில் தொழிற்சங்கத்தினர் மேற்கொள்ளாததும் தொழிலாளிகளின் உணர்வில் இல்லாததும் பேரபாயமாகும்.

150. குறிப்பாக ஏஐடியுசி யைத்தவிர நமது மாநிலத்தில் மற்ற தொழிற்சங்கங்கள் இதை ஒரு பிரச்சனையாகவே கருதாத நிலையில், தமிழக மக்களைத் திரட்டுவதில் சிஐடியு பெரும் முயற்சியில் இறங்கவேண்டும். உடனடியாக, யுத்த அபாயம் பற்றி, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் திட்டங்கள் பற்றி, சமாதான இயக்கத்தின் முக்கியத்துவம் பற்றி நமதுதொழிலாளிகளுக்கு உணர்த்துவது அவசியம். அவர்கள் மூலம் மற்ற தொழிலாளிகளையும் திரட்ட முயற்சிக்க வேண்டும்.

151. **சிஐடியு மையத்தின் செயல்பாடு:** மையத்தில் வேலைகள் பன்மடங்கு அதிகமாகி உள்ளன. ஆனால் மையத்தை இயக்கும் லீடர்களின் எண்ணிக்கை மூன்றிலிருந்து இரண்டாக குறைந்துள்ளது. மையத்தில் கூட்டு வழிகாட்டுதலை பலப்படுத்த, கோவையில் நடந்த சிஐடியு மாநில மாநாடு, ஐந்து தோழர்களை 15 நாளைக்கு ஒருமுறையும், நிர்வாகிகள் கூட்டம் மாதம் ஒரு முறையும், நிர்வாகக்குழு மூன்று மாதத்திற்கு ஒருமுறையும் கூட வேண்டுமென பணித்தது.

152. அதற்குப்பின் 15நாள் கூட்டம் முழுமையாக ஒரு தடவை தான் நடத்த முடிந்தது. ஆனால் மையத் தோழர்கள் தோழர் ஆர்.யு உடன் அல்லதுகே.ஆர். உடன் அல்லது ஏ.என். உடன் அடிக்கடி கலந்து செயல்படும் நடைமுறை இருந்து வருகிறது. நிர்வாகிகள் கூட்டம் 1984ல் 6 தடவையும், 1985ல் இதுவரை 4 தடவையும் நடந்துள்ளது. நிர்வாகக்குழு கூட்டம் 1984ல் ஒன்றும் 1985ல் இதுவரை மூன்றும் நடைபெற்றுள்ளது. மையம் இயங்குவதில் இன்னும் பல அபிவிருத்திகள் செய்ய வேண்டியதுள்ளது என்றாலும் கடலூர் மாநாட்டிற்குப்பின் கணிசமான அபிவிருத்தி இருக்கிறது.

153. **மாவட்ட சிஐடியு கவுன்சில்கள்:** சிஐடியு மாநில மையத்திற்கும் மாவட்டங்களில் செயல்படும் சங்கங்களுக்கும் ஜீவனுள்ள தொடர்பாக அமைவதற்கு வாய்ப்புடைய இணைப்புதான் மாவட்ட கவுன்சில்கள். மாநிலக்குழுவின் முடிவுகளை மாவட்டங்க

ளில் அமுல்நடத்துவதற்கு இதன் செயல்பாடு உத்தரவாதமாக இருக்கும். அத்துடன் மாவட்ட இயக்கங்களை ஒன்றிணைத்து அவற்றின் முழு வீச்சையும் கட்டவிழ்த்துவிட உதவக்கூடிய ஸ்தாபனமாகத்தான் இந்த கவுன்சில்களை அமைத்தோம். பெரியார், புதுச்சேரியைத்தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் இந்த கவுன்சில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை எப்படி செயல்படாமல் இருக்கின்றன என்பதற்கு சமீபத்திய நிகழ்ச்சியே சான்றாகும்.

154. சிஐடியுவிற்கு பல கமிட்டிகளில் பிரதிநிதித்துவம் மறுக்க மைய அரசு முற்பட்டுள்ள பொழுது, இருக்கிற தனது அங்கத்தினர் எண்ணிக்கையை முழுவதுமாக காட்டுவது மிகந்திரமான கடமையாகும். ஆனால் அந்த விவரங்களை வர இருக்கும் பரிசீலனைக்காக, சிஐடியு டெல்லி, சென்னை மையங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென பல சுற்றறிக்கைகள் சங்கங்களுக்கும், மாவட்ட கவுன்சில்களுக்கும் அனுப்பியும் இன்னமும் விபரங்கள் அனுப்பாத சங்கங்கள் பல. இதில் பல மாவட்ட அமைப்புகள் கூட்டி தட்டி இருந்து வருகின்றன. ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமென மாநிலக் கட்சி மையம் சுற்றறிக்கையை அனுப்பியும் அவை அசையவில்லை.

155. இந்த கேந்திரமான அமைப்புகளில் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர்கள் பலர் இருக்கின்றனர். இவற்றை செயல்படுத்த உதவும்படி இரண்டாண்டுகளுக்கு முன் சிஐடியு நிர்வாகக் குழு பணித்தது. அதாவது அந்த கவுன்சில்களை விசேஷமாக கூட்டி அதன் செயல்பாட்டினை பரிசீலனை செய்து அது முறையாக செயல்பட வேண்டிய முடிவுகள் எடுத்து மாநில மையத்திற்கு அனுப்ப வேண்டும் என்று பலதடவை வற்புறுத்தியும் அவற்றில் கட்சி மாநிலக்குழு உறுப்பினர்கள் பலர் இருந்தும சிஐடியு மாநில நிர்வாகிகள் அதில் இருந்தும் இந்த முடிவு அமுல்படுத்தப்படவில்லை. இந்த அமைபபுகளின் முக்கியத்துவத்தைக் கருதி இவற்றை செயல்படுத்துவது கட்சியின் மாவட்டக் கமிட்டிக்குத்தான் அடிப்படை பொறுப்பு.சிஐடியு மாநில நிர்வாகத் தலைமை, எந்த அளவு இதை செயல்படுத்த உதவ வேண்டும் என்பது பற்றி தூலமான பரிசீலனை நடத்த வேண்டும்.

156. தொழிற்சங்க ஜனநாயகம்: இது பற்றி நமது மாநிலத்தில் என்ன நிலைமை என்று கடலூர் மாநாட்டு அறிக்கையில் 129-வது பாராவில் விரிவாக கூறப்பட்டுள்ளது. அந்த நிலைமையிலிருந்து குறிப்பிடத்தக்க அபிவிருத்தி இல்லை என்றே கூறலாம். அதனால் இயக்கத்தில் என்ன ஏற்பட்டுள்ளது என்று தீர்மானம் குறிப்பிட்டுள்ளது நமக்கு மிகவும் பொருத்தமானவையாகும்.

''ஜனநாயக முறையில் சங்கத்தை நடத்தாமலிருப்பதானால் சங்கத்தை அதிகார வர்க்கப் போக்கில் கொண்டுபோய் விடுகிறது. அதிகார வர்க்கப் போக்கானது சாதாரணத் தொழிலாளிகளின் முன் கையெடுக்கும் தன்மையை கொல்லுகிறது. அதனால் சாதாரணத் தொழிலாளி ஸ்தாபனம் நடத்துவதற்கோ, தலைமை தாங்குவதற்கோ சக்தியற்றவராக ஆகிறார். புரட்சிக்கு தலைமை தாங்க வேண்டிய பொறுப்புடைய வர்க்கத்தை சிதறச் செய்கிறது. நிராயுதபாணியாக்குகிறது. தொழிற்சங்கங்கள் விரிவுபடுவதை அது தடுக்கிறது. ஊழியர் பஞ்சத்திற்கு அது முக்கிய காரணமாகும். சங்க அங்கத்தினர் எண்ணிக்கை முடங்கி நிற்பதற்கு பல காரணங்களில் இதுவும் ஒன்று'' தமிழகத்தில் நம் கட்சி ஊழியர்கள் செயல்பட்டு வழிகாட்டும் சிஐடியு சங்கங்களின் இன்றைய நிலைமைக்கு இந்த விளக்கம் மிகவும் பொருத்தமானது.

157. டியு சப்கமிட்டி, பிராக்‌ஷன்கள்:

டியு சப்கமிட்டி,

1982—ல் 5 தடவையும்
1983—ல் 6 தடவையும்
1984—ல் (கூடவேயில்லை)
1985—ல் இது வரை 3 தடவையும் கூடியுள்ளது.

இந்த கூட்டங்கள் அவ்வப்பொழுது நடந்த சிஐடியு மாநிலக்குழு கூட்டத் தயாரிப்புகளுக்காகவும் சில முக்கியமான போராட்டங்களுக்கு வழிகாட்டுதலுக்காகவும் தொழிற்சங்க அரங்கில் நமது கடமை என்ற மத்தியகுழு தீர்மானத்தின் நகலை விவாதிக்கவும் அனைத்திந்திய சிஐடியு மாநாடு, டிஆர்இயு மாநாடு தயாரிப்புகளைப்பற்றிவிவாதிக்கவும், ரயில்வே அரங்கில் நமது வேலைகளை விஸ்தரிப்பதற்காக தேவைப்படும் நடவடிக்கைகளை விவாதித்து முடிவெடுக்கவும் கூட்டப்பட்டுள்ள கூட்டங்களாகும்.

158. 1984-ல் சப் கமிட்டிக்கூட்டம் ஒன்றுகூட இல்லாதது கவனிக்கத்தக்கது. கோவை மாநாட்டில் நிர்வாகிகள் கூட்டம் அடிக்கடி கூடவேண்டும் என்று முடிவெடுத்ததினால், 1984-ல் ஆறு தடவை நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. அதுவரை டியு சப் கமிட்டி விவாதித்து வந்த பிரச்னைகளை நிர்வாகிகள் கூட்டமே விவாதித்து வருகிறது. இந்நிலையில் டியு சப்கமிட்டி பிரதானமாக தொழிற்சங்க அரங்கில் கடலூர் மாநாடு காட்டிய வழியில் திசை வழிகள் பற்றியும், கட்சியின் தஸ்தாவேஜுகளை இந்த அரங்கில் பொருத்துவது சம்பந்தமாகவும், அவற்றை ஸ்தூலப்படுத்துவது சம்பந்தமாகவும், இந்த அரங்கில் கட்சிப் பணிகள் பற்றியும் விவாதித்து, மாநிலக் குழுவிற்கு யோசனைகளைக் கூறும் பணிகளுக்கு தனது வேலைகளை திருத்தி அமைத்திருக்க வேண்டும். அதைச்செய்ய தவறியதினால், அது ஏற்கெனவே செய்துவந்த பணிகளை நிர்வாகிகள் கூட்டம் பூர்த்தி செய்த சூழ்நிலைமையில் டியு சப்கமிட்டிக்கூட்டம் கூட்டும் உணர்வு மங்கிவிட்டது. இப்பொழுதுகூட டியு சப்கமிட்டிகளின், பிராக்ஷன்களின் வேலைகளுக்கும், கட்சிக்கமிட்டிகளின் வேலைகளுக்கும் இடையில் இருக்கவேண்டியவரையறைகள் தெளிவுபடுத்தப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. மாவட்டங்களில் பல பிராக்ஷன்கள் இயங்குதல் சம்பந்தமாகவும் நமக்குப் போதிய தகவல்கள் இல்லை.

159. **கட்சி:** இவ்வளவு கடமைகளையும் நிறைவேற்ற வேண்டுமானால், நாம் பல்லாண்டுகளாக சுட்டிக் காட்டியும், களைய முடியாத அல்லது களையத் தவறிய பலவீனங்களை அகற்ற வேண்டுமானால் மக்கள் ஜனநாயகப் புரட்சிக்கு தலைமை தாங்கும் வர்க்கமாக தொழிலாளி வர்க்கத்தை உருவாக்கும் நோக்குடன் தொ.ச. அரங்கில் வெற்றிகரமாக செயல்பட வேண்டுமானால், இந்த அரங்கில் பலமான கட்சியைக் கட்டவேண்டும். அது கட்சியின் தீர்மானங்களின் அடிப்படையில் திட்டமிட்டு தொழிலாளிகள் மத்தியில் செயல்பட வேண்டும்.

160. இந்த அடிப்படையானதுறையில் அதற்காக அனைத்துப் பகுதி தொழிலாளர்கள் மத்தியில் கட்சி அங்கத்தினர்களின் எண்ணிக்கையை இன்றுள்ளதைவிட பெரிய அளவில் (கட்சி நிர்ணயித்த வழிகாட்டுதலின் அடிப்படையில்) அதிகப்படுத்த வேண்டும்.

ஃ கட்சிக் கிளைகள் அதிகப்படுத்தப்பட வேண்டும்.

ஃ அவற்றை சம்பந்தப்பட்ட கட்சிக் கமிட்டிகளின் மூலம் தொழிலாளிகள் மத்தியில் தீவிரமாக செயல்படுத்துவதற்கு சப்-கமிட்டிகள், பிராக்ஷன்கள் உறுதுணையாக செயல்பட வேண்டும்

ஃ இன்றுள்ள இரண்டு திரிபுகளும்-அதாவது தொழிற்சங்கங்களை க சியின் நேரடியான உறுப்பாக செயல்படுத்துவது, அல்லது கட்சியின் தலைமையின்றி தொ. சங்கங்களை சுயேச்சையாக நடத்துவது, என்ற இரு திரிபுகளும் இன்றி செயல்படுவதற்கு கடசிக் கமிட்டிகள் வழிகாட்டிட வேண்டும்.

161. "நமது கட்சி பிராக்ஷன்கள், தொழிற்சங்க ஊழியர்களின் மிகவும் கவலை தரக்கூடிய திரிபு என்னவென்முல், கணிசமான தொழிலாளிகளை கடசிக்குள் கொண்டுவராமல் இருப்பதால், கல்கத்தா போன்ற தொழில்கள் குவிந்திருக்கும் கேந்திரங்களிலும் கூட, நம்மிடமிருக்கும் நூற்றுக்கணக்கான போர்க்குணம் படைத்த தீவிரத் தொழிலாளிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டால், மிகச் சிறு எண்ணிக்கையே கட்சி அங்கத்தினர்களாக இருக்கின்றனர்."

இந்நிலையை குறிப்பிட்டு, 1983 செப்டம்பர் தீர்மானம் கூர்மையாக கூறுவதாவது:

'எப்படிப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கையானாலும் சரி. அது மிகப் புரட்சிகரமானது என்ற தோற்றமளித்தாலும் சரி, அந்த தொ. ச. நடவடிக்கைகள் தொழிலாளிகள் மத்தியில வேகமான கட்சி வளர்ச்சியில் கொண்டு செல்லவில்லையானுல், அந்த தொ. சங்க நடவடிக்கைகள் அனைத்தும் பரிசுத்தமான சீர்திருத்த நடவடிக்கைகளாகவே அமையும்."

162. தமிழகத்தில் தொழிற்சங்க அரங்கில் நாம் நடத்தும் பல போராட்டங்கள் மூலமாக வேகமான வெகுஜனப் புரட்சிக் கட்சியை நாம் கட்டவேண்டும். அது தாமாகவே உருவாகாது. உணர்வுபூர்வமாக திட்டமிட்டு கட்டப்பட வேண்டும். தொழிற்சங்க போராட்டங்கள் அதற்கு நெம்புகோலாக பயன்படுத்தப்படவேண்டும்.

163. இதற்கு உதவியாக மாவட்டக் கமிட்டிகள் தற்பொழுது தொழிற்சாலைகள் ஒவ்வொன்றிலும் எத்தனை கட்சி அங்கத்தினர்கள் உள்ளனர், அவர்கள் தொழிற்சாலை கடசிக் கிளையில் உள்ளன

ரா அல்லது குடியிருப்புகளில் உள்ள யூனிட்டுகளில் செயல்படுகிறார்களா என்ற விவரங்களை சேகரித்து புதிய மாநிலக்குழுவிற்கு அனுப்ப வேண்டும்.

164. சர்வதேச, தேசிய, மாநில அரசியல் நிலையில் நாம் சந்திக்கவிருக்கும் ஏகாதிபத்திய சதிகளை முறியடிக்க, சர்வாதிகாரத்தின் முன்னேற்றத்தை தடுக்க, தொழிலாளியின் வாழ்க்கைத் தரம், வேலை மீது கட்டவிழ்த்து விடப்படவிருக்கும் தாக்குதலை முறியடிக்க தொழிலாளி வர்க்க ஒற்றுமையைச் சீர்குலைக்கும் முயற்சிகளை முறியடிக்க இந்த அரங்கில் நமது கட்சியை விரிவாக்கும் பணியை துரிதப்படுத்துவது அவசியம்.

165. **கடமைகள்:** 1. தொழிற்சங்க அரங்கில் நமது கடமைகள் என்ற மத்தியக்கமிட்டி தீர்மானத்தை ஸ்தூலப்படுத்தி அணிகள் பூராவிற்கும் விளக்குவது என்பதை புதிய மாநிலக்குழு தனது முதல்கடமையாக மேற்கொள்ளவேண்டும்.

2. தொழிற்சங்க அரங்கில் கட்சி வேலைகளை பலப்படுத்த வேண்டும். அதற்காக மாவட்டக் கமிட்டிகள் தொழிற்சாலை வாரியான கட்சி அங்கத்தினர் பட்டியலை தயார் செய்து, தொழிற்சாலைக்கிளைகளை அமைக்கும் பணிகளில் இறங்கவேண்டும். மாநிலக்குழுவிற்கும் பட்டியலை அனுப்பவேண்டும்.

3. கட்சியின் சப்கமிட்டி, பிராக்ஷன்களின் வேலைகளை பரிசீலனை செய்து சம்பந்தப்பட்ட கட்சிக்கமிட்டியின் தலைமையின் கீழ் தொழிற்சாலைகளில் கட்சிக்கிளைகள் மூலம் கட்சி அரசியல் வேலைகள் செய்வதற்கு வழிகாட்ட வேண்டும்; இதற்கான வறையறைகளை மாநிலக்குழு விவாதித்து தெளிவுபடுத்தவேண்டும்.

4. மாநிலக்குழுவின் டியு சப்கமிட்டி மூன்று மாதத்துக்கு ஒரு முறை கூட வேண்டும். அதன் வேலைகள் கட்சியைக் கட்டுவது, தொழிலாளிகள் மத்தியில் கிளர்ச்சிப் பிரச்சார இயக்கம், கட்சிப் பிரசுர விற்பனை போன்ற திசையில் திருத்தி அமைப்பது, அத்துடன் அந்தஅரங்கில் எழும் முக்கியமான போராட்டங்கள், பிரச்னைகளுக்கு வழி காட்டுவது.

5) தொ சங்க தஸ்தாவேஜுகளை மாவட்டங்களில் அமுல்படுத்துவதில் மாவட்டக் கமிட்டிகள் கேடர்களுக்கு வழிகாட்டுவது.

6) நமது செல்வாக்கிற்கு ஏற்ப அங்கத்தினர் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு இயக்கத்தை திட்டமிடுவது. இன்றைய தேக்கத்திற்க்கான ஸ்தூலமான காரணங்களை விவாதித்து, அவற்றை களைந்து முன்னேறுவதற்கு திட்டமிடுவது

7) தொழிலாளிகள் மத்தியிலிருந்து கட்சி அங்கத்தினர்களை அதிகப்படுத்துவதற்கு உணர்வு பூர்வமாக கட்சிக் கமிட்டிகள் திட்டம் போடுவது

8) ஒவ்வொரு போராட்டத்தையும் பரிசீலனை செய்து, மாநிலம் முழுவதும் ரிப்போர்ட் செய்ய மாநிலக் குழுவிற்கு அனுப்பி வைப்பது.

9) உழைக்கும் பெண்கள் இயக்கத் துறையில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தி முன்னேறுவதில் கவனம் செலுத்துவது.

10) மாவட்ட கவுன்சில்கள் அவற்றின் பாத்திரத்தை நிறைவேற்றும் பொருட்டு மாவட்ட கட்சி கமிட்டிகள் தலையிட்டுசெயல் படுத்துவது.

11) சமாதான இயக்கத்தில் தொ.ச. இயக்கத்திற்குள்ள பலவீனத்தைப் போக்குவது.

விவசாயிகள் அரங்கம்

166. விஜயவாடா கட்சி மாநாடு அதனுடைய அரசியல் ஸ்தாபன அறிக்கையில் விவசாயிகள் இயக்கம் பற்றி பின் வருமாறு குறிப்பிட்டுள்ளது. ''1976ல் மத்திய கமிட்டி ஏற்றுக் கொண்ட அறிக்கையில் நிலப்பிரபுக்களின் நிலத்தை விவசாயிகளுக்கு இலவசமாக வினியோகிப்பது என்ற கோஷம் நம்முடைய மையமான பிரச்சார கோஷமாகவே உள்ளது. நடவடிக்கைக்கான கோஷமாக மாறவில்லை. புறம்போக்கு நிலங்கள், உச்சவரம்புச் சட்டத்தின் கீழ்வரும் உபரிநிலங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கான போராட்டங்களை நடத்த வேண்டும்; அதே நேரத்தில் இதரபல விவசாய இயக்க நீரோட்டங்களையும் ஒருமுகப்படுத்த வேண்டும். கிராமப்புறத் தொழிலாளிகளின் கூலி, விவசாயிகளின் குத்தகைக் குறைப்பு, கடன்களை ரத்து செய்தல் அல்லது குறைத்தல், விவசாய விளைப்பொருட்களுக்கு நியாயவிலை,வரிச்சுமையைக்

குறைத்தல், நிலப்பிரபுக்கள் மற்றும் போலீஸ் அராஜகத்தை எதிர்ப்பது, லஞ்சத்தை எதிர்ப்பது முதலிய பல்வேறு இயக்க நீரோட்டங்களை எல்லாம் ஒரு பெரும் விவசாய இயக்கத்தில் ஒன்றாக இணைப்பதே இதன் நோக்கம் என்றும் இல்லாவிடில் ஒரு சில நிலப்பிரபுக்களையும் அவரது அடியாட்களையும் தனிமைப் படுத்த, மிக அதிகபட்சமான விவசாயிகளின் ஒற்றுமையை சாதிப்பது இயலாது''.

167. கடலூர் மாநில மாநாடு விவசாயிகள் அரங்கில்மூன்று முக்கிய கடமைகளை வரையறுத்தது. கோரிக்கைகளைப் பொறுத்த வரை, தொடர்ச்சியாக தனி இயக்கத்தையும் மற்றைய அமைப்பு களோடு சேர்ந்து கூட்டு இயக்கங்களையும் மேற்கொள்ள வேண் டும்; மாநில மையத்தை திறம்பட இயங்க வைப்பதும், மாவட் டங்களில் இதற்கென்று முழு நேர ஊழியர்களை நிர்ணயிப்பதும்; விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் அமைப்பு ரீதி யாக திரட்ட வேண்டுமென்பது கட்சியின் அரசியல் கடமை என்ற உணர்வை கட்சி அணிகள் முழுவதற்கும் ஏற்படுத்துவது என்ப வையே.

இந்த வழிகாட்டும் நெறிகளின் அடிப்படையில் நமது மாநிலத்தில் சென்ற மாநில மாநாட்டிற்குப் பிறகு, கடந்த சில ஆண்டுகளில் நாம் நடத்தியுள்ள விவசாயிகள் இயக்கத்தினை பரிசீ லிப்போம்

தொழிலாளி - விவசாயிகள் ஒன்றுபட்ட போராட்டம்

168. 1982 ஜனவரி 19—ந்தேதி அன்று நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தில் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளிகளும் பங்கு கொள்ள வேண்டும்என்று கட்சியும், விவசாய — விவசாயத் தொழிலாளர் சங்கங்களும் வேண்டுகோள் விட்டன. இந்த அறை கூவலை ஏற்று குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் சுமார் 5லட்சத் திற்கும் அதிகமான விவசாயத் தொழிலாளர்களும், விவசாயி களும் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டனர்

அப்பொழுது திருமெய்ஞானத்தில் அ தி மு க அரசு துப் பாக்கிப் பிரயோகம் நடத்தியது. தோழர் அஞ்சான், நாகூரான்

இருவரும் ஸ்தலத்திலேயே குண்டடிபட்டு வீர மரணம் எய்தினார்கள். 13பேர் குண்டு காயங்களோடு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள். 250 பேர்கள் மீது வழக்குகள் போடப்பட்டன தஞ்சை மாவட்டம் முழுவதும் வேறு பல இடங்களிலும் துப்பாக்கிச்சூடும், போலீஸ் தாக்குதலும் நடைபெற்றன. பல வழக்குகளும போடப்பட்டு 2000க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டனர். ஒரு ஆண்டிற்குப் பிறகும் கூட நமது வட்ட— மாவட்டத் தலைவர்களை இந்த வழக்கில் சேர்த்தார்கள். இதற்கு மத்தியில் 20—ந்தேதி நடந்த அஞ்சான், நாகூரான் இறுதி ஊர்வலத்தில் மாவட்டம் முழுவதிலிருந்து 20,000க்கு மேற்பட்டவர்கள் ஒன்று திரண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இயக்கம் நாமும், சி.பி.ஐ சங்கங்களும் சேர்ந்து நடத்திய இயக்கமாகும். இதையொட்டி ஜனவரி 19ந்தேதி மன்னார்குடி வட்டம் ரெட்டைப்புளியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் சி.பி.ஐ தோழர் ஞானசேகரன் மரணமடைந்தார். நாமும், சி.பி. ஐ யும் இந்தத் துப்பாக்கிச் சூடுகள் பற்றி நீதி விசாரணை வேண்டும் என்று கோரினோம். ஆனால் மாநில அரசு நிர்வாக விசாரணைக்கு உத்தரவிட்டது. எனவே நாமும் சி.பி.ஐ யும் சேர்ந்து அந்த நிர்வாக விசாரணையில் கலந்து கொள்ள மாட்டோமென அறிவித்தோம்.

போலீஸ் நம் மீது போட்ட வழக்கில் நமது தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர். எனவே அரசாங்கம் நம மீது பொய் வழக்குகளையே ஜோடித்தது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

தியாகிகள் குடும்பத்திற்கு அரசின் நிதி உதவி வேண்டாமென்று அறிவித்தோம். கட்சி, வி.ச., வி.தொ.ச. தொழிற்சங்கம் ஆகியவை சேர்ந்து சுமார் ஒருலட்சம் ரூபாய் வரை வசூல் செய்து தியாகிகள் குடும்பங்களுக்கும், குண்டடிபட்டவர்களுக்கும் நிதி உதவி செய்தோம். இந்த நிதியை மயிலாடுதுறையில் நடந்த மாபெரும் கூட்டத்தில நமது கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் இ எம் எஸ் அவர்கள் வழங்கினார்கள். சொந்தமாக ஒரு நிலம் வாங்கி அதில் தியாகிகளுக்கு நினைவுத்தூண் அமைத்துள்ளோம். நிதியின் ஒரு பகுதியை இதற்காகக் கொடுத்தோம். அதே போல் வழக்குகளை நடத்துவதற்கும் நிதியின் ஒரு பகுதியைக் கொடுத்தோம்.

தஞ்சை விவசாயத் தொழிலாளர்களும்; விவசாயிகளும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டது தங்களுடைய கோரிக்கைகளுக்காக அல்ல; தங்களுடைய சகோதர வர்க்கமாகிய இந்திய தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கைகளுக்காக ரத்தம் சிந்தி நடத்தியபோராட்டமாகும். விவசாயி-தொழிலாளிவர்க்கஒற்றுமைக்கு நாடு முழுவதற்குமே எடுத்துக்காட்டாக விளங்குகிற மாபெரும் நிகழ்ச்சியாகும்.

இந்தப் பாரம்பரியம் தொழிலாளி - விவசாயிகள் இயக்கத்தில் தொடர்ந்து போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய சாதனையாகும். மேலும் தொழிலாளிகளும், விவசாயிகளும் ஒன்றுபட்டு நின்றால் அந்த இயக்கம் எவ்வாறு பலமுள்ளதாக மாறுகிறது என்பதற்கும், கூட்டு இயக்கத்தின் வீச்சுக்கும் எடுத்துக்காட்டாகவும், படிப்பினையாகவும் இந்தப் போராட்டம் விளங்குகிறது.

இயற்கையின் பாதிப்புகளும் நிவாரண இயக்கமும்

169. வறட்சி: தமிழ்நாட்டில் கிராமப்புறத்திலுள்ள அனைத்து மக்களையும், விவசாயத்தையும் வறட்சி பாதித்தது இது 1982—ம் ஆண்டு முழுவதும், 1983 நவம்பர் மாதம் வரை இரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக நீடித்து பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியது. மாநில முழுவதும் பயிர்கள் கருகி அழிந்தன. காய்ப்பில் இருந்த சுமார் 8லட்சம் தென்னை மரங்கள் கருகிவிட்டன. வறட்சி நிவாரணம் கோரி பல்வேறு இயக்கங்களை நடத்தினோம். மற்ற விவசாய சங்கங்களுடன் சேர்ந்து கூட்டாக திருச்சி, பெரியார், சேலம், தஞ்சை, கோவை ஆகிய மாவட்டங்களில் மாவட்ட வறட்சி நிவாரண மாநாடுகளை நடத்தியுள்ளோம்.

தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்கக் கோரி அனைத்து சங்கங்களின் தலைவர்களுடன் சேர்ந்து 300பேர்கள் 24-3-83ல் சென்னை குறளகம் முன்பு உண்ணாவிரதம் இருந்தோம். இந்த இயக்கங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓரளவு நிவாரணம் கிடைத்தது.

வெள்ளம் : இதே போல் 1983 டிசம்பரிலும், அதைத் தொடர்ந்து 1984 மார்ச் வரையிலும் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு

காலத்தில் அரசை செயல்பட வைக்க நடவடிக்கை எடுத்ததோடு, நமது ஊழியர்களும் மக்களைப் பாதுகாக்க கடுமையாக உழைத்தனர். நிவாரணம் பெறுவதற்கு அனைவரோடும் சேர்ந்து போராடியதுடன் நிவாரண வினியோகத்தில் நடைபெற்ற ஊழல்கள், மோசடிகளை எதிர்த்தும் பரவலாகப் போராடியுள்ளோம்.

நோய் : 1984-1985ம் ஆண்டில் தமிழகத்தில் நெற்பயிர் சுமார் 5 லட்சம் ஏக்கருக்கு மேல் நோயால் பாதிக்கப்பட்டது. அப்போது அதற்காக நிவாரணம் கோரி இயக்கம் நடத்தியதோடு குறிப்பாக மதுரை மாவட்டத்தில் மற்றவர்களையும் இணைத்துக் கொண்டு கூட்டாக கோரிக்கை சிறப்பு மாநாடு ஒன்றை நடத்தினோம்.

இயற்கை பாதிப்புகளுக்கு நிவாரணம் கோரி நாம் தனியாகவும், கூட்டாகவும் இயக்கம் நடத்தியதோடு கூட்டு இயக்கங்களுக்கும் நாம் முன்முயற்சியும் எடுத்துள்ளோம். இவைகளால் பலதரப்பட்ட விவசாயிகள்-விவசாயத்தொழிலாளர்கள் மத்தியில் நமது இயக்கம் செல்வதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டன.

உச்சவரம்புச் சட்டத்தை திருத்தக்கோரி இயக்கம்

170. மிட்னாப்பூரில் கூடிய அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 24வது மாநாட்டின் வழிகாட்டுதலின்படி, தமிழகத்தில் உள்ள நில உச்சவரம்புச் சட்டத்தை பரிசீலனை செய்தோம். அப்படி பரிசீலனை செய்ததில் அச்சட்டம் தமிழகத்தில் 1961 முதல் 28.2 85வரை சுமார் 25ஆண்டுகள் மூன்று வெவ்வேறு கட்சிகளினால் நடத்தப்பட்ட மாநில அரசுகளின் செயல்பாட்டில் இதுவரை 1,62,631 ஏக்கர் மட்டுமே உபரியாக எடுக்கப்பட்டுள்ளது. இதில் 1,18,120 ஏக்கர் மட்டுமே இதுவரை 92,268 பேர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருப்பதாக அரசு கணக்குகள் கூறுகின்றன. இதிலும் கூட பட்டா கிடைத்திருக்கும் சிலருக்கு நிலமே ஒப்படைக்கப்படாத நிலையும் உள்ளது. எனவே இச்சட்டத்திலுள்ள குறைபாடுகளைப் போக்கி மேற்கு வங்கத்திலுள்ள சட்டத்தைப் போல் திருத்தப்பட்டு சரியாக அமல் நடத்தப்பட்டால், நமது மாநிலத்தில் சுமார் 20லட்சம் ஏக்கர் வரை உபரி நிலம் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன.

எனவே, இச்சட்டத்திற்கான திருத்தங்களைப் பற்றி பரிசீலனை செய்து முடிவு செய்வதற்காக 1983 அக்டோபர் 22,23 தேதிகளில் சிதம்பரத்தில் மாநில விவசாயிகளின் ஒரு சிறப்பு மாநாட்டை நாம் நடத்தினோம். இதற்கான நகல் தீர்மானத்தை மாநில கட்சி மட்டத்திலும் பரிசீலனை செய்தோம். அதேபோல் திருச்சியில் மாநில வி.ச., வி.தொ ச. ஆகியவற்றின் நிர்வாகக் குழுக்களின் கூட்டுக் கூட்டத்தை நடத்தியும் பரிசீலனை செய்தோம் இநத விவாதங்களின் அடிப்படையில் இந்த சட்டத்தை திருத்துவதற்கான ஒரு விரிவான தீர்மானததை நிறைவேற்றினோம். இநத மாநாட்டில் அகில இந்திய விவசாய சங்கத்தின் பொதுச் செயலாளர் சாந்திமாய்கோஷ் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார். இந்த தீர்மானத்தை ஒரு பிரசுரமாகவும் வெளியிட்டுள்ளோம்.

இந்த தீர்மானத்தின் அடிப்படையில் தமிழக வி.ச., வி.தொ.ச. இயக்கங்கள் ஓரளவு பிரச்சாரத்தையும் நடத்தியுள்ளன. ஆயினும் உடனடி நிலச்சீர்திருத்தத்திற்கான இந்தத் தீர்மானத்தை போதுமான அளவில் மக்கள் மத்தியில் நாம் கொண்டு போகவில்லையென்பது ஒரு பலவீனமாகும். இந்தக் குறைபாட்டைப் போக்கும் வகையில் நாம் அடுத்தபடியாக விரிவான பிரச்சார இயக்கத்திற்குத் திட்டமிட வேண்டும். பெருமளவு விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் இதில் ஈடுபாடு கொள்ளச் செய்ய வேண்டும். இதே பிரச்சனையில் சி.பி.ஐ.யிலுள்ள சங்கமும் உட்பட மற்ற சங்கங்களுடன் கூட்டு இயக்கத்திற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

171. குத்தகை விவசாயிகள் : குத்தகைதாரர் பதிவுச் சட்டப்படி இதுவரை 4, 39, 582 குத்தகைதாரர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் அவர்களிடம் உள்ள நில அளவு 6,36 656 ஏக்கர்கள் என்றும் மாநில அரசின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. பதிவு செய்யப்பட்டிருப்பதில் கணிசமான பகுதியினர் கோவில்நில சாகுபடிதாரர்களாகும். தமிழகத்தில் பதிவு செய்யப்படாத குத்தகை விவசாயிகள் இன்னும ஏராளமாக உள்ளனர். இவர்களைப் பதிவு செய்ய மீண்டும் ஒரு சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டு பதிவு செய்வதற்கு ஒரு வட்டத்திற்கு ஐந்து பேர் கொண்ட குழு நியமிக்க வேண்டு

மென அரசு முடிவு செய்தது இதில் 57 வட்டங்களில் மட்டும் குழு அமைக்கப்பட்டுள்ளது குழுக்கள் அமைக்கப்பட்டு 2 ஆண்டு களுக்கு மேலாகியும் குழுக்கள் செயல்படவில்லை.

இதே போல் விளைச்சலில் முக்கால் பங்கு, வார விவசாயி களுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்ற சட்டம் இருந்தும் அதை அமல்படுத்த மாநில அரசு நடவடிக்கை எதையும் மேற்கொள்ள வில்லை.

குத்தகை விவசாயிகளுக்கு இயற்கை இடர்ப்பாடுகளுக்கு நிவாரணம் வழங்காததால் அவர்களின் குத்தகை பாக்கிகள் கட ளுக சேர்ந்துள்ளது. இதற்கு நிரந்தர தீர்வுகாணமல், பாக்கிகளைக் கொடுப்பதற்கு அவகாசம் நீடிக்கப்பட்டு சட்டம் நிறைவேற் றப்பட்டுள்ளது.

கோவில் நில குத்தகைதாரர்கள் சாகுபடிதாரர் பாது காப்புச் சட்டத்திலிருந்து கோவில், அறக்கட்டளை நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்போவதாக அரசு அறிவித்துள்ளது. நாம் இதை எதிர்த்து, விவசாயிகளைத் திரட்டி இயக்கம் நடத்தியுள் ளோம். இதற்கென்று ஒரு மாநில சிறப்பு மாநாட்டை மயிலாடு துறையில் நடத்தினேம். இதில் பல மாவட்டங்களிலிருந்தும் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர். குத்தகைதாரர்களை பாதுகாப்ப தற்கான நம்முடைய இயக்கம் ஸ்தல இயக்கமாகவே ஆங்காங்கே மட்டுமே நடைபெற்றுள்ளது. குத்தகை விவசாயிகளை எதிர் நோக்கியுள்ள ஆபத்துக்களை விளக்கிக் கூறி, அவர்களை இயக்கத் தில் ஈடுபடுத்த நாம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இனும் விவசாயிகள் : புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் 400 கிராமங்களில் இனும் விவசாயிகளின் பிரச்சினை தீர்க் கப்படாமல் உள்ளது. இதில் சில கிராம வழக்குகள் உச்ச நீதிமன் றத்தில் உள்ளன. இனும்தாரர்கள் விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்ற முயற்சிக்கிறார்கள். இனும் விவசாயிகளைத் திரட்ட, ஒரு சிறப்பு மாநாட்டினை நாம் புதுக்கோட்டையில் நடத்தினேம். ஆனல் போதுமான இனும் விவசாயிகளைத் திரட்ட முடியவில்லை என்பது பலவீனமான அம்சமாகும்.

172. நிலவரி: 6 ஆண்டுகளாக வசூலிக்காமலிருந்த நிலவரி முழுவதையும் ஒன்று சேர்த்து அதற்கான வட்டியையும் கூட்டி, தேர்தல் முடிந்தவுடன் 1985ம் ஆண்டு ஜனவரியில் ஒரே நேரத்தில் வசூலிக்க. மகசூலை ஜப்திசெய்ய வயல்களில் கொடி நட்டு விவசாயிகளை அரசு அச்சுறுத்தியது. நமது இயக்கம் இதை எதிர்த்து விவசாயிகளைத் திரட்டியது. பிறகு தஞ்சை மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், விவசாயிகள் சங்கத்திற்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டது அதன்படி மகசூலை ஜபதி செய்வதில்லை, வட்டி விதிப்பதில்லை என்றும், நடப்பு வரியையும், முந்தைய பாக்கியில் ஒரு ஆண்டு வரியையும் வருட தவணை முறையில் வருடந் தோறும் விவசாயிகள் செலுத்தி வந்தால் போதுமென்றும் உடன்பாடு ஏற்பட்டது.

173. மின் கட்டணம்: தமிழ்நாட்டில் 15.9-84க்குப் பிறகு சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்றும், மற்றவர்களுக்கு ஒரு குதிரை சக்திக்கு ஆண்டுக்கு ரூ. 75 என்றும் அரசு மின்கட்டண வசூலில் மாறுதல் செய்து அறிவித்தது. இது குதிரை சக்திக்கு ரூ. 75 என்பது விவசாயிகளை பாதிப்பதாகவும், மின் வாரியத்திற்கு அதிக நிதி வருவதற்கு வகை செய்வதாகவும் உள்ளது. எனவே அரசு அறிவித்தபடி அனைத்து சிறு விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம், மற்றவர்களுக்கு ஒரு குதிரை சக்திக்கு ரூ. 50 கட்டணமாக குறைக்க வேண்டுமென்று நாம் கோரி வருகிறோம்.

174. விலை: நெல்லுக்கு மத்திய அரசு அறிவித்துள்ள விலையோடு மாநில அரசு குவிண்டால் ரூ 50 மான்யம் கொடுக்க வேண்டுமென்றும், கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ 250 கோரியும் இதுவரை கரும்பு விவசாயிகளுக்கு ஆலை முதலாளிகள் கொடுக்க வேண்டிய பாக்கிகளைக் கொடுக்கக் கோரியும், பருத்தி, கடலை ஆகிய பொருட்களுக்கு கட்டுப்படியான விலை கோரியும் பல வடிவங்களில் இயக்கம் நடத்தி வருகிறோம்.

175. கடன் நிவாரணம்: விவசாயிகளுக்கு இருக்கும் கூட்டுறவுக் கடன் என்பது அசல், வட்டி, அபராதவட்டி ஆகியவற்றை இணைப்பதால் விவசாயிகள் மீது பெரும் சுமையாக உள்ளது. கடன் பிரச்சனைக்கு ஒரு தீர்வு காணவும், ஜப்தி என்று கூறி கிராமத்தின் மீது அரசு ஒரு படையெடுப்பு போல் நடந்து கொள்வதை

எதிர்த்தும் 4ஆண்டுகளாக நாம் தொடர்ச்சியாகத் தனியாகவும் கூட்டாகவும் இயக்கம் நடத்தி வருகிறோம். இந்த இயக்கத்தை ஒட்டி 16.7.82ல் அனைத்து சங்கங்களின் மாநிலத் தலைவர்கள் 325 பேர் சென்னையில் மறியல் செய்து கைது செய்யப்பட்டனர். 1982 ஜூலை 20,21,22 தேதிகளில் மாநிலம் முழுவதும் 80இடங்களில் மறியல் நடநதது. இதில் 13ஆயிரம் பேர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டார்கள். அந்த ஆண்டு ஜப்தி ஓரளவு தடுக்கப்பட்டது. தொடர்ந்து கடன் நிவாரணத்துக்கான இயக்கமாக தர்ணா, ஆர்ப்பாட்டம், கூட்டுறவு சங்கங்களுக்கு முன் உண்ணாவிரதம் ஆகிய இயக்கங்களை நடத்தியுள்ளோம். 1985ம் ஆண்டு மே மாதம் ஜப்தியை எதிர்த்து மாநிலத்தில் தனியே பிரச்சார இயக்கத்தை பரவலாக நடத்தியுள்ளோம். இந்த இயக்கத்தின் போது நாகப்பட்டிணம் கீழையூரில் நமது தலைமையின் கீழ்5000 விவசாயிகள் திரண்டு போலீஸ் தாக்குதலையும், அதிகாரிகளின் கெடுபிடியையும எதிர்த்து நடத்திய ஆர்ப்பாட்டத்தின் விளைவால் அப்பகுதியில ஜப்தி நின்றது.

எனினும் 31-5-82ல் ஜப்தி நடவடிக்கையைக் கண்டித்து கூட்டாக மாநிலம் முழுவதும் ஒரு மறியல் நடத்த தயாரிப்புகளில் ஈடுபட்டிருந்த போது மாநில அரசு 17-5-82ல் அனைத்து சங்கங்களையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்துப் பேசியது. அதில் 25சதவிகித கடனை விவசாயிகள் கட்டுவது என்றும், மீதியைப் பற்றிப் பிறகு பேசி முடிவுக்கு வருவதென்றும், ஜப்தியை நிறுத்துவதென்றும் அரசு முடிவு செய்து அறிவித்தது. இதை நாயுடு சங்கம் ஏற்கவில்லை. சிபிஐ சங்கம் முதலில் கையெழுத்திட்டுவிட்டு, பிறகு அதை வாபஸ் பெற்றுக் கொண்டது. இந்த நிலையையில் நமது சங்கம் இதை ஏற்று கையெழுத்திட்டது தவறு என்று மாநில செயற்குழுவும், மாநிலக் குழுவும் விமர்சித்தது. கூட்டுறவு கடன் பற்றி மாநில அரசே நியமித்த உயர் மட்ட குழுவின் பரிந்துரைகளைக் கூட ஏற்பதற்கு இந்த அரசு பிடிவாதமாக மறுத்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில் கூட்டுறவு கடன் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நாம் தனியாகவும், கூட்டாகவும் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

176. விவசாயத் தொழிலாளர் இயக்கம்: 2 ஆண்டு வறட்சியில் வேலை கிடைக்காத போதும், வெள்ளத்தில் வீடுகளை

இழந்தபோதும் விவசாயத் தொழிலாளர்களுக்காக இயக்கம் நடத்தியிருக்கிறோம். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் வேலை கோரி 25.7.83ல் 25க்கும் மேற்பட்ட ஒன்றிய அலுவலகங்களில் கெரோ செய்த பிறகு, கிராமத்திற்கு தலா ரூ. 5000 மதிப்புள்ள வேலைகளை நிறைவேற்ற அரசு உத்தரவிட்டது. வெள்ளத்தில் வீடு இழந்தபோது வீடு கட்ட ரூ. 500 கேட்டுப் போராடி ரூ. 200 பெற்றுக் கொடுத்திருக்கிறோம்.

கூலி: கீழத்தஞ்சை தவிர தமிழகம் முழுவதிலுமுள்ள குறைந்தபட்ச கூலிச் சட்டத்தை திருத்தக் கோரினோம். இதற்காக மாநில அரசு திரு. அரிபாஸ்கர் கமிஷனை நியமித்தது. இந்தக் கமிஷனுக்கு முன்னால் நமது மாநில வி தொ.ச. சார்பில் அதனுடைய மாவட்டக் குழுக்கள், கூலி உயர்வுக்கான காரணத்தை விளக்கி ஒரே நிலையை வற்புறுத்தி சாட்சியம் கூறின. இதன் பின் குறைந்தபட்சக் கூலிச் சட்டம் திருத்தப்பட்டு குறைந்தபட்சக் கூலி ரூ. 5லிருந்து ரூ. 8 ஆகவும், அதிகபட்சக் கூலி ரூ. 7லிருந்து ரூ.11 ஆகவும் நெல் அறுவடையில் தானியமாக கூலி 8ல் ஒரு பகுதி என்றும் மற்றைய தானியங்களில் அறுவடைக் கூலி தினசரி ரூ. 11 என்றும், வேலை நேரம் 7-00 மணி நேரம் என்றும் திருத்தியது. இந்த கூலி விகிதம் 5-4-83 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இந்த குறைந்தபட்ச கூலிச் சட்டத்தை அமல் நடத்த மேலத் தஞ்சை, திருச்சி, மதுரை, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் சில இடங்களில் இயக்கம் நடத்தி ஓரளவு வெற்றி பெற்றுள்ளோம். குறைந்தபட்ச கூலி திருத்தியமைக்கப்பட்ட பிறகு கீழத் தஞ்சையின் கூலிச் சட்டப்படியான கூலிக்கும் குறைவாகப் போய்விட்டது. அங்கும் இந்த அளவிற்கு கூலியை உயர்த்தப் போராடினோம். இந்த ஆண்டு ரூ 8ம் 11ம் என்று கூலியை அரசு அறிவித்துள்ளது.

கீழத் தஞ்சையில் பெண்களுக்கு ரூ 8 என்பதை 9 ஆக உயர்த்த வேண்டும் என்று போராடி நமது இயக்கம் இருக்கும் கிராமங்களில் சில இடங்களில் பெற்று இருக்கிறார்கள்.

பொதுவாக தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ஏற்பட்ட இயற்கையின் பாதிப்புகளினால் கூலி இயக்கத்தை விஸ்தரிப்பதில் சிரமங்கள் இருந்தன

சில கிராமங்களில் விவசாயத் தொழிலாளிகளுக்கு உச்ச வரம்பிலுள்ள உபரிநிலம், தரிசு நிலம், காட்டு நிலம் இவைகளில் நிலம் பெற்றுத் தரவும், கோவில் நிலங்களில் குத்தகைக்கு நிலங்களைப் பெற்றுத்தரவும் நமது இயக்கம் முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறது.

அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கங்களின் கூட்டு இயக்கம்

அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கங்களின் கூட்டு அறைகூவலின்படி ஒருங்கிணைந்த ஒரு மத்திய சட்டத்தைக் கோரி நாமும், சிபிஐ சங்கமும் 3-8-82ல் 100 இடங்களில் தர்ணா நடத்தியுள்ளோம். நாம் தனியாக அகில இந்திய அறைகூவலை ஒட்டி மாநில ரீதியில் பிரச்சார இயக்கம் நடத்தியுள்ளோம். மேலும் நாமும் சிபிஐயும் சேர்ந்து விவசாயத் தொழிலாளர்களுக்கென்று ஒருங்கிணைந்த மத்திய சட்டம் கோரி ஒரு மாநில சிறப்பு மாநாட்டினை 29-9-84ல் திருத்துறைப்பூண்டியில் நடத்தினோம். இதற்கான கையெழுத்து இயக்கம் ஓரளவு மட்டுமே நடந்துள்ளது.

விவசாயத் தொழிலாளர்தான் நமது தளமாக இன்றைக்கும் இருக்கின்றனர். எனவே இதை ஆழமாக உணர்ந்து இவர்களை ஸ்தாபன ரீதியாகத்திரட்டி போராடுவதற்கு நாம விடாப்பிடியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

177. மலைவாழ் மக்களின் இயக்கம்: தமிழ்நாட்டில் மலைவாழ்மக்களிடம் நாமக்குள்ள தொடர்புகளை பயன்படுத்திக் கொள்ள 1984 அக்டோபர் 15, 16 தேதிகளில் சேலம் மாவட்டம் ஆத்தூரில் ஒரு பிரதிநிதிகள் கூட்டத்தை நடத்தினோம். அதில் 9 மாவட்டங்களிலுள்ள 16 மலைகளிலிருந்து 50 பேர்கள் கலந்து கொண்டார்கள். அவர்களின் கோரிக்கைகளுக்காக மலைவாரியாக மாநாடுகள் நடத்த அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இந்த முடிவுகளை நிறைவேற்றும் வகையில் 1985 மே மாதத்தில் சேலம் மாவட்டத்தில் கொல்லிமலை, கல்வராயன் மலை, பச்சைமலை, திருச்சி மாவட்டத்தில் பச்சைமலை, தென்னாற்காடு மாவட்டத்தில் கல்வராயன்மலை, மதுரை மாவட்டத்தில்

கொடைக்கானல் மலை, வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலை ஆகிய ஏழு மலைகளில் மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான மலைவாழ் மக்கள் ஒவ்வொரு மாநாட்டிலும் கலந்து கொண்டனர்.

178. காவேரி நீர்ப் பிரச்சனை : காவேரி தண்ணீர் பிரச்சினையில் கர்நாடகா, தமிழ்நாட்டிற்கு இடையேயான உடன் பாடு 1974க்குப் பிறகு புதுப்பிக்கப்படவில்லை. அப்பிரச்சினை தொடர்ந்து நீடித்துக் கொண்டிருப்பதால் காவேரிப் பாசனப் பகுதி பாதிக்கப்பட்டு வருகிறது. 1982ல் தஞ்சை, திருச்சி, தென் னாற்காடு மாவட்டங்கள் பாதிக்கப்பட்ட போது உடனடியாக விவசாயத்தைப் பாதுகாக்க கர்னாடகாவுடன் தமிழக அரசு பேசி தண்ணீர் பெற வேண்டுமெனக் கோரி நாம் இயக்கம் நடத்தி னோம். நாம் முன்முயற்சி எடுத்து மற்றைய சங்கங்களோடும், கட்சிகளோடும் பேசி 15-10-82-ல் ஒரு நாள் தஞ்சை மாவட்ட பந்த்திற்கு அறைகூவல் விடுத்தோம். 13-10-82வரை அடக்கு முறைக்குத் தயார்படுத்திக் கொண்டிருந்த தமிழக அரசு 15ந்தேதி கடையடைப்புச் செய்யுங்கள் என்று அரசே அறிவித்தது. தஞ்சை மாவட்டம் முழுவதும் பந்த் வெற்றிகரமாக நடந்தது. 1983ம் ஆண்டு இப்பிரச்சினைக்காக ஜுலை 14, 15, 16 தேதிகளில் தஞ்சை மாவட்டக்குழு சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்னால் நமது இயக்கத் தலைவர்கள் உண்ணாவிரதம் இருந்தார் கள். இதே பிரச்சினைக்காக 16-8-85ல் மாவட்டம் முழுவதும் நம் இயக்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தினோம். மற்றைய சங் கங்களுடன் சேர்ந்து 27-9-85ல் 20 மையங்களில் சுமார் 25,000 பேர் கலந்துகொண்ட உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற் றது.

இப்பிரச்சனை பிரதானமாக இரு மாநிலங்கள் சம்பந்தப் பட்டவையாகும் எனவே இரு மாநிலங்களுக்கும் ஜீவாதாரமான தேவைகள் இப்பிரச்னையில் அடங்கியிருப்பதால் இரு மாநில அரசு களும், மத்திய அரசும் இதில் உடனடியாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு நியாயமான ஓர் தீர்வு காணவேண்டியுள்ளது இதில் நம்முடனும், கர்நாடக மாநில கட்சிக் குழுவுடனும் கலந்து பேசி உரிய ஆலோசனை கூறி உதவிட வேண்டுமென்று நாம் கட்சியின் மத்தியக் கமிட்டியை கேட்டுள்ளோம்.

179. விவசாயிகள் பேரணி : மாநில அரசு ஜப்தி நடவடிக்கைகளை கைவிட வேண்டுமென்பதை பிரதானமாக வைத்தும் மற்றும் விவசாயிகளின் - விவசாயத் தொழிலாளர்களின் முக்கிய கோரிக்கைகளை இணைத்தும் நமது இயக்கம் தன் சொந்த பலத்தில் 19.6 85ல் திருச்சியில் நடத்திய பேரணி சிறப்பாக இருந்தது. இந்தப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் கலந்து கொண்டனர். கட்சிக் கிளைகளும், வி ச, வி.தொ ச கிளைகளும் இப்பேரணியை வெற்றிகரமாக்க பெரும் முயற்சிகளை மேற்கொண்டன. ஜப்தியை நிறுத்தும் பிரச்னையில் நமது இயக்கம வலுவாக முன்முயற்சி எடுத்தது என்பதை விவசாயிகள் இதன் மூலம் உணர்ந்து கொள்ள இந்த பேரணியும். பேரணிக்காக நடத்தப்பட்ட பிரச்சார இயக்கமும் உதவி செய்தன. இப்பேரணியில் தோழர் பி. ராமமூர்த்தி அவர்களும், தோழர் சாந்திமாய கோஷ் (அ இ வி ச. பொதுச் செயலாளர்) அவர்களும் பங்கேற்றனர்.

180. ஸ்தல இயக்கங்கள்: மேலே குறிப்பிடுள்ள பிரதான இயக்கங்கள் தவிர குடிநீர், சாலை, மின்விளக்கு, மயானத்திற்கு பாதை, குடிமனைபட்டா போன்ற பல ஸ்தலப் பிரச்சனைகளில் நம்முடைய சங்கக் கிளைகள் பரவலாக பணியாற்றியுள்ளன. இந்த ஸ்தலப் பிரச்னைகளில் நடவடிக்கை எடுப்பது, விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளிகளையும் வர்க்க இயக்கங்களில் ஒன்று திரட்டுவதற்கு அத்தியாவசியமானதாகும். நமது தொடர்புகளையும் விவசாய மக்களோடு இது ஆழப்படுத்தும். ஸ்தலப் பிரச்னை மீது நாம் முன் முயற்சி எடுத்தால், அனைத்துப்பகுதி மக்களையும் ஒன்று திரட்ட முடியுமென்று திருச்சி மாவட்ட வேப்பந்தட்டையில் பேருந்து வசதிக்காக நடந்த பெரும் இயக்கம் எடுத்துக் காட்டுகிறது.

விவசாய உயர் மட்டக்குழு : தமிழ்நாடு அரசு நியமித்துள்ள வேளாண்மை உயர்மட்ட குழுவில் நம் சங்கம்சார்பில் ஒரு உறுப்பினர்உண்டு. அவ்வப்போது எழும்பிரச்னைகளில் இதர சங்க பிரதிநிதிகளோடு சேர்ந்து விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க முயற்சி செய்கிறோம். கூட்டுறவு கடன் தீர்வுக்கு விவசாயிகளுக்கு சாதகமான, ஏகமனதான ஒரு சிபாரிசை இந்தக் குழுவின் மூலம் அரசுக்கு அனுப்புவதற்கு நாம் முன முயற்சி எடுத்துள்ளோம்.

இந்த சிபாரிசை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அரசை ஒருமனதாக விவசாயிகள் இயக்கம் கோருவதற்கு இந்த முடிவு ஒரு அடிப்படையாக விளங்குகிறது.

181. விவசாயிகள் இயக்கத்திற்கு தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவு : பல ஆண்டுகளாக கிராமப்புற இயக்கத்தினைக் கட்டுவதற்கு தொழிற்சங்கங்கள் உதவி செய்ய வேண்டுமென்று முயற்சி செய்தோம். பல சந்தர்ப்பங்களில் கிராமங்களுக்குச் சென்று பிரச்சாரம் செய்வது, இயக்கம் நடத்தும்போது உதவுவது, தாக்குதல் நடக்கும் போது சகோதர ரீதியில் உதவி செய்வது, ஸ்தல ஊழியர்களுக்கு நிதி உதவுவது ஆகியவை ஆங்காங்குள்ள நிலைமைக்கு ஏற்ப தொழிற்சங்கங்கள் செய்து வந்தன.

இந்த இடைப்பட்ட காலத்தில் விவசாயிகள் இயக்கத்திற்கு மாநில ரீதியாக மையப்படுத்தப்பட்ட உதவி என்ற முறையில் சி ஐ டி யு வின் ஒவ்வொரு உறுப்பினரும் ஆண்டிற்கு ஒரு ரூபாய் நிதி கொடுக்க வேண்டுமென்று சிஐடியுவின் கோவை மாநில மாநாடு தீர்மானித்தது. 1984ல் வசூல் செய்த தொகை ரூ40 ஆயிரத்தை 19.1.85ல் திருமெய்ஞானத்தில் தியாகிகள் தின கூட்டத்தில் மாநில விவசாயிகள் சங்கத்திடம் கொடுக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி இந்தியாவிலேயே விவசாயி இயக்கத்தை வளர்ப்பதற்கு தொழிலாளி வர்க்கத்தின் கடமையைச் செய்வதில் சிறந்ததொரு முன் உதாரணமாகத் திகழ்கிறது. இந்த உதவியை ஆண்டுதோறும் செய்வதென்று சிஐடியு முடிவு செய்திருப்பது மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும். இந்த நிதியை மாநில வி.ச., வி.தொ.ச மைய செயல்பாட்டிற்கும், பத்திரிகை உதவித் தொகையாகவும், சில மாவட்டங்களில் வி.ச., வி தொ.ச முழு நேர ஊழியர்களை பராமரிப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது

182.வி.ச.-வி.தொ.ச. ஸ்தாபனம்: மாநில வி.ச., வி.தொ ச. மையம் ஏற்படுத்தப்பட்டு மாநில வி.ச., வி.தொ ச. செயலாளர்கள் மையத்திலிருந்து செயல்படுவது என்பது கடலூர் மாநாட்டிற்குப் பிறகு அமுலுக்கு வந்துள்ளது. முன்னைவிட விவசாயிகள், விவசாயிகள் இயக்கத்தை வழிநடத்திச் செல்வதற்கு இந்த மையம் பயன்பட்டிருக்கிறது. ஆயினும் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய அளவு இதன் செயல்பாடு மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ளது.

மாவட்ட வி.ச., வி.தொ.ச. ஆகியவற்றிற்கு சுற்றறிக்கை அனுப்புவது, அகில இந்திய அமைப்புகளுடன் தொடர்பு கொள்வது, மாவட்ட வி.ச, வி.தொ.ச. சங்கங்களோடு தொடர்பு கொள்வது மாத இதழான உழவன் உரிமையை வெளியிடுவது ஆகிய வேலைகளை இந்த மையம் செய்து வருகிறது.

கட்சியின் மாநிலக்குழுவின் சார்பாக இந்த அரங்கத்தைக் கவனிப்பதற்கு 11 பேர் கொண்ட சப்கமிட்டி அமைக்கப்பட்டது. இது 9 முறை கூடியுள்ளது. இது தவிர சப்கமிட்டியின் தோழர்கள் 5 பேரை கொண்ட மையமும் உண்டு. இது சப்கமிட்டிகளின் கூட்டங்களுக்கு இடையில் 10 முறை கூடியுள்ளது. இவ்வரங்கத்தின் பிரதான பிரச்சனைகளை சப்கமிட்டி விவாதித்து மாநிலக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. மாநிலக்குழு 4 முறை அரங்கப் பிரச்சனைகளை விவாதித்து முடிவு செய்துள்ளது.

என்றாலும் விவசாயிகள் இயக்கத்திலுள்ள சிக்கலான பிரச்னைகளுக்கு வழிகாட்டுவதற்கு சப்-கமிட்டி மேலும் அதிகமாக கூடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும் மாநிலக்குழு அதை உறுதிபடுத்த வேண்டுமென்பதும் அவசியமாகும்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலக்குழு 13முறையும், வி.தொ.ச. மாநிலக்குழு 7 முறையும் கூடியுள்ளன. இந்தக் கூட்டங்களையும் மேலும் பயன்படும் முறையில் நடத்துவதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் மிட்னாபூர் மாநாட்டு முடிவுகளை விளக்குவதற்காக 15 மாவட்டங்களில் 1982 டிசம்பர் மாதம் ஊழியர் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் தஞ்சையில் 500, மதுரை 300, திருச்சி 220, தென்னாற்காடு 150, முகவை 120, கோவை 110, புதுக்கோட்டை 110, பெரியார் 100, பாண்டிச்சேரி 100, தருமபுரி 90, சேலம் 80, நெல்லை 80, குமரி 50 வடாற்காடு 40, செங்கற்பட்டு 15 ஆக மொத்தம் 2065 ஊழியர் கூட்டங்களில் கலந்து கொண்டார்கள். அகில இந்திய விவசாயிகள் இயக்கத்தின் கொள்கைகளையும், உடனடி கடமைகளையும் ஊழியர்களுக்கு விளக்குவதற்கு இது பயன்பட்டது.

விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட அமைப்புகள் எல்லா மாவட்டங்களிலும் உள்ளன. ஆயினும் விவசாயத் தொழிலாளர்

சங்கத்தின் மாவட்ட அமைப்புகள் தற்போது தஞ்சை, திருச்சி, மதுரை, தென்னாற்காடு ஆகிய நான்கு மாவட்டங்களில் தான் உள்ளன. மற்ற மாவட்டங்களில் வி.ச, வி.தொ.ச. இரண்டு அரங்க வேலைகளையுமே மாவட்ட விவசாய சங்க அமைப்புகள்தான் செய்து வருகின்றன; மாவட்ட விவசாயத் தொழிலாளர்சங்க அமைப்புகள் 4 மாவட்டங்களில் மட்டுமே இருந்தாலும், எல்லா மாவட்டங்களிலும் விவசாயத்தொழிலாளர் சங்க உறுப்பினர் பதிவுதனியாகநடத்தப்பட வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். தனி மாவட்ட வி.தொ.ச, அமைப்புகளுள்ள 4 மாவட்டங்களிலும் மற்றும் கோவை, பெரியார், சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்ட வி தொ.ச, உறுப்பினர் தனிப்பதிவும் சேர்த்து மொத்தம் 8 மாவட்டங்களிலும 1984-85ம் ஆண்டுக்கு வி.தொ.ச. உறுப்பினர் எண்ணிக்கை 73,279 ஆக உள்ளது. 1984-85ம ஆண்டுக்கு விவசாயிகள் சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை 59,753. இந்த ஆண்டு முகவை மாவட்டத்திலிருந்து உறுப்பினர் பதிவு மாநில வி.ச. மையத்திற்கு வரவில்லை.

கடலூர் மாநாட்டின்போது வி ச, வி தொ.ச. கூட்டு உறுப்பினர் எண்ணிக்கை 1,58,400 என்று இருந்தது. இப்போது இதில் 25,368 உறுப்பினர் எண்ணிக்கை குறைவு ஏற்பட்டுள்ளது. இது மிகவும் கவலைப்பட வேண்டிய பலகீனமாகும். நாம் நடத்தியுள்ள இயக்கங்களுக்கும், இந்த உறுப்பினர் எண்ணிக்கை இவ்வாறு இருப்பதற்கும் சம்பந்தமில்லாமல் இருக்கிறது. நம்முடைய இன்றைய செல்வாக்கை இந்த அரங்கத்தில் பொதுவாக கணக்கிட்டாலும் கூட நம்முடைய இன்றைய பலத்திற்கு 2 லட்சம் உறுப்பினர்களையாவது நாம் சேர்த்திருக்க வேண்டும் ஆனால், நம்மால் அதை செய்ய முடியாமல் போனதற்கு நம்முடைய மாநில, மாவட்ட அமைப்புகள் இந்தப் பணியில் தேவையான அக்கறையையும், கவனத்தையும் செலுத்தவில்லை என்பதுதான் காரணம்.

மாவட்ட அமைப்புகள்: மாவட்ட அமைப்புகளில் அபிவிருத்தி காண்பது பற்றி கட்சியின் மாநிலக் குழு விவாதித்து, மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் 1 அல்லது 2 முழு நேர ஊழியர்கள் விவசாய அரங்கத்திற்கென தீர்மானிக்கப்பட வேண்டுமென முடிவு செய்தது. மாவட்ட செயற்குழுவில் ஒருவர் இவ்வரங்கத்துக்கென பொறுப்பேற்க வேண்டுமென்றும் மாநிலக்குழு முடிவு

செய்தது. இதற்காக பல மாவட்டக் குழுக்களுடன், செயற்குழுத் தோழர்களும், மாநில சப் கமிட்டித் தோழர்களும் கலந்து கொண்ட மாவட்ட செயற்குழு கூட்டங்கள் நடைபெற்றன. இதில் தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு, சேலம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் விவாதித்து முடிக்கப்பட்டது. இதன்படி திருச்சி-3, சேலம்-2, புதுக்கோட்டை-1 வட ஆற்காடு-1 என்று மாவட்ட வி. ச, வி. தொ. ச மையத்திற்கு முழு நேர ஊழியர்கள் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் மாவட்ட-வட்ட வி. ச., வி தொ. ச. மையங்களில் 27 ஊழியர்களை செயல்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. இந்த மாநிலம் முழுவதும் இந்த ஏற்பாட்டை அமலுக்கு கொண்டுவருவதற்கான பணியை நாம் தொடரவேண்டியுள்ளது.

பத்திரிகை: மாநில மையத்திலிருந்து 1982 ஜூலை முதல் உழவன் உரிமை என்ற மாத இதழ் தொடர்ந்து வெளியிடப்படுகிறது. ஆரம்பத்தில் 800 பிரதிகளில் துவங்கி 3200 பிரதிவரை சென்றது. தற்போது 2300 தான் செல்கிறது சந்தாக்கள் தொடர்ந்து புதுப்பிக்கப்படாததும், புதிய சந்தாக்கள் சேர்க்கப்படாததும், ஏஜெண்டுகளிடம் பாக்கிகள் சுமார் ரூ. 5000 தங்கியிருப்பதும் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு தடையாக உள்ளன. இப்பத்திரிகையின் உள்ளடக்கத்தையும், விற்பனையையும் அபிவிருத்தி செய்ய நாம் விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

183. **பொதுவான நிர்ணயிப்பு:** மேலே குறிப்பிட்டுள்ள வேலைகள் நடைபெற்று இருந்தாலும், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் இயக்கத்தில் நாம் ஒருதிருப்பத்தை ஏற்படுத்தி முன்னேற முடியவில்லை.

மக்கள் ஜனநாயக புரட்சிக்கு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் மகத்தான பங்குபற்றி நாம் அறிந்துள்ளோம். ஆயினும் இந்த இயக்கத்தை விரிவுபடுத்துவதிலும், ஆழப்படுத்துவதிலும் தமிழகத்தில் நாம் மிகவும் பின் தங்கி இருக்கிறோம் என்பது தான் யதார்த்த நிலைமை.

இந்த அறிக்கையின் முன் பகுதியில், மத்திய—மாநில அரசுகளின் மக்கள் விரோதக் கொள்கைகளின் விளைவால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, விவசாயிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள சுமைகள் ஆகியவை பற்றி குறிப்பிடப்பட்டுளளது.

நில உடைமைக்கு வரம்பு கட்டும் சட்டம் செயல்படவில்லை. நிலக்குவியல் பழைய, புதிய நில உடைமையாளர்களின் குடும்பங்களுக்குள்ளேயே பல பெயர்களில், வடிவங்களில் நீடிக்கிறது.

குத்தகை விவசாயிகளின் உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை என்பதுடன், புதிய ஆபத்துக்களும் அவர்களை எதிர் நோக்குகின்றன.

நவீனமுறை விவசாயம் என்ற பெயரால், விவசாயத் தொழிலாளர்களின் மத்தியில் வேலையில்லாத நிலைமை மேலும் மேலும் பெருகிக் கொண்டே போகிறது. குறைந்தபட்சக் கூலிச் சட்டமும் நடைமுறையில் அமுலில் இல்லை.

விவசாயிகளின் விளை பொருட்களுக்கு கட்டுபடியாகக் கூடிய விலைகள் கிடையாது. இடைத்தரகர்களின் மோசடிகளுக்கு அவர்கள் இரையாகிக் கொண்டிருக்கிறார்கள்.

விவசாய இடுபொருட்களின் விலையோ, தொடர்ந்து உயர்ந்து கொண்டே போகிறது.

விவசாய உற்பத்திக்கு தேவையான கடன் வசதிகள் விவசாயிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற மக்களுக்காகப் போடப்படும் நிவாரணத்திட்டங்களும், காண்ட்ராக்டர்களின் வேட்டைக்காடுகளாக விளங்குகின்றன

விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் இயக்கங்களுக்கு எதிராக அ தி மு க அரசின் அடக்குமுறைகள் அதிகரிக்கின்றன.

இந்த அடக்குமுறைகளை மறைக்கும் வகையில், மாநில அரசு கிராம மக்களை கவருவதற்காக சில சாகசங்களையும் கையாளுகிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் மீது, கிராமப்புறங்களில் பல வகைகளில் சமூக ஒடுக்குமுறைகளும் கொடுமைகளும் நீடிக்கின்றன.

நமது கடமைகள்

181. இந்தச் சூழ்நிலையில், விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும், அவர்களுடைய பல்வேறு கோரிக்கைகளுக்கான போராட்டங்களில் அவர்களது வெகுஜன ரீதியில் ஈடுபடுத்தி, அவர்களுடைய வர்க்க உணர்வை வளர்ப்பதும், வர்க்க ஒற்றுமையைப் பலப்படுத்துவதும் நமது மிக முக்கிய கடமையாகும்.

தமிழகத்திலுள்ள கிராம மக்கள்தான், முதலாளித்துவ—நிலபிரபுத்துவ கட்சிகளுக்கும், பிரதேச முதலாளித்துவ கட்சிகளுக்கும் அடித்தளமாக இருந்து வருகின்றனர்.

நாம் நடத்துகிற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் இயக்கத்தின் மூலம்தான், இந்த கிராமப்புற மக்களை மேற்கூறிய கட்சிகளின் பிடிப்பிலிருந்து விடுவித்து, இடதுசாரி-ஜனநாயக சக்திகளின் அடித்தளமாக மாற்ற முடியும்.

தமிழகத்தில் இன்று வேறு பலமான விவசாய சங்கமெதுவும் இல்லாத சூழ்நிலை உள்ளது என்பதையும் நாம் கணக்கில் எடுத்துக் கொண்டு விவசாய மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் இயக்கமாக நம் இயக்கத்தை முன்நிறுத்தி செயல்பட வைக்க வேண்டும்.

நமது தனி இயக்கத்தை தொடர்ந்து விரிவுபடுத்திக் கொண்டே, கூட்டு இயக்கத்திற்கான வாய்ப்புகள் அனைத்தையும் நாம் முன்முயற்சி எடுத்து பலப்படுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு செய்யும் பொழுது சில பிரச்சனைகளில் இதர விவசாய சங்கங்களுடன் சேர்ந்து செயல்பட வேண்டியிருக்கும்.

சில சமயங்களில் அப்பிரச்னைகளில் ஈடுபாடு கொண்டுள்ள அரசியல் கட்சிகளையும், அத்துடன் விவசாய சங்கங்களையும் ஒன்

றிணைத்து செயல்பட வேண்டியிருக்கும். அதிகப்படியான விவசாய மக்களை ஒரு குறிப்பிட்ட இயக்கத்தில் விச்சாக திரட்டுவதற்கு எது உதவி செய்யும் என்பதுதான் உரைகல்லாக இருக்க வேண்டும்.

அடிப்படை நிலச்சீர்திருத்தம் என்பது நமது மையமான பிரச்சார கோஷம். இதை மக்கள் மத்தியில் உறுதியாகவும் தொடர்ந்தும் உணர்த்த வேண்டும,

நில உடைமைக்கு வரம்பு கட்டும் சட்டத்திற்கு விரிவான திருத்தச் சட்டத்தை கொண்டுவருவதற்கான இயக்கம், உடனடி நிலச்சீர்திருத்தத்திற்கான இயக்கமாக நடத்தப்பட வேண்டும்.

கோவில் நில குத்தகை விவசாயிகளுக்கு ஏற்படவுள்ள அபாயத்திற்கெதிரான இயக்கமும், பொதுவாக குத்தகை விவசாயிகளின் பாதுகாப்பிற்கான இயக்கமும், குத்தகை விவசாயிகளின் ஈடுபாட்டுடன் நடத்தப்பட வேண்டும்.

விவசாயத் தொழிலாளர்களின் சட்டக்கூலி அமுலுக்கான இயக்கமும் விரிவாக நடத்தப்பட வேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பாக மத்திய சட்டம் வேண்டுமென்பதற்கான இயக்கமும் இதனுடன் இணைக்கப்பட வேண்டும்.

விவசாய விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கான இயக்கம்; நிலைமைகளுக்கேற்றவாறு உருவாக்கப்பட வேண்டும். விவசாய இடுபொருட்களின் விலையை குறைப்பதற்கான கிளர்ச்சியும் இத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

தமிழகத்திலுள்ள கூட்டுறவு கடன் பிரச்சினையை தீர்ப்பதற்கான இயக்கத்தில் நாம் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும்.

இதல்லாமல் குடி தண்ணீர், வீட்டடி மனை, ரோடு, மின் விளக்கு, மயானம், மயானத்திற்கான பாதை, பஸ் வசதி, மருத்துவ வசதி போன்ற ஸ்தல பிரச்சினைகளுக்காக பெருமளவு கிராம மக்கள் திரளுகிறார்கள். இந்த ஸ்தல பிரச்சனைகளில் உயிருள்ள இயக்கங்களை நடத்திட நாம் முன்முயற்சி எடுக்கவேண்டும்.

இந்த இயக்கங்கள் எல்லாம், விவசாயிகளின் அதிருப்தியை வெளிப்படுத்தும் பல்வேறு வாய்க்கால்களாகும். இந்த

வாய்க்கால்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து வல்லமைமிக்க விவசாயிகளின் பேரியக்கமாக உருவாக்க நாம் பாடுபட வேண்டும்.

இதுவே அகில இந்திய விவசாயிகள் இயக்கத்தின் அறைகூவலுமாகும்.

இந்தக் கடமைகளை நிறைவேற்ற மாநில, மாவட்ட, வட்ட ரீதியில் கட்சி விடாப்பிடியான போராட்டத்தை நடத்தியாக வேண்டும். இத்துடன் பலம் பொருந்திய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் சங்கங்களையும் நாம் கட்டி வளர்க்கவேண்டும்.

185. கடந்த நான்காண்டு காலத்தில் விவசாயிகள் அரங்கத்தில் நாம் ஆற்றியுள்ள வேலைகளை இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம் இத்தகைய இயக்கங்கள் கூட தமிழகத்தில் சிலபகுதிகளில்தான் நடைபெற்றுள்ளன. அதே சமயத்தில் தமிழ் நாட்டில் சக்தி மிகுந்த விவசாயிகள் இயக்கத்தை நாம் உருவாக்கிடவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் மேலே குறிப்பிட்டுள்ள பிரதானமான கடமைகளை கட்சி முழுவதும் ஈடுபட்டு நிறைவேற்ற வேண்டும். முன்னேற்றத்தைக் காண வேண்டும்.

வாலிபர் அரங்கம்

186. கடந்த 4 ஆண்டுகளில் ஜனநாயக வாலிபர் சங்கம் தொடர்ச்சியாக பல்வேறு இயக்கங்களை நடத்தியுள்ளது. வேலை அல்லது நிவாரணம் கோரி மறியல், தாலுகா, மாவட்ட அளவில் நடைபெற்ற சைக்கிள் பிரச்சார இயக்கங்கள், ''எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் வேலை'' என்ற கோஷத்தின் அடிப்படையில் அகில இந்திய டிஒய்எப்ஐ, எஸ்எப்ஐயின் அறைகூவலை ஏற்று, 1984—85ல் நடைபெற்ற பிரச்சார இயக்கங்கள், 18வயதுக்குமேற்பட்டவர்களுக்கு வாக்குரிமை என்ற கோரிக்கைக்கான பிரச்சார இயக்கம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. வேலை வாய்ப்பு நிலையங்கள் முன் நடைபெற்ற தர்ணாக்களும், வேலையில்லா இளைஞர்கள் மத்தியிலும் நல்ல பிரதிபலிப்பை ஏற்படுத்தியது.

புளியங்குடி கலவரம், குமரி மாவட்ட மதக்கலவரங்கள் போன்றவற்றின் பின்னணியில் எல்லா மாவட்டங்களிலும் நடத்தப்பட்ட ''மக்கள் ஒற்றுமை பாதுகாப்பு'' இயக்கம் பரவலாக

வரவேற்கப்பட்டது. சாதி, மத சண்டைகளுக்கு எதிரான வலுவான பிரச்சாரம் இந்த இயக்கத்திலேபோது நடைபெற்றது.

பஸ் கட்டண உயர்வு, ரயில் கட்டண உயர்வு ஆகியவற்றை எதிர்த்தும் ஆர்ப்பாட்டங்களும், தர்ணுக்களும் நடந்துள்ளன.

போபால் விஷவாயு சம்பவத்தைத் தொடர்ந்து ஒரு சில இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

187. கல்வித்துறையில் ஊழல், கட்டாய நன்கொடை வசூல் போன்றவற்றை எதிர்த்து பல மாவட்டங்களில் கல்வி நிலையங்கள் முன் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. நடந்த இடங்களில மக்கள் மத்தியில் நல்ல பிரதிபலிப்பை ஏற்படுத்தின.

இலங்கை அரசின் இனப்படுகொலைகளுக்கு எதிராக கோபாவேசம் ஏற்பட்டபோது, ஆரம்பத்தில் சில இடங்களில் அரசியல் தெளிவின்மை ஏற்பட்டபோதிலும், வாலிபர் இயக்கம் மக்கள் உணர்வுடன் இணைந்து நின்றது. இதனுல் தனிமைப்படாமல் ஸ்தாபனத்தைப் பாதுகாக்க முடிந்தது.

ஸ்தல அளவிலான கோரிக்கைகளுக்கான இயக்கங்கள்—குடிநீர், சாலைவசதி, பஸ்வசதி, சுகாதார வசதிகள் போன்றவற்காக பல்வேறு வடிவங்களில் மாநிலம் முழுவதும் ஏராளமான இயக்கங்கள் நடந்துள்ளன.

188. உலக சமாதானம், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களுக்கு ஆதரவு இயக்கங்கள் நடைபெற்றன. குறிப்பாக இவ்வாண்டு உலக இளைஞர் விழாவையொட்டி பல மாவட்டங்களிலும் விளையாட்டுப் போட்டிகள், கட்டுரை, கவிதைப் போட்டிகள் போன்றவை ஆயிரக்கணக்கான புது இளைஞர்களை ஆகர்ஷிக்கும் வகையில் நடத்தபபட்டது ஒரு சிறப்பு அம்சமாகும்.

இவ்வாண்டு ஜூலையில் மாஸ்கோவில் நடைபெற்ற உலக இளைஞர்கள் விழாவிற்கு இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் சார்பில் ஒரு குழு சென்று பங்கேற்றது. அக்குழுவில் தமிழ் நாட்டிலிருந்து தோழர்கள் நன்மாறனும, அகத்தியலிங்கமும, மாணவர் அரங்கத்தின் சார்பில் தோழர் ராஜனும் சென்று கலந்து கொண்டனர். அந்த விழாவின் சிறப்புகளையும் முடிவுகளையும்

விளக்கி ஹால் கூட்டங்களும், பொதுக் கூட்டங்களும் தமிழ் நாட்டில் பல பகுதிகளில் நடத்தப்பட்டுள்ளன.

189 வாலிபர் அமைப்புகளில் மாநில அளவில் பரவலாகவும், தொடர்ச்சியாகவும் செயல்படும் அமைப்பாக செயல்படுவது ஜன நாயக வாலிபர் சங்கம் மட்டுமே. சிபிஐ தலைமையில் உள்ள வாலி பர் அமைப்பின் செயல்பாடு சமீப காலத்தில் அதிகமாகியுள்ளது. தி.மு.க, அ.தி.மு.க, காங்கிரஸ் போன்ற பிரதான கட்சிகளும் இவ்வரங்கில் முன்பைவிட அதிக அக்கறை செலுத்துகிறார்கள். நக்சலைட் குழுக்கள், எஸ்யுசிஐ போன்றவற்றின் செயல்பாடும் அதிகமாக உள்ளது.

பலதரப்பட்ட பணிகள்

190. வாலிபர் இயக்கம் வேலையின்மையை எதிர்த்துப் போரா டும் இயக்கமாக மட்டும் இருக்கக் கூடாது என்ற உணர்வின் அடிப்படையில் 1982ம் ஆண்டு முதல் விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்கங்கள், பட்டிமன்றங்கள் ஆகியவற்றை ஏற்பாடு செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. சில மாவட்டங் கள் இவற்றை முறையாக அமுலாக்கின.

ஆயினும், எல்லா மாவட்டங்களிலும் இம்முயற்சி சீராக நடைபெறவில்லை. நடத்திய இடங்களில் நல்ல பலன் கிடைத்துள் ளது.

இந்தத் துறையில் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டி யுள்ளது.

மாநாடுகள்

191. ஸ்தாபனத்தை உறுதிப் படுத்தும் நோக்கத்துடன் 1982லும் 1984லும் ஏற்பாடு செய்யப்பட்ட வட்ட, மாவட்ட மாநாடுகள் வெற்றிகரமாக நடந்தன. ஆயிரக்கணக்கான வாலிபர்கள் பங் கேற்கும் வகையிலும், கருத்து பிரச்சார அரங்குகளாகவும் இம் மாநாடுகள் நடைபெற்றன.

இவற்றின் தொடர்ச்சியாக 1981ல் திண்டுக்கல் மாநாடு நடத்திய அதே முறையில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்கும்

வகையில் திருவாரூரில் 1984ம் ஆண்டில் மாநில மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

வகுப்புகள்: 1983, 1984ல் எல்லா மாவட்டங்களிலும் 2 நாள் வகுப்புகள் நடத்தப்பட்டன. ஏறத்தாழ 200 ஊழியர்கள் இவற்றில் பங்கேற்றனர்.

192. **பத்திரிகை:** வாலிபர் சங்கத்திற்கு ஒரு மாத இதழ் வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வந்த வண்ணம் இருந்தது. பல பத்திரிக்கைகள் நடத்திய அனுபவங்களை வைத்து சந்தாதாரர்களை சேர்த்து உத்தரவாதமான முறையில் மட்டுமே பத்திரிக்கையை வெளியிட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.2000 சந்தா சேர்ந்த பிறகு, 1984ல நவம்பர் முதற்கொண்டு டிஒய்எப்ஐ இளைஞர் முழக்கம் என்ற பெயரில் மாத இதழ் துவங்கப்பட்டது. பின்னர், பத்திரிகைக்கு நல்ல வரவேற்பு இருந்ததை பரிசீலித்து, சந்தாதாரர்களைத்தவிர முன் பணம் கட்டும் அமைப்புகள் முழுதும் விற்பனை செய்வது என்று முடிவு செய்யப்பட்டது.

1984 செப்டம்பரில் 2448 பிரதிகள், சந்தா மூலம் 2015 பிரதிகள் முன் பணம் கட்டும் ஏஜெண்டுகள் முழுவதுமாக 4465 பிரதிகள் விற்கப்பட்டன. துவங்கும் போது 2000 மட்டுமே இருந்தது.

தற்சமயம் சந்தாதாரர்கள், முன்பணம் கட்டிவாங்கும் அமைப்புகள் மூலம் விற்பனை-எல்லாம் சேர்த்து 8000 பிரதிகள் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

பத்திரிக்கையின் உள்ளடக்கத்தைப் பற்றி பொதுவான வரவேற்பு இருக்கிறது. ஆசிரியர் குழாம், நிர்வாக அமைப்பு ஆகியவற்றை வலுப்படுத்த சில முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

ஸ்தாபனம்

193. **உறுப்பினர் எண்ணிக்கை:** 1981ல் 45,325-1982ல் 59,631— 1983ல் 78 266—1984ல் 67,163 என்ற அளவில் உறுப்பினர் எண்ணிக்கை இருந்து வந்துள்ளது. 1984ல் சேர்க்கப்பட்ட எண்ணிக்கை 73,000க்கு மேலாகுமென்று இருந்தபோதிலும்,பல கிளைகளிலிருந்து முழுமை

யான பணம் வந்து சேராததால் மொத்த எண்ணிக்கை பாதிக்கப்பட்டுள்ளது. தவிர, வருடத்தின் இறுதியில் உறுப்பினர் சேர்ப்பது என்ற வழக்கம் இருந்தது. 1984 நவம்பர்—டிசம்பரில்—இந்திரா கொலை, பொதுதேர்தல் போன்ற நிகழ்ச்சிகளால் உறுப்பினர் பதிவு பாதிக்கப்பட்டது. இவ்வாண்டு 1லட்சத்திற்கு மேல் திரட்டுவது என்ற முடிவை வெற்றிகரமாக நிறைவேற்றும் பணி டி. ஒய். எப். ஐ.யின் முன்புள்ளது.(மாவட்ட வாரியாக உறுப்பினர் பட்டியல் தனியாக கொடுக்கப்பட்டுள்ளது).

கிளைகள் - இடைக்கமிட்டிகள்: 1984ம் ஆண்டில் 2080 கிளைகளும், 122 இடைக் கமிட்டிகளும் இருந்தன கிளைகளின் செயல்பாட்டில் பெரிய குறைபாடுகள் உள்ளன என்பது சமீபத்தில் கூடிய விவாதத்தில் தெரிய வந்தது. இடைக் கமிட்டிகளின் செயல்பாடுகளும் சில மாவட்டங்களில் மட்டுமே ஓரளவிற்கு சீராக உள்ளது.

மாவட்டக் கமிட்டிகள்: 17 மாவட்டக் கமிட்டிகள் உள்ளன. சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, சேலம்,கோவை(3) திருச்சி, தஞ்சை, மதுரை (3). கிழக்கு முகவை, மேற்கு முகவை (காமராசர் மாவட்டம்)ஆகிய மாவட்டங்களில் முழு நேர ஊழியர்கள் இருக்கிறார்கள். மாநிலக் கமிட்டியில் முழு நேர ஊழியர்களாக 2 பேரும், பத்திரிக்கை நிர்வாகத்தில் பகுதி நேர ஊழியரும் (அலவன்ஸ் பெறும் ஊழியர் ஒருவரும்) இருக்கிறார்கள்.

194. முக்கியமான ஸ்தாபன பிரச்சனைகள்: வாலிபர் அரங்கத்தில் செயல்படும் தோழர்கள் சற்று வேகமாகவே கட்சியின் அல்லது வெகுஜன பொறுப்புகளிலும் செயல்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதன் விளைவாக வாலிபர் அரங்கப் பணிகள் பாதிக்கப்படுகின்றன. மாநில கமிட்டியின் அமைப்பிலும் இந்தத் தன்மையை பார்க்க முடிகிறது. மாநில மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பாலான கமிட்டி உறுப்பினர்கள் தற்சமயம் வேறு பொறுப்புகளில் இருக்கிறார்கள். இதே நிலை பல மாவட்ட கமிட்டிகளிலும் இருந்து வருகிறது. சில இடைக் கமிட்டிகளிலும் உள்ளது.

கட்சியின் தேவைகளுக்கு பல தோழர்கள் இவ்வாறு மாற்றப்படுவது தவிர்க்க முடியாதென்பது உண்மை ஆயினும், பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைத் திரட்டி, அவர்களின் அரசியல்—சமூக உணர்வுகளை உயர்த்துவதில் முக்கியபாத்திரம் இந்த அமைப்புக்கு உள்ளது என்பதையும் நாம் கணக்கில் எடுக்கவேண்டும். வளர்ந்து வரும் நெருக்கடியினால் பாதிக்கப்படும் ஒரு முக்கிய மக்கள் பகுதியாக வாலிபர்கள் இருப்பதையும், நாம் பார்க்க வேண்டும். அதிதீவிரவாதிகள் கிறிஸ்தவ, 'இடதுசாரி'கள், ஆர்.எஸ் எஸ் போன்ற பல்வேறு மத பிரச்சார அமைப்புகள், அனைத்து அரசியல் சக்திகள்— எல்லோரும் வாலிபர்களைத் திரட்டுவது அல்லது அவர்களுக்கு மத்தியில் பிற்போக்கு கருத்துகளை மும்முரமாகப் பரப்புவது என்ற முயற்சியில் இடைவிடாமல் கவனம் செலுத்துகிறார்கள். இந்த நிலையில் இந்த அரங்கில் நமது கவனத்தை சற்றும் தளரவிடலாகாது என்பது மட்டுமல்ல; நாம் அதிகமான அக்கறை செலுத்தவும் வேண்டியுள்ளது.

1. ஆகவே, வாலிபர் அரங்கத்தில் பணியாற்றும் தோழர்களை வேறு பொறுப்புக்களுக்கு மாற்றும் போது, இவ்வரங்கத்தின் பணிகள் பாதிக்கப்படாமல் இருக்க, மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இந்த அரங்கில் பணியாற்றும் தோழர்கள் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளாவது நீடித்து செயல்பட மாவட்ட கமிட்டிகள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

2. இந்த அரங்கில், அரசியல்-கருத்து பிரச்சாரத்திற்கு தனி முக்கியத்துவம் உண்டு. ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், பல்வேறு தீய சக்திகளின் கருத்துப்பிரச்சாரம் இங்கு நடைபெறுகிறது. இந்த நிலைமையில் இந்த அரங்கத்தில் கட்சியின் தத்துவார்த்த அரசியல் கொள்கை நிலைகளை எடுத்து செல்வதற்கான வகுப்புக்களையும் வாலிபர் சங்கத்தின் பேரவை கூட்டங்கள், கருத்தரங்கங்கள் போன்றவற்றையும் நாம் முறையாக மேலும் அதிகமாக பயன்படுத்தவேண்டும்.

3. ஜனநாயக வாலிபர் சங்கம் ஒரு வெகுஜன ஸ்தாபனம் என்ற முறையில் பல்வேறு அரசியல் கருத்துக்களை கொண்டவர்களையும், ஆகர்ஷிக்கக் கூடிய அமைப்பாக உருவாக்க வேண்டும் என்ற உணர்வுபலஹீனமாகவே உள்ளது. இந்நிலை மாறவேண்டும். ஜனநாயக ஸ்தாபன வடிவங்களையும், செயல்முறைகளையும் பின்

பற்றி இவ்வியக்கத்தை வளர்க்க நமது கமிட்டிகள் அதிக அக்கறை செலுத்த வேண்டியுள்ளது.

4. புதிய தலைமுறையை நமது பாதைக்கு கொண்டு வருவது அடிப்படையான அரசியல் கடமை என்ற உணர்வு கட்சியின் எல்லா மட்டங்களிலும் ஏற்படவேண்டும்.

பெண்கள் அரங்கம்

195. ஜனநாயக மாதர் சங்கம் இன்று தமிழ்நாட்டில் முக்கியமானதொரு அமைப்பாக வளர்ந்து வருகிறது. பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மட்டுமின்றி, அனைத்துப் பகுதி மக்களையும் பாதிக்கும் பிரச்சினைகளிலும் தொடர்ச்சியாக இயக்கங்களையும், போராட்டங்களையும் நடத்தி வருகிறது. கட்சியின் கடந்த மாநில மாநாட்டிற்கு பின் முன்னேற்றம் உண்டு. நமது அமைப்புகளைச் சுற்றி நின்ற நிலைமையிலிருந்து நமக்கு அப்பாலுள்ள பெண்கள் பகுதியிலும் ஓரளவு சென்றுள்ளது. மாதர் சங்கத்தின் நடவடிக்கைகளை பூர்ஷ்வா ஏடுகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.

196. நடைபெற்றுள்ள முக்கிய இயக்கங்கள்: *1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18—வேலை வாய்ப்பு நாளாக அனுஷ்டிக்கும்படி அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கம் அறைகூவல் விடுத்தது. எல்லா மாவட்டங்களிலும் திட்டமிட்டு சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. 5018 பெண்கள் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர். 51 ஆயிரம் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப் பட்டன.*

197. 1983 மார்ச் 15 பேரணி: *மாநிலம் முழுவதும் இருந்துதிரண்டு வந்து விலைவாசி உயர்வு, குடிதண்ணீர் போன்ற இன்னும் இதர கோரிக்கைகளை முன் வைத்து, சென்னை நகரில் கோட்டையைநோக்கி சென்ற பெண்களின் பேரணி முக்கியமான நிகழ்ச்சியாகும்.*

இக்கோரிக்கைகளை முன்வைத்து ஒருமாத காலம் மாவட்டமெங்கும் கையெழுத்து பிரச்சார இயக்கம் நடைபெற்றது. இரண்டரை லட்சம் மக்களிடம் கையெழுத்து பெறப்பட்டது.

தென்னாற்காடு மாவட்டம் தவிர்த்து எல்லா மாவட்டங்களிலும் இதற்கான தயாரிப்புகள் நடத்தப்பட்டன. 328 பகுதிகளில் தெரு முனைக் கூட்டங்கள், ஒரு லட்சம் துண்டுப் பிரசுரங்கள், 3000 போஸ்டர்கள் கொண்டு வரப்பட்டன. பேரணியில் 3203 பெண்கள் பங்கு தொண்டனர்.

198. பேரணி செல்கையில் குறுக்கிட்டு எம்ஜிஆர் மனுவை பெற்றுக்கொள்ளமுயன்றார். மாதர்சங்கத் தலைவர்கள்மனுவை அவரிடம் கொடுக்காமல் தவிர்த்தும், ஊர்வலத்தை கலைக்க மறுத்தும் கோட்டை வரை ஊர்வலம் சென்றது, பெரும்பாலான பத்திரிக்கைகளில் முதல் பக்கத்தில் பிரசுரமாயின. டி வி.யிலும் நல்ல முறையில் காட்டப்பட்டது. சென்னை நகர மக்களை கடுமையாக பாதித்த குடிதண்ணீர் பிரச்னைக்கு கிருஷ்ணா நீர் கொண்டு வருதல், குழாய் கிணறுகள் ஏற்பாடு, 20 கிலோ அரிசி, வரதட்சிணை கொடுமை ஆகியவை குறித்த கோஷங்கள். பெண்களையும், பொது மக்களையும் பெரிதும் கவர்ந்தன. பேரணியின் வீச்சினால் பெண்களிடம் ஜனநாயக மாதர் சங்கம் அறிமுகமாகியது. கட்சியின் சென்னை மாவட்டக் குழுவும், நமது பல்வேறு அமைப்புகளும் ஏற்பாடுகளை செய்து உதவின. மாவட்டங்களில் இன்னும் கூடுதலாக கவனம் செலுத்தியிருந்தால் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களை பேரணிக்கு கொண்டு வந்திருக்கலாம்.

199. மத்திய—மாநில பட்ஜெட் வரிகளை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களும், தர்ணாக்களும் நடத்தப்பட்டுள்ளன. விற்பனை வரியை உயர்த்தும் பேரால் குழந்தைகள் உணவின் மீது மாநில அரசு வரிப்போட்டு விலை உயர்த்தியதைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ராஜீவ் காந்தியின் பட்ஜைட் வரிகளின் அபாயத்தை விளக்கி 1985 ஏப்ரல் 21—ந்தேதி பெரும்பாலான மாவட்டங்களில் மைக் மூலம் தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் விரிவாக நடத்தப்பட்டுள்ளன.

200. குடிதண்ணீர்ப் பிரச்சனையில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் காலிப்பானைகள் எடுத்துச் சென்று உடைக்கும் ஊர்வலங்கள் நடைபெற்றுள்ளன. 1984 ஏப்ரல் 23—ந்தேதி கழிப்பறை வசதி கோரி மாநில முழுவதும் எல்லா மாவட்டங்களிலும் தர்ணா நடைபெற்றது. சில இடங்களில் உண்ணாவிரதமும் நடந்

தது. இவற்றில் 3210 பெண்கள் பங்கெடுத்தனர். 46 ஆயிரம் துண்டு பிரசுரம் வெளியிடப்பட்டது. ஸ்தலப்பிரச்சனைகளில் தொடர்ச்சியாக பல இயக்கங்கள் எல்லா மாவட்டங்களிலும் நடத்தப்படுகின்றன.

201. 1984 ஜூன் 11—ந்தேதி பள்ளி, கல்லூரிகளில் நன்கொடை ஏற்பாட்டை எதிர்த்தும், நர்சரி பள்ளிகளை அரசு முறைப்படுத்த வேண்டுமென கோரியும் கல்வி அதிகாரிகள் அலுவலகம் முன் மாநில ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. 3508 பெண்கள் பங்கு கொண்டனர்.

202. 1984 ஜூலை 30 ந்தேதியன்று சத்துணவு திட்டத்தில் உள்ள முறைகேடுகளை கண்டித்தும், கண்காணிப்புக்குழு அமைக்க வேண்டுமென்றும், ஊழியர்களுக்கு கூடுதல் ஊதியம் வழங்கி அரசு ஊழியர்களாக்க வேணடும் என்றும் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. 68 பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்கள் முன் 5285 பெண்கள் பங்கு பெற்றனர். இக்கோரிக்கைகள் கொண்ட மகஜரில் 2½ லட்சம் மக்களிடம் கையெழுத்து வாங்கி இத்துறை அமைச்சரிடம் வழங்கப்பட்டது.

203. 1984 ஆகஸ்ட் 14 அன்று மாநிலம் தழுவிய மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. 20 கிலோ அரிசிகோரியும், ரேஷன் கடை முறைகேடுகளைக் கண்டித்தும், தேவைப்பண்டங்கள் மலிவு விலையில் தரக்கோரியும் இந்த மறியல் நடைபெற்றது. எல்லா மாவட்டங்களிலும் நடைபெற்ற மறியலில் 3818 பெண்கள் கைது செய்யப்பட்டனர். இதற்காக 3 தினங்கள் மைக்பிரச்சாரம் நடத்தப்பட்டது 62 ஆயிரம் கோரிக்கை விளக்க துண்டு பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

204 பெண்கள் மீதான கொடுமைகளை எதிர்த்து தொடர்ச்சியான பல இயக்கங்கள் நடத்தப்பட்டுள்ளன. இன்று நமது மாதர் அமைப்பை நோக்கி-பாதிக்கப்பட்ட பெண்களும, அவர் தம் பெற்றோர்களும் தினசரி வருவது அதிகரித்து வருகிறது. சென்னையில் வாரம் ஒருநாள் நடைபெறும் சந்திப்பில் சட்டம் மற்றும் பல்வேறு உதவிகள் கோரும் பெண்களின் கூட்டமும் அதிகரித்து வருகிறது. சில வழக்கறிஞர்களும் நமது இயக்கப் பெண்களும் பங்குகொண்டு உதவி வருகின்றனர். இதுவரை 200க்கு மேற்பட்ட வழக்குகள் பதிவாகி உள்ளன. மாதர் இயக்கத்தில் மற்ற வேலை

களுக்கு பாதிப்பில்லாது, இதற்கு தனியாக ஒரு ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது

205. இந்து திருமணச் சட்டத்தில் விவாகரத்து குறித்து இந்திய அரசு கொண்டுவந்த திருத்த மசோதா, கிறிஸ்தவ, முஸ்லீம் பெண்களுக்கான திருமணச் சட்டங்கள், காமன் சிவில் கோடு ஆகியவை குறித்து தனித்தனியே பல மாவட்டங்களில் பெண்களின் கருத்தரங்கு மற்றும் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. நம் இயக்கத்திற்கு அப்பாற்பட்ட பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பெண்களும் இதில்கலந்து கொண்டனர். கற்பழிப்பு சட்டத்தை திருத்தும் செலக்ட் கமிட்டி அனுப்பிய கேள்வித்தாள்களுக்கு மாவட்டங்களில் விவாதிக்கப்பட்டு ஆலோசனைகள் அனுப்பப்பட்டன. வரதட்சணை சட்டத்தை திருத்த அமைக்கப்பட்ட செலக்ட் கமிட்டியின் பரிந்துரைகளை 'எரிக்கப்படுகிறோம் எரிமலை வெடிக் கட்டும்' என்ற தலைப்பில் 60 ஆயிரம் பிரதிகள் அச்சிட்டு விற்கப்பட்டன 16 ஆயிரம் கார்டுகளில் 88 ஆயிரம் பெண்களிடம் கையெழுத்துப் பெற்று பாராளுமன்ற கூட்டுக் குழுவுக்கு அனுப்பினோம். வரதட்சணை தொடர்பான கொலைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் ஜனநாயக மாதர் சங்கத்தின் தலையீட்டால் குற்றவாளிகளுக்கு தண்டனையும் கிடைத்துள்ளது. பெண்களுக்காக இருக்கிற சட்டங்கள் பற்றி பெண்களும்-சட்டமும் என்ற பிரசுரம பெண்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

206. மார்ச். 8 சர்வதேசப் பெண்கள் தினம் ஆண்டுதோறும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. மனித குலத்தைக் காப்போம் என்ற பிரசுரம் 45 ஆயிரம் பிரதிகள் வெளியிடப்பட்டது. இதுதவிர மார்ச் 8 அன்று அணிவதற்காக கோஷங்கள் பொறித்த 20 ஆயிரம் பேட்ஜுகள் 57 ஆயிரம் துண்டு பிரசுரங்கள் அச்சிடப்பட்டன. நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் 7321 பெண்கள் கலந்து கொண்டனர். அமெரிக்க யுத்த வெறியன் ரீகனின் கொடும்பாவியை ஊர்வலமாக இழுத்துச் சென்று 52 இடங்களில் தீயிட்டுக் கொளுத்தினர்.

207. 1985ம் ஆண்டு மார்ச்7ந் தேதி நாட்டு ஒற்றுமை தினமாகவும், 8ந் தேதி பெணகள் உரிமை தினமாகவும் நடத்தப்பட்டது. 7ந் தேதியன்று பெரும்பாலான மாவட்டங்களில் நகரம், கிராமப் பகுதிகளில் மைக் மூலம் 84 பகுதிகளில் தெருமுனை பிரச்சாரக் கூட்

டங்கள் நடத்தப்பட்டன. பெண்களே பேசுவதால் மக்கள் ஆர்வத்துடன் பிரச்சாரத்தை கேட்டனர். பெண்கள் சம்பந்தமான 9கோரிக்கைகளை முன்வைத்து 46 ஆயிரம் துண்டு பிரசுரமும், 31,000 போஸ்டர்களும் அச்சிடப்பட்டன. இக்கோரிக்கைகள் அடிப்படையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 6180 பெண்கள் பங்கு பெற்றனர்.

208. சமீபத்தில் நடந்த சட்டமன்ற கூட்டத்தின் போது, சமூகநலத்துறை மானியக் கோரிக்கைகளின் மீது நம் தோழர்கள் பேசினார்கள். நம் தோழர்கள் பேசிய பேச்சுக் குறிப்புகளை ஜெராக்ஸ் பிரதி எடுத்து இதர மாதர் அமைப்புகளுக்கும அனுப்பி வைக்கப்பட்டது.

209. **ஜூன்-1 சர்வதேச குழந்தைகள் தினம்** தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது. சிஐடியு நிதி உதவுவது, ஜனநாயக மாதர் சங்கம் பெண்களையும், குழந்தைகளையும் திரட்டுவது என்ற நிலையில் சில மாவட்டங்களில் நடைபெற்றன. தொழிலாளிகள் மத்தியில் இப்பிரச்சனையில் ஆர்வத்தை ஊட்ட வேண்டும். சி ஐ டி.யு அமைப்புக்கள் இந்த இபக்கத்தில் கவனம் செலுத்தாத நிலையும் இருக்கின்றது. இதை மாற்ற வேண்டும்.

210. **ஆபாச திரைப்பட விளம்பரம்** போன்றவற்றிற்கு எதிராக தார்பூசும் இயக்கம் திருச்சி, திண்டுக்கல், கோவை போன்ற நகரங்களில் வாலிபர் சங்கத்துடனும் சேர்ந்து நடத்தப்பட்டது. இதற்கு மக்களின் வரவேற்பும் கிடைத்தது. இத்தகைய விளம்பரத்திற்கான காரணகர்த்தாக்கள் அனைவரையும் கைது செய்து நடவடிக்கை எடுக்கக் கோரும் அச்சிட்ட 3100 கார்டுகளில் 28ஆயிரம் பெண்களிடம் கையெழுத்து பெற்று அனுப்பப்பட்டது

211. **சோசலிச நாட்டு பிரதிநிதிகளுக்கு வரவேற்பு:** 1983 டிசம்பரில் ஏஐடபிள்யூசி என்ற அகில இந்திய அமைப்பின் 52—வது மாநாடு திருச்சியில் கூடியது. இதில் கலந்து கொள்ள வந்திருந்த சோவியத் யூனியன், சீனு, யுகோஸ்லாவியா மாதா இயக்கத் தலைவர்களுக்கு நமது ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பில திருச்சி நகரில் வரவேற்பு அளித்துப் பரிசுகளும் வழங்கப்பட்டன

212. ஆதரவு இயக்கங்கள்: 1982 ஜனவரி 19ல் ஒரு நாள் தொழிலாளிகள் நடத்திய பொதுவேலை நிறுத்தத்தின் போது அதற்கு ஆதரவாக ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பில் 26 ஆயிரம் துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. நெல்லிக்குப்பத்தில் கரும்பு ஏற்றி வந்த டிராக்டர்கள் முன்பு நடைபெற்ற சாலை மறிப்பில் ஈடுபட்டு 50 பெண்கள் வரை கைது செய்யப்பட்டனர். சேலம் குமாரபாளையம்— சுந்தரம் ஸ்பின்னிங் மில்லில் 600 பெண்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்தும் திருச்சி சிம்கோ மீட்டரில் 60 பெண்கள் உட்பட 340 தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்கியதை எதிர்த்தும், பாண்டிச்சேரி ரோடியர் மில்லை திறக்கக்கோரும் போராட்டத்திலும் ஜனநாயக மாதர் சங்கம் பங்கு கொண்டது; கைத்தறி சட்டப் பாதுகாப்புக் கோரி தொழிற் சங்கங்கள் நடத்திய போராட்டங்களில் மாதர் சங்கப் பெண்கள் கணிசமாக கலந்து கொண்டனர். சணல் ஆலைகளைத் தேசிய மயமாக்கக்கோரி 1984 மார்ச்சில் தொழிற்சங்கங்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் ஜனநாயக மாதர் சங்கமும் கலந்துகொண்டது. விவசாயிகள், விவசாயத்தொழிலாளிகள் வாலிபர் மாணவர் இயக்கங்களுக்கு, போராட்டங்களுக்கு ஜனநாயக மாதர் சங்கம் ஆதரவு தந்துள்ளது.

213. தமிழகத்தில் உள்ள மற்ற பல மாதர் அமைப்புகளுடன் பொதுவான பிரச்னைகளில் கூட்டு நடவடிக்கை எடுப்பதென்பது பெரிய அளவில் நடைபெறவில்லை. என் எப் ஐ டபிள்யூ உடன் கூட்டு நடவடிக்கைக்கு நாம் முயற்சி எடுக்கிறோம் மதுரை, சென்னை, கோவை, பாண்டியில் ஸ்தல அளவில் சில நடந்துள்ளன. அவர்கள் பக்கம் தட்டிக்கழிக்கும் மனப் போக்கும், நம்முடன் சேருவதால் அவர்களுக்கு லாபமில்லை என்ற எண்ணமும் இருக்கிறது. இருப்பினும், நமது முயற்சி தொடர வேண்டும். இது தவிர, ஜாயிண்ட் ஆக்ஷன் கமிட்டி போன்ற அமைப்புகளுடன் அவ்வப்போது வரும் பிரச்னைகளில் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. கூட்டு ஏற்பாடுகள் சில நடப்பதுண்டு. திராவிட கழகத்திற்குப் பின்னால் உள்ள கணிசமான மாதர்களை வென்றெடுப்பதில் நமது முயற்சி தேவை. ஒரு சில இடங்களில் ஸ்தல பிரச்சனைகள் சம்பந்தமான இயக்கங்களுக்கு அவர்கள் வருவதுண்டு. கூட்டு இயக்கங்களுக்கு நாம் இன்னும் கூடுதலான முனை முயற்சியை எடுத்துச் செல்ல வேண்டும்.

214. கிறிஸ்தவ மெஷினரிகள் உதவியுடன்செயல்படும் மாதர் அமைப்புக்கள் சில வடஆற்காடு, மதுரை,முகவை,நெல்லை, குமரி மாவட்டங்களில் தமது வேலைகளைத் தீவிரப்படுத்தி வருகின்றன. குறிப்பாக நமது கோஷங்களையே முன் வைத்து பெண்களிடம் குழப்பத்தையும் ஏற்படுத்துகின்றன. வறுமையில் உழலும் பெண்களுக்கு பொருளாதார உதவியும் தரப்படுகிறது. இந்த அமைப்புக்களிடம் பணப்புழக்கம் தாராளமாகவே இருக்கிறது. மாத ஊதியம் கொடுத்து பல படித்த பெண்களை முழுநேரப் பணியில் ஈடுபடுத்துகின்றனர். நமது வளர்ச்சியை சீர்குலைக்க இந்த அமைப்புகள் முயல்கின்றன

215. அரசியல் இயக்கங்களில் பெண்கள் பங்கேற்பு: 1982ல் கட்சி நடத்திய மக்கள்கோரிக்கைப் பயணம், 83 மே-யில் நடைபெற்ற ஜனநாயக பாதுகாப்பணி மறியல், 83 டிசம்பர் மாதம் நடைபெற்ற 14 கட்சிகள் நடத்திய மறியல், 1984ஆகஸ்ட் மாதம் 14 கட்சிகள் நடத்திய மறியல் போன்ற போராட்டங்களில் பெண்கள் பங்கேற்றனர். மறியலில் சுமார் 2500 பேர் கைதாயினர்.

அகில இந்திய எதிர்க்கட்சிகளின் கல்கத்தா மாநாட்டின் முடிவினை ஒட்டி நடைபெற்ற பிரச்சார இயக்கம், 84 ஆகஸ்டில் மதுரையில் நடைபெற்ற கட்சியின் அரசியல் மாநாடு போன்ற இயக்கங்களில் பங்கு கொண்டனர்.

இந்திரா கொலையை ஒட்டி டில்லியில் பாதிப்புக்குள்ளான சீக்கிய மக்களின் உதவி நிதிக்கு ரூ.4000 வசூலித்து அனுப்பப்பட்டது.

மார்க்ஸ் நூற்றுண்டு விழா, பாரதியார் நூற்றுண்டு விழா ஆகியன கருத்தரங்குகள், பேச்சுப் போட்டிகள் மூலம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. 1983 ஜுனில் தேசிய ஒருமைப்பாடு கருத்தரங்கு ஐந்து மாவட்டங்களில் நடைபெற்றது.

1984 ஜனநாயக மாதர் சங்கத்தின் 4-வது மாநில மாநாடு:

216. புதுக்கோட்டையில் வெற்றிகரமாக நடைபெற்றது. மாதர் சங்க மாநிலக்குழு 3 மாதங்களுக்கு ஒருமுறை கூடுகிறது. 80சதவீதத்திற்கு மேல் உறுப்பினர்கள் பங்கெடுப்புஉண்டு.மாவட்

டங்களின் வேலைகளை எழுத்து மூலம் ரிபபோர்ட் அனுப்புவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். மாநிலக்குழு உறுப்பினர்களில் (41 பேர்) பெரும்பாலோர் மாவட்டங்களில் செயல்படுகின்றனர்.

217. **மாநில மையம்:** சிஐடியு அலுவலகத்திற்கு மாற்றப் பட்டதிலிருந்து செயலபடுவதில் அபிவிருத்தியும், முன்னேற்றமும் இருககிறது. கூட்டு செயல்பாடு காரணமாக வேலைகளைத் திட்ட மிட்டு முறையாகச் செய்ய முடிகிறது. மாவட்டங்களுக்குச் சென்று உதவ முடிகிறது. இயக்கங்களுக்குத் தேவையான துண்டு பிரசுர மேட்டர் மற்றும் மேடைப்பேச்சு, மைக் பிரச்சாரம் ஆகிய வற்றிற்கான பேச்சுக் குறிப்புகளும் தயாரித்து மாவட்டங்களுக்கு அனுப்பமுடிகிறது. அரசு அதிகாரிகள், அமைச்சர்களை பிரச்சனைக ளின் மீது சென்று சந்திப்பது, மாவட்டங்களுடன் உடனுக்குடன் கடிதத் தொடர்புகள் போன்றவற்றைச் செய்யமுடிகிறது. வேலை கள் அதிகரித்து வரும் நிலையில் குறைவான மையத் தோழர்களுக்கு வேலைப்பளு ஏற்படுவதால், பல விஷயங்களில் போதிய கவனம் செலுத்த முடியாமலும் போவதுண்டு.

218. பெரும்பாலான மாவட்டங்களில் மைய செயல்பாடு முறையாக இல்லை. சென்னை, திருச்சியில் மையசெயல்பாடு உண்டு. தஞ்சை மாவட்டத்தில் இயக்க வலுவுக்கு ஈடு கொடுக்கும் ஊழி யர்கள் இல்லாத கவலை தரும் நிலைமை மாற்றப்பட வேண்டும்.

219. வளர்ந்து வரும் ஊழியர்களை பயன்படுத்த வேண்டும். மாநிலத்தில் 14 பெண்கள் வரை அரசியல் மேடைகளில் பேசும் திறமை பெற்று உள்ளனர். அவர்களை பொதுக் கூட்டங்களில் பேச ஊக்குவிக்க வேண்டும்.

220. மாதர் சங்க உறுப்பினர் சேர்ப்பில் சிறிது அபிவிருத்தி இருககிறது. ஏராளமான இயக்கங்கள் நடத்தப்பட்டு புதிய தொடர்புகள் கிடைத்து வரும் நிலையில் இப்போது உள்ள உறுப்பினர் எண்ணிக்கை இயக்கத்தின் வீச்சுக்குத் தக்க எண்ணிக்கை என்று கூற முடியாது. 11-வது மாநாட்டில் சுட்டிக்காட்டியுள்ளது போல உறுப்பினர்களில் ஏறத்தாழ சரி பாதியினராக தஞ்சை மாவட்டத்தின் விவசாயத் தொழிலாளர் பெண்கள் உள்ளனர். இங்கே விவசாய இயக்கத்துக்கு உறுப்பினர்

சேர்க்கும் போது மாதர் சங்கத்துக்கும் சேர்க்கப்படுகிறது. இங்கு விவசாய இயக்க வலுவின் காரணமாக மாதர் சங்க உறுப்பினர் களை கூடுதலாக சேர்க்க முடிகிறது. இப்படி சேர்க்கப்படும்போது. மாதர் இயக்கப் பெண்களும் செல்லவேண்டும் என்பதும், பெண் களின் பொதுவான பிரச்னைகளில் இந்த விவசாய வர்க்கப் பெண் களையும் கணிசமாகத் திரட்ட கவனம் செலுத்த வேண்டும் என் பதும் ஓரளவு நடைபெற்றிருக்கிறது. இதில் முன்னேற்றம் காண முயற்சி செய்யவேண்டும்.

221. உறுப்பினர் சேர்த்த பகுதிகளில் தொடர்பு கொண்டு அவர்களை ஸ்தாபனத்திற்குள் கொண்டு வருவதில் மாநிலம் முழு வதும் பலவீனமாகவே இருக்கிறோம். மாதர் சங்கக் கிளைகள் செயல்படச் செய்வதில் ஸ்தலகட்சிக் கிளைகள் முழுகவனத்தை செலுத்திட வேண்டும்.

222. ஒரு லட்சம் உறுப்பினர்களை சேர்ப்பது என்று மூன்று ஆண்டுகாலமாக திட்டமிடப்பட்டும் எட்டமுடியாதநிலையே நீடிக் கிறது. வாய்ப்புக்களை பயன்படுத்தி குறிப்பிட்ட மாதங்களை ஒதுக்கி கட்சியின் வழிகாட்டுதலுடன் இறங்கினால் இந்த நோட்டாளை முடிப்பது சாத்தியமே.

223. சிந்தனை என்ற மாத ஏட்டை இனி ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பில் கொண்டுவருவது என்ற முடிவையொட்டி இம்மாதம் மகளிர் சிந்தனை வெளிவந்துள்ளது. புதிய ஆசிரியர்குழு பத்திரிகையின் உள்ளடக்கம், விற்பனையை கூடுதலாக்குவது போன்ற ஏற்பாடுகளை திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறது.

224. மாதர் சங்க ஊழியர்களுக்கு அரசியல் வகுப்புகள்:

இந்திய அரசியல்-பொருளாதார நிலை ஓர் அறிமுகம்

பெண்கள் இயக்கத்தின் முன்னுள்ள பிரதானக் கடமை கள்.

பெண்ணடிமை நிலை - தோற்றமும் வளர்ச்சியும்

சோசலிச நாடுகளில் பெண்கள்

என்ற நான்கு பாடத் திட்டத்தில் 1984 செப்டம்பர், அக்டோபர், நவம்பர் ஆகிய மூன்று மாதங்களில் 16 மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான வகுப்புகள் (முகவை மாவட்டத்தில் இரு பகுதிகள்) இரண்டு தினங்கள் நடத்தப்பட்டன. 884 பெண்கள் பங்கு கொண்டனர். திருச்சியிலுள்ள ஆசிரியர்கள் ஒரு பகுதியிலும், சென்னை ஆசிரியர்கள் மற்றொரு பகுதியிலுமாக மொத்தம் 10 ஆசிரியர்கள் வகுப்புகளை நடத்தினர். சில குறைபாடுகள் ஏற்பட்டிருப்பினும் வகுப்புகள் வெற்றிகரமாகவே நடைபெற்றன. பல டி.சி.க்கள் நல்லமுறையில் ஏற்பாடுகள் செய்து உதவின. ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட முதல் வகுப்பு இது. அதோடு பெண்களே ஆசிரியர்களாக இருந்து நடத்தியது. வந்திருந்த பெண்கள் மத்தியில் நல்ல பிரதிபலிப்பை ஏற்படுத்தியது. வகுப்புகளில் இளம் பெண்களும், படித்த பெண்களும் கணிசமாக கலந்து குறிப்புகளும் எடுத்தனர். நடத்தப்பட்ட வகுப்புகள் குறித்து மாநில பிராக்ஷன் பரிசீலனை செய்தது.

225. மேலும் இந்த வகுப்புக்களின் பாடங்களை எளிதாக்கி தாலுகா, நகர மட்டங்களில் ஒரு நாள் வகுப்புகள் எடுப்பது என்ற அடிப்படையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இதற்காக மாவட்டங்களில் வகுப்பு எடுக்கும் தகுதி உள்ள பெண்களுக்கான பயிற்சி வகுப்பு இந்த ஆண்டு ஏப்ரலில் திருச்சியில் நடத்தப்பட்டது. இவர்களைக் கொண்டு இது வரை பல மாவட்டங்களில் 36 இடங்களில் வகுப்புகள் நடைபெற்றன. 1218 பெண்கள் கலந்து கொண்டுள்ளனர். ஊழியர்களின் பொது அறிவு வளரவும், சமுதாய மாற்றத்திற்கு புரட்சி தேவை என்பதைம், சோசலிச நாடுகளின்பெண்களின் நிலையையும்புரிந்துகொள்வதற்கும்இந்தவகுப்புகள் ஓரளவு உதவியுள்ளன. இருப்பினும் கிராமப்புறங்களில் படிப்பில்லாத பெண்களுக்கு, இந்தபாடத் திட்டம் முழுமையாக பயன்பட்டதாகக் கூற முடியாது. அவர்களுக்குப் புரியும் வகையில் வாழ்க்கை அனுபவங்களோடு ஒட்டிய பாடத்திட்டத்துடன் வகுப்புகள் நடத்தப்படுவது அவசியமாகும்.

226. வெளியிடப்பட்ட பிரசுரங்கள் :

1.	மாதர் சங்க அமைப்புகள்	விலை 40காசு	1000 பிரதிகள்
2.	மனித குலத்தை காப்போம் அணுயுத்தத்தை எதிர்ப்போம்	விலை 15காசு	40000 பிரதிகள்
3.	எரிக்கப்படுகிறோம் எரிமலை வெடிக்கட்டும்	விலை15காசு	6000 0பிரதிகள்
4.	பெண்களும் சட்டமும்	விலை 40 காசு	30000 பிரதிகள்
5.	பெண்கள் பத்தாண்டு (பிரதமருக்கு அளித்த மகஜர்)	விலை 25 காசு	10000 பிரதிகள்

இவற்றில் பெரும்பாலும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

227. மாதர் இயக்கத்தில் வளர்ந்து வரும் முன்னணி ஊழியர்களை கட்சிக்குள்கொண்டு வரும் முயற்சியில் சிறிது அபிவிருத்தி உண்டு என்றபோதிலும் வாய்ப்புக்களை பயன்படுத்தும் முனைப்பு இல்லை. கட்சிக் கமிட்டிகள் கூடுதல் முயற்சிஎடுத்தால் 1000 பெண்களையாவது கட்சியின் முழு உறுப்பினர்களாக்குவது சாத்தியமே. இன்று நம் மாநிலத்தில் கட்சி உறுப்பினர்களாக உள்ள பெண்களின் விவரம் இங்கு தரப்படுகிறது.

பி எம்: 50 சி எம்: 268 ஏ எம்: 314

228. மாதர் இயக்கத்திலிருந்து கட்சிக்குள் கொண்டு வரப்படும் பெண்களை எல்லா இடங்களிலும் தனிக்கிளையாக அமைத்து செயல்பட வைக்கவேண்டும். அவர்களது பங்கெடுப்புக்கும், வளர்ச்சிக்கும் அது உதவியாக இருக்கும். ஏற்கனவே இதுபோன்று சில மாவட்டங்களில் பெண்கள் கிளைகள் செயல்படுகின்றன.

229. மாதர் அரங்க பிராக்ஷன் அமைத்து செயல்படுவது என்று முடிவு செய்யப்பட்டது. பிராக்ஷனில் ஆறு உறுப்பினர்கள்

செயல்பட்டு வந்தனர். சென்ற ஆண்டு மே மாதத்தில் புதுக்கோட்டையில் நடைபெற்ற ஜனநாயக மாதர் சங்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 நிர்வாகிகளும், தற்போது பிராக்ஷன் உறுப்பினர்களாக செயல்பட்டு வருகின்றனர். இது 2 மாதத்திற்கு ஒரு முறை கூடுகிறது. தேவை ஏற்படுகையில் இடையிலும் கூடுகிறது. எந்தப் பிரச்னையாக இருப்பினும் பிராக்ஷனில் விவாதித்து பின்னரே வெகுஜன அமைப்புக்குக் கொண்டுபோவது என்பது நடைமுறைப படுத்தப்பட்டு வருகிறது.

230. 16 மாவட்டங்களில் மாதர் இயக்கத்தின் நிலைமை அதிலுள்ள பலவீனங்கள் இதை களைந்தெறிவது போன்றவைகள் சம்பந்தமாக 16 மாவட்டங்களிலும் விவாதித்து தயாரிக்கப்பட்ட ஸ்தாபன ரிப்போர்ட்டின் மீது சென்ற ஆண்டு செப்டம்பரில் மாநில பிராக்ஷன் விவாதித்தது. மாவட்டங்களில் மாதர் இயக்க வேலைகளை அபிவிருத்தி செய்யும் ஆலோசனைகளை மாநிலக்குழுவிற்கு அனுப்பி உள்ளது. மாநிலக்குழு ரிப்போர்ட்டினைப் பற்றி விவாதித்து முடிவு செய்ய வேண்டியுள்ளது.

231. மாவட்டங்களில் பிராக்ஷன்கள் செயல்படுகின்றன. இதில் மேலும் முன்னேற்றம் காண வேண்டும். மாதர் சங்க வேலைகள் நடைபெறுவதற்கான நிதி ஆதாரங்கள் பற்றியும் விவாதித்து வழிகாட்டவேண்டும்.

மாதர் இயக்கத்தைக் கட்டுவது என்பது கட்சியின் ஒட்டு மொத்தமான கடமையாகும் என்ற உணர்வுடன் நமது எதிர்கால பணிகள் அமையவேண்டும்.

மாணவர் அரங்கம்

232. கடந்த மாநாட்டிற்கு பின் மாணவர் அரங்கத்தில் நமது பணிகள் ஓரளவிற்கு முன்னேறியுள்ளன.

இந்திய மாணவர் சங்கத்தில் உறுப்பினர் எண்ணிக்கை 1981ல் 8,158—1982ல் 16,188— 1983ல் 13,658— 1984ல் 16,032 என்ற அளவில் இருந்தது. 1985ம் ஆண்டில் உறுப்பினர் பதிவு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 20,000க்கு மேல் பதிவு செய்யும் வாய்ப்பு உள்ளது. 1983—ம் ஆண்டில் நடக்கும்

காலத்தில் (ஜூலை—நவம்பர்) இலங்கைப் பிரச்சனை காரணமாகத் தொடர்ந்து கல்வி நிலையங்கள் மூடப்பட்டதால் பாதிப்பு ஏற்பட்டது. 1984ல் நவம்பர்—டிசம்பர் மாதங்களில் இந்திரா படுகொலை, பொதுத் தேர்தல் காரணமாக பதிவு இயக்கம் பாதிக்கப்பட்டது.

1983—84ம் ஆண்டுகளில் மாவட்ட மாநாடுகள் நடைபெற்றன. தற்சமயம் பெரியார், புதுக்கோட்டை தவிர எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட கமிட்டிகள் உள்ளன. மாநிலத்தில் ஏறத்தாழ 130 கல்வி நிலையங்களில் எஸ்எப்ஐ அமைப்பு உள்ளது. சுமார் 200 நிறுவனங்களில் எஸ்எப்ஐக்கு தொடர்புகளும் உள்ளன.

233. மாநில மையத்தில் 2 முழு நேர ஊழியர்களும், சென்னை, தென்னாற்காடு, செங்கற்பட்டு, மதுரை, நெல்லை ஆகிய மாவட்டங்களிலும் முழுநேர ஊழியர்கள் இருக்கிறார்கள். (ஆக7) திருச்சி மாவட்டத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் வரை ஒரு முழு நேர ஊழியர் இருந்தார். அவர் வேறு அரங்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். செங்கற்பட்டு மாவட்ட தோழர் கட்சியின் வேலைகளுக்கும் உதவ வேண்டி இருப்பதால் முழுமையாக மாணவர் அரங்கத்தில் பணியாற்ற முடிவதில்லை. கோவை மாவட்டத்தில் முழு நேர ஊழியராக நியமிக்கப்பட்டவர் தற்சமயம் கட்சி அலுவலக பணியை முழுமையாக செய்கிறார்.

ஏழு முழுநேர ஊழியர்கள் இவ்வரங்கத்தில் பணியாற்றும் நிலைமை ஒரு முன்னேற்றமே.

234. 1982ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சிதம்பரத்திலும், 1983ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பழநியிலும், 1984ம் ஆண்டு மார்ச் மாதத்தில் சென்னையிலும் மாநில மாநாடுகள் நடத்தப்பட்டன. சென்னை மாநாட்டில் ஏறத்தாழ 2000 மாணவர்கள் பங்கெடுத்த ஊர்வலம் சிறப்பு அம்சமாக இருந்தது. மாணவர்களின் உடனடிப் பிரச்னைகளுக்கான மாநில ரீதியான கிளர்ச்சிகள், இயக்கங்கள், ஸ்ட்ரைக் ஆகியவை திட்டமிட்டு நடத்துவதில் எஸ்எப்ஐ ஓரளவிற்கு முன்னேறியுள்ளது. ஐடிஐ மாணவர்களின் கிளர்ச்சி, பாலிடெக்னிக் மாணவர்களின் இயக்கம், 90% வருகை பதிவு இருந்தால் மட்டுமே உதவித்தொகை பெற முடியும் என்ற

அரசு உத்தரவிற்கு எதிரக பல மாவட்டங்களிலும் நடந்த ஸ்ட்ரைக்குகள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றில் எஸ்எப்ஐயின் முன்முயற்சியை மாணவர்கள் பார்த்தனர். 1985 ஆம் ஆண்டு ஜூலை 10ம் தேதியன்று மாநிலத்தில் பல கல்வி நிலையங்களிலும், கட்டாய நன்கொடை வசூலை எதிர்த்தும் மற்றும் மலிவு நோட்டு புத்தகங்கள் வழங்கக் கோரியும் நடைபெற்ற போராட்டம் ஓரள விற்கு வெற்றிகரமாகவும், பரவலாகவும் நடந்தது. குறிப்பிட்ட ஒரு பிரச்னையில் மாநில அளவில் திட்டமிட்ட இயக்கத்தையும், போராட்டத்தையும நடத்துவதற்கான முயற்சியில இது ஒரு சிறு முன்னேற்றம் என்று கூறலாம்

235. அண்மையில் மருந்துவக் கல்லூரி மாணவர்கள் மாநில அளவில் கட்டாய நன்கொடை வசூல அடிப்படையில் நடத்தப் படும் தனியாா மருத்துவக் கல்லூரிகளை அனுமதிக்கும், அரசின் கொள்கையை எதிர்த்து ஏறத்தாழ ஒன்னரை மாதக் காலம் போராடினார்கள். இப்போராட்டத்தை துவக்குவதிலும், அதற்கு ஆதாரமாக இயக்கம் நடத்துவதிலும் எஸ்.எப் ஐ. முக்கியமான பங்கு வகித்தது. கோரிக்கைகளுக்காக மாணவர்கள் நீண்ட நாட் கள் இதற்கு முன்பு மாநில அளவில் போராடியதில்லை. அந்த அள விற்கு பங்கேறபு, காலம், ஒற்றுமை ஆகிய விஷயங்களுக்கு இந்த போராட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆயினும், இதற்கு முன்பு ஸ்தாபன ரீதியாக திரட்டப்படாத காரணத்திலும் பல தரப்படடவர்களைக் கொண்ட தலைமை உருவாயின என்ற காரணத்திலும் இப்போராட்டத்தை முழுமையாக எஸ்.எப் ஐ. தலைமை தாங்கி நடத்த முடியவில்லை. இருப்பினும, இப்போராட் டத்தின் மூலம எஸ்.எப் ஐக்கு மருத்துவக் கல்லூரி மாணவர் மத்தியில் மதிப்பு ஏற்பட்டுளளது. சில தொடர்புகளும் கிடைத் துள்ளன.

பொதுவாக, இந்தக் காலத்தில் எஸ்எப்ஐ ஸ்தாபனத்தின் பெயர் பரவலாக மாநிலத்தில் அறிமுகமாகியுள்ளது. கோரிக்கை களுக்காக தொடர்ந்து போராடும் அமைப்பு எஸ்எப்ஐ என்ற எண்ணமும் மாணவர்கள் மத்தியில் வளரத் துவங்கியுள்ளது.

236. கூட்டு இயக்கங்கள் நடத்துவதற்கு பல முயற்சிகள் நடைபெற்றபோதிலும், ஏஐஎஸ்எப் தவிர வேறு எந்த அமைப்பும்

முறையாக செயல்படாத காரணத்தினுல், இம்முயற்சிகள் பலன் அளிக்கவில்லே. தி.மு.க., அ.தி.மு.க., காமராஜ் காங்கிரஸ் போன்ற கட்சிகளின் மாணவர் அமைப்புக்கள் கோரிக்கைகளே பற்றி கவலேப்படுவதில்லே—வெறும் அரசியல் பிரச்சார அமைப்புக்களாகவே இருக்கின்றன. ஏஐஎஸ்எப் சில இடங்களில் செயல்படுகின்றது. ஆனுல் நம்முடன் இணேந்து வேலே செய்யத் தயாரில்லே.

237. வகுப்புக்கள்: *மாணவர்கள் அரங்கத்தில் உள்ள ஊழியர்களுக்கு மாவட்ட அளவிலும், ஸ்தல அளவிலும் வகுப்புக்கள் 1983, 1984-ல் நடந்துள்ளன. 1982-ம் ஆண்டில் சிதம்பரத்தில் மாநாட்டுடன் இணேத்து ஏறத்தாழ 150 தோழர்களுக்கு வகுப்புக்கள் நடத்தப்பட்டது. 1984 ஜூலே மாதத்தில் மதுராந்தகத்தில் கட்சி சார்பாக அரசியல் வகுப்பு நடத்தப்பட்டது. 87 தோழர்கள் பங்கேற்றனர்.*

238. அரசியல் போக்குகள்: *இந்த அரங்கில் சமீப காலமாக தி.மு.க., அ.தி.மு.க., முன்பு இருந்ததை விட அதிக கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளன. அந்த அளவிற்கு காங்கிரஸ் கட்சி அக்கறை செலுத்த ஆரம்பிக்கவில்லே என்றே கூறலாம்.*

தங்களின் பொதுவான அரசியல் செல்வாக்கை இளைய தலேமுறையிடம் உறுதிப்படுத்துவதற்கு இதர கட்சிகள் முயற்சிக்கின்றன. ஆனுல், இக்கட்சிகளேவிட அதிகமாக மாணவர்கள் மத்தியில் இதர சீர்குலேவு சக்திகள் திட்டமிட்டு செயல்படுகின்றன.

ஆர்.எஸ்.எஸ், எல்லா மாவட்டங்களிலும் சில மையங்களில் திட்டமிட்டு செயல்படுகின்றது. கிறிஸ்தவ மிஷினரிகள், மற்றும் கிறிஸ்துவ 'இடதுசாரி' அமைப்புகள் இந்த அரங்கில் பல வடிவங்களிலும் கவனம் செலுத்தி வருகின்றன. முஸ்லீம் மத அடிபபடைவாத பிரச்சாரம் ஓரளவிற்கு நடைபெறுகின்றது.

நக்சலேட்டுகளின் பல்வேறு குழுக்கள், எஸ்.யு.சி.ஐ.யின் மாணவர் அமைப்பு, மக்கள் முன்னணி ஆகியவை எஸ்.எப்.ஐ.யையும், நமதுகட்சியையும் பற்றி அவதூறுப்பிரச்சாரம் செய்வதிலும் நமது அணிகளுடன் தொடர்பு கொண்டு அரசியல் குழப்பத்தை உண்டாக்க முயற்சிப்பதிலும், போலி தீவிரவாத பிரச்சாரத்தைச் செய்வதிலும் அதிகமாக ஈடுபட்டு வருகின்றன. இலங்கைப்

பிரச்சனையிலும் நமது அணிகளில் குழப்பத்தை உண்டாக்க தீவிர முயற்சிகள் நடந்தது.

இவ்வாறு சித்தாந்த ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் கருத்து மோதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இத்துறையில் வரும் எல்லாவிதமான சந்தேகங்கள், குழப்பங்கள், போலிதத்துவங்கள் ஆகியவற்றைச் சந்திக்கும் அளவிற்கு நமது ஊழியர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சி கொடுத்து தெளிவு ஏற்படுத்துவதன் மூலம் மட்டுமே நாம் இந்த சீர்குலைவு முயற்சிகளை முறியடிக்க முடியும். இந்த உணர்வு மாவட்டக் கமிட்டிகளுக்கு போதுமானதாக இல்லை.

மாணவர்கள் மத்தியிலும், கல்வி நிலையங்களிலும் வளர்க்கப்பட்டு வரும் சாதி உணர்வுகள் குறித்தும் நாம் அதிகமாக கவலைப்பட வேண்டியுள்ளது. இவற்றிற்கு எதிரான பிரச்சாரமும் நடைபெற வேண்டியுள்ளது.

239. **ஸ்தாபனம் பற்றி:** சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, திருச்சி, மதுரை, நெல்லை ஆகிய ஜி.கு க்கள் மட்டுமே மாணவர் அரங்கத்தினைப்பற்றி ஓரளவிற்கு கவனம் செலுத்துகின்றன. எஸ்எப்ஐ மூலமாக கிடைத்த சிறந்த ஊழியர்களை கட்சி உறுப்பினர்களாக சேர்ப்பதற்கான முயற்சிகள் பெரும்பாலான மாவட்டங்களில் இல்லை என்றே கூறலாம்.

அதே நேரத்தில், எஸ்எப்ஐயில் சேர்ந்தவர்கள் எல்லாம் முழுமையாக கட்சியை ஏற்றுக் கொண்டவர்கள் அல்ல என்பதை உணராமல், எஸ்எப்ஐ-யின் வெகுஜன அமைப்புத் தன்மையை உதாசீனப்படுத்தும் போக்குகள் காரணமாகவும் பாதிப்புக்கள் உள்ளன.

எஸ்எப்ஐ ஸ்தாபனத்தைக் கட்டுவதற்கான உதவி, மாணவர்களுக்கு தொடர்ச்சியான அரசியல் வகுப்புக்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகள், நல்ல ஊழியர்களை கட்சிக்குள் கொண்டு வருவதற்கான தனிமுயற்சி, ஆகிய விஷயங்களில் மாவட்ட கமிட்டிகள் அதிகமாக கவனம் செலுத்தவேண்டியுள்ளது

கலை இலக்கிய அரங்கம்

240. 1975 ஜூலையில் மதுரையில் நடந்த தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முதல் மாநாட்டின் போது இந்த அமைப்பில் 547 உறுப்பினர்களும், கோவையில் நடந்த இரண்டாவது மாநாட்டின் போது 994 உறுப்பினர்களும் சென்னையில் நடந்த மூன்றாவது மாநாட்டின் போது 1900 உறுப்பினர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த உறுப்பினர்களை வழி நடத்திச் செல்லும் வகையில் 14 மாவட்டக் குழுக்களும், அவைகளின் கீழ் 152 கிளைகளும் உள்ளன. இந்த அமைபபிற்கு 52 பேர் கொண்ட ஒரு மாநிலக்குழுவும், 17 பேர் கொண்ட ஒரு செயற்குழுவும் உண்டு.

241. சங்க உறுப்பினர்களின் தலைமையில் நடைபெறும் 17 நாடகக் குழுக்கள் உள்ளன. மதுரை, நெல்லை கட்சி மாவட்டக் குழுக்களின் சார்பில் நான்கு இசைக் குழுக்களும் உள்ளன. இவற்றின் நாடகங்கள் தொடர்ச்சியாக இல்லையெனினும் அங்குமிங்கும் நடத்தப்பட்டுள்ளன. நாடகங்களை நடத்திவரும் குழுக்களில் மதுரை பீப்பிள்ஸ் தியேட்டர்ஸ், மதுரை செம்மலர் கலைக்குழு. சென்னை கலைக்குழு, கோவில்பட்டி தர்சன நாடகக் குழு, திருப்பூர் கலைக்குழு, நெய்வேலி செஞ்சுடர் கலா மன்றம் ஆகியன குறிப்பிடத்தக்கவை. இசைக் குழுக்கள் அனைத்தும் செயல்படுகின்றன எழுத்தாளர் சங்க கிளைகளில் 20 கிளைகள் கையெழுத்து, தட்டச்சு ஏடுகளை வெளியிடுகின்றன.

242. முன்பு தஞ்சையில் நாடக விழா நடந்தது போலவே 1984 செப்டம்பரில் சென்னையில் இரண்டாவது நாடக விழாவும் நடந்தது. இதில் நமது கலைக் குழுக்களும், கோமல் சுவாமிநாதன் கலைக்குழுவும் கலந்துகொண்டன. நமது எழுத்தாளர் சங்க உறுப்பினர்கள் அல்லாத பல கலைஞர்களும், நாடக ஆசிரியர்களும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. சென்ற மூன்றரை ஆண்டு காலத்தில் பாரதி, பட்டுக்கோட்டை, பாரதிதாசன் விழாக்களும், கலைநிகழ்ச்சிகளும் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும நடத்தப்பட்டது. இத்துடன் எழுத்தாளர் சங்கம் சார்பில் பட்டுக்கோட்டை மலர் ஒன்று வெளியிடப்பட்டது. எழுத்தாளர் சங்கம் சார்பில் கலை இலக்கியம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

243. நமது வழிகாட்டுதலின்கீழ் நடைபெறும் இந்தக் கலை இலக்கிய அமைப்பு மாநில ரீதியில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. எனினும் படைப்புத் துறையில் நாம் இன்னும் பின்தங்கியே நிற்கிறோம். சென்ற ஓராண்டு காலமாக பெரும்பாலான எழுத்தாளர் சங்கக் கிளைகளும், மாவட்ட மையங்களும்முறையாக செயல்படவில்லை. எழுத்தாளர் அமைப்புக்குள்ளேயே சில தவறான போக்குகள் மேலோங்கிய தன் விளைவாகவும் சில மாவட்டங்களில் கலை இலக்கிய வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

244. பொதுவாகவே, தமிழக இலக்கியத் துறை தரமான படைப்புகளை வெளிக்கொணரவில்லை என்ற போதிலும, கூட பூர்ஷ்வா எழுத்தாளர்களின் கலை இலக்கியம்தான் நாட்டில் ஆதிக்கம் செலுத்துகிறது நமது எழுத்தாளர்களின் சில படைப்புகள் தரத்தில் பாராட்டத் தக்கவையாக இருந்த போதிலும், இவை ஒட்டுமொத்தமாக கலை இலக்கியத் துறையில் பெரும் செல்வாக்கை உண்டாக்கக்கூடிய நிலையில் இல்லை. இதற்கு காரணம்,

அ. நமது உறுப்பினர் எண்ணிக்கை 2000 ஆக இருந்தாலும் படைப்பிலக்கியம், கலைகளை உருவாக்குபவர் எண்ணிக்கை மிகக் குறைவானதே. பெரும்பாலான உறுப்பினர்கள் இலக்கிய ஆர்வலர்களாகவே உள்ளனர். நம்மில் ஒரு சிலர் மட்டுமே வெளிவட்டாரத்திலும் வரவேற்கப்படுபவர்களாக உள்ளனர். இவர்களது படைப்புகள் (டி செல்வராஜ், கு.சி.ப., போன்றவர்கள்) பல்கலை கழகங்களில் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

ஆ. படைப்புத்துறையில் இந்த பலவீனம் தொடர்ந்து நிலவுவதற்கான காரணம் நம் எழுத்தாளர்கள் மத்தியில் நிலவும் போதிய பயிற்சி இன்மையும் செக்டேரியன் போக்கும் தவறான இலக்கிய பார்வையுமாகும்

இ. கட்சியின் திட்டம்—நடைமுறைப் பிரச்சனைகள் குறித்து நம் கட்சி எடுக்கும் முடிவுகளை,அரசியல் தத்துவார்த்த துறைகளில் எடுக்கும் முடிவுகளை அறிந்து நன்கு புரிந்து தமது கலைஇலக்கியப் படைப்புகளில் பின்பற்ற வேண்டுமென்ற கடமையை மறந்து சிலர் செயல்பட்டனர்.

245 இப்படிப்பட்ட போக்குகளை எழுத்தாளர் சங்க மாநில அமைப்புக்குள் மட்டும் விமர்சனம் செய்து போக்கிவிடமுடியாது.

கட்சி உறுப்பினர்கள் என்ற முறையில் கட்சி அமைப்புக்குள் இவர்களை விமர்சனம் செய்து ஒழுங்குபடுத்துவதும் அவசியமாகிறது. கடந்த காலத்தில் இவ்வேலைகளில் போதுமான கவனத்தை செலு-த்த இயலவில்லை. மாநில ரீதியான கலை இலக்கியத்துறையில் உள்ள கட்சி உறுப்பினர்களில் முக்கியமான தோழர்களுக்கு முறையான அரசியல் விளக்கம் தருவதுடன், ஒவ்வொரு மாவட்டத்திலும் கலை இலக்கிய துறையிலுள்ளவர்களுக்கு கட்சிக் கொள்கைகளைப் பற்றிய விளக்கமும், அவர்களிடையே நடைபெறும் சர்ச்சைகளுக்கு சரியான வழிகாட்டுதல்களும் வழங்குவதில் கட்சியின் மாவட்ட குழுக்கள் கவனம் செலுத்தவேண்டும்.

246. நமது எழுத்தாளர் சங்க அமைப்புக்குப் போட்டியாக நம் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட சில நபர்கள், சிலஅமைப்புகளை நடத்த முயற்சிக்கின்றனர். இந்தச் சூழலில் நமது கலை இலக்கிய அமைப்புக்களை நடத்திச் செல்ல உறுதியான ஏற்பாடுகளும் தேவை. மாநில எழுத்தாளர் மையத்தில் எழுத்தாளர் சம்பந்தமான பிரச்சனைகளை கவனித்திட ஐந்துபேர் கொண்ட எழுத்தாளர் சங்க மையமும் உருவாக்கப்பட்டுள்ளது. மாநில கமிட்டியின் எழுத்தாளர் அரங்க உபகமிட்டி இந்த அரங்கப் பணிகளுக்கு வழிகாட்டுகிறது.

247. இந்த அரங்கில் நமக்குள்ள வாய்ப்புகளை முழுமையாக பயன்படுததவேண்டும். கலை இலக்கியத்துறையில் நமது கருத்துக்களையும், விமர்சனங்களையும் கருத்தரங்குகள், கவியரங்குகள் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் பிரச்சாரம் செய்வதுடன் நமது இயக்கங்களுக்கு பயன்படக்கூடிய கலைநிகழ்ச்சிகளை உருவாக்கித்தர நமது எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அளிக்கவேண்டும்.

தீக்கதிர் மற்றும் நமது ஏடுகள்

248. நமது நாளேடான தீக்கதிர் நமது கட்சியின் தத்துவார்த்த. அரசியல் கருத்துக்களையும் நமது இயக்கத்தையொட்டிய தேசிய, சர்வதேசிய செய்திகளையும் தாங்கி வருகிறது.

249. கட்சிப் பத்திரிகையை கட்சி அமைப்பாளன் என்றார் தோழர் லெனின். கட்சிக் கொள்கையை மக்களிடம்

கொண்டு செல்லவும் மக்களை அணி திரட்டவும் கட்சிப் பத்திரிகையை நல்லமுறையில் வெளியிடுவதும், அதனை விரிவான அளவில் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதும், நமது முக்கிய கடமையாகும். பத்திரிக்கையின் தரத்தை உயர்த்தவும், விற்பனையை அதிகரிக்கவும், அதனை வெளிக் கொண்டு வருவதில் அவ்வப்பொழுது எழும் பிரச்சனைகளை சமாளிக்கவும் மாநிலக்குழு தொடர்ந்து கவனம் செலுத்தியுள்ளது. இதற்கு உதவி செய்ய மாநிலக்குழுவில் ஒரு உபகமிட்டி தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. கடுமையான முயற்சிகளுக்குப்பின் தரத்திலும், விற்பனையிலும் சிறிது அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. இதனை மேலும் வளர்த்துச் செல்ல கட்சி முழுவதும் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்.

250 கடலூர் மாநாட்டிற்குப்பின் இரண்டாண்டு தீக்கதிர் விற்பனை பாதிக்கப்பட்டது. 1984 துவக்கத்தில் விற்பனை குறைந்தது. நிலுவைகள் ஏராளமாக இருந்தன. விற்பனையை உயர்த்த மாநிலக்குழு நடவடிக்கையில் இறங்கியது.

இதுபற்றி 1984 ஜனவரியில் முடிவு செய்தோம். பிப்ரவரியிலும், மார்ச்சிலும் விற்பனை இயக்கத்திற்கு தயாரிப்பு செய்து, மார்ச் 22 ஏ கே.ஜி. நினைவு தினத்தில் துவங்கி மே 23 எம்.ஆர்.வி. தினத்தில் பூர்த்தி செய்ய வேண்டுமென விற்பனை இயக்கத்தை திட்டமிட்டோம். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அதன் இயக்க சக்திக்கேற்ப கோட்டா கொடுத்தோம். விற்பனையை இரண்டு மடங்காக்குவது என்பது லட்சியம்.

251. மாநில அளவில் மாநில மையம் பொறுப்பு என்றும் மாவட்டங்களிலும், வட்டங்களிலும் செயலாளர்கள் பொறுப்பு என்றும் அந்தந்த கமிட்டிகளும் இதற்கு பொறுப்பு என்றாலும் செயலாளர்களுக்கு தனி பொறுப்பு உண்டு என்றும் தீக்கதிருக்கு மட்டுமல்ல, இதர ஏடுகளுக்கும், பிரசுரங்களுக்கும் இவர்கள் பொறுப்புஎன்றும் நிர்ணயித்தோம்.

கிளைக்கு ஒரு தீக்கதிர் என்றும் ஒரு கிளை குறைந்தபட்சம் ஐந்து பிரதிகளை விற்க வேண்டுமென்றும் விதித்தோம்.

புதிய இடங்களுக்கு தீக்கதிரைக் கொண்டு செல்லவும், விரிவாக தீக்கதிரை அறிமுகப்படுத்தவும், சிறப்பு விற்பனை இயக்

கங்களை ஆங்காங்கே நடத்த வேண்டும் என்றும் அறைகூவல் விட்டோம்.

252. மாநில-செயற்குழு தோழர்கள் மாவட்டங்களில் நடைபெற்ற கட்சி மகாசபைக் கூட்டங்களில் கலந்துகொண்டு தீக்கதிர் விற்பனை இயக்கத்தின் அவசியம் பற்றி சிறப்புரை ஆற்றினர்கள். மகாசபைக்கூட்டங்களில் சுமார் 6500 தோழர்கள் கலந்துகொண்டார்கள். வாசகர் வட்டக் கூட்டங்களும் நடத்தினோம்.

1984 ஜனவரியில் 5000-க்கு சற்று கூடுதலாக தீக்கதிர் அச்சிடப்பட்டது. ஏஜெண்சிகள் மூலமாக மட்டும் அப்போது விற்பனை 4848 பிரதிகள். மாவட்டங்களுக்கு மேலும் 5000 பிரதிகள் விற்க கோட்டா கொடுதது லட்சிய அளவை 10,000 ஆக்கினேம்

ஏப்ரல் மாதத்தில் முன்னேற்றம் கண்டோம். மார்ச் மத்தியில் 5600, ஏப்ரலில் இது 6400 பிரதிகளாக ஆகியது. புது ஏஜெண்சிகள் ஏற்பட்டன. பழைய ஏஜெண்சிகள் விற்பனையை அதிகாரித்தன. சந்தாவும் 100-க்கு மேல் உயர்ந்தது.

விற்பனை இயக்கத்தை மே மாதத்திலிருந்து ஜூன் இறுதி வரை நீடித்தோம். பிறகு கோட்டாவை பூர்த்தி செய்யாத மாவட்டங்கள் பூர்த்தி செய்யவும், பூர்த்தி செய்தவை மேலும் உயர்த்தவும் தொடர்ந்து விற்பனை இயக்கத்தை நடத்தும்படி மாவட்டக் குழுக்களை கேட்டுக் கொண்டோம்.

ஏஜென்சிகள் அதிகரித்தன. விற்பனையும் அவற்றின் மூலம் அதிகரித்தது. சந்தாவும் அதிகரித்தது. எல்லாம் சேர்ந்து 1984 நவம்பரில் 9000 பிரதிகளை கடந்தது. அது தேர்தல் சமயத்தில் 9500 வரை சென்றது. தேர்தல் முடிந்த பின் 8500க்கு குறைந்தது. தற்போது 7500.

253. அடுத்த தீக்கதிர், பிரசுர விற்பனை இயக்கத்தை 1985 மே மாதம் நடத்த முடிவு செய்தோம். பீபிள்ஸ் டெமாக்ரசி, மார்க்சிஸ்ட், லோகலஹர் போன்ற கட்சிப்பத்திரிகைகளுக்கும் கோட்டா எடுத்துக்கொண்டோம். மத்தியக்கமிட்டி பத்திரிகை, பிரசுர விற்பனை இயக்கத்தை மே, ஜூன் மாதத்தில் நடத்த முடிவு செய்து அறைகூவல் விட்டது. அதைத்தொடர்ந்து மே, ஜூன் இரண்டு மாதங்களில் நடத்த நாம் மீண்டும் முடிவு செய்தோம். சிறப்பு விற்பனை இயக்கத்தை சிறப்பாக நடத்த முடியவில்லை.

நமது பத்திரிகையைப் படிக்க வேண்டும், பரப்ப வேண்டுமென்ற உணர்வை கட்சி மாநில ரீதியில் எடுத்துக்கொண்ட தீவிர நடவடிக்கைகள் மூலம் கட்சி அணிகளுக்கு ஓரளவு கொண்டு செல்ல முடிந்துள்ளது. இதன் விளைவாக அதிக பாக்கியில் விழுந்து விட்ட ஏஜென்சிகளை புதுப்பித்து விடவேண்டும் என்ற உணர்வும், நமது பத்திரிகையை வாங்கும் நமது தோழர்கள் அதற்கான காசை கொடுக்க வேண்டுமென்ற உணர்வும் வளர்ந்துள்ளது என்பதை காணமுடிகிறது.

254 தீக்கதிர் பத்திரிகையை சிறந்த முறையில் வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளபபட்டன.

அ) தீக்கதிர் பற்றி மாநில செயற்குழு விவாதித்தது. அத்துடன் ஆசிரியர்குழு தோழர்களுடனும் நிர்வாகக்குழு தோழர்களுடனும் விவாதித்தது. கருத்துப் பத்திரிகை என்றமுறையில் எவ்வாறு செய்திகளைப் பயன்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. பெட்டிச் செய்திகள், துணுக்குச் செய்திகள், தலைவர்களின் கட்டுரைகள், கார்ட்டூன்கள், கேளவி பதில்கள் வெளியிடுவது என்று முடிவு செய்யப்பட்டது. அத்துடன், நமது அச்சு யந்திர நிலைமைக்குத் தக்கவாறு பணியாற்றும் நேரங்களும் நிச்சயிக்கப்பட்டன.

ஆ) ஆசிரியர் குழு வேலைகளுக்கு அத்தியாவசியமான செய்திக் களஞ்சியம் ஏற்படுத்தப்பட்டது. இதற்கான தோழர்களும் நியமிக்கப்பட்டனர். தீக்கதிர் ஆசிரியர் தோழர்களுக்கு கட்சியின் முடிவுகளை உடனுக்குடன் மாநில செயற்குழு உறுப்பினர்கள் ரிபபோர்ட் செய்யவேண்டும் இதுபோன்று பல்வேறு அரங்கங்கள் சம்பந்தப்பட்ட முடிவுகளை ரிப்போர்ட் செய்யவேண்டும் என்று முடிவு செய்து இப்போது அமுல்படுத்தப்பட்டுவருகிறது. கட்சியின் கருத்துக்களை ஒட்டி பத்திரிகையின் செய்திகளும், குறிப்புகளும் தலையங்கங்களும் அமைவதற்கு இது உதவிகரமானதும் அவசியமானதும் ஆகும்

255. இத்தகைய முயற்சிகளுக்கு பின் தீக்கதிர் உள்ளடக்கத்தில் அபிவிருத்தி ஏற்பட்டது. விற்பனையிலும ஓரளவு அபிவிருத்தி ஏற்பட்டது. தீக்கதிர் நிர்வாகத்தில் உள்ள பல பிரிவுகளைச்சேர்ந்த தொழிலாளர்கள் இணைப்புடன் செயலாற்றுகள். ஆசிரியர் குழு தோழர்கள் ஈடுபாடுடன் பணிகளை மேற்கொண்டனா.

மாநிலக்குழு உறுப்பினர்களின் கட்டுரைகள் பல இடம் பெற்றன. இவையாவும் அபிவிருத்திக்கு பெரிதும் உதவின. எடுத்த முடிவில் கேள்வி—பதில் பகுதி மட்டும் நம்மால் தொடர்ந்து நிறைவேற்ற முடியவில்லை.

256. 1982 ஏப்ரலில் பாரதி மலர், செப்டம்பரில் ஏ.பி.மலர், 83 ஏப்ரலில் மார்க்ஸ் மலர், 83 ஆகஸ்டில் எம்.ஆர்.வி மலர் ஆகியவற்றினை கொண்டு வந்துள்ளோம். தற்போதுமாநில மாநாட்டு மலரையும் கொண்டு வந்துள்ளோம்.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் புரட்சி சிறப்பிதழ், மேதின சிறப்பிதழ், அரசியல் மாநாட்டு சிறப்பிதழ, சுந்தரய்யா சிறப்பிதழ், பாசிசத்தின் மீதான வெற்றியின் 40—வது ஆண்டு விழா சிறப்பிதழ் ஆகியவைகளை தீக்கதிர் வெளியிட்டு வந்துள்ளது.

257. செம்மலர்: இது நமது கட்சியின் மாத சஞ்சிகை. கதைகள், கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் வருகின்றன. அநேகமாக பாடுபடும் அடித்தட்டு மக்கள் வாழ்வைச் சித்தரித்தே இதில் எழுதப்படுகின்றது. நடுத்தர மற்றும் சமுதாயத்திலுள்ள பல்வேறு பிரச்னைகள பற்றிய யதார்த்தத்தை பிரதிபலித்து சமூகக் கேடுகளுக்கு முற்றுப்புள்ளிவைக்கும் மறுமலர்ச்சி பற்றி பலர் எழுத வேண்டும். செம்மலரில் பலர் எழுதி, அறிமுகமாகி வேறு பத்திரிகைகளிலும் எழுதுகிறார்கள் செம்மலரில் எழுதித் தான் பலர் நற்சான்றிதழ்கள் பெற்றார்கள். விரிவான எழுத்தாளர்களை ஆகர்ஷிக்கும் ஏற்பாடு செம்மலருக்கும் தேவை — சிறு கதைப் போட்டி போன்றவை நடத்துவதும் அவசியம்

நமது தொழிலாளிகள், விவசாயிகள் மட்டுமல்ல, இளைஞர்கள்-மாதர்கள், நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோரையும் கவரக் கூடிய பல அம்சங்கள் இதில் உள்ளன. எனினும் மேலும் அபிவிருத்தி காணவேண்டும். இதன் தரத்தை உயர்த்தும் முயற்சி தொடர்கிறது. இதுவரை ஏழை மக்கள் தொடர்பான துன்பப்படும் மக்கள் சம்பந்தமான கதைகள், கவிதைகள், செய்திகள் வெளியிடப்பட்டன. சமுதாயத்தில் சகல தரப்பினரின் பிரச்னைகளைப் பற்றி நமது கண்ணோட்டத்துடன் எழுதப்படும் கட்டுரைகளும், கதைகளும், கவிதைகளும், துணுக்குகளும, விளக்கச் சித்தி

ரங்களும் இதர கலைப்படைப்புகளும் இதில் வெளிவர வேண்டும். இதன் தரத்தை உயர்த்துவதில் வாசகர்களின் விமர்சனங்கள் இடம்பெறச் செய்வது முக்கியமானது.

செம்மலர், தீக்கதிர் அச்சகத்திலேயே அச்சடிக்கப்படுகிறது. நிர்வாகமும தீக்கதிர் நிர்வாகமே. செம்மலர் அட்டையில் ஒரு சிறப்பான மாறுதல் செய்தோம். நல்ல வரவேற்பு. விற்பனையும் உயர்ந்துள்ளது, தற்போது 9300-பிரதிகள் விற்பனையாகிறது.

258. **பிரசுரங்கள்:** சுமார் 45 பிரசுரங்களை வெளியிட்டுள்ளோம். அதன் பட்டியல் அனுபந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

259. **விளம்பரங்கள்:** நமது தீக்கதிர், செம்மலர் பத்திரிகைகளுக்கு விளம்பரம் சேகரிக்கிறோம். ஆனால்போதிய அளவுவிளம்பரம் கிடைப்பதில்லை தொடர்ந்து அதிக அரசு விளம்பரங்கள் கிடைப்பதும் அபூர்வம். வர்த்தக ரீதியில் விளம்பரத்தை திரட்ட ஏற்பாடு தேவை. கட்டுப்படியாகும் அளவு விளம்பர விகிதத்தை உயர்த்துவது பற்றி ஆலோசித்து வருகிறோம்.

காகித விலை, இதர அச்சுச் செலவுகள் உயர்ந்ததால் தீக்கதிரின் விலையை 1984 ஆகஸ்டில்45 பைசாவிலிருந்து 50 பைசாவாக உயர்த்தியுள்ளோம். 1985ஆகஸ்டில் 60 பைசாவாக உயர்த்த வேண்டி வந்தது. செம்மலர் விலையை ரூபாய் ஒன்றிலிருந்து ரூ'.25 ஆகவும், தற்போது ரூ 1 50 ஆகவும் உயர்த்த வேண்டி வந்தது.

260. **நமது இயக்க சார்பு ஏடுகள்:** அரங்க வாரியாக இயக்கச் செய்திகளை வெளியிடும் நமது தலைமையிலுள்ள வெகுஜன அமைப்புகளின் ஏடுகள் பிரத்தியேகமாக வெளிவருகின்றன. சிஐடியு செய்தி, மின்கதிர், போக்குவரத்து தொழிலாளி. உழவன் உரிமை. இளைஞர் முழக்கம, மகளிர் சிந்தனை ஆகியவை தமிழில் வெளிவருகின்றன.

இவையெல்லாம் மாத ஏடுகள்தான் மத்தியதர வர்க்க அமைப்புகளின ஏடுகளும் வெளிவருகின்றன. ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான பிரதிகள் விற்கப்படுகின்றன. தீக்கதிர் கட்சியின் அதிகாரபூர்வமான நாளேடானதால் இத்தனைபத்திரிகைகளும் கொடுக்கும பிரதான விஷயங்களை உள்ளடக்கியதாக வெளிவர வேண்டும். வெகுஜனப்புரட்சிக் கட்சியாக மக்கள்தலைவனாக விழையும் இந்திய

தமிழகத்தில் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்)கட்சியின் போராயுதமாய் விளங்கும் தீக்கதிர் ஏடு, அனைத்து உழைக்கும் வர்க்கப் பகுதிகள், இதர பொதுமக்கள் ஆகிய அனைவரைப் பற்றிய செய்திகளையும் வெளியிட வேண்டும்.

261 சகலவிதமான செய்திகளும் அடங்கிய முழுமையான செய்தித் தாளாக வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் இப்போது நம்மிடம் இல்லை நவீன அச்சு இயந்திரமும் உடனுக்குடன் செய்திகளைபெறுவதற்கான வசதிகளும் இல்லாமல் ஒரு முழு அளவிலான செய்திப் பத்திரிகையை வெளியிட முடியாது. இப்போது நம்மிடம் உள்ள அச்சு இயந்திரம் பழுது பார்த்தாலும் அதிக நாள் பயன் படுத்தமுடியாத அளவுக்கு பழையதாகிவிட்டது. ஆகவே தீக்கதிர் செம்மலர் பத்திரிகைகளை தொடர்ந்து வெளியிட புதிய அச்சு இயந்திரம் வாங்குவது நம்முன் அவசரக் கடமையாக உள்ளது.

262 தீக்கதிர், செம்மலர் பத்திரிகைகளின் விற்பனையை அதிகரிக்கவும், மத்தியக் கமிட்டி வெளியிடும் பீப்பிள்ஸ் டெமாக்ரஸி, இந்தி லோக் லஹார், உருது லோக் லஹார் பத்திரிகைகளின் விற்பனையை அதிகரிக்கவும் நமது கட்சி கமிட்டிகளும், கிளைகளும் விசேஷ கவனம் செலுத்தவேண்டும். முதன்மையான அரசியல் கடமையாக இதனைக் கருத வேண்டும். நமது பத்திரிகைகளின் வினியோகமும், விற்பனையும் கட்சி அமைப்புகள் மூலமாகவே நடைபெறுகிறது. கட்சி அமைப்புகளின் அக்கறையையும் செயல் பாட்டையும் பொறுத்தே இதில் அபிவிருத்தி ஏற்பட முடியும். பத்திரிகையை அபிவிருத்தி செய்வதற்கான ஆலோசனைகளையும் விமர்சனங்களையும் கட்சி அமைப்புகள் தொடர்ந்து அனுப்பி வைக்க வேண்டும்.

இதேபோல் கட்சி வெளியிடும் பிரசுரங்கள், இதர அடிப் படை மார்க்சீய நூல்களின் விற்பனையிலும் கட்சி அமைப்புகள் தொடர்ந்து ஈடுபடவேண்டும்

263. தீக்கதிர்: சென்னைப்பதிப்பு ஒன்றைக் கொண்டு வருவது பற்றி மாநிலக்குழு ஆய்வு செய்தது. 6000லிருந்து சுமார 7000பிரதிகள்தான் தீக்கதிர் விற்பனை ஆகிறது. காகிதவிலைஉயர்வு இதர அச்சுப் பொருட்களின்விலை உயர்வு ஆகியவற்றின் காரண மாக இப்போதே பெரும் சிரமத்திற்கு இடையில் பத்திரிக்கையை

நடத்திக் கொண்டிருக்கிறோம். இதற்குமேல் சென்னைப்பதிப்பைக் கொண்டுவந்தால் பணச்செலவு கூடுதலாகும் என்பதையும் பார்த்தோம். அத்துடன் சென்னைப்பதிப்பு கொண்டுவருவதற்கு உடனடியாக சுமார் ரூ3லட்சம் தேவைப்பட்டது. இந்நிலையில் சென்னைப் பதிப்பு கொண்டுவர வேண்டாம் என 1984 மே மாதத்தில் முடிவு செய்தோம்.

கட்சி ஸ்தாபனம்

264. கட்சி ஸ்தாபனம் எத்தகைய குறிக்கோளுடன் செயலாற்றிட வேண்டும் என்பதை சால்கியா அறிக்கை கீழ்கண்டவாறு சுட்டிக்காட்டுகிறது:

தொழிலாளி வர்க்க கட்சியின் பலம் பெருவாரியாக பெருக வேண்டும். கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையும், அவர்களது போர்க்குணமிக்க நடவடிக்கைகளும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள், நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு சக்திகள், ஏகபோக எதிர்ப்புச் சக்திகள், மற்றும் ஜனநாயக சக்திகள் ஆகியவற்றோடு அவர்கள் காணும் ஒற்றுமையும் பெருக வேண்டும். லட்சக்கணக்கான புதிய உறுப்பினர்களை தொழிற்சங்கங்களிலும், விவாய சங்கங்களிலும், உழைப்பாளி மக்களின் இதர அமைப்புகளிலும் சேர்த்தல், இந்த போர்க்குணமிக்க ஸ்தாபனங்களில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான தீவிர ஊழியர்களை கட்சி அணிக்குள் கொண்டு வருதல், கட்சியின் புதிய உறுப்பினர்களுக்கு கல்வி அளிப்பதற்கும், பழைய உறுப்பினர்களுக்கு மறுகல்வி அளிப்பதற்குமான இடைவிடாத ஓர் கல்வி முறையினை உருவாக்குதல், ஜனநாயக மத்தியத்துவம் எனும் புரட்சிகரக் கொள்கையின் அடிப்படையில் மேல்மட்டக் கட்சிக்குழுக்களுக்கும் கிழ்மட்டக் கட்சிக்குழுக்களுக்குமிடையிலும் மற்றும் ஒவ்வொரு கட்சிக் குழுவிற்குள்ளும் உறவுமுறையினை ஏற்படுத்துதல், எந்தவொரு உண்மையான இடதுசாரி ஜனநாயக அணியினை அமைப்பதற்கும் வேண்டிய தொழிலாளி வர்க்க தலைமைப் பாத்திரத்திற்கு இவையெல்லாம் அத்தியாவசிய தேவைகள் ஆகும்.

265. கடந்த நாலாண்டு கால ஸ்தாபன வேலைகளை இத்தகைய பார்வையுடன் நாம் பரிசீலித்திட வேண்டும். 11-வது மாநில மாநாட்டிற்கு பின் பல்வேறு வேலைகளைச் செய்

துள்ளோம். உழைப்பாளி மக்களின், வெகுஜனங்களின் இயக்கங்களுக்கும் போராட்டங்களுக்கும் தலைமை ஏற்றுநடத்தியுள்ளோம். வாலிபர்கள், பெண்கள் அமைப்புகளை மேலும் வலுப்படுத்தியுள்ளோம் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் இன்னும் இதர நடுத்தர வர்க்க அமைப்புகளின் இயக்கங்களுக்கு உறுதுணையாக நின்றுள்ளோம். மத்திய-மாநில அரசுகளின் எதேச்சாதிகார, மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்திடும் அரசியல் ரீதியான இயக்கங்களை தனியாகவும், கூட்டாகவும் நடத்துவதற்கான முயற்சிகளில் நாம் முன் நின்றுள்ளோம். இத்தகைய பணிகளின் காரணமாக நமது அரசியல் அந்தஸ்து உயர்ந்து உள்ளது. தத்துவார்த்த ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் கட்சி உறுதிப்பட்டுள்ளது. இருப்பினும் சால்க்கியா வழிகாட்டுதலின் அடிப்படையில் இந்த வேலைகள் தொடர்பான நமது ஸ்தாபன நடவடிக்கைகளைப் பரிசீலித்திட வேண்டும்.

266. கடலூரில் நடைபெற்ற11-வது மாநிலமாநாடு,46 பேர் கொண்ட மாநிலக்குழுவினை தேர்வுசெய்தது.மாநிலக்குழு,தோழர்கள் ஏ நல்லசிவன், (செயலாளர்), எம். ஆர். வெங்கட்ராமன், ஆர்.உமாநாத், ஆர். ராமராஜ், பி. ஆர்.பரமேஸ்வரன், பி.ராமச்சந்திரன், என். சங்கரய்யா, கே.ரமணி, கே.முத்தையா,ஏ.அப்துல் வஹாப், ஜீ.வீரய்யன், என். வரதராஜன் ஆகிய 12 தோழர்களைக் கொண்ட மாநில செயற்குழுவினை தேர்வுசெய்தது. நமது அன்பிற்குரிய தோழர் எம்.ஆர்.வி. அவர்கள் 1983மேமாதம் 23ந் தேதி நம்மைவிட்டு பிரிந்தார். அதற்குப்பின் 11தோழர்கள் செயற்குழுவிலிருந்து பணியாற்றிவருகிறார்கள்.

1984 ஜனவரியில் அரசியல் தலைமைக்குழுவின் அனுமதி பெற்று புதுக்கோட்டை மாவட்டச்குழுவின் செயலாளர் தோழர் பி.சண்முகம் மாநிலக்குழு உறுப்பினராக இணைத்துக் கொள்ளப்பட்டார். 1984 ஏப்ரலிலிருந்து தோழர் பி. தர்மலிங்கம் விசேஷ அழைப்பாளராக மாநிலச்குழு கூட்டங்களில் கலந்துகொள்கிறார்.

267. 1982பிப்ரவரி20,21,22 தேதிகளில் புதுவையில் மாநிலக்குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றது.இக்கூட்டத்தில் கீழ்கண்டவாறு மாநில செயற்குழு மற்றும் மாநிலக்குழு உறுப்பினர்களுக்கு வேலைப் பிரிவினை செய்யப்பட்டது.வர்க்க வெகுஜன அமைப்புகள்,

கட்சிக் கல்வி, எழுத்தாளர் அரங்கம், தீக்கதிர் போன்ற அரங்கங்களுக்கு சப்-கமிட்டிகளும், பிராக்ஷன்களும் அமைக்கப்பட்டன.

வேலைப்பிரிவினை விபரங்கள்

ஏ) மாநில செயற்குழுவின் 12 உறுப்பினர்களில் தோழர் என்.வி. தவிர, இதர 11 பேரும் மாநில மையத்திலிருந்து செயல்படுவர். தோழர் என்.வி மட்டும் மேலும் 6 மாத காலத்திற்கு மதுரை மாவட்டச் செயலாளராகவும இருந்து கொண்டு மாநில மையத்தின் வேலைகளுக்கும் உதவி வருவார். அதன்பின் அவரும் மாநில மையத்திலிருந்தே செயல்படுவார். மதுரை மாவட்டச் செயலாளா பொறுப்பிலிருந்து விடுபடுவார்.

பி) சென்னையிலுள்ள மாநில மையத்தில் தோழர்கள் ஏ.என், எம்.ஆர்.வி, ஆர்.யூ. ஆர்.ஆர், என்.எஸ், கே.ஆர், பி.ஆர்.சி, பி.ஆர்.பி, ஜீ.வி. ஆகியோர் செல்படுவர். இவாகளுடைய வேலைகள் இங்கேயே தீர்மானிக்கப்படும. ஒவ்வொரு செயற்குழு கூட்டம் முடிந்தபின்பும் இந்த 9 பேர்களும் கூடி அடுத்த செயற்குழு கூட்டம் நடைபெறும வரை தங்கள் வேலைகளை நிர்ணயம செய்து கொள்வர்.

சி) மற்ற 3 தோழர்களும்- கே.எம், வஹாப், என்.வி மதுரையில இருந்து செயல்படுவர்.

டி) மாநில செயற்குழு 3 வாரங்களுக்கு ஒரு தடவை குறைந்தபட்சம் 2 முழுநாடகள் கூடவேண்டும.

இ) தீக்கதிர் சப் கமிட்டி: கேஎம், ஆர்யூ, வஹாப், கிரி, என்.வி. (கன்வீனர் கே.எம்) சே.எம், வகாப், கிரி மூவரும் தீக்கதிர் நிர்வாகப பொறுப்பை கவனிப்பாாகள்.

எப்) சிஐடியு மையம்: தோழர்கள் ஆர்.யூ, கே.ஆர், வி.கே ஏ.கே.பி, வைத்தியநாதன் ஆகிய ஐவரும் மாநிலமையத்தைசெயல்படுத்துவர். கடைசி மூவரும்தான் மையத்தின் அன்றாட நிர்வாகத்திற்கு பொறுப்பு.

ஜி) தொழிற்சங்க சப்-கமிட்டி: மேலே கண்ட 5தோழர்களுடன் தோழர்கள் ஏ.என், வி.பி.சி, சி.கோவிந்தராஜன்,எம்.நஞ்சப்பன, ஜே.ஹேமச்சந்திரன்; பி.எம்.குமார், ஹரிபட் ஆகிய

7 தோழர்கள் சேர்ந்து மொத்தம் 12 பேர்கள் கொண்ட சப் கமிட்டி செயல்படும் தோழர் ஆர் உமாநாத் இதன் கன்வீனராக செயல்படுவார்.

எச்) விவசாய சங்க மாநில மையம் : தோழர்கள் ஜீ வி, என்.எஸ், ஆர் ஆர், என் வி, குமாரவேல் ஆகிய ஐவரும் இந்த மையத்தைச் செயல்படுத்துவர். தோழர்கள் ஜீவி, பி.கே. ஆகிய இருவரும் மாவட்டங்களுக்கும் போய் வழிகாட்டுவர். அச்சமயங்களில் மற்ற மூவர்களில் ஒருவர், இருவர் அலுவலகச் செயலாளருக்கு வழிகாட்டுவர். தஞ்சை தோழர் டி. புருஷோத்தமன் அலுவலக செயலாளராக இருப்பார். வி.ச, வி.தொ.ச. இந்த இரண்டுக்கும் ஒரே மையம் தான் செயல்படும்.

ஐ) விவசாய சங்க சப்-கமிட்டி: மேலே கண்ட 5 தோழர்களுடன் திருச்சி கே.வி, பி. முத்துசாமி, கே. பாலகிருஷ்ணன், பி. எஸ். தனுஷ்கோடி ஆக மொத்தம் 9 பேர் கொண்ட சப்-கமிட்டி செயல்படும். தோழர் ஜீ. வீரய்யன் இதன் கன்வீனராக செயல்படுவார்.

ஜே) வாலிபர் சங்க பிராக்ஷன்: தோழர்கள் பி. ஆர். சி, சே.சி. கருணாகரன், தஞ்சை ரங்கசாமி, நன்மாறன் ஆகியோரைக் கொண்ட பிராக்ஷன் செயல்படும். இதன் கன்வீனராக தோழர் அகத்தியலிங்கம் இருப்பார்.

கே) மாணவர் அரங்க பிராக்ஷன்: பி.ஆர்.சி, ராமலிங்கம், பாலாஜி, ராஜன், சண்முகம், டாக்டர் சுப்பையா, திருச்சி ஸ்ரீதர் ஆகிய 7பேர் கொண்ட பிராக்ஷன் செயல்படும். தோழர் பாலாஜி கன்வீனர்.

எல்) மாதர் அரங்க சப்-கமிட்டி: ஏஎன், ஆர்.ஆர், பாரதி மோகன், பாப்பா, கேபிஜே. சப்கமிட்டியின் கன்வீனர் ஏஎன்.

எம்) மாதர் அரங்க பிராக்ஷன்: மேற்படி 5 தோழர்களுடன் மைதிலி, கஸ்தூரி, குஞ்சிதம், ஷாஜாதி ஆகிய நால்வரும் சேர்ந்து 9 பேர் கொண்ட பிராக்ஷன் செயல்படும். தோழர் பாப்பா இதன் கன்வீனராக இருப்பார்.

என்) மத்தியதர வர்க்க அரங்க சப்கமிட்டி: ஏஎன், ஆர்யூ, பிஆர்சி, பிஆர்பி, ஜீவி, லட்சுமணன் ஆகிய 6 பேர் கொண்ட சப் கமிட்டிக்கு தோழர் பிஆர்பி கன்வீனர்.

ஓ) அரங்கப் பொறுப்புகள்: அரசு ஊழியர் — பி.ஆர்.சி., துவக்கப்பள்ளி ஆசிரியர்-ஜீவி, கல்லூரி ஆசிரியர்கள்—பி.ஆர்.சி, வங்கி—பி.ஆர்.சி, தபால் தந்தி—பி.ஆர்.பி, ஆயுள் இன்சூரன்ஸ்—ஆர்யூ. முதல் மூன்று அரங்கங்களுக்கு 6 மாதத்திற்கு தோழர் ஏ என்னும் கூட்டுப் பொறுப்பாளராக இருப்பார்.

பி) எழுத்தாளர் அரங்க சப்கமிட்டி: தோழர் கே.எம்., என்.எஸ்., பி.ஆர்.பி., எஸ்.ஏ.பி, திருச்சி வரதராஜன், பாரதி மோகன் ஆகிய 6 பேர் கொண்ட சப்கமிட்டி கே.எம். கன்வீனர்.

க்யூ) கட்சிக் கல்வி—கிளர்ச்சி பிரச்சார க்கமிட்டி: பி. ஆர் சி, என்.எஸ்., பி.ஆர்.பி., எஸ் ஏ.பி., எம்.ஆர்.வி., வி.பி.சி. ஆகிய 6 பேர் கொண்ட கமிட்டிக்கு பி. ஆர். சி. கன்வீனர்.

ஆர்) சட்டமன்ற அரங்க சப்-கமிட்டி: தோழர்கள் என்.எஸ்., ஆர்.யூ., கே.ஆர், என்.வி., ஏ.என்., அடங்கிய சப்-கமிட்டிக்கு தோழர் என்.எஸ். கன்வீனராக இருப்பார்.

எஸ்) மாநில கண்ட்ரோல் கமிஷன்: தோழர்கள் என்.எஸ், ஜே.ஹேமச்சந்திரன், வகாப் ஆகியோர் அடங்கிய கமிஷனுக்கு தோழர் என்எஸ் தலைவராக இருப்பார்.

டி) மாநில ஆடிட் கமிட்டி: இதில் ஏகேபி, ஆர். வெங்கிடு, வி.ஏ. கருப்பசாமி ஆகியோர் இருப்பர்.

யூ) பொருளாளர்: தோழர் ஆர். ராமராஜ்

வி) மாவட்டக்குழுக்களுக்கு செயற்குழுவின நேரடி உதவி: மாநிலமையத்தின் சார்பில், மாவட்டக்குழுக்களுக்கு தொடர்ந்து நேரடி உதவி செய்து வர பின்கண்டவாறு பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டது.

1. தோழர்கள்: என்எஸ், பிஆர்பி, எம்ஆர்வி,—சென்னை, செங்கை வடஆற்காடு, தென்ஆற்காடு.

2. கேஆர், பிஆர்சி—சேலம், தருமபுரி, கோவை, பெரியார்

3. ஜீவி, ஆர்ஆர் —தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை.

4. என்வி,வகாப் —மதுரை, முகவை

5. ஏஎன், என்வி —நெல்லை, குமரி

டபிள்யூ) ஒவ்வொரு மாநிலக்குழு உறுப்பினரும், அந்தந்த மாவட்டத்தில் வேலை செய்வதுடன் மாநில கட்சி மையம் அவ்வப்போது கொடுக்கும் விசேஷபொறுப்புகளையும்நிறைவேற்ற வேண்டும். ஒவ்வொரு மாநிலகுழு உறுப்பினரும் மாதம் ஒருமுறை மாநில மையத்துக்கு ரிப்போர்ட் அனுப்பவேண்டும்.

268. 1985அக்டோபர் வரை 46 மாதங்களில் மாநிலக்குழு 28 தடவைகள் கூடியுள்ளது. மாநில செயற்குழு 67 தடவைகள் கூடியுள்ளது. சராசரியாக சுமார் 50 நாட்களுக்கு ஒருமுறை மாநிலக்குழு கூட்டமும் சுமார் மூன்று வாரங்களுக்கு ஒரு முறை மாநில செயற்குழு கூட்டமும் நடைபெற்றுள்ளது.

269. மாநில செயற்குழு—மாநில மையம்: சால்க்கியா தீர்மானப்படி மாநில மையம் ஒன்றினை உருவாக்கியுள்ளோம். இக்காலத்தில் ஏராளமான வேலைகளுக்கு திட்டமிட்டு அவற்றை நிறைவேற்றியுள்ளோம். மாநில செயற்குழு நிறைவேற்றியுள்ள பணிகள் சிலவற்றினை இங்கே குறிப்பிட்டுள்ளோம்.

கட்சியின் மாநில மையம் ஓரளவு சக்தியாக கூட்டுத் தலைமையாக செயல்பட்டுள்ளது. அரசியல் நிகழ்ச்சிகள் சம்பந்தமாக நமது பிரதிபலிப்புகளை வெளியிட்டுள்ளோம்; தலையிட்டுள்ளோம்.

அரசியல் நிலைமைகளையும் மக்கள் கோரிக்கைகளையும் பற்றி அனைத்து அரசியல் கட்சிகளுடனும் விவாதித்து, பொதுவாக ஏற்கத்தக்க பிரச்சனைகளில் கூட்டு இயக்கங்களை உருவாக்கியுள்ளோம்.

இலங்கைத் தமிழர் பிரச்சனை, சிக்கலான சில அரசியல் நிலைமைகளை உருவாக்கிய காலத்தில் அரசியல் தலைமைக் குழுவின் உதவியுடன் தெளிவான அரசியல் நிலையை மேற்கொண்டோம்; செயல்பட்டோம்.

ஆசிரியர், அரசு ஊழியர் இதர நடுத்தர வர்க்க அமைப்புகள் திறம்பட செயல்பட உதவியுள்ளோம்.

தீக்கதிர், செம்மலர், பீப்பிள்ஸ் டெமாக்ரசி, மார்க்சிஸ்ட் பத்திரிகை விற்பனையில் கவனம் செலுத்தியுள்ளோம்.

ஏராளமான பிரசுரங்களையும், தீக்கதிர் சிறப்பு மலர்களையும் கொண்டு வந்துள்ளோம்.

கட்சியின் மாவட்டக் குழுக்களில் எழுந்த ஸ்தாபன பிரச்சனைகளில் தலையிட்டுள்ளோம். கட்சிக்கட்டுப்பாட்டினை உறுதி செய்துள்ளோம். அதே சமயம், ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்த்து கட்சி செயல்பட உதவியுள்ளோம்.

தொழிற்சங்க அரங்கில் எழுந்த சில அவசர பிரச்சனைகளையும், விவாதித்துள்ளோம்; வழிகாட்டியுள்ளோம். விவசாய சங்க அமைப்பிற்கான நிதி உதவியினை தொழிலாளர்கள் கொடுத்து உதவும் ஏற்பாட்டினைத் துவக்கியுள்ளோம்.

விவசாய விளை பொருட்களுக்கு கட்டுபடியாகும் விலை, வறட்சி, வெள்ள நிவாரணம், காவேரி தண்ணீர் போன்ற பிரச்சனைகள் பற்றியும் விவசாய சங்க அமைப்பு பற்றியும் வழிகாட்டியுள்ளோம். தமிழக அரசின் விவசாய உயர்மட்டக் குழுவில் எழுந்த பல கொள்கைப் பிரச்சனையின் மீது சரியான நிலையை எடுத்து செயலாற்றியுள்ளோம்.

வாலிபர்கள், மாணவர்கள் அமைப்புகள் பற்றி விவாதித்து வழி காட்டியுள்ளோம்.

சட்டப் பேரவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம், தென் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டு முடிவுகளுக்கு வரவேற்பு போன்ற பிரச்சனைகளில் தனிநபர் தீர்மானங்களை முன் மொழிந்து நமது அரசியல் நிலையைத் தெளிவுபடுத்த முன்கை எடுத்தோம்.

சமுதாயக் கொடுமைகள் பலவற்றை உறுதிபட எதிர்த்து நின்று பாதிக்கப்பட்ட மக்களின் துணைவனாக செயல்பட்டுள்ளோம்.

270. கீழ்க்காணும் அமைப்புகளின் வேலைகள் கட்சித் தலைமையின் வழிகாட்டுதலின் அடிப்படையில் நடைபெற மாநில செயற்குழு கவனம் செலுத்தியுள்ளது.

வர்க்க, வெகுஜன அமைப்புகள்

- தொழிற்சங்க மையம் (சிஐடியு)
- விவசாயிகள் சங்கம்
- விவசாயத் தொழிலாளர் சங்கம்
- ஜனநாயக வாலிபர் சங்கம்
- ஜனநாயக மாதர் சங்கம்
- மாணவர் சங்கம் (எஸ்எப்ஐ)
- முற்போக்கு எழுத்தாளர் சங்கம்
- சமூக விஞ்ஞானக் கழகம்
- ஜனநாயக வழக்கறிஞர்கள் சங்கம்
- நடுத்தர வர்க்க அமைப்புகள்

கட்சி அமைப்புகள்

- 18 மாவட்டக்குழுக்கள்
- தீக்கதிர் — செம்மலர் வெளியீடுகள்
- சட்டசபை அரங்க சப்கமிட்டி
- தொழிற்சங்க சப் கமிட்டி
- பெண்கள் அரங்க பிராக்ஷன்
- விவசாய அரங்க சப் கமிட்டி
- வாலிபர் அரங்க பிராக்ஷன்
- மாணவர் அரங்க பிராக்ஷன்
- எழுத்தாளர்கள் அரங்க பிராக்ஷன்
- ஆரம்பப்பள்ளி ஆசிரியர், அரசு ஊழியர்கள், ரயில்வே, எல்ஐசி, வங்கி, பி அண்ட் டி, கல்லூரி ஆசிரியர் அமைப்புகளின் பிராக்ஷன்கள்

271. சமீபத்தில் நடைபெற்ற கட்சியின் வட்டக்குழு, மாவட்டக்குழு மாநாடுகள் சிறப்புற நடைபெற்றன. நாம் செய்த பல்வேறு பணிகளின் காரணமாக நமது அரசியல் அந்தஸ்து உயர்ந்துள்ளது என்று இம் மாநாடுகள் மதிப்பீடு செய்துள்ளன.

இருப்பினும் நாம் இன்னும் கற்றறிய வேண்டிய படிப்பினைகளையும், பலகீனங்களையும் இம் மாநாடுகளில் அறிய முடிகிறது.

272. மாநிலக்குழு செயலாற்றியதில் மேலே கண்ட நல்ல அம்சங்கள் இருப்பினும் பல்வேறு பலகீனங்களும் நீடிக்கின்றன. மாநில செயற் குழுக்கள் கீழ்காணும் எட்டு அம்ச ஸ்தாபன கடமைகளை நிறைவேற்றிட வேண்டும் என மத்திய கமிட்டி வழிகாட்டியது கடந்த மாநாட்டிலும் இதனை கோடிட்டுக் காட்டினோம். அவையாவன:

அ) மாநில செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் மாநில மையத்தில் முழுநேர ஊழியராக இருக்க வேண்டும். அவர்களுடைய வேலைகளைத் தீர்மானிப்பதும், அவர்களுடைய செயல்பாடுகளை செக்அப் செய்வதும், மாநில செயற்குழுவினால் கூட்டாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆ) அவ்வப்போது மையத்திலிருக்கும் செயற்குழு உறுப்பினர்கள் தினசரி அரைமணி நேரம் கூடி, கருத்துக்களையும், தகவல்களையும் பரிமாறிக் கொண்டு தக்க முடிவுகளை எடுக்க வேண்டும். இந்த தினசரி கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகள் எழுத்து வடிவமாக்கப்பட்டு இதர செயற்குழு உறுப்பினர்கள் மாநில கட்சி மையத்திற்கு வரும்போது அவர்களுக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

இ) செயற்குழுவின் முழுக்கூட்டம் குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையாவது நடத்தப்பட வேண்டும். எல்லா செயற்குழு உறுப்பினர்களும் இக் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும் கட்சித் தலைமையகம் உள்ள ஊரில் இருந்துகொண்டே முழுக் கூட்டங்களிலும் கலந்து கொள்ள தவறுவார்களேயானால் கூட்டத்தில் கலந்து கொள்ளாததற்கான காரணத்தை எழுத்து பூர்வமாக கேட்டு வாங்கி அடுத்த தடவை கட்சிக் கமிட்டி கூடும் போது அதுபற்றி ரிப்போர்ட் செய்ய வேண்டும்.

ஈ) மேலே குறிப்பிட்ட தஸ்தாவேஜுகளின் அடிப்படையில் செயற்குழு, ஒரு வேலை அறிக்கையை தயாரித்து, ஒவ்வொரு மாநிலக் கமிட்டிக்கூட்டத்திலும் அது சமர்ப்பிக்கப்படவேண்டும். அந்த அறிக்கை ஒவ்வொரு செயற்குழு உறுப்பினர் வேலையையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

உ) செயற்குழுவின் வேலையறிக்கையுடன் சேர்ந்து, மாநிலக் கமிட்டியின் பிராக்‌ஷன்களும், உப கமிட்டிகளும் மாநில கமிட்டி

யின் ஒவ்வொரு கூட்டத்திலும் எழுத்து பூர்வமான ரிபபோர்ட்டு களை சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய மாநிலக் கமிட்டிக் கூட்டங்கள் அக்கமிட்டியின் உறுப்பினர்களின் வேலையை மதிப்பிடும் மேடையாக செயல்படும்.

ஊ) செயற்குழுவில் இல்லாத மாநிலக்குழு உறுப்பினர்கள், தங்களுக்கு மாவட்டக்குழுக்கள் தீர்மானித்துள்ள வேலைகளைச் செய்வதோடு மாநிலக்குழு சார்பிலும், சில வேலைகளை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய வேலைகளின் துல்லியத் தன்மை, அவற்றைச் செய்யும் வழிமுறைகள் முதலியவை மாநிலக் கமிட்டியால் முடிவு செயயப்படும். மாநிலக்குழு தனது அடுத்த கூட்டத்தில் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து எழுத்து பூர்வமான அறிக்கையைப் பெறவேண்டும்.

எ) செயற்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட எல்லா மாநிலக்குழு உறுப்பினர்களிடமிருந்தும் பெறப்படும் அறிக்கைகள், ஒவ்வொரு மாவட்டக் குழுவிடமிருந்தும் வற்புறுத்திப் பெறப்படும் எழுத்துப் பூர்வமான அறிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் நடைபெறும் மாநிலக்குழுவின் கூட்டங்கள் காரியார்த்தமானதாக இருக்கும். செயற்குழு, மாநிலக்குழு ஆகியவற்றின் ஒட்டு மொத்தமான வேலைகளையும் தனித்தனி உறுப்பினரின் வேலைகளையும் மதிப்பீடு செய்வதற்கு இப்போது மாநிலக்குழுவால் முடியும். மாநிலக்குழுவைப் பொறுத்தமட்டில் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதை செக்அப் செய்யாமல் இருக்கும் ஸ்தாபன பலஹீனம் இதன் மூலம் அகற்றப்படும்.

ஏ) மேலே குறிப்பிட்டுள்ள ஆலோசனைகளை பெரிய மாவட்டக் குழுக்களின் விஷயத்தில் கிட்டத்தட்ட அதே முறையில் அமல் நடத்தலாம். இதர மாவட்டங்களில் தேவையான மாற்றங்களைச் செய்து கொள்ளலாம்.

273. மேலே காணும் மத்தியக் கமிட்டியின் ஆலோசனைகள் முழுமையாக அமுலாகவில்லை. இதில் நிறைவேற்றியுள்ள அம்சங்களையும் நிறைவேற்ருத அம்சங்களையும் கீழே கொடுத்துள்ளோம்:

அ) மாநில செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் மாநில மையத்தின் முழு நேர ஊழியர்களாக இருக்க வேண்டும் என்பதை நிறைவேற்றியுள்ளோம். அவர்களின் வேலைகள் மாநில மையத்தில்

தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதையும் பெருமளவு நிறை வேற்றி வருகிறோம். அவர்களுடைய வேலைகளை செக்கப் செய்வது என்ற முடிவு அமுலாகவில்லை.

ஆ) மாநில மையத்திலிருக்கும் முழுநேர ஊழியர்கள் தினசரி சந்தித்து பேசவேண்டும் என்பதை ஓரளவுதான் நிறைவேற்றியுள்ளோம். பெருமளவு நிறைவேற்றவில்லை.

இ. இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை செயற்குழு கூட்டத்தை நடத்தவேண்டும். என்ற முடிவு நடைமுறையில் சாத்தியமாக வில்லை. நமது அனுபவத்தின் அடிப்படையில் மூன்றுவாரங்களுக்கு ஒருமுறை நடத்துவது என முடிவு செய்து அரசியல் தலைமைக்குழு விற்கு தெரிவித்துள்ளோம். இந்த முடிவினை அமுல் நடத்தியுள்ளோம். தமிழ்நாட்டில் கட்சி வேலைகள் இந்த அளவு நடைபெற்றதற்கு இக்கூட்டங்களும் கூட்டு முடிவுகளும் மிகுந்த அளவு உதவியுள்ளன.

ஈ) ஒவ்வொரு மாநிலக்குழு கூட்டத்திலும் வேலை அறிக்கையினை வைத்து விவாதிக்கவேண்டும். இந்த வேலை அறிக்கை மாநில செயற்குழு உறுப்பினர்களின் வேலையை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதும் ஓரளவுதான் நிறைவேறியுள்ளது. மக்கள் கோரிக்கை பயணம், மதுரை அரசியல் மாநாடு,மறியல் போராட்டம், தேர்தல், இலங்கை பிரச்சனையையொட்டிய இயக்கம், விவசாய சங்க அரங்கம் போன்றவற்றின் மீதுதான் எழுத்து பூர்வமான அறிக்கைகளை வைத்து விவாதித்துள்ளோம்.

உ) சப்கமிட்டிகள், பிராக்ஷன்கள் ஆகியவற்றின் வேலை அறிக்கைகளைப் பெற்று மாநிலக்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்பது நிறைவேறவில்லை. பெண்கள் அரங்க பிராக்ஷன் விவசாயஅரங்கசப்கமிட்டி போன்றவைதான் அறிக்கைகளைக் கொடுத்துள்ளன. மற்றவை பெரும்பாலும் அறிக்கைகளை அனுப்ப வில்லை. மாநிலமையம் வற்புறுத்தி வாங்கவும் இல்லை.

ஊ. பல மாநிலக்குழு உறுப்பினர்கள் வர்க்க, வெகுஜன அரங்க மாநில பொறுப்புகளில் இருக்கிறார்கள். மாநிலக்குழு உறுப்பினர்கள் செய்யும் வேலைகளை பற்றியும் அறிக்கைகள் பெற வேண்டும் என்பதையும் நிறைவேற்ற வில்லை. ஒருசில மாநிலக்குழு உறுப்பினர்கள் தங்கள் வேலைகளைப் பற்றிய மாதாந்திரகுறிப்பினை அனுப்பி உள்ளனர்.

வருகிற பிரச்சனைகள் பற்றி தலைமைத் தோழர்கள் கூடி விவாதித்து வழிகாட்டுவது, எழுத்துபூர்வமான அறிக்கைகளை வைத்துவிவாதித்து தங்களதுவேலைகளை முறைப்படுத்துவது, மேலும் சிறப்பாக்குவது, மேலிருந்து கீழ்வரை நடைபெறும் வேலைகளை செக்கப் செய்வது, திருத்துவது, வர்க்க இயக்கங்களுக்கும், பிரச்சனைகளுக்கும் முதலிடம் கொடுப்பது, தத்துவார்த்தப் பயிற்சியை முன்னெடுத்துச் செல்வது போன்ற பணிகளுக்கு முதலிடம் அளிக்காமல், பழைய முறையில் வேலைகளைச் செய்வதும், தாராளவாத போக்குகளும், வேலைப்பளுவும், வேலை செய்வதற்கான போதுமான தோழர்கள் இல்லாததும் மற்றும் இது போன்ற நிலைமைகளும் இத்தகைய பலகீனங்கள் நீடிக்க முக்கிய காரணங்களாக இருக்கின்றன.

274. இத்தகைய நிலைமையின் காரணமாக பல்வேறு வேலைகளை முழுமையாகச் செய்ய முடியவில்லை. அதில் சிலவற்றை கீழே சுட்டிக் காட்டியுள்ளோம்.

அ) ரயில்வே தொழிற்சங்க வேலைகளைப்பற்றித்தான் முழுமையாக விவாதிக்க முடிந்தது. பிற தொழிற்சங்க இயக்கங்களில், அவசரமாக மாநில செயற்குழுவின் கவனத்திற்கு வந்த பிரச்சனைகளை மட்டும் தான் விவாதித்து வழிகாட்ட முடிந்தது. தொழிற்சங்க அரங்கத்தைப் பற்றி முழுமையாக விவாதிக்க முடியவில்லை. மத்தியக் கமிட்டியின் தொழிற்சங்க அரங்க கடமைகள் என்ற தஸ்தாவேஜைப் பற்றியும் அதை தமிழ்நாட்டில் அமுலாக்குவது பற்றியும் விவாதிக்கவில்லை இதே போன்று வேறு சில வெகுஜன வர்க்க அமைப்புகளின் வேலைகளைப் பற்றியும் அந்தந்த அரங்கங்களிலிருந்து கிடைத்த ரிப்போர்ட்டின் அடிப்படையிலும் விவாதித்து கூர்மையாக வழிகாட்ட முடியவில்லை.

ஆ) வகுப்பு மோதல்கள், துப்பாக்கிச்சூடுகள், லாக்கப் மரணங்கள், முக்கிய போராட்டங்கள், கடுமையான வெள்ளச் சேதங்கள், தீப்பிடிக்கும் சம்பவங்கள் என பல்வேறு சம்பவங்கள் திடீர் திடீரென இக்காலங்களில் நிகழ்கின்றன. சம்பவம் நடக்கும் இடங்களுக்கு நமது தலைமைத் தோழர்கள் நேரடியாக போக வேண்டியிருக்கிறது. இன்று இத்தகைய வேலைகளை ஓரளவுதான் செய்ய முடிகிறது.

இ) கட்சிக் கல்வி, அரசியல்-கிளர்ச்சிப் பிரச்சாரம் போன்ற முக்கிய வேலைகளிலும் உள்ள நமது பலகீனங்கள் நீடிக்கின்றன.

275. 1982 டிசம்பர் 21, 22 தேதிகளில் மாநில செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பி.டி.ஆர், பி.ஆர். கலந்து கொண்டார்கள். மாநிலக் குழுவின் வேலைகள் விமர்சனரீதியாக பரிசீலிக்கப்பட்டன. அப்போதுஎடுக்கப்பட்டமுடிவுகளின் அடிப்படையில் வேலைகள் தொடர்ந்து நடந்தன. மீண்டும் 1983 டிசம்பர் 19, 20,21 தேதிகளில் நடைபெற்ற மாநில செயற்குழு கூட்டத்திலும், 1984 ஜனவரி 10,11,12 தேதிகளில் நடைபெற்ற மாநில செயற்குழு கூட்டத்திலும் கட்சி ஸ்தாபனப் பிரச்னைகள் பறறி விவாதிக்கப்பட்டது. இதற்குப் பின்னர் ஏற்கெனவே செய்யப்பட்ட வேலைப பிரிவினைகளில் கீழ்கண்டவாறு சில மாறுதல்களைச் செய்தோம்.

❋ மாநில செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும், மாநில மையத்தின் பொறுப்பை ஏற்பது. வேலைகளுக்காக மாவட்டங்களுக்கு செல்லும் தோழர்களைத் தவிர மற்ற தோழர்கள் மையப் பொறுப்பை நிறைவேற்றுவது. (தோழர்கள் கே.எம், ஏஏடபிள்யூ இருவரும் தீக்கதிர் மையத்தில் இருந்து செயலாற்றுவது.)

❋ தோழர் என்வி-யை மதுரை டி.சி-யிலிருந்து விடுவித்து மாநில மையத்திற்கு கொண்டு வருவது.

❋ மாநில மையத்தோழர்கள் கூட்டத்தை வாரம் இருமுறை நடத்துவது.

❋ மாநில மைய வேலைகளுக்காக மாநிலக்குழு உறுப்பினர் ஒருவரைக் கொண்டு வருவது.

❋ மாவட்டக்குழுக்களின் வேலை அறிக்கைகளின் மீது தொடர்ந்து கவனம் செலுத்தும் பொறுப்பை என்.எஸ் நிறைவேற்றுவது. தோழர் என்.வி-இதற்கு உதவி செய்வது.

❋ என்எஸ், பிஆர்சி, பிஆர்பி மூவரும் கட்சிக்கல்வி சம்பந்தமான பிரச்னைகளை கவனிப்பது.

❋ என்எஸ், ஆர்யூ, என்வி ஆகிய மூவரும் அரசியல்-கிளர்ச்சி பிரச்சாரத்தைக் கவனிப்பது.

❋ தீக்கதிர் சென்னைப்பதிப்பை கொண்டு வருவது—இது சம்பந்தமாக விபரமான ரிப்போர்ட்டை ஒரு மாதத்தில் தயாரிப்பது.

❊ சிஐடியு மைய வேலைகளுக்கு ஆர்யூ, கூடுதலாக உதவுவது விபிசி, டி.ஜே.இருவரையும் சிஐடியு மைய வேலைகளில் இணைப்பது

❊ சிஐடியு மையம் வாரம் ஒரு முறை கூடுவது

❊ மாதம் ஒரு முறை சிஐடியு மாநில நிர்வாகிகள் கூட்டத்தை நடத்துவது.

❊ தொழிலாளர் அரங்க சப்கமிட்டி கூட்டத்தை இரண்டு மாதத்திற்கு ஒரு முறை நடத்துவது.

❊ சிஐடியு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் வாங்குவது.

❊ வி.ச சப்கமிட்டியில் வி ஏ. கருப்புசாமி, எம்.செல்லமுத்து ஆகிய தோழர்களை இணைப்பது.

❊ ஒவ்வொரு மாவட்டக் குழுவிற்கும் இரண்டு மாநில செயற்குழு உறுப்பினர்கள் பொறுப்பு என்பதை மாற்றி மாவட்டத்திற்கு ஒரு செயற்குழு உறுப்பினர் பொறுப்பு என நிச்சயிப்பது.

❊ ஏற்கெனவே அமைத்த சப்கமிட்டிகள் பல காரணங்களால் நீடிக்க முடியவில்லை. எனவே புதிய அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

❊நடுத்தர வர்க்க அமைப்புகளுக்கு பொறுப்பாளர்களை நியமிப்பது போன்ற முடிவுகளை மாநில செயற்குழு மேற்கொண்டது மாநில செயற்குழு இந்த அடிப்படையில் தனது வேலைகளை அபிவிருத்தி செய்ய தொடர்ந்து முயற்சி செய்தது. இருப்பினும் இந்த முடிவுகளில் சிலவற்றைத்தான் நிறைவேற்ற முடிந்தது.

276. மாநிலக்குழு : வருடத்தில் 6 அல்லது 7 தடவைகளுக்கு மேல் மாநிலக்குழுவின் கூட்டங்கள் நடைபெறுகின்றன. அனைத்து அரசியல், பொருளாதார, ஸ்தாபன இயக்கப் பிரச்சனைகளின் மீதும் விவாதித்து முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இவ்வகையான முயற்சிகளில் கடந்த காலத்தை விட மிகவும் முன்னேறியுள்ளோம். பெரும்பாலான மாநிலக்குழு உறுப்பினர்கள் மாவட்டங்களில் செயலாற்றி வருகிறார்கள். மாநிலக்குழு உறுப்பினர்களும் மாநில செயற்குழு உறுப்பினர்களும் இணைந்து நின்று மாவட்டக்குழுக்களை இயங்க வைக்க சிறந்த, விடாப்பிடியான முயற்சிகளை மேற்

கொண்டுள்ளனர். மாநிலக்குழு, நடைபெற்ற வேலைகள் சிலவற்றினை விமர்சன ரீதியாக விவாதித்து முடிவு செய்துள்ளது. நடைபெற்றுள்ள வேலைகள் அனைத்தையும் விவாதிக்கவில்லை. மாவட்டங்களிலும், பல அரங்கங்களிலும், மாநிலக்குழு உறுப்பினர்கள் பணியாற்றுவதால் அரங்க, மாவட்டப் பார்வையுடன் இருக்கும் நிலையும் உள்ளது.

277. கட்சியின் சப்கமிட்டி, பிராக்ஷன் போன்றவை வர்க்க வெகுஜன அரங்கங்களின் மொத்தமான பலம், பலகீனத்தை ஒரு கால அளவிற்குள் பரிசீலித்து மதிப்பீடு செய்திட வேண்டும். அந்த நத அரங்கங்களில் நமது அரசியலைக் கொண்டுபோக திட்டமிட வேண்டும். கட்சியைக் கட்டும் பணியினை நிறைவேற்ற வேண்டும். இத்தகைய முழுமையான பார்வையுடன் இப்போது இந்த அமைப்புகள் செயலாற்றுவதில்லை. பெரும்பாலும் வெகுஜன அமைப்புகளின் நிர்வாகக் குழுக்களாக செயலாற்றும் நிலையே நீடிக்கிறது. சப்கமிட்டிகள், பிராக்ஷன்கள்போன்றவைகளின் வேலைகள்என்ன? வர்க்க, வெகுஜன அமைப்புகளின் நிர்வாகிகளின் வேலைகள் என்ன? என்பது பற்றி தெளிவற்ற நிலையும் இப்போது இருக்கிறது. பெண்கள் அரங்க பிராக்ஷன், விவசாயிகள் அரங்க சப்கமிட்டி தொடர்ந்து சுமார் மூன்று மாதங்களுக்கொருமுறை கூடியுள்ளது தொழிலாளர் அரங்க சப்கமிட்டி கூட்டங்கள் 84ம்ஆண்டில் நடைபெறவில்லை. இந்த ஆண்டில் சிஐடியு மாநில நிர்வாகிகள் கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றதால் சப்கமிட்டி கூட்டங்களை நடத்தாதநிலை ஏற்பட்டது. வாலிபர், மாணவர் அரங்க பிராக்ஷன் கூட்டங்களும் தொடர்ந்து நடைபெற்றுள்ளன. நடுத்தர வர்க்க அரங்கங்களில் பிராக்ஷன்கூட்டங்களும் தொடர்ந்துநடைபெற்று வருகின்றன. விவசாய அரங்க ரிப்போர்டின் மீதுதான் மாநிலக்குழு விவாதித்தது மற்றைய அரங்க ரிப்போர்ட்டுகளின் மீது போதுமான கவனம் செலுத்த முடியவில்லை. வர்க்க வெகுஜன அரங்கங்களில்வேலைகளை நமது புரட்சிகரமான வழிகளில் இயங்க வைப்பது, இந்த அரங்கங்களில் கட்சியைக் கட்டுவது போன்ற வேலைகளில் சப் கமிட்டிகளின் பங்கு மிக முக்கியமானது. இதிலுள்ள மேலே காணும் பலவீனங்களை களைந்தெறிய வேண்டும் இவ்வேலைகளில் மாநிலக்குழு எதிர்காலத்தில் மிகுந்த கவனத்தைச் செலுத்திடவேண்டும்.

278. கட்சிக்கல்வி: 1982 அக்டோபரில் டெல்லியில் மத்திய கட்சிக்கல்வி பயிற்சிமுகாம் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து பாடக்குறிப்புகளை தமிழில் தயாரித்தோம். 1982 நவம்பர் மாதம் 5 நாட்கள் திருச்சியிலும், 1983 பிப்ரவரி மாதத்தில் 5 நாட்கள் கோவையிலும் கட்சி அரசியல் வகுப்பினை நடத்தினோம். மாநிலக் குழு உறுப்பினர்கள், மாவட்டக்குழு உறுப்பினர்கள், சில அரங்கங்களில் பணியாற்றும் தோழர்கள் ஆக 250 பேர்கள் கலந்துகொண்டனர். கட்சிக்கிளைச் செயலாளர்களுக்கான அரசியல் வகுப்பு மாவட்டங்களிலும் நடைபெற்றுள்ளது. பல்வேறு அரங்கத் தோழர்களுக்கு தனித்தனியான அரசியல் வகுப்புகள் நடைபெற்றுள்ளன. இவ்வகையில் எல்லாம் சுமார் 5ஆயிரம் தோழர்கள் கலந்து கொண்டு இருக்கிறார்கள், இது தவிர அவ்வப்போது கட்சியின் பேரவைக கூட்டங்களை அனைத்து மாவட்டங்களிலும் நடத்தியுள்ளோம். மாநில செயற்குழு உறுப்பினர்கள் தோழர்கள் பிஆர்பி, பிஆர்சி, ஆகிய இருவரும் கட்சிக்கல்விப் பணிகளில் கூடுதல் கவனத்தை செலுத்தியுள்ளார்கள்.

279. மாவட்டங்களில் மாநிலக்குழு உறுப்பினர்கள் அரசியல் வகுப்பினை நடத்தியுள்ளார்கள். இத்துறையில் இவ்வளவு செய்திருப்பினும் நமது தேவைக்கு போதுமானதாக இல்லை என்பதைக் காணமுடிகிறது. மார்க்சீய தத்துவப்பாடக் குறிப்பை தயாரித்து புத்தகமாக வெளியிடுவது என்று முடிவுசெய்தோம். நிறைவேற்ற இயலவில்லை திருச்சியிலும், கோவையிலும் கட்சிக் கல்வியில் பங்கேற்ற தோழர்கள் மாவட்டங்களில் ஆசிரியர்களாக இருந்து கட்சி கல்வியினை போதிக்கவேண்டும் என்று முடிவு செய்தோம். சில மாநிலக்குழு உறுப்பினர்களால்தான் இத்தகைய பணியினைச் செய்யமுடிகிறது இலங்கை தமிழர்பிரச்னை, தேசிய இனப் பிரச்னை, சிபிஐ யின் தத்துவார்த்த நிலை, சர்வதேச பிரச்னைகள் என பல்வேறு தேசிய, சர்வதேசிய விஷயங்கள் பற்றி ஏராளமான கட்டுரைகளை இக்காலத்தில் தீக்கதிரில் வெளியிட்டுள்ளோம். இது கட்சிக்கல்வியின் பகுதிதான். கட்சிக் கல்வியின் மிகப்பெரிய பகுதி சுயமாக படிப்பது என்பதுதான். கட்சி உறுப்பினர்கள் சுயமாக படித்து அரசியல் கல்வி பெறும் நிலையினைக் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் நாம் போதிக்கும் அரசியல் கல்வியும் நல்ல முறையில் தோழர்களுக்குப் பயன்படும்.

280. கட்சிக் கல்வியின் பகுதியாக 7 கட்சிக் கடிதங்கள் வந்துள்ளன. தொடர்ந்து இக்கடிதங்களைக் கொண்டுவர இயலவில்லை. எதிர்காலத்தில் கட்சிக் கல்வியில் கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றிட வேண்டும்:

அ) தொடர்ந்து கட்சி கடிதம் கொண்டுவர வேண்டும்.

ஆ) தத்துவார்த்த பத்திரிகையை தமிழில கொண்டு வர வேண்டும்.

இ) மார்க்சீய தத்துவப் பாடக்குறிப்புகளை புத்தகமாக வெளியிட வேண்டும்.

ஈ) பல்வேறு மாவட்டத்திலுள்ள தோழர்களுக்கு ஏற்றவாறு கட்சிக் கல்விக்கான பாடத் திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

உ) நாம் போதிக்கும் கட்சிக் கல்வி, கட்சித் தோழர்களுக்கு எந்த அளவு பயன்பட்டுள்ளது என்று அவ்வப்போது பரிசீலனை செய்ய வேண்டும்.

ஊ) கட்சிக்கல்வியை போதிக்கத்தக்க ஆசிரியர்களை பயிற்றுவிக்க வேண்டும்.

281. கிளர்ச்சிப் பிரச்சாரம், பொதுக் கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள், சைக்கிள், நடைபயணப் பிரச்சாரம், நோட்டீஸ் போன்ற பல்வேறு முறைகளில் பிரச்சாரத்தை எடுத்துச் சென்றுள்ளோம். நூற்றுக்கு மேற்பட்ட பேச்சாளர்கள் கூட்டங்களில் பங்கெடுத்து பேசி வருகிறார்கள். மாநிலக்குழு உறுப்பினர்களும் இதர வேலைகளுக்கு மத்தியில் பொதுக் கூட்டங்களுக்குப் போய் உதவி வருகிறார்கள். அரசியல் தலைமைக்குழு தோழர்களும், அவ்வப்போது வந்து உதவுகின்றார்கள். மதுரை, முகவை, நெல்லை, கோவை, சென்னை ஆகிய மாவட்டங்களில் கலைக்குழுக்கள் பிரச்சாரப் பணியில் ஈடுபடுகின்றன. இக்கலைக் குழுக்கள் மாநில அளவிலும் போய் உதவுகின்றன. இருப்பினும் பிரச்சாரத் தேவைகளை நிறைவு செய்ய முடியவில்லை. ஒரு சில தோழர்கள் மட்டும் இந்த பிரச்சாரத்தேவையை பூர்த்தி செய்ய இயலாது. நமது பேச்சாளர்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளித்து நூற்றுக்கணக்கான தோழர்களை உருவாக்க வேண்டும் நவீன பிரச்சார உத்திகளையும், கை

யாள வேண்டும். ஹால் கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள், கூட்டங்கள், கருத்தரங்குகளிலும் கவனம் செலுத்த வேண்டும்.

282. சென்னையிலும், மதுரையிலும் பேச்சாளர் தோழர்களுக்கு சில பிரச்சனைகள் மீது பயிற்சிக் கூட்டத்தினை நடத்தினோம். இது உபயோகமாக இருந்தது. தொடர்ந்து இப்படிப்பட்ட கூட்டத்தை நடத்தவில்லை. எதிர்காலத்தில் இதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். நமது அரசியல், கொள்கை நிலையில் நின்று பிரச்சாரத்தைக் கொண்டு போக வேண்டும். இதில் தற்சமயம் பலவீனம் உண்டு. நாம் நடத்தும் பிரச்சாரக் கூட்டங்களுக்கு சக்தியாக மக்களைத் திரட்ட வேண்டும். நமது பத்திரிகை பிரசுர விற்பனையையும் கிளர்ச்சிப் பிரச்சாரத்தில் ஒரு முக்கியமான ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும்.

283. மார்க்ஸ் நூற்றுண்டு விழா, டிமிட்ரோவ் நூற்றுண்டு விழா, இலங்கைத் தமிழர் பிரச்னை, மண்ணின் மைந்தர்களுக்கு வேலை, தேசத்தின் ஒற்றுமை, பிளவு, பிரிவினைவாத சக்திகள் போன்ற பல்வேறு விவசயங்கள் பற்றி தீக்கதிரில் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. பிரசுரங்கள் கொண்டு வந்துள்ளோம். தீக்கதிர் மலர் கொண்டு வந்துள்ளோம். மாநிலக்குழு உறுப்பினர்கள் பல்வேறு கூட்டங்களில் பங்கெடுத்து விளக்க உரையாற்றியுள்ளார்கள். இப்படிப்பட்ட கருத்துக்களை தெருக்களில் மக்களிடம் எடுத்துச்செல்லும் பணியினை எதிர்காலத்தில் செய்யவேண்டும். அன்னிய வர்க்க கருத்துக்களை, குறிப்பாக திராவிட தத்துவார்த்தத்தை எதிர்த்து அயராது நாம் போராடியாக வேண்டும்.

284. **சட்டமன்ற உறுப்பினர்கள்:** சமீபத்தில் அவர்களின் சம்பளத்தை அரசு உயர்த்தியது. அவர்களிடமிருந்து மாதம் ரூ300ஐ மாநிலக்குழு பெறுகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் முழுநேர ஊழியர்களுக்கான அலவன்சை பெற்றுக்கொள்கிறார்கள். மீதியை சம்பந்தப்பட்ட மாவட்டக்குழுக்களிடம் கொடுக்கிறார்கள் தினசரி அலவென்ஸ் ரூ50-ல் ரூ.30ஐ மாநிலக்குழுவிற்கு ஈவாக பெற்றுக் கொள்கிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதிப் பணிகளில் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும் என்பதை ஓரளவு நிறைவேற்றி வருகிறார்கள். தொகுதிகளில் கட்சி கமிட்டிகளும் உரிய கவனத்தைச் செலுத்திட வேண்டும்.

285. கட்சிப் பொருளாதாரம்: மாநிலக்குழுவின் வரவு-செலவு தனியாக சமர்ப்பிக்கப்படும். மாநிலக்குழுவின் மாதந்திர பட்ஜெட் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

முழுநேர ஊழியர்கள் அலவன்ஸ்	ரூ	5000
போக்குவரத்து செலவினங்கள்	ரூ.	1500
தொலைபேசிக் கட்டணச் செலவு	ரூ.	1500
கார் பெட்ரோல், மராமத்துக்கு	ரூ.	2000
ஸ்டேஷனரி, தபால் இதரசெலவு	ரூ	1000

அரசியல் தலைமைக்குழு தோழர்களின் போக்குவரத்துச்செலவு, சில விசேஷ போக்குவரத்துச் செலவுகள் எனவருவதுண்டு. ஆக மொத்தம் மாதம் சுமார் 12000 வரை செலவாகிறது. வருடத்தில் ஒன்னரை லட்ச ரூபாய்க்கு மேல் மாநிலக்குழுவிற்கு தேவைப்படுகிறது.

286. கட்சி வளர்ச்சி நிதியிலிருந்து மாவட்டக் குழுக்கள் தரும் ஈவு, கட்சி உறுப்பினர்கள் லெவி ஈவு, சட்டமன்ற உறுப்பினர் லெவி, இவைதான் மாநிலக் குழுவின் பிரதான வரவினம். இவ்வகையில் வருடத்தில் ரூ. ஒன்னே கால் லட்சம் வரைதான் சராசரி வரவு வருகிறது. ஆனால் இந்த ஆண்டில் 29 ஆயிரம் ரூபாய்தான் மாவட்டங்களிலிருந்து கட்சி நிதியில் ஈவு கிடைத்துள்ளது. இதன் காரணமாக, ஏ. பி. கட்டிட நிதியிலிருந்து எடுத்து செலவு செய்துள்ளோம். மாநில மையம் இன்னும் பல வேலைகளை ஏற்கும்போது இன்று இருப்பதை விட கூடுதல் செலவு செய்ய வேண்டியிருக்கும். கட்சி உறுப்பினர்கள் தந்தாகவேண்டிய லெவியில் 10 சதவிகிதம் மாநிலக்குழுவிற்கு கொடுக்க வேண்டுமென முடிவு செய்துள்ளோம் கட்சி உறுப்பினர் லெவியில் இடைக் கமிட்டிகள் எடுத்துக் கொண்டது போக, மாவட்டக்குழுக்களுக்கு வரும் லெவி ஈவில்தான் 10 சதவிகிதத்தை பல மாவட்டக்குழுக்கள் தற்போது கொடுக்கின்றன. கட்சி உறுப்பினர்கள் தரும் லெவியில் 10 சதவிகிதத்தை கொடுப்பதில்லை. சில மாவட்டங்கள் இந்த லெவியையும் தருவதில்லை. சென்னை, கோவை, தஞ்சை மாவட்டக் குழுக்கள் லெவியை ஓரளவு முறையாக கொடுக்கின்றன. இதனை முறைப்படுத்த வேண்டும். கட்சி வளர்ச்சி நிதியில் மாநிலக் குழுவின் பங்கை முழுமையாகச் செலுத்த வேண்டும். சில

மாவட்டக் குழுக்கள் இந்தக் கோட்டாவை கொடுக்காத நிலைமையும் இருக்கிறது.

287. பல்வேறு வேலைகள், தேர்தல் நிதிப் பொறுப்புகள் காரணமாக தோழர் ஏ. பி. நினைவு அரங்க கட்டிடத்தை இன்னும் கட்ட முடியவில்லை திண்டுக்கல் நகரில் 30 ஆயிரம் ரூபாய்க்கு நிலத்தை வாங்கியுள்ளனர் 10 ஆயிரம் ரூபாய் பேங்கில் போட்டுள்ளனர். மதுரையிலும், திண்டுக்கல்லிலும் இந்த கட்டிடங்களை கட்டி முடிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். கட்சியின் மத்தியக் குழு கட்டிடமான ஏகேஜி பவனுக்கு ஒரு பகுதி நிதியைத்தான் கொடுத்துள்ளோம் மறு பகுதியை கொடுக்க திட்டமிட வேண்டும்.

288. கட்சியின் வரவு-செலவு கணக்குகளை அனைத்து மட்டங்களிலும் மூன்று மாதங்களுக்கொருமுறை கட்சிக் குழுக்களில் கொடுப்பதற்கான ஸ்தாபன உத்திரவாதத்தைச்செய்யவேண்டும். மாநிலக்குழு இதுவரை இவ்வாறு வரவு-செலவு கணக்குகளை பரிசீலிக்கவில்லை. இத்தகைய பலவீனங்களைப் போக்க வேண்டும்.

289. மாவட்டக்குழுக்கள்: ரெவின்யூ அடிப்படையில் முகவை மாவட்டம் மூன்று மாவட்டங்களாகவும், மதுரைமாவட்டம், இரண்டு மாவட்டங்களாகவும் அரசினால் பிரிவினை செய்யப்பட்டுள்ளன. இதற்குத் தக்கவாறு நமது மாவட்டக்குழுக்களையும் பிரித்து அமைத்துள்ளோம். காமராஜ் மாவட்டத்தில் புதிய மாவட்டக்குழு தேர்வு செய்யப்பட்டுள்ளது. இராமநாதபுரம்—பசும்பொன்முத்துராமலிங்கம் என்ற இரு மாவட்டங்களையும் இணைத்து புதிய மாவட்டக்குழு தேர்வு செய்யப்பட்டுள்ளது. மதுரை மாவட்டக்குழுவும் அண்ணா மாவட்டக்குழுவும் புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 17மாவட்டக்குழுக்கள் இப்போது செயல்படுகின்றன. புதுவை பிரதேசக்குழுவையும் தனிராஜ்யம் என்ற வகையில் புதிய மாவட்டக்குழுவாக மாநிலக் குழு ஏற்றுள்ளது. இதையும் சேர்த்து 18மாவட்டக்குழுக்கள் இருக்கின்றன. மாவட்டக்குழுக்களின் மாநாடுகள் சிறப்புற நடைபெற்றுள்ளன. கடந்த காலத்தைவிட அனைத்து மாவட்டங்களிலும் ஓரளவு முன்னேற்றம் இருக்கிறது. மாவட்டக்குழுக்கள் 2மாதங்களுக்கு ஒருமுறையும் மாவட்ட செயற்குழுக்கள் மாதத்திற்கு

ஒரு முறையும் கூட்டங்களை நடத்தியுள்ளன. வேலைகளுக்கு திட்ட மிட்டு, நிறைவேற்றியுள்ளன.

290. அனைத்து மாவட்டங்களிலும் கட்சியின் மையம் உருவாகியுள்ளது. வடஆற்காடு தவிர அனைத்து மாவட்டக்குழு அலுவலகங்களிலும் அலுவலகச் செயலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். மாநிலக்குழுவும் மாவட்டக்குழுக்களும் நெருக்கமாக இருந்து பிரச்னைகளுக்கு வழிகாட்டியுள்ளன.

291. மத்தியக் கமிட்டி மாநிலக் கமிட்டி ஆகியவற்றின் முடிவுகளை கீழ் அமைப்புகளின் மூலம் மக்களிடம் எடுத்துச் செல்லும் தலைமையாக மாவட்டகுழுக்கள் செயல்படுகின்றன. இக்காலத்தில் தொடர்ச்சியாக ஒன்றன் பின் ஒன்றாக வந்த வேலைகளை மாவட்டக் குழுக்கள் நிறைவேற்றியுள்ளன. இத்தகைய முன்னேற்றத்துடன் கீழ்க்காணும் ஸ்தாபன பலகீனங்களும் இருக்கின்றன.

அ) ஒவ்வொரு மாவட்டக் குழுவிலிருந்தும் எழுத்து மூலமான ரிப்போர்ட்டுகளைப் பெற்று மாவட்டக் குழுக்களின் அரசியல் ஸ்தாபன வேலைகளை பரிசீலித்து பிரத்தியேகமான எதிர்கால ஸ்தாபன கடமைகளை தீர்மானித்திட வேண்டுமென மாநிலக்குழு முடிவு செய்தது. விவரங்களைக் கேட்டு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. மாவட்டக் குழுக்களிலிருந்து விபரங்கள் அனுப்பப்படவில்லை. மாநில குழுவும் இந்த அறிக்கைகளைப் பெற கவனம் செலுத்த இயலவில்லை. இத்தகைய விவாதங்கள் நடைபெறாத நிலையில் ஒவ்வொரு மாவட்டக் குழுவைப் பற்றியும் துல்லியமான மதிப்பீடுகளை இப்போது முன்வைக்க முடியாது.

ஆ) அனைத்து மாவட்டங்களிலும் கட்சி மையங்கள் செயல்பட்டு வந்தாலும் அந்த மையங்கள் பலகீனமாக இருக்கின்றன என்பதை மாவட்ட மாநாட்டு அறிக்கைகள் தெளிவாக்குகின்றன.

இ) அரசியல் இயக்கங்களுக்கு கூடுதல் கவனத்தை செலுத்தாத நிலை உண்டு. தீக்கதிர், செம்மலர், பிரசுர விற்பனையில் பொதுவாக பலகீனங்கள் நீடிக்கின்றன.

ஈ) நடைபெற்ற வேலைகள் பற்றி அவ்வப்போது சில தகவல்கள், கடிதங்கள் வருகின்றன. விபரமான ரிப்போர்ட்டுகள்பெரும்பாலும் அனுப்பப்படவில்லை.

உ) விவசாய அரங்க வேலைகளில் தேக்கம் நீடிக்கிறது. கட்சியைக் கட்டும் பணிக்கு முதலிடம் கொடுப்பதில்லை. இத்தகைய பல கீனங்களை எதிர்காலத்தில் போக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

292. இடைக்கமிட்டிகள்: பல மாவட்டங்களில் புதியஇடைக் கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள இடைக்கமிட்டிகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டம்	இடைக்கமிட்டிகளின் எண்ணிக்கை
சென்னை	6
செங்கை	5
வடஆற்காடு	2
தென் ஆற்காடு	13
தஞ்சை	20
திருச்சி	7
புதுக்கோட்டை	7
அண்ணா	5
மதுரை	7
முகவை	7
காமராஜ்	7
நெல்லை	11
குமரி	5
சேலம்	8
தருமபுரி	5
கோவை	6
பெரியார்	3

ஆக மொத்தம் 124.

293. வேலைகளுக்குத் திட்டமிடுவது, நிறைவேற்றுவது, கிளைகளை இயங்க வைப்பது ஆகியவற்றில் இடைக்கமிட்டிகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. ஒரு பகுதி இடைக்கமிட்டி வேலைகளில் முன்னேற்றம் உண்டு. பெரும்பான்மையான இடைக் கமிட்டிகளின் வேலைகள் இவ்வகையில் அமையவில்லை. இக் கமிட்டியில் அரசியல் விவாதம், அரசியல் பணிகள் என்பது மிகவும் பலகீனமாக இருக்

கின்றன. தங்கள் சொந்த வேலைகளை கவனித்துக் கொண்டு மற்ற நேரங்களில் கட்சி வேலைகளைச் செய்யும் நேயர்கள் தான் அதிக மாக இடைக்கமிட்டி உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களை இயங்க வைக்க வேண்டிய அவசியம் நம் முன்னுள்ளது. தகுதி வாய்ந்த முழு நேர ஊழியர்கள் இல்லாத நிலையாலும் தேக்கங்கள் ஏற்படுகின்றன.

294. லோக்கல் கமிட்டிகளை அமைக்க வேண்டும் என மாநிலக் குழு முடிவு செய்துள்ளது. பெரிய நகரங்களில் இப்படிப்பட்ட லோக்கல் கமிட்டிகள் தேவைப்படுகின்றன. போதுமான ஊழியர்கள், வெகுஜன அமைப்புகள், கட்சிக் கிளைகள் இருக்கின்ற பகுதிகளில் கிளைகளுக்கும் இடைக் கமிட்டிகளுக்கும் இடையில் லோக்கல் கமிட்டி அமைக்கலாம் என்றும் இது பற்றிய முழு விபரங்களையும் அனுப்பி வைத்து மாநிலக்குழுவின் அனுமதியினைப் பெற வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

295. கிளைகள்: நமது அரசியல், ஸ்தாபன, இயக்க முடிவுகளையும் அமுல் நடத்தும் அடித்தளம் கிளைகளே. எனவே தான் மக்களுக்கும் கட்சிக்கும் பாலமாக கட்சிக் கிளைகள் விளங்குகின்றன என்று சால்க்கியா சுட்டிக் காட்டியது. பெரும்பான்மையான கிளைகள் தாமாக வேலைகளை நிறைவேற்றும் நிலை இன்று இல்லை. இடைக்கமிட்டி உறுப்பினர்களோ சில சமயம் மாவட்டக் கமிட்டி உறுப்பினர்களோ போய்தான் கிளைக் கூட்டங்களை நடத்த வேண்டியுள்ளது. மாதம் ஒரு கிளைக் கூட்டம் என்ற அளவில் கூட நடத்த முடியவில்லை. வருடத்தில் 4 அல்லது 5 முறை கூடும் கிளைகளே அதிகம் இருக்கின்றன. சில பகுதி கிளைகளில் கிளைக்கூட்டம் நடத்துவதில் இதைவிட பலவீனங்கள் உண்டு. அவசரமான வேலைகளை முடிவு செய்வதற்காக மட்டும் கூடும் கிளைகளும் இருக்கின்றன.

296. கிளைகளின் இத்தகைய பலகீனங்களுக்கு மத்தியில் தான் இத்தனை வேலைகளையும், இயக்கங்களையும், போராட்டங்களையும் கட்சி நடத்தி இருக்கிறது. சால்க்கியா வழியில் கட்சிக் கிளைகள் இயங்கினால் எவ்வளவு மகத்தான வேலைகளை நிறைவேற்ற இயலும் என்பதைப் பார்க்கிறோம். ஆகவே, இக்கட்சிக் கிளைகளை இயங்க வைக்கிற பிரதான வேலை நம்முன் உள்ளது. தமிழ்நாட்டில் 3500 கிளைகள் இருக்கின்றன.

297. கிளைச் செயலாளர்களுக்கு பயிற்சி என்ற வேலை முக்கியமானது. மாதம் ஒருமுறை கிளைச் செயலாளர்கள் கூட்டத்தை நடத்தி அரசியல் நிலைமையைப் பற்றி ரிப்போர்ட் செய்வது என்ற முடிவு அமுலாக்கவில்லை. நடைபெற்றுள்ள கிளைச் செயலாளர்கள் கூட்டங்களில் கூட பெரும்பாலும் நடைமுறை வேலைகளை பற்றியே ரிப்போர்ட் செய்யப்பட்டுள்ளது. இத்தனை வேலைகளுக்கு மத்தியில் மாதம் ஒருமுறை கிளைச்செயலாளர்கள் கூட்டத்தை நடத்திட முடியவில்லை எனவே, எதிர்காலத்தில் இரண்டுமாதங்களுக்கொரு முறை கிளைச் செயலாளர்கள் கூட்டத்தை நடத்தவும், மத்தியக் கமிட்டி. மாநிலக் கமிட்டிகளில் முடிவுகளை மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ரிப்போர்ட் செய்யவும் திட்டமிடவும் வேண்டும்.

298. மாநிலக்குழு, பெரியகுளம் நாடாளுமன்ற இடைத் தேர்தல் வேலைகளைப் பற்றி ரெவியூ செய்தபோது, கட்சிக் கிளைகளின் பலகீனத்தையும பரிசீலித்தது. இந்தத் தொகுதியில் 100-க்கு மேற்பட்ட கட்சிக்கிளைகள் இருந்தன இக்கிளைகள் மக்களிடம் வேரூன்றி நிற்கவில்லை என்பதையும், நிதிவசூல், நீண்ட இடைவெளிக்குப்பின் ஒருமுறை பிரச்சாரக் கூட்டங்கள் நடத்துவது போன்றவைதான் இக்கிளைகளின் வேலையாக இருந்துள்ளன என்பதையும் பார்க்க முடிந்தது.

299. ஆளும் வர்க்கங்களின் தாக்குதல்களினுல் பல்வேறு பகுதி மக்கள் பாதிக்கப்படுகிறுர்கள். இதன் ஒருபகுதிதான் லாக்கப் மரணங்களும, படுகொலைகளும். நமது கட்சிக் கிளைகள் தமிழ் நாட்டில் பல பகுதிகளில் இப்பிரச்சனைகளில் உறுதியாக செயல் பட்டுள்ளன. இதனுலேயே இந்த வட்டாரங்களில் நமது கட்சிக்கு மக்களின் ஆதரவை காணமுடிகிறது. இதேபோன்று தங்களது வட்டாரத்தில் பாதிக்கப்படுகிற மக்களின் பிரச்சனைகளை எடுத்து கட்சிக் கிளைகள் செயலாற்றினுல் மக்களின் உறுதியான ஆதரவைப் பெற முடியும் இத்தகைய வெகுஜன வேலைகளைச் செய்வதில் கிளைகளுக்கு தற்போது பலஹீனங்கள் இருக்கின்றன. எதிர்காலத்தில் இந்த பலஹீனங்களை களைந்தெறிய வேண்டும்

300. தங்களது பகுதியிலுள்ள பல்வேறு அரசியல் குழுக்களுடன் உறவுகளை வைத்துக் கொள்வது, இவர்களின் அசைவுகளை அறிந்து கொள்வது, இவர்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது போன்ற நடவடிக்கைகளை கட்சிக் கிளைகள் மேற்கொள்ள வேண்

டும். பொதுவான கோரிக்கைகளுக்கு கூட்டு இயக்கங்களை உருவாக்க இந்த உறவுகள் உதவி செய்திடும். அத்துடன் பல்வேறு பகுதியினருடன் நடைபெறும் அரசியல், தத்துவார்த்த கருத்துப் பரிமாற்றங்கள் நமது கட்சிக்கு அனுதாபிகளையும் ஆதரவாளர்களையும உருவாக்கும் அடித்தளமாக அமைகின்றன. தொழிற்சங்க அரங்கிலுள்ள கட்சிக்கிளைகள் தொழிற்சாலைகளை மையமாக கொண்டு இபபோது இயங்குவதில்லை. அத்துடன் இப்போதுள்ள இந்த அரங்கத்திலுள்ள கட்சிக்கிளைகளின் பெரும்பாலானபணிகள் தொழிற்சங்க கோரிக்கைகளுடன் நின்றுவிடுகின்றன. தொழிலாளர்களிடம் சோசலிஸ்ட் உணர்வை ஊட்டும் பிரதான பணியைகட்சி கிளைகள்தான் நிறைவேற்றிட வேண்டும். இந்த துறையில் அறவே கவனம் இல்லை என்றே சொல்லலாம்.

301. உறுபபினர் எண்ணிக்கை:

ஃ கட்சி உறுப்பினர் எண்ணிக்கை 1981—19,578 (பிஎம் மற்றும் சிஎம்)

ஃ கட்சி உறுப்பினர் எண்ணிக்கை 1985—27,053 (பிஎம் மற்றும் சிஎம்)

இந்த நான்கு வருட காலத்தில் உறுப்பினர் எண்ணிக்கை சுமார் 7500 கூடுதலாகியுள்ளது. ஓரளவு முன்னேற்றம் தான். நமது செல்வாக்குக்குத் தக்கவாறும், நமது வேலைகளுக்கு தக்கவாறும்வாலிபர், பெண்கள அமைப்புகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்த்த தக்கவாறும் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை உயரவில்லை என்பது அனைத்து மாவட்ட மாநாடு அறிக்கைகளிலும் இடம் பெற்றுள்ளன. நமது உறுப்பினர் பலம் ஏன் இதைவிட கூடுதலாகவில்லை என்று நாம் பரிசீலித்திட வேண்டும்.

302 மாவட்ட மாநாட்டு ஸ்தாபன அறிக்கைளில் உறுப்பினர்கள் பட்டியலை கொடுத்துள்ளார்கள். அதன் விபரங்கள் அனுபந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. நமது மிகப்பெரிய ஸ்தாபன பலவீனத்தை இந்த பட்டியல்கள் வெளிப்படுத்துகின்றன. துணைக் குழுவில் சேர்க்கப்படும் உறுப்பினர்கள் அடுத்த ஆண்டில் நூற்றுக் கணக்கில் விடுபடுகிறார்கள். துணைக்குழு உறுப்பினர்களை பரீட்சார்த்த உறுப்பினர்கள் ஆக்கும்போது ஏற்கனவே இருந்த பரீட்சார்த்த உறுப்பினர்கள் கட்சிஉறுப்பினர்கள் ஆகாமல் விடப்படும் நிலையும் இருக்கிறது.

303. கொள்கை வேறுபாடு காரணமாக விடுபட்டவர்கள். ஒழுங்கு நடவடிக்கைகளினால் வெளியேற்றப்பட்டவர்கள் என்ப

தெல்லாம் விரல் விட்டு எண்ணத்தக்க உறுப்பினர்கள்தான் என்பதை அனைத்து மாவட்ட ரிப்போர்ட்டுகளும் சுட்டிக் காட்டுகின்றன இதில் முக்கியமான உண்மை என்னவென்றால், சேர்க்கப்படும் உறுப்பினர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, கிளைகளில் பணியாற்றி படிப்படியாக கட்சி உறுப்பினர் தகுதியினைப் பெருக்கிக் கொள்ளும் நிலை இல்லை என்பதுதான். இத்தகைய கட்சியை கட்டும் பணி பெரும்பாலும் நடைபெறவில்லை எதிர்காலத்தில் கட்சிக்கிளைகளை முறையாக இயங்க வைப்பதன் மூலம்தான் நாம் முன்னேற்றத்தைக் காண இயலும்.

304. பெண் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது

வருடம்	பிஎம்	சிஎம்	ஏஎம்
1985	501	268	314

கடந்த காலத்தைவிட ஓரளவு இதில் கவனம் செலுத்தியுள்ளோம். இருப்பினும் இது நமது கட்சி உறுப்பினர் எண்ணிக்கையில் சுமார் 3 சதவிகிதம் தான். பெண்களை கட்சி உறுப்பினர்கள் ஆக்குவதிலுள்ள பலவீனத்தை போக்க வேண்டும். நாம் பணியாற்றும் அனைத்து அரங்கங்களிலும் கட்சி அமைப்புகளை உருவாக்குவது என்ற கடமையினை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். வர்க்க, வெகுஜன அமைப்புகளின் வளர்ச்சிக்கும் தீவிரத் தன்மைக்கும் அரசியல் உணர்வுக்கும் அடித்தளம் கட்சி அமைப்புகள் தான் ஆகவே நமது அரங்கப் பணிகளின் முன்னேற்றத்திற்கு உரைகல் கட்சி அமைப்பின் வளர்ச்சிதான்.

305. தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் இதர உழைப்பாளிகள் வர்க்கத்திலிருந்து வந்தவர்கள் தான் நமது கட்சி உறுப்பினர்கள். சமீபத்தில் நடுத்தர வர்க்கத் தோழர்கள் சிறிது வந்துள்ளார்கள். நடுத்தர வர்க்க ஸ்தாபனங்களிலுள்ள நமது செல்வாக்குக்குத் தக்கவாறு கூடுதலாக கட்சி உறுப்பினர்கள் வரவில்லை.

306. கட்சி உறுப்பினர் பதிவு: அவசர கோலத்தில் நடைபெறும் ஓர் காரியமாகத்தான் இது இப்போது இருக்கிறது. கட்சி உறுப்பினர் பதிவில் பெரும்பாலும் தாராளவாதமும் சில பகுதிகளில் செக்டேரியன் போக்கும் காணப்படுகிறது இத்தகைய போக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, சரியான திசையில் கட்சி

உறுப்பினர் பரிசீலனையையும், பதிவையும் நடத்த வேண்டும். கட்சி உறுப்பினர்கள் தகுதி தணிக்கையும் பெயரளவிற்கே நடைபெறுகிறது.

307. கட்சி லெவி: மத்தியக் கமிட்டி நிச்சயித்துள்ள ஈவுப்படி, லெவி வசூல் பெரும்பாலும் நடைபெறுவதில்லை. மாவட்டங்களில் சில சமயம் வட்டங்களின் உசிதப்படி வசூலிக்கும் நிலையும் உள்ளது. பதிவு நேரத்தில் ஆண்டு லெவியாக ஒரு குறிப்பிட்ட தொகையை நிச்சயித்து வாங்கும் நிலை கூட சில மாவட்டங்களில் இருக்கிறது இதனால் கூடுதலான பணத்தை மொத்தமாக கொடுக்க முடியாமல் கட்சி உறுப்பினர் பதிவில் விடுபடுபவர்கள் உண்டு. லெவி வசூலை சீராக நடைமுறைப்படுத்தாததால் சில கமிட்டிகளின் நிதி ஆதாரமும் பாதிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் மாநிலம் முழுவதும் கட்சி விதிப்படி-ஈவுப்படி லெவி வசூல் செய்வதை உத்திரவாதப்படுத்திட வேண்டும். லெவி என்பது வருவாயை மட்டும் பொறுத்தது அல்ல, உணர்வையும் பொறுத்த விஷயம் என்பதுதான் நமது அனுபவம்.

308. முழு நேர ஊழியர்கள்: தற்போதுள்ள முழு நேர ஊழியர்கள், பகுதி நேர ஊழியர்கள் பற்றிய விபரத்தினை கீழே கொடுத்துள்ளோம்:

மாவட்டம்	முழுநேர ஊழியர்	பகுதி நேர-ஊழியர்
1 சென்னை	22	—
2. செங்கை	5	4
3. வடஆற்காடு	5	5
4. தென்ஆற்காடு	14	8
5. தஞ்சை	58	—
6 திருச்சி	20	5
7. புதுக்கோட்டை	—	—
8. மதுரை	28	34
9. முகவை	15	—
10. நெல்லை	10	4
11. குமரி	15	11
12. கோவை	25	15
13. பெரியார்	4	8
14. சேலம்	15	3
15. தருமபுரி	5	—
16. பாண்டி	2	3
மாநில மையம், அரங்க மையம், தீக்கதிர்	30	—

309. முழுநேர ஊழியர்கள்: திருமணமான முழுநேர ஊழியர்களுக்கு மாதம் ரூ. 600 வரையிலும் மற்ற ஊழியர்களுக்கு ரூ.350 வரையிலும் மாத அலவன்ஸ் அளிக்கலாம் என 1984 பிப்ரவரியில் மாநிலக் குழு நிச்சயித்தது. இந்த முடிவினை படிப்படியாக அமுல் படுத்த வேண்டுமென மாவட்டக் குழுக்களை கேட்டுக்கொண்டது. முழுநேர ஊழியர்களுக்கு அலவன்ஸ் கடந்த காலத்தைவிட இப்போது ஓரளவு முறையாக கிடைத்து வருகிறது. கோவை, தஞ்சை, திருச்சி, சென்னை, செங்கை, போன்ற மாவட்டங்களில் முழுநேர ஊழியர்கள் அலவன்சை மையப்படுத்தி மாவட்ட குழுக்கள் கொடுத்து வருகின்றன. இத்தகைய முறையினை மற்ற மாவட்டங்களிலும் அமுலாக்க முயற்சிக்க வேண்டும். இத்தகைய முயற்சிக்கு முதல் படியாக கட்சி வளர்ச்சி நிதி வசூலில் முழுநேர ஊழியர்களின் அலவன்சுக்குரிய பணத்தை சேமிப்பு கணக்கில் வைக்க சம்பந்தப்பட்ட வட்டக் குழுக்களும, மாவட்டக் குழுவும் ஏற்பாடு செய்ய வேண்டும். எதிர்காலத்தில் மாநிலக்குழு இதனை கண்காணித்து உதவிட வேண்டும்.

310. முழுநேர ஊழியர்கள் புரட்சியையே தொழிலாகக் கொண்டவர்கள். அவர்களைப் பேணிப் பாதுகாப்பதை முக்கிய கடமையாக ஏற்று நிறைவேற்ற வேண்டும். சில மாவட்டங்களில் பகுதி நேர ஊழியர்கள் என்ற பெயரில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு குறிப்பிட்ட ஒரு தொகையினை அலவன்சாக வழங்குகிறோம். கட்சி நிர்ணயித்துள்ள அலவன்சை கொடுக்க முடியாதநிலையில் இவர்களுக்கு பகுதிநேர ஊழியர்க்கான அலவன்ஸ் தரப்படுகிறது. இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு ஊழியர்களின் வேலையிலும், திறமையிலும் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். முழுநேர ஊழியர்களும். இத்தகைய முறைகளில் பணியாற்ற பயிற்சிபெற வேண்டும். அதே சமயம் மாவட்டக்குழுக்கள் இப்போதுள்ள முழுநேர ஊழியர்கள் பற்றி முழுமையான பரிசிலனை செய்து மாநிலக் குழுவிற்கு அறிக்கையினை அனுப்ப வேண்டும். இவ்வாறு ஊழியர்களின் வேலை, ஊதியம் ஆகியவற்றினை முறைப்படுத்த வேண்டும்.

311. பிஎஸ்ஆர் நினைவுநாள், ஏ.பி,எம்.ஆர் வி நினைவு நாட்கள், தோழர் வெங்கடாஜலம் நினைவுநாள், ஜி. எஸ் மணி நினைவு நாள் மற்றும் சேலம் சிறை தியாகிகள் வெண்மணி தியாகிகள், திரு. மெய்ஞ்ஞானம தியாகிகள், சின்னியம்பாளையம தியாகிகள்,

பொன்மலை தியாகிகள் போன்ற தியாகிகள் நினைவு நாட்களை சிறப்புற நினைவு கூர்கிறோம். சிஐடியு முடிவுப்படி ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 24-ந் தேதியை தியாகிகள் நினைவு நாளாக அனுஷ்டிக்கிறோம். வளர்ந்து வரும் இளம் தலைமுறையினருக்கும், நமது வர்க்கத்திற்கும் தியாக உணர்வை ஊட்டவும், மக்களுக்கு நமது தியாகப் பாரம்பரியத்தைஎடுத்துச் சொல்லவுமான முறையில் சிறப்பாக இத்தினங்களைக் கொண்டாட வேண்டும்.

312 சகோதர கட்சிகளின் அழைப்பின் பேரில் வெளிநாடுகளுக்கு நமது கட்சித்தோழர்களை கட்சியின் மத்தியக்குழு அனுப்பி வைக்கிறது. அவ்வாறு அனுப்பப்படும் குழுக்களில் தமிழ் நாட்டிற்கான கோட்டாவை அரசியல் தலைமைக்குழு அவ்வப்போது தெரிவிக்கிறது. அதனடிப்படையில் மாநிலக்குழு, தோழர்களை அனுப்பி வைக்கிறது. கீழ்க்கண்ட தோழர்கள் வெளிநாடுகளுக்குப் போய் வந்தனர்:

தோழர் ஏ.என் (கியூபா)
தோழர் ஆர்.யூ (யூகோஸ்லாவியா, சோவியத்யூனியன்)
தோழர் ஆர்.ஆர் (சீனு, வியட்நாம்)
தோழர்கள் என் எஸ், என்.வி, சி.ஜி, ஐ மா.பா (சோவியத் யூனியன்)
தோழர்கள் ஜே.எச், கே.எம் (சீனு)
தோழர் டி.கே.ஆர் (செக்கோஸ்லோவேகியா)

313. கட்சியின் மாநிலக்குழு அலுவலகத்திற்கு சொந்தமாக கட்டிடம் வாங்கப்பட்டுள்ளது 1-12-82ந் தேதியிலிருந்து இங்கு அலுவலகம் செயல்படுகிறது. பெருவாரியான மாவட்டங்களில் கட்சி அலுவலகங்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் உள்ளன. கட்சியின் சொத்துக்கள் அனைத்திற்கும் பொது டிரஸ்ட் ஒன்றை ஏற்படுத்தலாம் என மாநிலக்குழு முடிவு செய்துள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

314. கட்சி ஸ்தாபனத்திலுள்ள தவறான போக்குகளைக் களைந்தெறிய வேண்டுமென சால்க்கியா பிளீனம் அறைகூவல் விடுத்தது உள்கட்சி ஜனநாயகத்தை மத்தியத்துடன் இணைக்காமல் புரட்சிகரமான கட்சியை வார்த்தெடுக்க முடியாது என அது சுட்டிக் காட்டியது. ஆனால் நடைமுறையில் இது பல வழிகளில் மீறப்

யடுகிறது. இத்தகைய தவறான போக்குகளைப் பற்றி கீழ்க்கண்டவாறு சால்கியா பிளீனத்தின் தீர்மானம் வரையறுத்துக் கூறுகிறது:

அ. நடத்தப்படும் வெகுஜன இயக்கங்கள், போராட்டங்கள் ஆகியவை பற்றி பரிசீலனை செய்யும் வழக்கம் என்பதே கைவிடப்பட்டுள்ளது. தன்னுடைய வேலைகளைப் பற்றி பரிசீலனை செய்வதன் மூலம் கட்சிக்கு போதிப்பது என்பதும் இல்லை.

ஆ. இந்த நிலைமை கட்சிக்குள் விமர்சனம், சுயவிமர்சனம் என்பது கைவிடப்படுவதில் கொண்டுபோய் விடுகிறது. இதன் மூலம் தன்னைத்தானே திருத்திக் கொள்ளவும் தன்னுடைய உணர்வையும் செயல்முறையையும் அபிவிருத்தி செய்து கொள்ளவும் பயன்படும் முக்கியமான ஆயுதங்கள் கைவிடப்படுவதில் கொண்டு போய் விடுகிறது.

இ. பழைய பாணியில் செயல்படும் வழியில் நின்று கட்சி வளர்ந்ததும், சில சமயங்களில் அரசியல் ரீதியாக பதில் கூறும் திறமையில்லாத நிலையும் சேர்ந்து கட்சிக்குள் அதிகார வர்க்கப் போக்கை உருவாக்கின்றன; கட்சிக்குள் ஜனநாயகத்தை சீர்குலைக்கின்றன.

ஈ. கட்சி உறுப்பினர்கள், பல சந்தர்ப்பங்களில் தங்களுடைய கருத்துக்களை சுதந்திரமாக வெளியிட முடியாமலிருக்கின்றனர்.

உ. இத்தகைய போக்குகளுடன், பலவீனமான நிலைமை இருக்குமிடங்களில் தாராளவாதமும் சேர்ந்து கொள்கிறது. இதன் விளைவாக கட்டுப்பாட்டையே சீர்குலைத்திடும் போக்கினை பொறுத்துக் கொள்ளும்படி கட்சி அமைப்பு நிர்ப்பந்திக்கப்படுகிறது. இந்தச்சூழ்நிலையில் கோஷ்டி கட்டும் போக்குகள் வளர்கின்றன.

ஊ) பல மாநில-ஜில்லா கமிட்டிகளில் கூட்டுச் செயல்முறை என்பது வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இது அதிகார வர்க்கப் போக்கிலும், அரசியல் முடிவை எடுப்பதில் தவறு செய்வதிலும் கொண்டுபோய் விடுகிறது.

இத்தகைய தவறான போக்குகள் ஸ்தாபனத்தில் இன்னும் நீடிக்கின்றன. அந்த போக்குகளை முறியடித்து முன்னேற வேண்டும்.

தோழர்களே!

315. நமதுகட்சியின் உறுதியான தெளிவான முன்பின் முரணற்ற அரசியல் நிலை காரணமாக நமது பொதுவான செல்வாக்கு வளர்ந்துள்ளது. தொழிலாளி வர்க்க கட்சி என்றால் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சிதான் என்று மக்கள் எண்ணத் தக்கவாறு செயலாற்றியுள்ளோம். பாதிக்கப்படும மககளின் பிரச்னைகளுக்காக போராடியுள்ளோம். நடந்து முடிந்த கட்சியின் அனைத்து மாவட்ட மாநாடுகளும் சிறப்பான முறையில் நடைபெற்றன. நமது முன்னேற்றத்தின் முத்திரையை இம் மாநாடுகளில் காண முடிந்தது.

316. கடந்த நான்காண்டு காலத்தில் அனைத்து அரங்கங்களிலும் கட்சி முன்கை எடுத்து போராட்டங்களையும், இயக்கங்களையும் நடததியுள்ளது. பஞ்சாலைத் தொழிலாளர்கள், பனியன், தொழிலாளர்கள், கைத்தறி தொழிலாளர்கள், நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் என பல்வேறு உழைப்பாளி மக்களின் போராட்டங்களை உருவாக்குவதிலும், நடத்துவதிலும் முன் நின்றுள்ளோம்.

317. மறியல் போராட்டம், பேரணிகள், கிளர்ச்சி என பல்வேறு இயக்கங்களை விவசாயிகள் கடன் நிவாரணத்திற்காக நடததியுள்ளோம். பல பகுதிகளில் விவசாயத் தொழிலாளிகளின் கூலி உயர்வு, சமுதாயப் பிரச்சனைகளை முன் நிறுத்தி போராடியுள்ளோம்.

318. பெண்கள் அரங்கத்திலும், வாலிபர் மாணவர் அரங்கத்திலும் மக்களின் பிரச்சனைகளுக்கான எண்ணற்ற போராட்டங்களை உருவாக்கியுள்ளோம். சமுதாயக் கொடுமைகளை எதிர்ப்பு இயக்கஙகளை தட்டியெழுப்பியுள்ளோம். மத்தியதர வர்க்க அரங்கத்திலும் தொடர்ச்சியான இயக்கங்கள் நடைபெற்றுள்ளன. இதற்கு கட்சி வழிகாட்டி உதவி உள்ளது.

319. தனியாகவும், மற்றக் கட்சிகளுடன் கூட்டாகவும் மக்களின் கோரிக்கைகளுக்காக போராடியுள்ளோம். மறியல், தர்ணா, உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் போன்ற எண்ணற்ற ரூபங்களில் ஆளும் வர்க்கங்களை எதிர்த்து நின்றுள்ளோம். தோழர்கள் பாபுவும் செல்லையனும சாதி மத பிற்போக்காளர்களை எதிர்த்துப்

போராடி தங்கள் இன்னுயிரை நீத்தனர். தோழர்கள் அஞ்சானும், நாகூரானும் வர்க்கக் கோரிக்கைகளுக்காக உயிரைப் பலி கொடுத்து நமது செங்கொடியை மேலும் ரத்தச் சிவப்பாக்கியுள்ளனர்.

320. பெருமுதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ ஆட்சிக்கெதிராக தமிழ் மக்களைத் திரட்டுவதில் எண்ணற்ற அரசியல் இடையூறுகள், பிராந்திய பூர்ஷ்வா கட்சிகளின் இனவெறி திசை திருப்பல்கள் போன்றவற்றுக்கு மத்தியில் எதேச்சாதிகாரத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றுள்ளோம்.

321. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் யுத்தவெறி நடவடிக்கைகளையும், கொடிய ஆயுதக்குவிப்பையும் எதிர்த்து குரல் கொடுத்துள்ளோம். நமது நாட்டிலுள்ள பிற்போக்கு சக்திகளுக்கு ஊக்கமளித்து தேசத்தின் ஒருமைப்பாட்டை தகர்த்தெறிய முயற்சிக்கும் ஏகாதிபத்திய சதிகளை அம்பலப்படுத்தியுள்ளோம்.

322. இடதுசாரிகள், அதிதீவிரவாதிகள் என்ற பெயரால் கட்சியை சீரழிக்க, சிதைக்க எத்தனையோ தாக்குதல்கள் பல்வேறு முனைகளில் நடத்துகிறார்கள். இவைகளை முறியடித்து வலுவான திசையில் நமது கட்சியைப் பாதுகாத்து, வளர்த்து வருகிறோம். இவ்வாறு நாம செய்த வேலைகளைப் பற்றிய படிப்பினைகளையும், விமர்சனங்களையும் இம்மாநாட்டின் முன் சமர்ப்பித்துள்ளோம்.

323. விஜயவாடா கட்சிக் காங்கிரஸ் தீர்மானம், அதனையொட்டி மத்திய கமிட்டி எடுத்த தீர்மானங்கள் ஆகியவற்றினை நமது மாநிலத்தில் அமுல் நடத்த நமது சக்திக்கேற்ற முறையில் போராடியுள்ளோம் வெகுஜன புரட்சி கட்சியை கட்டும்பணியில் ஈடுபட்டுள்ளோம். படிப்பினைகளையும், அனுபவங்களையும் கற்றுக் கொண்டுள்ளோம். இத்தகைய அனுபவங்கள், படிப்பினைகளின் தொகுப்புதான் இந்த வேலை அறிக்கை. ஏராளமான வேலைகளைச் செய்துள்ளோம். அதில் பிரதானமானவற்றைத்தான் இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம். மிகுதியான அளவுக்கு விமர்சனங்களை சமர்ப்பித்துள்ளோம் நாம் அனைவரும் வேலைகளைச் செய்து விட்டு மாநாட்டில் கூடுகிறோம். கிளை, வட்ட, மாவட்ட மாநாடுகளை நடத்தி படிப்பினைகளைப் பெற்றுள்ளோம். அத்தகைய வெளிச்சத்தில் இந்த அறிக்கையினை பரிசீலித்து ஆலோசனைகளை முன வையுங்கள்.

எதிர்கால கடமைகள்

324. இந்த வேலை அறிக்கை கீழ்கண்ட எதிர்கால கடமைகளைச் சுட்டிக்காட்டுகிறது.

சமாதான இயக்கத்தை நாடு முழுவதும் எடுத்துச் செல்ல வேண்டும். சக்தி மிகுந்த இயக்கமாக வளர்க்க வேண்டும்.

பரந்த மேடையையும், கூட்டு இயக்கங்களையும் உருவாக்கும் போதே நமது சுயேச்சையான இயக்கங்கள் நடைபெற திட்டமிட வேண்டும். அதன் மூலம் அரசியல் பலாபலத்தை நமக்குச் சாதகமாக மாற்ற முயல வேண்டும்.

அரசியல் பிரச்சாரத்தை இன்னும் வேகமாக எடுத்துச் செல்ல பேச்சாளர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

தீக்கதிர்—செம்மலர், பீப்பிள்ஸ் டெமாக்ரசி மற்றும் பிரசுர விற்பனையை பெருக்க வேண்டும்: தீக்கதிருக்கு நவீன அச்சு இயந்திரம் வாங்க வேண்டும்.

மத்தியக் கமிட்டியின் 'தொழிற்சங்க-கடமைகள்' தீர்மானத்தை அமுல் நடத்த வேண்டும். வர்க்க இயக்கத்தை கட்டுவதில் முன்னணியில் நிற்க வேண்டும்.

விவசாய அரங்கத்திற்கு ஏராளமான புதிய ஊழியர்களை நியமிக்க வேண்டும். கிராமப்புறங்களில் பரந்தளவு இயக்கத்தை விஸ்தரிக்க வேண்டும்.

பெண்கள், வாலிபர், மாணவர், எழுத்தாளர், அரங்கப்பணிகள் மேலும் முன்னேற சுயேட்சையாகப் பணியாற்ற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

கட்சி கல்விக்கு உரிய கவனத்தைச் செலுத்த வேண்டும். கட்சிக் கடிதம் மற்றும் தத்துவார்த்தப் பத்திரிகையினைத் துவங்க வேண்டும்.

கிளைச் செயலாளர்கள் கூட்டத்தை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நடத்த உத்திரவாதம் செய்ய வேண்டும்,

விமர்சனம், சுய விமர்சனம் என்ற வகையில் கட்சிக் கமிட்டிகள் எல்லா மட்டங்களிலும் தங்களது வேலைகளை பரிசீலித்திட வேண்டும். அதன் அனுபவங்களை கட்சி அணிகளுக்கு போதித்திட வேண்டும்

இத்துடன், நமது கட்சியின் 12—வது காங்கிரசின் முடிவுகளை அமுல் நடத்திட வேண்டும். இத்தகைய குறிக்கோளுடன் பணியாற்றுவோம். முன்னேறுவோம்.

❋ வெல்க மக்கள் ஜனநாயகப் புரட்சி!

❋ வாழ்க இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி!!

புரட்சி வாழ்த்துக்களுடன்

— மாநிலக்குழு.

அனுபந்தம் 1

கட்சி உறுப்பினர் விபரம்

மாவட்டக் குழுக்கள்		1982	1983	1984	1985
1.	சென்னை	1809	1822	1779	1811
2.	செங்கை	762	643	771	810
3.	தென்னாற்காடு	1159	1350	1274	1415
4	பாண்டிச்சேரி	250	250	226	220
5.	திருச்சி	1555	1558	1450	1675
6.	தஞ்சை	3946	4486	4829	4864
7.	புதுக்கோட்டை	371	495	566	589
8.	மதுரை	3517	3759	4325	4758
9.	முகவை	2236	1741	2233	2984
10.	நெல்லை	1012	1101	1290	1438
11.	குமரி	835	979	951	1133
12.	கோவை	1553	1685	1746	1743
13.	பெரியார்	544	574	570	589
14.	சேலம்	1189	1151	1200	1307
15.	தர்மபுரி	618	632	791	980
16.	வடஆற்காடு	780	749	800	683
	பி.சி. மையம்	34	43	59	54
		22,170	23,018	24,860	27,053

சி. ஐ. டி. யூ. உறுப்பினர்கள்

(சி.ஐ.டி.யு. மாநில மையம் கொடுத்த விபரம்)

	1982		1983		1984	
மாவட்டங்கள்	சங்க—	உறுப்.	சங்க—	உறுப்.	சங்க—	உறுப்.
சென்னை	32	27799	22	17814	— முழுமையான விபரம் கிடைக்கவில்லை. —	
செங்கை	9	2104	7	1444		
வடஆற்காடு	18	6174	9	4687		
தென் ஆற்காடு	8	7032	9	9572		
திருச்சி	19	4867	22	5286		
புதுக்கோட்டை	3	545	5	1047		
தஞ்சை	16	1194	—	—		
மதுரை	27	14654	25	14698		
முகவை	17	3356	1	350		
நெல்லை	15	5678	16	4358		
குமரி	13	6820	7	1896		
சேலம்	24	10501	22	10605		
தர்மபுரி	7	1584	9	1951		
பெரியார்	8	2482	7	2496		
கோவை	34	28463	26	26094		
புதுவை	9	2694	6	2358		
ரயில்வே		5362		4337		
மொத்தம்	256	127309	194	108993		

வி. ச. உறுப்பினர் பதிவு விபரம்

மாவட்டம்	81—82	82—83	83—84	84—85
தஞ்சை	23137	26863	26027	21000
மதுரை	12000	12496	9000	10000
தென் ஆற்காடு	3700	3100	1844	3100
திருச்சி	1424	2015	4386	3229
கோவை	4000	1500	1500	950
பெரியார்	5000	2500	1000	1000
சேலம்	4500	4000	6300	5000
முகவை	6200	7400	5300	—
குமரி	1000	—	1000	1000
புதுக்கோட்டை	4000	5000	5000	2500
தர்மபுரி	5000	3000	3000	3500
வட ஆற்காடு	4000	2500	2405	3000
பாண்டி	2000	2000	750	1000
நெல்லை	1417	1000	1000	1474
செங்கை	400	2621	2900	3000
மொத்தம்	77778	75995	71412	59753

வி.தொ.ச. உறுப்பினர் விபரம்

மாவட்டம்	81—82	82—83	83—84	84—85
தஞ்சை	60343	57932	58081	49000
மதுரை	10300	14364	12000	12000
கோவை	5000	3000	4000	3310
பெரியார்	5000	3500	2000	774
திருச்சி	4793	6508	5130	4795
தென் ஆற்காடு	4300	3600	2048	1900
செங்கை	1600	—	—	—
சேலம்	1500	1000	1000	1000
தர்மபுரி	—	1000	2000	500
மொத்தம்	92836	90904	86259	73279

வாலிபர் சங்க உறுப்பினர்கள்-கிளைகள்-இளைஞர்முழக்கம் பற்றிய விபரங்கள்

மாவட்டங்கள்	உறுப்பினர்கள்			கிளைகள்	இளைஞர் முழக்கம் செப்.85	
	1982	1983	1984		சந்தா	தனி விற்பனை
1 சென்னை	5454	7312	8027	124	339	340
2. செங்கை	1413	2300	3071	96	88	250
3. பாண்டி	700	706	—	—	44	—
4. தென்னாற்காடு	2420	5125	3518	248	90	60
5. வடாற்காடு	620	1098	1484	15	58	20
6. தர்மபுரி	350	715	740	10	38	50
7. சேலம்	2711	3201	4859	113	239	310
8. பெரியார்	2342	2713	1841	80	366	220
9. கோவை	10116	12600	13000	284	403	100
10. மதுரை	10658	15555	13864	256	284	380
11. திருச்சி	3572	4947	3670	132	110	50
12. தஞ்சை	8000	8000	2954	300	90	125
13 புதுக்கோட்டை	710	920	200	30	18	—
14. கிழக்கு முகவை	1200	2356	1529	56	53	—
15. மேற்கு முகவை	2000	1902	1920	64	76	—
16. நெல்லை	4564	3681	2800	135	83	50
17. குமரி	2800	5100	3600	135	70	60
மையம்	21	35	36	—	—	—
மொத்தம்	59631	78266	67163	2080	2448	2015

மாதர் சங்க உறுப்பினர் விபரம்

மாவட்டங்கள்		1982	1983	1984	1985
1.	தஞ்சை	36,530	35,880	31 600	கணக்கு வரவில்லை
2.	மதுரை	7,400	8,700	10,000	11 600
3.	திருச்சி	3,272	4,135	4 090	7,164
4.	தென்னாற்காடு	3,707	3,700	3 225	1,500
5	சென்னை	2,300	3 700	4 440	4 000
6.	சேலம்	1 262	1,700	2,083	2,000
7.	கோவை	2,000	2,000	3 000	1 500
8.	முகவை	1,045	2 460	2,045	2,000
9.	பாண்டிச்சேரி	600	1 000	750	600
10.	நெல்லை	523	1,012	1 440	1 460
11.	குமரி	525	1,000	2,000	3,000
12.	செங்கை	—	1,272	965	—
13.	பெரியார்	500	763	1,065	700
14.	புதுக்கோட்டை	275	1 000	1,000	1,000
15.	வடாற்காடு	2.100	850	1,230	1,000
16.	தர்மபுரி	100	250	1,100	-500
மொத்தம		62,139	69,422	70,488	

மாநிலக்குழு வெளியிட்டுள்ள பிரசுரங்கள் பற்றிய விபரம்

1982

வரிசை எண்.	பிரசுரத்தின் பெயர்	விலை		வெளியான மாதம்	வருடம்
		ரூ.	பை		பிரதிகள்
1.	இ.காங்கிரசுக்கு சரியான மாற்றுக்கொள்கை—இடதுசாரி ஜனநாயகஅணியின் திட்டமே	0	10	ஏப்ரல்'82	30,000
2.	யுத்த அபாயம்! சர்வாதிகார மிரட்டல்! சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாப்போம்!	0	30	மார்ச் '82	30,000
3.	சிறந்த கம்யூனிஸ்ட் ஆவது எப்படி? லியூ—ஷோசி 2-ம் பதிப்பு	3	50	மார்ச் ,,	1,500

1983

வரிசை எண்.	பிரசுரத்தின் பெயர்	ரூ.	பை	வெளியான மாதம் வருடம்	பிரதிகள்
1.	ஏனிந்த மின்வெட்டு தவிர்க்க முடியாததா? முதல் பதிப்பு	0	40	பிப்ரவரி '83	5,000
2.	உள்கட்சிப் போராட்டம் 2-ம் பதிப்பு	2	00	,,	1,000
3.	ஏனிந்த மின் வெட்டு தவிர்க்க முடியாததா? 2-ம் பதிப்பு	0	40	மார்ச் ,,	3,000

4.	அ.தி.மு.க அரசு மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் ஏன்? — சட்டசபையில் ஆர். உமாநாத், என்.சங்கரய்யா	1	00	நவம். ,,	25,000
5.	தேசிய ஒருமைப்பாடு சில சிந்தனைகள் — எம்.பசவபுன்னையா	0	40	,,	3,000
6.	உள்கட்சிப் போராட்டம் 3-ம் பதிப்பு	2	00	,,	1,000
7.	களம் பல கண்ட கம்யூனிஸ்ட் தளபதி மேஜர் ஜெய்ப்பால் சிங்— அரிகிஷன் சிங் சுர்ஜித்	1	00	டிசம்பர் ,,	2,000
8.	இனக் கலவரங்களுக்கு பொறுப்பாளி யார்?	0	40	நவம்பர் ,,	5 000
9	இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு என்ன?	0	40	,, ,,	10,000
10.	கட்சித் திட்டம்	2	50	,, ,,	2,000
11.	இலங்கை பிரச்சனைக்குத் தீர்வு என்ன? இலங்கை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் கூறும் வழி	0	50	,, ,,	5,000
12	அரசியல் ஸ்தாபன அறிக்கை (11—வது காங்கிரஸ்-விஜயவாடா)	5	00	,, ,,	1 000

1984

1	இந்தியாவைப்பற்றி மார்க்ஸ் எழுதியது என்ன? இ.எம்.எஸ்.	0	60	ஜனவரி '84	2.000

2	அமெரிக்கா கண்டத்தில் ஒரு சிவப்பு நட்சத்திரம் — ஏ. நல்லசிவன்	1	50	,,	3,000
3	மார்க்சிசமும், விவசாயிகள் பிரச்னையும் —ஹரிகிஷன் சிங் சுர்ஜித்	1	00	பிப்ரவரி '84	2,000
4.	களம் பல கண்ட கம்யூ. தளபதி மேஜர் ஜெய்பால்சிங் — 2ம் பதிப்பு	1	00	மார்ச் '84	3,000
5.	சிபிஎம், சிபிஐ — இரு கட்சி திட்டங்களின் அடிப்படை வேறுபாடுகள் என்ன? பி ஆர்.பி.	1	00	,,	3,000
6.	தொழிற்சங்க அரங்கில் நமது கடமைகள்	2	00	ஏப்ரல் '84	3,000
7.	சிபிஎம், சிபிஐ - இரு கட்சித் திட்டங்களின் அடிப்படை வேறுபாடுகள் என்ன? —இரண்டாம் பதிப்பு	1	00	ஜூன் '84	3,000
8.	மார்க்சியமும், இந்தியாவில் தேசிய இனப்பிரச்னையும் —பி டி. ரணதிவே	1	50	ஜூலை '84	2,000
9.	மக்கள் ஒற்றுமைக்கு வேட்டுவைக்கும் ஆர்.எஸ்.எஸ். —அருணன்	0	50	ஜூலை '84	10,000
10	மக்கள் ஒற்றுமையை சீர்குலைப்பவர் யார்?—அருணன்	0	50	ஆகஸ்ட்'84	5.000
11.	மார்க்சியமும் நிலவாரமும்— இ.எம் எஸ். (வி ச.)	0	60	ஆகஸ்ட்'84	3,000

12.	விடுதலைப் போரில் கம்யூனிஸ்டுகள் (அருண்சோரியின் அவதூறுக்குப்பதில்)—எம். பசவபுன்னையா	3 00	ஆகஸ்ட் '84	6,000
13.	சர்வதேசிய நிலைமை—மத்திய கமிட்டி அறிக்கை	3 00	செப். '84	2,000
14.	1984 டிசம்பர் பொதுத் தேர்தல்: வாக்காளர்களுக்கு மார்க்சிஸ்ட் கட்சி வேண்டுகோள்			
	,, ,, முதற் பதிப்பு	0 40	நவம்பர்'84	25,000
	,, ,, 2ம் பதிப்பு	0 40	,,	6,000
	,, ,, 3ம் பதிப்பு	0 40	,,	6,000
17.	சர்வதேசிய நிலைமை-பி.டி.ஆர்.	0 70	டிசம்பர் '84	3,000
18.	சிறந்த கம்யூனிஸ்ட் ஆவது எப்படி-லியூசோஷி 3-ம்பதிப்பு	3 50		2,000
19.	அமைப்புச்சட்டம்	0 75		2,000
20	பஞ்சாப் துயரம் தவிர்க்க முடியாததா? —சுர்ஜித்	0 50	,,	10,000

1985

1.	ஒரு புரட்சிக் கட்சியின் தோற்றமும் வளர்ச்சியும் பி. டி. ஆர். முதற்பதிப்பு	1 00	பிப்ரவரி	30,000
2.	இந்தியாவில் அன்னிய ஏஜன்சிகள்—பிரகாஷ்காரத்	1 50	,,	3,000

3.	ஏகாதிபத்தியம் குறித்து முதலாளித்துவ எதிர்க்கட்சிகள் — பி. டி. ஆர்.	1	00	மார்ச்	2,000
4.	வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் வீரவரலாறு	0	50	,,	3,000
5.	நெருக்கடியில் திணறும் இந்தியப் பொருளாதாரம்	0	75	ஏப்ரல்	2,000
6.	இன்றைய சர்வதேச நிலைமை (1984 அறிக்கை)	3	00	,,	2,000
7.	ஒரு புரட்சிக் கட்சியின் தோற்றமும் வளர்ச்சியும பி. டி. ஆர். —2ம் பதிப்பு	1	00	மே	3,000
8.	இந்தியாவில் அன்னிய ஏஜன்சிகள் 2-ம் பதிப்பு	1	50	,,	3,000
9.	வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் வீர வரலாறு 2ம்பதிப்பு	0	50	,,	3,000
10	மாவீரன் பகத்சிங்கின் இறுதிக்கடிதம்	1	00	ஜூன்	5 000
11	இலங்கை அரசே பேச்சுவார்த்தை நடத்து —மூன்றுகட்சி அறிக்கை	0	50	மே	5,000
12.	வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் வீர வரலாறு 3ம் பதிப்பு	0	50	ஜூன்	2.000
13.	ஒரு புரட்சிக்கட்சியின் தோற்றமும் வளர்ச்சியும்—ம் 3ம் பதிபபு	1	00	ஜூன்	2.000
14.	பட்ஜெட்டும் விலை உயர்வும் — அருணன்	0	75	ஜூன்	8 000
15.	விவசாயிகள் பிரச்னையும் ஆட்சியாளர் அலட்சியமும் ஜி.வீரையன்	0	50	ஜூன்	5 000

16.	இலங்கை தமிழர் பிரச்னை சிபிஎம் நிலை—அருணன்	0	75	ஜூன்	3,000
17.	இலங்கை தமிழர் பிரச்னை சிபிஎம் நிலை—அருணன் -2ம் பதிப்பு	0	75	ஜூன்	4,000
18.	ஈழமும், விடுதலை இயக்கங்களும், இந்திய ஒற்றுமையும்	1	00	ஜூன்	3,000
19	ஈழமும், விடுதலை இயக்கங்களும், இந்திய ஒற்றுமையும்-2ம் பதிப்பு	1	00	ஜூன்	4,000
20.	சோவியத் மக்களின் மகத்தான தியாகம்—பி.ஆர்.	1	00	ஜூன்	2 000
21.	உலகைக்காத்த செஞ்சேனையை வாழ்த்துவோம்—பி.டி.ஆர்	0	75	ஜூலை	2,000
22.	சமாதானத்தை அச்சுறுத்தும் கொள்ளை நோய் —எம்.பசவபுன்னையா	0	75	ஜூலை	2,000
23	குழப்பத்தின் உச்சகட்டத்தில் நக்சலைட்டுகள் —பிரகாஷ்காரத்	1	50	ஜூலை	3,000
24.	மத்திய மாநில—உறவு (சர்க்காரியாகமிஷனிடம் மார்க்சிஸ்ட் கட்சி—அறிக்கை)	1	00	ஆகஸ்ட்	2,000
25.	மக்கள் மீது மத்திய அரசின் புதிய தாக்குதல்கள்	0	75	,,	2 000
26.	மாநில அரசாங்கங்களில் மார்க்சிஸ்ட்டுகள் பங்கேற்பு —கட்சித் திட்டத்தின் 112வது பாரா குறித்த கட்டுரையின் தொகுப்பு எம். பசவபுன்னையா	1	00	அக்டோபர்	2,000

விவசாயிகள் சங்கம்

1.	தமிழகத்தில் உபரி நிலம் 20 லட்சம் ஏக்கர் சிதம்பரம் வி.ச. மாநாடு	0 50	ஜனவரி' 84	
2:	கரியவானில் ஒரு கலங்கரை விளக்கம்	0 70	மே'84	3,000

இந்திய மாணவர் சங்கம் (எஸ்.எப்.ஐ)

1.	படிப்போம் போராடுவோம்	0 50	ஜனவரி'85	5 000

தீக்கதிர் நாளிதழ் மாவட்ட வாரியாக விற்பனை விபரங்கள்

வ. எண்	மாவட்டங்கள்	1982 ஜனவரி '31		1983 ஜனவரி '31		1983 மார்ச் '3'		1983 ஜூலை '31		1984 ஜனவரி '31		1984 ஏப்ரல் '30		1984 நவம்பர் '30		1985 ஜனவரி '31		1985 ஏப்ரல் '30		1985 ஜூலை '31		1985 அக்டோ '19		5—11—85	
		ஏஜண்டுகள்	பிரதிகள்	ஏஜண்டுகள்	பிரதிகள்	ஏஜண்டுகள்	பிரதிகள்	ஏஜண்டுகள்	பிரதிகள்	ஏஜண்டுகள்	பிரதிகள்	ஏஜண்டுகள்	பிரதிகள்	ஏஜண்டுகள்	பிரதிகள்	ஏஜண்டுகள்	பிரதிகள்	ஏஜண்டுகள்	பிரதிகள்	ஏஜண்டுகள்	பிரதிகள்	ஏஜண்டுகள்	பிரதிகள்	ஏஜண்டுகள்	பிரதிகள்
1	சென்னை	1	850	1	800	1	800	1	800	1	950	1	1,050	2	1.500	2	1,500	2	1,500	2	1,200	2	1,200	2	1,200
2	செங்கற்பட்டு	9	139	11	175	11	178	8	1[illegible]4	6	144	8	172	12	243	13	254	11	242	9	233	8	226	8	226
3	கோவை	27	898	18	727	16	719	11	702	17	707	16	808	19	870	20	899	21	870	21	933	21	909	21	679
4	நீலகிரி	3	34	4	48	4	55	4	61	3	42	4	52	6	82	6	92	6	94	5	94	5	97	5	97
5	பெரியார்	—	—	12	235	10	219	10	235	9	214	10	258	14	342	14	336	13	324	12	308	14	316	14	318
6	வட ஆற்காடு	10	148	12	154	14	163	15	175	14	174	16	169	16	203	16	201	16	197	15	188	14	189	13	177
7	சேலம்	10	277	13	287	12	281	13	285	13	277	13	330	16	484	16	496	17	479	14	445	14	428	13	416
8	தருமபுரி	3	32	4	52	3	47	4	57	4	79	4	88	5	114	6	119	5	118	4	90	4	90	4	89
9	தென்னாற்காடு	9	235	10	235	7	209	8	217	7	179	10	242	15	258	15	248	13	220	8	178	9	205	8	216
10	பாண்டிச்சேரி	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	3	96	3	98	3	102	3	103	3	103	3	104
11	தஞ்சாவூர்	11	151	9	141	7	130	10	143	10	151	1[illegible]	254	15	217	18	238	12	191	9	153	8	144	8	144
12	திருச்சி	12	255	10	274	11	281	12	289	11	294	11	343	11	405	12	402	11	374	11	381	10	384	9	368
13	புதுக்கோட்டை	2	40	3	46	2	45	1	35	1	40	2	55	10	100	10	99	8	83	6	70	4	57	2	45
14	அண்ணா	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	19	479	19	477
15	மதுரை	34	1,4[illegible]0	37	1259	3[illegible]	1,187	35	1,283	35	1,140	43	1,234	46	1 565	46	1,583	45	1,483	44	1,517	31	1,045	30	1.042
16	முகவை,முத்துராமலிங்கம்	13	180	13	200	14	200	15	188	15	182	19	293	18	325	17	316	15	303	12	247	7	67	6	56
17	காமராஜர்	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	5	180	6	189
18	தி நெல்வேலி	27	423	22	335	21	350	21	327	21	318	23	358	28	474	27	461	27	464	27	478	26	437	26	437
19	கன்னியாகுமரி	14	219	12	153	14	159	13	176	12	151	16	251	17	258	16	242	15	224	13	179	15	201	15	197
20	வெளிமாநிலங்கள்	3	43	3	49	3	50	3	45	3	38	3	37	3	31	4	46	3	37	2	20	2	19	2	19
	மொத்தம்	188	5.394	194	5.170	186	5 07.3	184	5,162	180	5,080	216	5,994	256	7,567	261	7,630	243	7,305	218	6.827	221	6 776	214	6 696
	சந்தா & கூடுதல் பிரதிகள்		352		319		47		379		350		683		681		573		460		505		435		428
		188	5,746		5,489	186	5,420	184	5,541	180	5,430	216	6,677	256	8,248	261	8,203	243	7,765	218	7,332	221	7,211	214	7,1[illegible]4

குறிப்பு: 1982 ஜனவரியில் 11-வது மாநில மாநாடு கடலூரில் நடந்து முடிந்தது. தீக்கதிரில் விற்பனை அதிகரிக்காத நிலைமையே நீடித்தது. 1983 ஜனவரியில் கோவையில் சிஐடியூ மாநில மாநாடு -பேரணி நடைபெற்றது. 1983 ஜூலையில் இலங்கை தமிழர் மீது ஜெயவர்த்தன அரசின் வெறித்தாக்குதல், தமிழகம் கொந்தளித்தது. இக்காலத்திலும் தீக்கதிர் விற்பனை உயரவில்லை. 1983 இறுதியில் ரொம்ப மோசம். விற்பனை உயரவில்லையென்பது மட்டுமல்ல, ஏராளமான ஏஜண்சிகள் அபாயகரமாக பாக்கி வைத்திருந்தன. மாநிலக்குழு உஷாராகி விற்பனை இயக்கத்துக்கு திட்டமிட்டது. விற்பனையை இருமடங்காக்க முடிவு. முயற்சிகள் பயனளித்தன. படிப்படியாக முன்னேற்றம், தேர்தல் சமயம் உச்சநிலை. பிறகு கொஞ்சம் குறைவு.